
அருளிச்செயல் அமுதம்

(திவ்யப்ரபந்தங்களின் சாரம்)






டாக்டர் ம.அ. வேங்கடக்ருஷ்ணமாசாரியார் ஸ்வாமியின்


ஷஷ்டியப்த பூர்த்தி மலராக வெளியிடப்பட்டது

(ஜய கன்னி விசாகம் - 28.09.2014)

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை



ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அருளிச்செயல் அமுதம்

முதுமுனைவர் ஸ்ரீ உ.வே. மண்டயம் அனந்தாண்பிள்ளை

வேங்கடக்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமி

ஷஷ்ட்யப்தபூர்த்தி நினைவு மலராக வெளியிடப்படுகிறது.

டாக்டர் எம்.ஏ.வி. ஸ்வாமி ஷஷ்ட்யப்தபூர்த்தி

விழாக் குழு வெளியீடு

Dr. M.A.V. Swamy Sashtiyabdapoorthi Celebrations Committee

7, South Mada Street, Triplicane, Chennai 600005

President	Secretary	Jt.Secretary	Treasurer
Dr. Mrs. Y.G.Parthasarathy	T.C.A.Ramanujam	S.Sampath	M.A.Madhusudhanan

ஜய கன்னி விசாகம் (28–9–2014) அன்று ஸ்ரீ உ.வே. மண்டயம் அனந்தாண்பிள்ளை வேங்கடக்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமிக்கு நடைபெறுகின்ற ஷஷ்ட்யப்தபூர்த்தியை முன்னிட்டு வித்வான்களுடைய கட்டுரைகள் நிறைந்த மலர் ஒன்று வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீவேங்கடக்ருஷ்ணன்ஸ்வாமி அருளிச்செயல் எப்போதும் அனுபவத்திலேயே திளைப்பவர். சிறிய வயதிலேயே அருளிச்செயலை முழுமையாகக் கற்றுக் கொண்டு திருவல்லிக்கேணி, காஞ்சீபுரம் முதலிய திவ்யதேசங்களில் அருளிச்செயல் கோஷ்டிகளில் அந்வயித்து வருபவர். ஆங்காங்கே உபந்யாஸங்கள், காலக்ஷேபங்கள் மூலம் அருளிச்செயல் அனுபவத்தைச் செய்து வருபவர். பல்கலைக்கழக வைணவத் துறையில் எம்.ஏ. திவ்யப்ரபந்தம் எனும் வகுப்பைத் தொடங்கி அங்கும் அருளிச்செயலையே பாடமாக நடத்திவருபவர். தொலைக்காட்சியில் 'நாள்தோறும் நாலாயிரம்' நிகழ்ச்சிமூலம் அருளிச்செயலின் அரும்பொருள்களை அனைத்து இல்லங்களுக்கும் கொண்டு சேர்ப்பவர். எனவே அவருடைய ஷஷ்ட்யப்தபூர்த்தி சிறப்பு மலர் அருளிச்செயல் பற்றியதாகவே இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

நாலாயிர திவ்யப்ரபந்தத்திலுள்ள இருபத்து நான்கு பிரபந்தங்கள், அமுதனார் அருளிச் செய்த இராமானுச நூற்றந்தாதி, மணவாளமாமுனிகள் அருளிச்செய்த உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி ஆகிய இருபத்தேழு பிரபந்தங்களைப் பற்றியும் கட்டுரைகள் கொண்ட மலரை 'அருளிச்செயல் அமுதம்' என்ற பெயரில் வெளியிடுவது என்றும், அதன் சிகரமாக ஸ்ரீ உ.வே. காஞ்சீ ஸ்வாமியின் அற்புதமான கட்டுரை ஒன்றையும் வெளியிடுவது என்றும் முடிவு செய்யப் பெற்றது.

ஸ்ரீவேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமிக்குப் பரம ஆப்தர்களாகத் திகழும் வித்வான்களில் இருபத்தெழுவரிடம், இருபத்தேழு பிரபந்தங்களினுடைய ஸாரத்தை ஒவ்வொருவரும் ஒரு கட்டுரையாக எழுதித்தரவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டோம். வித்வான்கள் அனைவரும் அற்புதமான கட்டுரைகளை எழுதி அனுக்ரஹித்துள்ளனர். அவை அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி ஒரு மலராக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தங்களுக்கிருந்த பல்வேறு அலுவல்களுக்கிடையே சிரமம் பாராமல் கட்டுரைகள் எழுதித்தந்த வித்வான்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். கட்டுரைகளை முழுமையாக வாசித்து அச்சுப்பிழைகளைத் திருத்திக் கொடுத்த டாக்டர் மா. வரதராஜன் ஸ்வாமிக்கும், கிடாம்பி முகுந்தன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் ஒவ்வொரு திவ்யப்ரபந்தத்திலும் உள்ள விஷயங்களைத் தொகுத்துச் சுருக்கமாகக் காட்டுகின்றன. இம்மலர் அனைவருக்கும் மிகவும் பயன்படும் என்று எண்ணுகிறோம்.

– விழாக் குழுவினர்

முதல் பதிப்பு செப்டம்பர் 2014

விலை ரூ. 100

கிடைக்குமிடம்:
எம்.ஏ.வி.ஸ்வாமி ஷஷ்டியப்தபூர்த்தி விழாக் குழு,
7, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005

அச்சிட்டோர்
ஆர்.என்.ஆர். அச்சகம்,
9, தாண்டவராயன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005
044-2844 7071

Dr. M.A.V.Swamy Sashtiyabdhapoorthi Celebrations Commitee

President:
Dr .Mrs YG Parthasarathy (YGP)

Vice Presidents:
Sri VT Gopalan
Sri Mohan Parasaran

Secretary
Sri TCA Ramanujam

Joint Secretary
Sri S Sampathkumar

Treasurer:
Sri M.A.Madhusudhanan

Advisors:
1. Sri Velukkudi Krishnan Swamy
2. Dr. Sri M Varadarajan Swamy
3. Sri KB Devarajan Swamy
4. Sri P.B.Rajahamsam Swamy
5. Sri Badri Narayana Bhattar

Committee Members:
1. Dr Mrs Suseela Padmanabhan
2. Sri V Vasudevan
3. Sri Ravi Parthasarathy
4. Sri Damal Ramakrishnan
5. Sri PB Santhanakrishnan
6. Smt Girija Seshadri
7. Dr MD Srinivas
8. Sri AN Parthasarathy
9. Sri TK ParthaSarathy
10. Smt Latha Ramanujam
11. Sr G Balakrishnan
12. Sri R Balakrishnan
13. Sri TAK Sthalasayanam
14. Sri G Murari
15. Sri MA Alwar
16. Sri KB Srinivasan(Balaji)
17. Sri TA Bakthisaran
18. Sri P Lakshmi Narasimhan (Sekar)
19. Sri PR Ravisundar
20. Sri NS Padmanaban
21. Sri Kidambi Mukundan

முன்னுரை

'அண்ணல் செய்து அலைகடல் கடைந்த' எம்பெருமான் அதிலிருந்து அமுதம் எடுத்து தேவர்களுக்குக் கொடுத்தான். அந்த அமுத்திலும் ஸாரமான அமுதமாகப் பிராட்டி தோன்றினாள். 'விண்ணவர் அமுதுண்ண அமுதில் வரும் பெண்ணமுது' ஆன பிராட்டியை எம்பெருமான் தானே அடைந்தான். பெரியாழ்வாரும் பிராட்டியை, "சீதக் கடல் உள் அமுது" என்கிறார். புற அமுது தேவர்கள் உண்ணும் அமுது. உள் அமுது பிராட்டி.

அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரம் பாசுரங்களுமே அமுதுதான். நம்மாழ்வார் 'தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்கிறார். அதை அடியொற்றியே நாதமுனிகளும் திருவாய்மொழியை 'பக்தாம்ருதம்' என்றருளிச்செய்கிறார். அப்படி அமுதான திவ்யப்ரபந்தத்தின் ஸாரம் என்றால் அதனை 'அமுதில் வரும் பெண் அமுது' போல் 'உள் அமுது' என்றே கூறலாம். அதுதான் தற்போது 'அருளிச்செயல் அமுதம்' என்ற நூலாக மலர்ந்துள்ளது.

இருபத்தேழு நக்ஷத்ரங்களைப் போல் வித்வான்கள் இருபத்தெழுவர் ஒவ்வொருவரும் ஒரு திவ்யப்ரபந்தத்தின் ஸாரமாக இருபத்து ஏழு திவ்யப்பிரபந்தங்களைப் பற்றியும் கட்டுரைகளாக அநுக்ரஹித்துள்ளனர். நக்ஷத்ரங்களுக்கெல்லாம் தலைவனாக சந்திரன் விளங்குவதுபோல 'மதி நிறைந்த'வரான ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பெருமாள்கோவில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமியின் 'திவ்யப்ரபந்த ஸாரஸங்கரஹம்' என்ற கட்டுரை இந்நூலின் சிகரமாக அமைந்துள்ளது. வித்வான்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கே உரிய பாணியில் கட்டுரைகளை எழுதியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

இக்கட்டுரைகளைப் படித்தால் இருபத்து ஏழு திவ்யப்ரபந்தங்களின் கருத்துக்களை நாம் ஓரளவு தெரிந்து கொண்டுவிடலாம் என்றாலும், இக்கட்டுரைகளைப் படிப்பதன் மூலம் அந்தந்த திவ்யப்ரபந்தங்களை ஆழ்ந்து அனுபவிக்கவேண்டும் என்றும், அதற்காக வியாக்கியானங்கள் முழுமையையும் வாசித்து அறிந்து கொள்ள வேண்டும் என்றும் ஒவ்வொருவருக்கும் ஆர்வம் விளையும் என்பதில் ஐயமில்லை. அந்த ஆர்வம் ஏற்பட்டு அனைவரும் திவ்யப்ரபந்த வியாக்கியானங்களைக் காலக்ஷேபமாகக் கேட்டு அறிந்து கொள்வார்களாயின் அதுவே இம்மலரின் பயனாக அமையும்.

இம்மலருக்குக் கட்டுரைகள் அளித்த வித்வான்கள் அனைவருக்கும் அடியேனுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றை அழகுற அச்சிட்டு வெளியிடும் ஷஷ்டியப்தபூர்த்தி விழாக் குழுவினருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவல்லிக்கேணி
ஜய கன்னி விசாகம் (28-9-2014)

அன்பரடிப்பொடி
வேங்கடக்ருஷ்ணதாஸன்

பொருளடக்கம்

1. திவ்யப்ரபந்த ஸாரஸங்க்ரஹம்

ஸ்ரீ உ.வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி 7

2. திருப்பல்லாண்டு

ஸ்ரீ உ.வே. மண்டயம் அனந்தாண்பிள்ளை லக்ஷ்மீதாதாசார்ய ஸ்வாமி 10

3. பெரியாழ்வார் திருமொழி

ஸ்ரீ உ.வே. முனைவர் (மதுரை) இரா. அரங்கராஜன் ஸ்வாமி 12

4. திருப்பாவை

ஸ்ரீ உ.வே. ஸ்ரீவில்லிபுத்தூர் விஞ்சிமூர் வேங்கடாசாரியர் ஸ்வாமி 17

5. நாச்சியார் திருமொழி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் ரகுராமன் (பாலாஜி) ஸ்வாமி 22

6. பெருமாள் திருமொழி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் பராசர பத்ரீநாராயணபட்டர் ஸ்வாமி 36

7. திருச்சந்தவிருத்தம்

ஸ்ரீ உ.வே. திருவெள்ளறை ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி 40

8. திருமாலை

ஸ்ரீ உ.வே. வானமாமலை என்.எஸ். க்ருஷ்ண ஐயங்கார் ஸ்வாமி 43

9. திருப்பள்ளியெழுச்சி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் பரதன் ஸ்வாமி 47

10. அமலனாதிபிரான்

ஸ்ரீ உ.வே. திருப்புல்லாணி ஸுந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி 53

11. கண்ணிநுண்சிறுத்தாம்பு

ஸ்ரீ உ.வே. வடகரை விஜயராகவ ஐயங்கார் ஸ்வாமி 58

12. பெரிய திருமொழி

ஸ்ரீ உ.வே. முனைவர் திருச்சித்ரகூடம் அ.வே. ரங்காசார்யர் ஸ்வாமி 65

13. திருக்குறுந்தாண்டகம்

ஸ்ரீ உ.வே. கோ.க.வா. ரங்கராஜன் ஸ்வாமி (திருப்பதி) 68

14. திருநெடுந்தாண்டகம்

ஸ்ரீ உ.வே. முனைவர் திருப்பதி மா. வரதராஜன் ஸ்வாமி 74

15. முதல் திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. தி.அ. அக்காரக்கனி ஸ்ரீநிதி ஸ்வாமி 79

16. இரண்டாம் திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. பெருமாள்கோவில் பி.ப.ராஜஹம்ஸம் ஸ்வாமி 83

17. மூன்றாம் திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. முனைவர் வி.வி. ராமாநுஜன் ஐயங்கார் ஸ்வாமி 87

18. நான்முகன் திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. கே.பி. தேவராஜன் ஸ்வாமி 92

19. திருவிருத்தம்

ஸ்ரீ உ.வே. அ. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி 98

20. திருவாசிரியம்

ஸ்ரீ உ.வே. மன்னார்குடி ராஜகோபாலசார்யர் ஸ்வாமி 106

21. பெரிய திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. ஆத்தான் அப்பு சடகோபாசாரியர் ஸ்வாமி 109

22. திருவெழுகூற்றிருக்கை

ஸ்ரீ உ.வே. நடாதூர் வி.எஸ். கருணாகராசாரியர் ஸ்வாமி 112

23. சிறிய திருமடல்

ஸ்ரீ உ.வே. திருநாரயணபுரம் அரையர் ஸ்ரீராமசர்மா ஸ்வாமி 120

24. பெரிய திருமடல்

ஸ்ரீ உ.வே. காட்டுமன்னார்கோயில் வேங்கடசார்யர் ஸ்வாமி 123

25. திருவாய்மொழி

ஸ்ரீ உ.வே. இளையவில்லி ஸ்ரீனிவாஸபூவராஹாசாரியர் ஸ்வாமி 129

26. இராமானுசநூற்றந்தாதி

ஸ்ரீ உ.வே. பிள்ளைலோகம் திருவேங்கடாசாரியர் ஸ்வாமி 135

27. உபதேசரத்தினமாலை

ஸ்ரீ உ.வே. கபிஸ்தலம் தி.அ. ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி 141

28. திருவாய்மொழி நூற்றந்தாதி

ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் கோமடம் ஸம்பத்குமாராசாரியர் ஸ்வாமி 144

திவ்யப்ரபந்த ஸாரஸங்க்ரஹம்

ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் மஹாமஹோபாத்யாய
காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

1. திருப்பல்லாண்டைக் கற்று. அதற்கு ஏற்ப வர்த்திக்க வேண்டிய விதம் யாதெனில், அர்ச்சாவதாரங்களில் எம்பெருமானை ஸேவிக்கும்போது அற்ப பலன்களை அபேக்ஷியாமல் ஹ்ருதய பூர்வகமாக அவனுக்கு மங்களாசாஸனம் பண்ணவேணும்; பண்ணினால் நமக்கு அபேக்ஷிதங்களானவை தன்னடையே ஸித்திக்கும்.

2. பெரியாழ்வார் திருமொழிக்கு ஸாரமாக அநுஸந்திக்க வேண்டுவது– (5–3–3) "உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன் இனிப்போயொருவன் தனக்குப் பணிந்து



கடைத்தலை நிற்கை நின்சாயை அழிவு கண்டாய்" என்கிற பாசுரம். இவ்வத்யவஸாயத்தைத் திடமாகக் கொண்டு வர்த்திக்க வேணும்.

3. திருப்பாவையில் (28) "உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கொழிக்கவொழியாது" என்னும்படி ஒழிக்கவொழியாத பகவத் ஸம்பந்தத்தை நன்குணர்வதற்கு மேற்பட கர்த்தவ்யமேதுமில்லை; நமக்கு.

4. நாச்சியார் திருமொழிக்கு ஸாரமாக (10–10) "வில்லி புதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை, வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" என்கிற பாட்டை யநுஸந்தித்து ஆசார்ய ஸம்பந்தத்தையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் அத்தனையே ஸ்வரூப அநுரூபம். இதுவே சரம பர்வ நிஷ்டை யென்பது.

5. பெருமாள் திருமொழிக்கு ஸாரமாக (5) "தருதுயரம் தடாயேல்" என்கிற பதிகத்தை யநுஸந்தித்து அதில் பாசுரம் தோறும் காட்டியுள்ள த்ருஷ்டாந்தங்களைச் சிந்தனைசெய்து அநந்ய கதித்வம் குலையாதபடி வர்த்திக்க வேண்டுவது முக்கியம்.

6. திருச்சந்த விருத்தத்திற்கு ஸாரமாக(101) "நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே" என்று எம்பெருமான் திருவடிகளிலே பிரார்த்திக்க வேண்டும். நமக்கு விளையும் நன்மைகள் அவனடியாக விளைந்தவையென்றிருக்க வேண்டும்.

7. திருமாலையில் (38) 'உன் கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பரை யுகத்தி போலும் சூழ்புனல் அரங்கத்தானே" என்ற பாசுரத்தைச் சிக்கனக் கொண்டு பகவத் ஸன்னிதியே

கதியாக வர்த்திக்க வேணும். அர்ச்சாவதார ப்ராவண்யமுண்டாக வேணும்.

8. திருப்பள்ளியெழுச்சியில் (10) "உன்னடியார்க்கு ஆட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே" என்ற பாசுரத்தைப் பெரிய சாஸ்த்ரார்த்தமாகக் கொண்டு அடியார்க்கு ஆட்பட்டிருக்கையையே ஸ்வரூபாநுரூபமென்று உறுதி கொண்டிருக்க வேணும்.

9. அமலனாதிபிரானில் (1) "அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்" என்ற சந்தையை கொண்டு அவ்வுறுதியை மேன்மேலும் வளரச் செய்து கொண்டு போகவேணும்.

10. கண்ணிநுண் சிறுத்தாம்பில் (8) "ஆயிரமின் தமிழ் பாடினானருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்றதை ஸாரமாகக் கொண்டு எம்பெருமானருளைக் காட்டிலும் ஆழ்வாருடைய திருவருளே மேம்பட்டதென்று அநுஸந்தித்திருக்கவேணும்.

11. பெரிய திருமொழியாயிரத்தையும் விட்டிட்டு "எங்கள் கதியேயிராமாநுசமுனியே! சங்கை கெடுத்தாண்ட தவராசா!—பொங்குபுகழ் மங்கையர்கோனீந்த மறையாயிரமனைத்தும், தங்குமனம் நீ எனக்குத்தா" என்கிற தனியனையே அநுஸந்தித்திருக்க வேண்டும். எம்பெருமானார் திருவருளினால் தான் பெரிய திருமொழி மனப்பாடமாகும்.

12. திருக்குறுந்தாண்டகத்தில் (19) "உலகமேத்துங்கண்டி யூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டினாருய்யல்லால் மற்றையார்க்குய்யலாமே" என்ற பாசுரத்தை ஸாரமாகக் கொண்டு உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவ கைங்கர்யங்களே போதுபோக்காயிருக்க வேணும்.

13. திருநெடுந்தாண்டகத்தில் (28) "என்னில் அங்கமெல்லாம் வந்தின்பமெய்த எப்பொழுதும் நினைந்துருகியிருப்பன் நானே" என்றபடி எம்பெருமானுடைய சிந்தனையே கொண்டு எப்பொழுதும் நினைந்துருகியிருப்பதற்கு மேற்பட ஒரு புருஷார்த்தமில்லை என்று துணிந்திருக்க வேணும்.

14. பொய்கையாழ்வாருடைய திருவந்தாதியில் (16) "பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்கிற பாசுரத்தை ஸாரமாகக் கொண்டு ஒரு க்ஷணகாலமும் பழுதுபடாமே பகவத் பாகவதாசார்ய குணசிந்தனையே போது போக்காயிருக்க வேணும்.

15. பூதத்தாழ்வாருடைய திருவந்தாதியில் (16) "வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார்" என்கிற பாசுரத்தை ஸாரமாகக் கொண்டு நாம் செய்யும் செய்கைகளிலே உபாயத்வபுத்தி குலைந்திருக்க வேணும்.

16. பேயாழ்வாருடைய திருவந்தாதியில்(14) "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்கிற பாசுரத்தை ஸாரமாகக் கொண்டு விஷயாந்தர வைராக்ய அப்யாஸம் நிகழ வேணும்.

17. நான்முகன் திருவந்தாதியில் (63) "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்ற பாசுரத்தை ஸாரமாகக் கொண்டு அவ்விதமாகவே போது போக்கி வரவேணும்.

18. திருவிருத்தத்தில் (97) "தொல்லைமாலைக் கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே" என்ற பாசுரத்தை நித்யாநுஸந்தானம் பண்ணியிருக்க வேண்டும்.

19. திருவாசிரியத்தில் (2) "மாயாப்பெரு விறலுலகம் மூன்றினொடு நல்வீடு பெறினும், கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே" என்றபடி "த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குச விபூதி"கர்களாயிருக்க ஆசைப்பட வேண்டும்.

20. பெரிய திருவந்தாதியில் (86) "சீர்கலந்த சொல் நினைந்து போக்காரேல்– என்னினைந்து போக்குவரிப் போது" என்றபடி போதைப் போக்குவதற்கு பகவத்குணாநுபவ மொழிய வேறொரு உபாயமில்லையென்று துணிந்திருக்க வேணும்.

21. திருவெழுகூற்றிருக்கையில் "அறுதொழிலந்தணர் வணங்குந் தன்மையை" "நெறிமுறை நால்வகை வருணமுமாயினை" என்கிற சந்தைகளை அநுஸந்திப்பதற்குப் பலன் வர்ணாச்ரமாசாரங்கள் வழுவாமேயிருப்பது தான் என்று கொண்டிருக்க வேணும்.

22. சிறிய பெரிய திருமடல்களைச் சிந்தித்து, ஸ்வரூபவிருத்தமாக மடலூர்ந்தாகிலும் எம்பெருமானைப் பெறவாசைப்பட்டு "நானவனைக்காரார் திருமேனி காணுமளவும் போய், சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே............" என்று திவ்யதேசங்கள் தோறும் புக்குப் புறப்படுவதே பேறென்று உறுதிகொண்டிருக்க வேணும், மடலூர்வது திவ்யதேசாநுபவம் பெறுவதற்கே.

23. திருவாய்மொழியாயிரத்தில் புகுவதற்கு முன்னே "எய்ந்த பெருங்கீர்த்தியிராமானுசமுனிதன், வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன், ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற" என்றனுஸந்தித்து "மிக்க விறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும், தக்க நெறியும் தடையாகித் தொக்கியதும் ஊழ்வினையும், வாழ்வினையுமோதுங் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்" என்றுமநுஸந்தித்திருக்குமத்தனையே போதும். "உண்டோ திருவாய்மொழிக்கு ஒப்பதோர் கலை தான்."

24. இராமானுச நூற்றந்தாதியில் (107) "இன்புற்ற சீலத்திராமானுச! உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி என்னை யாக்கியங்காட்படுத்தே" என்ற ஓர் பாசுரத்தின் அநுஸந்தானமே தலை சிறந்து நிற்க வேணும்.

25. மணவாள மாமுனிகளருளிச் செய்த உபதேசரத்தின மாலையில் "அன்னபுகழ் முடும்பையண்ணலுலகா சிரியன்" என்று தொடங்கி (53–59) ஏழு பாட்டுக்களால் வெளியிட்டருளின ஸ்ரீவசனபூஷண திவ்யசாஸ்த்ரப் பெருமையை நிச்சலும் சிந்தித்திருப்பதே ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தஞ்சமாகும். "எல்லார்க்கு மண்டாத தன்றோவது."

மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் எம்பெருமானார்க்குத் திருநாள் பாட்டு அருளிச் செய்கையில் "ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு சித்திரையில் செய்ய திருவாதிரை" என்றருளிச் செய்தார். மணவாளமாமுனிகளைப் பற்றிப் பேச வேண்டில் "ஆழ்வாரு மாரியருமவதரித்த நாள்கள் தமில் வாசாம கோசரநாள் ஐப்பசியில் திருமூலம்" என்றநுஸந்திக்க வேணும். "அல்லும் பகலுமனுவிப்பார் தங்களுக்குச் சொல்லும் பொருளும் தொகுத்துரைத்த நல்ல மணவாள மாமுனிவன்" திருவருள் கண்டீர்! இவ்வுலகினில் மிக்கது என்றே அநுஸந்தித்திருப்பர் அறிவிற் சிறந்த ஆரியர்கள்.

திருப்பல்லாண்டு

பேராசிரியர் ஸ்ரீஉ.வே. மண்டயம் திருமலை அனந்தாண்பிள்ளை

லக்ஷ்மீ தாத்தாசாரியர் ஸ்வாமி, திருநாராயணபுரம்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயம் ஒரு சிறந்த சம்பிரதாயமாகும். 'ஒத்தாரும் மிக்காரும் இலையாய மாமாய' என்று பரம்பொருளுக்கு, ஒத்தாரும் மிக்காரும் இல்லாதபடி, இந்த சம்பிரதாயத்திற்கும் ஒத்த சம்பிரதாயம் ஆதல், மிக்க சம்பிரதாயம் ஆதல் உலகத்தில் கிடையாது. இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் பெருமைக்கு பல காரணங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை, பிரமாண தமங்களாக கருதப்படும் திராவிட திவ்வியப் பிரபந்தங்களாகும்.

திராவிட திவ்வியப் பிரபந்தங்கள் நம் முன்னோர்களால் திராவிட வேதமென்றே போற்றப்பட்டன. மற்ற சம்பிரதாயங்களுக்கு இல்லாத இந்தப் பிரமாண வைபவம், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்துக்கே உள்ளது. ஸ்த்ரீ சூத்ராதிகளும் படிப்பதற்கு உரிமையுடைய திராவிட வேதங்கள், 'மந்த்ர ராஜ' பதத்தால் போற்றப்படுகிற பெரிய திருமந்திரத்தினுடைய அர்த்தத்தை விவரிக்கின்றனவாக, முன்னோர்கள் கண்ட முடிவு. பெரிய திருமந்திரத்தில் 'ஓம்' என்கிற முதல் பதத்தினுடைய அர்த்தத்தை நாலாயிர திவ்வியப் பிரபந்தங்கள் அமைக்கப்பட்டிருக்கிற கிரமத்தில், பல்லாண்டிலிருந்து கண்ணிநுண் சிறுத்தாம்புவரை இருக்கக்கூடிய பிரபந்தங்கள் விவரிக்கின்றனவாகவும்; 'நம:' பத அர்த்தத்தை கண்ணிநுண் சிறுத்தாம்பு விவரிக்கின்றதாகவும்; 'நாராயணாய' என்கிற மூன்றாம் பதத்தினுடைய அர்த்தத்தை மற்ற பிரபந்தங்களெல்லாம் விவரிக்கின்றனவாகவும் பெரியோர்கள் கூறுவார்கள்.

ஸம்ஸ்க்ருத வேதம் தொடங்கும் போது, பிரணவ அனுஸந்தானம் இல்லாமல் தொடங்கமாட்டார்கள். ஸம்ஸ்க்ருத வேதத்தில் உள்ளதுக்கெல்லாம் சுருக்கமான பிரணவத்தினுடைய (ஓம்) ஸ்தானத்தில் உள்ளது திராவிட வேதத்தில், உள்ளதுக்கெல்லாம் சுருக்கமாய் மங்களகரமான 'திருப்பல்லாண்டு' என்கிற இந்த முதல் பிரபந்தமாகும். ஆதலால் தான் விசதவாக்சிகாமணியான மணவாள மாமுனிகள் தம்முடைய உபதேச ரத்தினமாலையில், 'வேதத்துக்கு ஓம் என்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம் சுருக்கமாய் தான் மங்களமாதலால் ஆழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம் ஆதி திருப்பல்லாண்டு ஆனது' என்று பல்லாண்டின் பெருமையைக் கூறுகிறார்.

'ஞானானந்த மயஸ்த்வாத்மா சேஷோஹி பரமாத்மந:' என்று சொல்லும்படி சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம். சேஷத்வமானது, பரம்பொருளான ச்ரிய: பதியான ஸ்ரீமன் நாராயணனுக்கு அடிமையாக இருப்பது தான். ஒவ்வொரு ஜீவனும் இவ்வுலகத்தில் தன்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து, அந்த ஸ்வரூபாநுரூபமாக, பரம்பொருளுக்கு ப்ரேம அதிசயத்தாலே மங்களாசாஸனம் செய்வது தான் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வரூபம்.

இந்த விஷயத்தை மிக அழகாக காட்டிக் கொடுத்தவர், பெரியாழ்வார் என்றே போற்றப்பட்ட, மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் நெடுவாசியுள்ள நம் விஷ்ணுசித்தர். ஆதலால்தான்,

மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில், 'உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலைதான் உண்டோ பெரியாழ்வாருக்கு ஒப்பொருவர்' என்று திருப்பல்லாண்டையும் பெரியாழ்வாரையும் கொண்டாடினார்.

பெரியவர் இளையவரை வாழ்த்துவதுதான் வடமொழியில் மங்களாசாசனம் என்று கூறப்படுகிறது. பெரியாழ்வார், பரம்பொருளான ஸ்ரீமன் நாராயணனை வாழ்த்திப் பாடின மிகச் சிறந்த திவ்வியப் பிரபந்தம் தான் 'திருப்பல்லாண்டு' என்கிற பிரபந்தம். பரதத்வ நிர்ணயம் பண்ணுவதற்காக, பாண்டிய மகாராஜாவின் ஸபைக்குச் சென்று, 'பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ஈண்டிய சங்கம் எடுத்தூத, வேண்டிய வேதங்கள் ஓதி விரைந்து கிழியறுத்த' பெரியாழ்வார் அருளிச்செய்த பிரதம ப்ரபந்தம் திருப்பல்லாண்டு என்கிற இப்பிரபந்தம்.

பெரிய திருமந்திரத்தில் முதல் பதமான 'ஓம்' என்னும் பதத்தால் விளக்கப்பட்ட, ஜீவாத்ம ஸ்வரூபமான சேஷத்வத்தை (அடிமையை) விவரிக்கின்றது இப்பிரபந்தம் என்று மேலே சொல்லப்பட்டது. அடிமையானவன் தன் ஸ்வாமிக்கு இப்படி மங்களாசாசனம் செய்வது, ஸ்வரூப முரண்பாடானதன்றோ என்கிற ஒரு ஐயம் எழும். வியாக்கியான சக்ரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளை, தமது திருப்பல்லாண்டு வியாக்கியானத்திலே இவ்விஷயத்தை மிக விரிவாக விமர்சித்துள்ளார்.

பரதத்வ நிர்ணயம் பண்ணின பெரியாழ்வாரை, யானைமேல் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வரும் பொழுது, பராத்பரனான ஸ்ரீமன் நாராயணன், ஸ்ரீ பூ நீளா ஸமேதனாக ஆகாயத்தில் தோன்றினான். அவனை ஸேவித்தவுடனே பெரியாழ்வார் அவனுடைய வடிவழகில் மயங்கினார். பகவானிடத்தில் அவருக்கிருந்த பிரேமாதிசயத்தினாலே கலங்கினார். காலம் நடையாடுகிற இக்கொடுவுலகத்தில், திவ்ய மங்கள விக்ரஹத்துடன் கூடிய எம்பெருமான் இப்படி ஸேவை சாதிக்கிறானே! இவனுக்கு என்ன தீங்கு வருகிறதோ! என்று மிகவும் அஞ்சினார். அவருக்கு ஏற்பட்ட கலக்கத்தால், தம்மையும் தம்முடைய நன்மையும் மறந்தார். காலம் நடையாடுகிற இத்தேசத்திலே, பகவானுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது என்று 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பலகோடி நூறாயிரம்......' என்று பாட ஆரம்பித்தார்.

கலக்கத்தால், காப்பாற்றுகிறவனான பரம்பொருளுக்கு அடிமையாய் இருப்பவன் பல்லாண்டு பாடுவது 'ஸ்வரூப ப்ரயுக்தம்' என்று பெரியவாச்சான்பிள்ளை தம்முடைய வியாக்கியானத்தில் மிகவும் அழகாக நிரூபித்துள்ளார். இறைவனுடைய அழகை ஸேவிக்கும் பொழுது, பிரேமாதிசயத்தினாலே மயங்கி, இந்த அழகுக்கு என்ன தீங்கு வருகிறதோ என்று மங்களாசாஸனம் செய்வது தான் அடியவனுடைய கடமை.

பெரியாழ்வாருடைய பெண்பிள்ளையான ஆண்டாளும் கூட, தன்னுடைய திருப்பாவையின் 24ஆவது பாசுரத்தில், எம்பெருமானுடைய அழகிலே ஈடுபட்டு 'அன்று இவ்வுலக மளந்தாய் அடிபோற்றி, சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி.......' என்று காலந்தரத்திலே நிகழ்ந்த அபதானத்துக்கெல்லாம், நிகழ் காலத்திலே பயந்து பல்லாண்டு பாடுகிறாள் அல்லவா! அடிமையானவள் இறைவனிடத்தில் உள்ள பிரேமாதிசயத்திலே அவனுக்குப் பல்லாண்டு பாடுவது இயற்கையானது. பிரேமை பொங்கும் பொழுது காப்பாற்றப்பட வேண்டியவனும் காப்பாற்றுபவனும் என்னும் பாவம் (ரக்ஷ்ய ரக்ஷக பாவம்) மாறாடினாலும் அது ஸ்வரூப ப்ரயுக்தம் தான் என்பது நம்முடைய முன்னோர்கள் கண்ட நிலை.

பெரியாழ்வார் திருமொழி

பேராசிரியர் முனைவர் ஸ்ரீ உ.வே. இரா. அரங்கராஜன் ஸ்வாமி

பெரியாழ்வாரின் பெருமைகள்:

ஸ்ரீவல்லபதேவன் என்ற தென்னவன் கூர்வேல் கோ நெடுமாறன் என்ற பாண்டிய மன்னன் கூடல் மாநகரில் கூட்டிய சமயவாதியர் குழுமிய சபையில், விஷ்ணுசித்தன் வேத வாக்கியங்களையும் உபப்ருஹ்மணங்களான ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களையும் கொண்டு திருமாலே பரதத்வம் என்று நிரூபித்துப் பொற்கிழி பெற்றார். பாண்டிய மன்னவனும் விஷ்ணுசித்தரைப் பட்டத்து யானை மீது ஏற்றி நகர்வலம் வந்தான். அவ்வைபவத்தைக் காண்பதற்காக ஸர்வேச்வரன் பிராட்டியுடன் சேர்ந்து கருடன் மீது ஆரோஹணித்து விண்ணிலே பலரும் காணும்படியாகத் தோன்றினான்; இது ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத்காரம். முதலைவாய்ப்பட்ட கஜேந்திரனுக்குக் கண்முன் தோன்றித் தொழுங்காதல் களிற்றின் கைப்பட்ட மலரைப் பெற்றான் அன்றோ! அது போல் விஷ்ணுசித்தரின் திருவாக்கிலிருந்து மலரப் போகும் திருப்பல்லாண்டுப் பாசுர மலர்களைப் பெறுவதற்காக விண்மீதிருந்து தோன்றினான்.

விஷ்ணுசித்தர் திருமால் தன் பேரெழிலில் மூழ்கி அதற்குக் கண்ணெச்சிற்படாதிருக்க யானைக் கழுத்திற் கிடந்த மணிகளையே தாளமாகக் கொண்டு இசை சேர்த்துத் திருப்பல்லாண்டு பாடினார்.

வடமதுரையில் கம்ஸன் கூட்டிய யுத்தரங்கத்தில் மல்லர்களான சாணூர முஷ்டிகர்களை வென்ற திருத்தோள்களுடன் பறவையேறி வந்த பரம்புருடனைக் கண்டதும் விஷ்ணுசித்தர் பொங்கும் பரிவோடு திருப்பல்லாண்டு இசைத்தார். அவனுடைய தோளுக்கும் தாளுக்கும் ஒருசேர மங்களாசாஸனம் செய்தார். அதனாலே "பெரியாழ்வார்" என்று அழைக்கப் பெற்றார். இந்நிகழ்ச்சியை மணவாள மாமுனிகள்,

மங்களா சாஸனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள் ஆர்வத்தளவு தானன்றிப் - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர் பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்.

என்று உபதேசரத்தின மாலையில் (18) தெரிவிக்கிறார்.

பெரியாழ்வாரின் இயற்பெயர் விஷ்ணுசித்தன். விட்டுசித்தன் என்று தமிழ் ஒலிப்படுத்தித் தம்மை அழைத்துக் கொள்கிறார். திருமகளாரான ஆண்டாளும் 'விட்டுசித்தன் கோதை' என்று தன்னை அறிமுகப்படுத்துகிறாள். விட்டுசித்தரும் தாம் வேதம் பயின்ற அந்தணர் என்பதை 'மின்னுநூல் விட்டுசித்தன்' என்று புலப்படுத்திக் கொள்கிறார்.

கூடல் மாநகரில் ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம் என்று நிலை நாட்டியது வேதவாய்த் தொழில் வித்தகர்களான வைதிகர்க்கும் செய்த பேருபகாரமாயிற்று. புறச் சமயிகள் முன் வைதிகர்கள் தலைநிமிர்ந்து நடக்கும்படி பண்ணின உபகாரத்தைக் கருதியே அவர்க்குப் 'பட்டர்பிரான்' என்று பாண்டியன் விருதளித்துக் கொண்டாடினான். பிரான் என்பது உபகாரகன் என்ற பொருள் பெற்ற சொல்லாகும். இச்செய்தியைப் பாண்டிய பட்டர் தெரிவிக்கிறார்.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று
ஈண்டிய சங்கம் எடுத்தூத - வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பாண்டியன் கொண்டாடியதும் சங்கத்துப் புலவர்கள் வெற்றி முழக்கம் செய்தனர். சைவனாயிருந்த பாண்டிய மன்னன் பரம வைஷ்ணவன் ஆனான். பெரியாழ்வாரால் ஆட்கொள்ளப் பெற்று 'ஸ்ரீவல்லபன்' என்ற தாஸ்ய நாமமும் பெற்றான். அதற்குப் புருஷகாரமாக இருந்தவரே பாண்டிய பட்டர்; அவருடைய

திருநாமம் செல்வநம்பிகள் என்று அறியத்தகும். பாண்டியர்களுக்குப் புரோஹிதராக விளங்கியவர்கள் பாண்டியபட்டர் என்று அழைக்கப் பெற்றனர். பட்டர் என்கிற ஸ்தானத்தில் பிரமராயன் என்று அறியப் பெற்றார். கரிகாற் சோழபிரமராயர், அகளங்க பிரமராயர் என்ற இருவரையும் நம்பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார். (ஈடு 7–2–0 ; ஈ. 3–9–2)

"அல்வழக்கொன்றுமில்லா அணி கோட்டியர் கோன் அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும் உனக்குப் பழவடியேன்"

என்கிறார் பெரியாழ்வார். பாண்டியபட்டராக விளங்கிய செல்வநம்பிகளே பெரியாழ்வாருக்கு ஆசாரியராவார். ஆதலால் அவரைத் திருப்பல்லாண்டில் பெரியாழ்வார், 'அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர் கோன் அபிமானதுங்கன் செல்வன்' என்று போற்றினார். 'ப்ரத்யக்ஷே குரவஸ்துத்யா:' என்பதால் யானை மீது ஏறி ஊர்வலம் வரும் போது உடனிருந்து சிறப்புச் செய்த ஆசாரியரைத் திருப்பல்லாண்டு இசைக்கும் போதே உவமைப் பொருளாக்கி உயர்த்தியருளினார். 'உயர்ந்ததன்மேற்றே உவமை' என்பது நூல் வழக்கு.

பெரியாழ்வார் வித்வத் கோஷ்டிக்கு எழுந்தருளியபோது அவரைச் செல்வநம்பிகள் தண்டனிட்டு வணங்கினார் என்று ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ராபவத்தில் கூறப்பட்டுள்ளது. எம்பெருமானாருடைய வைபவத்தைக் கண்ட பெரியநம்பிகள் ஒரு சமயத்தில் அவர் எழுந்தருளும் போது தண்டனிட்டார் என்று நம் ஆசார்யர்களால் ஓர் ஐதிஹ்யம் காட்டப்பட்டிருக்கிறது.

பிள்ளை உலகாரியன் காட்டிய பெருமைகள்:

ஆழ்வார்கள் எல்லாரையும் போல் அல்லர் பெரியாழ்வார். எம்பெருமானைப் பல்லாண்டுப்பாடி வாழ்த்துவது மற்றவர்களுக்கு ஏதோ ஒரு போதில் உண்டாகும்; பெரியாழ்வார்க்கு அப்படி வாழ்த்துவது எப்போதிலும் உண்டாகும். மற்றைய ஆழ்வார்கள் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபங்களில் மனத்தை இழந்து விடுவர்; அவர்களுக்கு அவை ஆழங்காலாகும். ஆனால் பெரியாழ்வார் அவ்வாறு ஆழ்ந்து விடாது மேட்டு நிலத்திலே கால் ஊன்றி பகவத் ஸ்வரூப ரூப குணங்களுக்கு மங்களாசாஸனம் செய்து கொண்டிருப்பர்.

பெரியாழ்வார் பய நிவர்த்தங்களுக்கு பயப்படுவார்; ப்ரதிகூலர்களையும் அநுகூலர்களாக ஆக்கிக் கொள்வார்; கழிந்து போன காலங்களில் நிகழ்ந்த அரிய செயல்களுக்கு இப்போது இருந்து வயிறெரிந்து மங்களாசாஸனம் செய்வார்;

மங்களாசாஸனத்துக்குப் பலனும் மங்களாசாசனம் செய்து கொண்டேயிருப்பது; உறக்கம் கொள்ளாது எம்பெருமானுக்குக் காவல் செய்து கொண்டிருப்பாரையும் அச்சம் மேலிட்டு 'உறங்கி விடாதீர்கள்' என்று எச்சரிப்பது என்பதாய் எப்போதும் இதுவே யாத்திரையாய் இருப்பர் பெரியாழ்வார்.

பட்டர்பிரான் பாகவதம்:

நம்மாழ்வாரை க்ருஷ்ணப்ரேமையே வடிவெடுத்தவர் என்று நம் ஆசார்யர்கள் புகழ்ந்தனர். 'க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம்' என்று கூரத்தாழ்வான் வருணித்துள்ளார். கண்ணன் மீது கோபியர்கள் கொண்டிருந்த காதல் முழுதும் ஓர் உருக்கொண்டு வந்தது போன்று நம்மாழ்வார் பிரகாசித்தார்.

'குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும்' என்ற திருவாய்மொழியில் ஸ்வாமி நம்பிள்ளை இதனை அறிவித்தார்.

"திருக்குரவையில் பெண்களோடுண்டான கலவியையாயிற்று இவர்க்கு முதலிலே காட்டிக் கொடுத்தது; பஞ்சலக்ஷம் குடியிற் பெண்கள் எல்லாரோடும் கலந்த ப்ரீதியுண்டாயிற்று, இவர் ஒருவரோடே கலந்த ப்ரீதி" என்பன ஈட்டுத் தொடர்கள்.

'க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம்' என்று அறியப்பட்ட ஆழ்வார் க்ருஷ்ண லீலைகள் ஒன்று தப்பாமல் சொல்லவல்லவர் அல்லர். நவநீத சோர வ்ருத்தாந்தத்தைச் சொல்லப் புகுந்ததுமே காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் என்ற நிலையேற்பட்டது. 'எத்திறம் உரலினோடு இருந்து ஏங்கிய எளிவே' என்று ஆறுமாதகாலம் மூர்ச்சையுற்றார். இவரால் க்ருஷ்ணன் செய்த லீலைகளைச் சொல்ல முடியுமோ? க்ருஷ்ணனுடைய ஒரு குணத்தில் ஆழங்காற்பட்டார் நம்மாழ்வார்.

ஆனால் பெரியாழ்வாரோ அவ்வாறு ஆழங்காற் படாது அவ்வாழங்காலே மேட்டு நிலமாக தரித்து நின்று ஸ்ரீக்ருஷ்ண லீலைகளை அவற்றுள்ளும் பால லீலைகளை விரிவாகவே அனுபவித்துப் பேசினார். அவ்வநுபவம் முதிர்ந்து கோபஜன்மத்தை ஆஸ்தானம் பண்ணியருளினார்.

திருப்பல்லாண்டு பாடியருளியபின் ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு எழுந்தருளி பொற்கிழியின் தனத்தைக் கொண்டு ஸ்ரீவல்லபதேவன் ஸஹகரிக்க வடபெருங் கோயிலுடையானுக்குக் குன்றமன்னதோர் கோபுரம் எழுப்பினார். வழக்கம் போல் நந்தவன கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கும் போது ஆண்டாள் அவதரித்தாள்.

ஆண்டாளுக்கு கிருஷ்ண சரித்ரம் சொல்லத் தொடங்கினார். அவர் திருவுள்ளத்திற்கு மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன் நிலைபெற்றிருந்தான். அவனுடைய கதையைச் சொல்லத் தொடங்கினார்.

திருக்கோட்டியூர் அவருடைய திருவுள்ளததில் ஊற்றிருந்தது. 'அவ்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர் கோன் செல்வனைப் போல' என்ற தொடர் எண்ணத்தில் பின்னாட்டியது.

திருக்கோட்டியூர் கண்ணனே திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளினான் என்று க்ருஷ்ண கதையைத் தொடங்கினார்.

பட்டர்பிரான் பாகவதம் அவதரித்தது. கிருஷ்ணாவதாரக் கொண்டாட்டங்களை வருணித்தார். புறம்பே நின்று வருணித்தவர் கதைக்குள் ஒரு பாத்திரமாகவே மாறினார்.

கண்ணனைப் பெற்ற யசோதையான அவஸ்த்தை ஆட்கொண்டது; கோப ஜன்மத்தை ஆஸ்தானம் பண்ணிக் கொண்டார் பெரியாழ்வார்.

கண்ணபிரானின் திருவவதாரச் சிறப்புக்களையெல்லாம் ஒன்றொழியாது கதை சொல்லி வந்தவர் ஆய்பாடி ஆயர்களின் ஆரவாரம், பிள்ளையைக் காணவந்த ஆய்ச்சியரின் மகிழ்ச்சிப் பெருக்கு, ஆயர்கள் செய்த உத்தானச் சடங்கு இவற்றையெல்லாம் சொல்லி, க்ருஷ்ண சிசுவைத் தொட்டிலில் கிடத்த முயற்சியையும் அது முடியாமையால் யசோதை இடுப்பில் எடுத்துக் கொண்டபடியையும் சொல்ல வந்த பெரியாழ்வார் தாம் யசோதையாக மாறிவிட்டதை உணர்த்துகிறார்.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்!

என்று யசோதை வார்த்தையாகக் கூறி முடித்தார். "வையமேழும் கண்டாள் பிள்ளை வாயுளே" என்று சற்றுமுன் படர்க்கையாகக் கூறியவர் உடனே யசோதாபாவம் ஏற்பட்டு 'நான்' என்று தன்மையால் கூறினார்.

பிள்ளைத் தமிழின் உள்ளடக்கம்:

1–1 கண்ணன் திருவவதாரச் சிறப்பு
1–2 கண்ணன் பாதாதி கேசாந்த வர்ணனம்
1–3 திருத்தாலாட்டு
1–4 அம்புலிப்பருவம்
1–5 செங்கீரைப்பருவம்
1–6 சப்பாணிப் பருவம்
1–7 தளர்நடைப் பருவம்
1–8 அச்சோப் பருவம்
1–9 புறம்புல்குதல்
2–1 அப்பூச்சி காட்டல்
2–2 முலையுண்ண அழைத்தல்
2–3 காது குத்தல்
2–4 நீராட அழைத்தல்
2–5 குழல்வாரக் காக்கையை அழைத்தல்
2–6 கோல் கொண்டு வர வேண்டுதல்
2–7 பூச்சூட்டல்
2–8 திருவந்திக்காப்பு
2–9 வெண்ணெய் களவு காணல்
2–10 ஆய்ச்சியர் முறையீடு
3–1 முலைகொடுக்க அஞ்சுதல்
3–2 கன்றின்பின்போனதற்கு ஏங்குதல்
3–3 கன்று மேய்த்து வருகை
3–4 கன்னியர் காமுறுதல்
3–5 கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்துதல்
3–6 குழல் ஊதுதல்

ஆக 25 பதிகங்களில் 273 பாடல்கள் கிருஷ்ண சரித்ரமாகவே ஆழ்வார் பாடியருளினார். மொத்தம் 43 பதிகங்களில் 25 பதிகங்கள் கிருஷ்ணாவதார விஷயம். திருஅவதாரம் தொடங்கி வேய்ங்குழல் ஊதியதுவரை 273 பாடல்கள். இவற்றில் வடமொழி பாகவதத்தில் வருணிக்கப்படாத சரித்திரங்களை பட்டர்பிரான் வருணித்துள்ளார். ஸ்ரீசுகரே அவற்றைப்பாட ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்தார் எனலாம். பெரியாழ்வார் பதிகங்களே தமிழ் மொழியில் பிள்ளைத் தமிழ் இலக்கிய வகையைத் தோற்றுவித்தது.

ஸ்ரீராமாவதார அனுபவம்:

இலங்கைக்குத் தூது சென்ற திருவடி அசோக வனத்தில் பிராட்டியைக் கண்டு பெருமாள் கூறிய சில அடையாளங்களைக் கூறிக் கணையாழி கொடுத்துக் களிப்பித்த செய்தியைப் பெரியாழ்வார் ஒரு திருமொழியில் வருணித்துள்ளார். அதில் பரசுராம கர்வபங்கம், மலர் மாலையால் கட்டுண்டது, வனவாசம், குஹ ஸக்யம், பரதநம்பி பணிந்தது, காகாசுரன் கண்ணிழந்தது, மாயமான் மாயச் செற்றது, ஆகிய செய்திகளை அடையாளமாகச் சீராரும் திறல் அனுமன் விண்ணப்பம் செய்த பிரகாரத்தைப் பெரியாழ்வார் பதிவுசெய்துள்ளார். அவ்விண்ணப்பத்தில் மிகவும் ஏகாந்தமாகப் பெருமாளும் பிராட்டியும் ஓர் திருவிளையாடு சூழலில் விளையாடிய செய்தியைப் பெரியாழ்வார் அமைத்திருக்கிறார். அவ்விளையாட்டில் பெருமாள் தோற்றுக் கொள்ள, கட்டிய பந்தயத்தின்படி பிராட்டி பெருமாளை மல்லிகை மாலையால் இறுகக் கட்டியதை அனுமன் தெரிவித்தார். தானும் பெருமாளுமாக இருவரிடையே நிகழ்ந்த செய்தியை அநுமன் விண்ணப்பித்தும் பிராட்டிக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

'பெருமாளுடைய ப்ரணயித்வ பாரதந்த்ரிய ப்ரயுக்தமான போக தசையில் நடப்பதொரு ரஸமாய்த்து இது; ஆகையாலே அல்லாத அடையாளங்கள் போலன்றிக்கே அத்யந்த ரஹஸ்யமாயிருப்பதொன்றிறே இது தான்; 'ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவேசநே, புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ' என்று இவள் தானும் பெருமாளும் அறியும் இத்தனையிறே'' என்பது ஸ்ரீமணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகள்.

திருமாலிருஞ்சோலை:

"சிலம்பாறு பாயும் தென் திருமாலிருஞ்சோலை"
"தேனாறு பாயும் தென் திருமாலிருஞ்சோலை"
"புனத்தினைக் கிள்ளிப் புதுவவி காட்டி உன் பொன்னடி வாழ்க வென்று
"இனக்குறவர் புதிய துண்ணும் எழில் மாலிருஞ்சோலை"

என்றெல்லாம் திருமாலிருஞ்சோலை மலையை வருணித்து வரும் பெரியாழ்வார் அரியதோர் செய்தியொன்றையும் தெரிவிக்கிறார்:–

"சிந்தப் புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப் பலி கொடுத்து ஆவத்தனம் செய் அப்பன் மலை" (4.2.9)

இதன் விவரணத்தை ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச் செய்கிறார்:– "ஆஸ்திகராய் த்யாஜ்யோபாதேய விவேகமுடையவராய் அழகர் அளவிலும் திருமலையாழ்வார் அளவிலும் ப்ரேமம் உடையவராய் வர்த்திக்குமவர்களைக் கண்டால் அவர்கள் ஸந்நிதியில் நில்லாதே அஞ்சலி வந்தனாதிகளைப் பண்ணி தம் தாமைக் கொண்டு மறைந்து வர்த்தித்து; நாஸ்திகராய் தியாஜ்யோபாதேய விவேக சூந்யராய், தேஹ போஷணாதிகளைப் பண்ணி ஸ்வைரம் ஸஞ்சரித்துத் திரியும் ப்ரதிகூல ஜனங்களை தம் தாம் ஸஞ்சரிக்கிற தேசத்திலே காலத்திலே கண்டால், அவயவங்கள் சிதற அடித்துக் கொன்று பொகடாநிற்குமாய்த்து" (காலத்திலே என்றது ஸந்த்யா காலத்திலே என்றபடி.)

மேலும் "தாம் தாம் அடித்துக் கொன்றவர்களுடைய தேஹத்தில் நின்றும் செவ்வியிலே சிவந்து புறப்படுகிற ரத்தத்தைக் கொண்டு பூதயோநியாயிருக்கச் செய்தேயும் வைஷ்ணவ நாம ரூபங்களோடு கூட பகவத் பாகவத பக்தியுக்தங்களாய்க் கொண்டு திரியும் பூதங்களானவை ...கண்டாகர்ணனைப் போலே தங்களுடைய ஜாத்யுசிதமாக ஜீவிக்குமத்தை ஸந்த்யா காலங்களிலே ஆராதன ரூபேண ஸமர்ப்பித்து."

நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமானதுங்கன்:-

பெரியாழ்வார் திருக்கோட்டியூர் பதிகத்தில் செல்வ நம்பிகளின் ப்ரபாவங்களைக் கொண்டாடுகிறார்.

"நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே" (திருவாய் 8–10–11) என்று ஆழ்வார் திருவாக்கிற்கு, செல்வ நம்பியின் க்ருஹ யாத்திரையை ஸ்வாமி நம்பிள்ளை உதாஹரிக்கிறார்.

"திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப் போகாநிற்கச் செய்தே திருக்கோட்டியூரிலே செல்வ நம்பி திருமாளிகையிலே போய்ப் புக்கார்களாய் நம்பி தாமும் அஸந்நிஹிதராயிருக்க, நங்கையார் நூறு வித்துக் கோட்டை கிடக்க, அவற்றைக் குத்தி ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்யப் பண்ணிவிட, பிற்றை நாள் நம்பி வந்து 'அவை செய்தது என்?' என்ன, 'பரமபதத்திலே விளைவதாக வித்தினேன்' என்றாளாம்.

செல்வநம்பிகளைச் சேவகம் கொண்டதால் திருக்கோட்டியூரில் கோயில் கொண்ட எம்பெருமான் பூரிப்புடன் திருக்கண்கள் சிவந்து பிரகாசிக்கிறான் என்கிறார் பெரியாழ்வார்.

நளிர்ந்த *சீலன்*:– குளிர்ந்த *சீலத்தை*யுடைய செல்வநம்பி. ஈச்வரன் *சீலம்* கொதித்திருக்கும். அதுக்கடி துர்மாநியான ருத்ரனும் சாவாமைக்கு மருந்து தின்னும் தேவஜாதியுமிறே இவனுக்கு அடிமை செய்வது; இப்படியன்றியே "காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்" என்றிறே செல்வநம்பியிருப்பது. நயாசலன்:– நீதிக்குக் குலைதல் இல்லாதவன், நீதியாவது சேஷ சேஷிபாவ ஸம்பந்தம். அபிமான துங்கன்:– பகவதநுபவத்தால் வந்த செருக்கும் கர்வமுமிறே அபிமானிக்கிறது. நளிர்ந்த *சீலன்* என்று குணம்; நயாசலன் என்று அநுஷ்டாநம்; அபிமான துங்கன் என்று இவற்றாலே வந்த செருக்கு. செல்வன் – 'லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:' என்றும் 'அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்' என்றும் 'ஸதுநாகவர ஸ்ரீமாந்' என்றும் சொல்லுகிற மூன்று ஸ்ரீயும் இவர்க்குண்டு. இவருடைய ஸம்பந்தத்தால் கோஷ்டிபுரவாஸிகள் அல்வழக்கு ஒன்றுமில்லாதவர்களானார்கள். மேலும் குற்றமின்றிக் குணம் பெருக்கி குருக்களுக்கு அநுகூலராயிருந்தனர். இப்படிச் *சீர்மை* மிகுந்த செல்வ நம்பியின் திருக்குலத்தில் அவதரித்தவரே திருக்கோட்டியூர் நம்பிகள். 'செல்வ நம்பி குலம் செழிக்க வந்தோன் வாழியே' என்பது திருக்கோட்டியூர் நம்பிகளின் வாழித்திருநாமம்.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

திருப்பாவை

ஸ்ரீவில்லிபுத்தூர் விஞ்சிமூர் ஸ்ரீ உ.வே. வெங்கடாச்சாரியார் ஸ்வாமி

"அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் பிஞ்சாய் பழுத்தாளை ஆண்டாளை" என்று ஸ்வாமி மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் அருளிச் செய்தபடியே ஆழ்வார்கள் அனைவருக்கும் ஒரு சந்ததியாய் ஒரு பெண் பிள்ளையாய் ஜ்ஞானப் பெண்ணாகப் பிறந்தவள் ஸ்ரீபெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாகிற ஸ்ரீ ஆண்டாள். அவள் அருளிய திவ்ய ப்ரபந்தங்கள் இரண்டு. அதில் முதல் ப்ரபந்தமான திருப்பாவையை உலகம் முழுவதும் தினந்தோறும் திருச்செவிசாத்தாத எம்பெருமான்களே இல்லை என்று சொல்லலாம். மேலும் மார்கழி மாதத்தில் இந்தத் திருப்பாவை பல்லாயிரக்கணக்கான இடங்களில் பலபல வித்வான்களால் உபன்யஸிக்கக் கூடிய பெருமையைப் பெற்றது.

ச்ரியःபதியான ஸர்வேச்வரன் பரமபதத்திலே இருக்கக்கூடிய நித்ய ஜீவன்களும் முக்த ஜீவன்களும் எப்படித் தன்னை அடைந்து ஆனந்திக்கிறார்களோ அது போலே இந்த ஸம்ஸாரத்திலேயிருக்கக் கூடிய பத்த ஜீவன்களும் தன்னை அடைந்து ஆனந்திக்க வேணுமே என்று ஸம்ஸாரிகள் பக்கலிலே எம்பெருமானுடைய திருவுள்ளமானது குடிபோயிற்று. ஸம்ஸாரிகளோ, நித்யமுக்தர்களைப் போலே எம்பெருமானை அனுபவிக்க வேண்டியிருக்க, இவர்கள் "இழந்தோம் என்கிற இழவுமின்றிக்கே" என்கிறபடியே அத்தை இழந்து கிடக்கிறோம் என்கிற து:க்கம் கூட இல்லாமல் "ஸம்ஸ்ாரமாகிற பெருங்கடலிலே" கிடந்து உழலுகின்றார்கள். எம்பெருமான் இவர்களுடைய அறியாமையைக் கண்டு ஆற்றமாட்டாமல் இவர்களுக்குக் கரணகளேபரங்களையும் கொடுத்து அதற்கு அனுகுணமாக சாஸ்த்ரங்களையும் நீர்மையினால் அருள் செய்தான். ஆனால் இந்த ஸம்ஸாரி சேதனர்கள் அந்த சாஸ்த்ரங்களைக் கொண்டு இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு பகவானை அடைய வேண்டியிருக்க இங்கேயே உழன்று கொண்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன? என்று பார்க்கின்ற பொழுது இந்த சாஸ்த்ரார்த்தங்களை நடத்திக் காண்பித்தவர்கள் யாருமேயில்லை என்று பார்த்து தானே அந்த சாஸ்த்ரார்த்தத்தை நடத்திக் காண்பிப்பதற்காக ராமனாகவும் கண்ணனாகவும் பிறந்து நடத்தியும் உபதேசித்தும் அருளினான். இப்படிப்பட்ட அவதாரங்களினாலேயும் யாரோ சிலரைத் தான் திருத்த முடிந்ததே தவிர இந்த உலகம் முழுவதையும் திருத்த முடியவில்லை. மேலும் இந்த உலகத்தை எப்படித் திருத்தலாம் என்று பார்க்கிறபொழுது ஸம்ஸாரி சேதனர்களிலே சிலருக்கு ஜ்ஞானத்தைக் கொடுத்து அவர்களைக் கொண்டு இந்த உலகத்தைத் திருத்துவோம் என்று பார்த்தான். அவர்கள் தான் எம்பெருமானாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள். எம்பெருமானுடைய கடாக்ஷத்தினாலே ஜ்ஞானம் ஏற்பட்ட உடனே இந்த ஸம்ஸாரத்திலே இருப்புக் கொள்ள முடியவில்லை ஆழ்வார்களுக்கு. அதனாலே எம்பெருமானிடத்திலே உனக்கு சேஷமாயிருக்கிற இந்த ஆத்மா அனர்த்தப்படாதபடி உனக்கேயாகும்படியாகச் செய்ய வேணும் என்று ப்ரார்த்தித்தார்கள்.

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லவொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியாமுறாமை - உயிரளிப்பான்
எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய்! இமையோர் தலைவா!
மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே என்றும்,

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி

ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

என்றும் தங்கள் குறையை அறிவித்தார்கள். இவ்வாழ்வார்களைக் காட்டிலும் பெரியாழ்வாருக்கு ஏற்றம் என்? என்னில் பகவானைச் சேவித்த உடனே அவனுக்கு என் வருகிறதோ? என்று கண் கலங்கினார். ஆகையாலே மற்றைய ஆழ்வார்களைக் காட்டிலும் பெரியாழ்வாருக்கு ஏற்றம். ஆழ்வார்களைக் காட்டிலும் ஆண்டாளுக்கு ஏற்றம் என்? என்னில் ஆழ்வார்களுக்கு உண்டான ஜ்ஞானம் எம்பெருமானுடைய கடாக்ஷத்தாலே ஏற்பட்டது. அதுபோல் அல்லாமல் ஆண்டாள் ஸஹஜமான ஜ்ஞானத்தை உடையவள் ஆகையாலே அவனை எழுப்பினாள். நப்பின்னை பிராட்டியினிடத்தில் உண்டான மதிமயக்கத்தாலே உறங்குகிறவனைத் தங்களையும் விஷயீகரிக்கும்படியாகப் பண்ணினாள். ஆகையாலே ஆழ்வார்களைக் காட்டிலும் ஆண்டாளுடைய பக்திக்குப் பெருமையுண்டு. ஆழ்வார்களுக்கு பகவானிடத்திலே உண்டான பக்தியானது பகவானுடைய கடாக்ஷத்தினாலே ஜ்ஞானம் பிறந்தபிறகு ஏற்பட்டது. ஆனால் ஆண்டாளுடைய பக்தியானது தொட்டில் காலம் முதற்கொண்டு "பால்யாத் ப்ரப்ருதி" என்று பிறந்த காலம் தொடங்கி பகவானிடத்திலே உண்டானது. ஆண்டாள் தானும் நாச்சியார் திருமொழியிலே "அவரைப் பிராயம் தொடங்கி என்றும் ஆதரித்தெழுந்த என் தடமுலைகள்" என்று தன்னுடைய பக்தியைப் பற்றி அருளிச் செய்துள்ளாள். அது மட்டும் அல்லாமல் ஒரு புருஷனானவன் ஒரு புருஷனைக் கண்டு காதல் கொள்வது மிகவும் கடினம். அதே சமயம் ஒரு பெண்ணானவள் ஒரு புருஷனைக் கண்டு காதல் கொள்வது பள்ளமடையாகையாலே ஆழ்வார்கள் அருளிச் செய்த ப்ரபந்தங்களைக் காட்டிலும் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைக்குப் பெருமை.

இந்தத் திருப்பாவையிலே சொல்லப்படக் கூடிய விஷயம், மார்கழி நீராட்டம் என்கிற ஒரு வ்யாஜத்தைக் கொண்டு எம்பெருமான் பக்கலிலே சென்று உனக்கு அடிமையாயிருக்கிற இந்த ஆத்மா அனர்த்தப்படாதபடி பண்ணி இதுக்கு ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யங்களையும் கொடுத்து, அது தானும் எப்பொழுதும் இந்த ஆத்மாவுக்குக் கிடைக்கும் படியாகப் பண்ணியருள வேணும் என்று அபேக்ஷிக்கிறது.

இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக
வன்றோ இங்காண்டாள் அவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்தது
ஆழ்வார் திருமகளாராய்.

என்று ஸம்ஸாரி சேதனர்களுக்காகவே தன்னுடைய போகத்தையெல்லாம் ஒரு பொருளாக நினைக்காமல் பெரியாழ்வாருடைய பெண் பிள்ளையாகப் பிறந்த ஆண்டாளுடைய ஜ்ஞான பக்திகள் ஒவ்வொரு நொடிப் பொழுதும் பகவத் விஷயத்திலே வளர்ந்து வருகையாலே ஒரு கொள் கொம்பிலே சேர்க்க வேண்டும் பருவத்தை அடைந்தாள். "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்னும்படியான உறுதியை உடையவளாயிருந்தாள். அவளுக்கு வடபெருங்கோவிலுடையானுடனே தழுவி முழுசி கலந்து பரிமாற வேணும் என்று செல்ல அவன் இவளுக்கு முகம் கொடாமலிருக்க இவனோடே கலந்து பரிமாறி அனுபவித்தார் உண்டோ என்று ஆராய்ந்து பார்த்தாள். திருவாய்ப்பாடியிலே பெண்பிள்ளைகள் இவனை அனுபவித்தார்கள். அது காலாந்தரத்திலே ஆகையாலே நாம் அதுக்கு உதவப் பெற்றிலோம் என்று ஏங்கினாள். இனி அவன் உலாவிப் போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாகத் திளைத்த யமுனையும், அவன் எடுத்த கோவர்த்தனமும் கிடந்ததாகில் அவற்றைக் கண்டாகிலும் தரிப்போம் என்று பார்த்தாள். அவ்விடங்களுக்குப் போக தனக்கு பலமில்லாமையாலே கலங்கினாள். ஜனகராஜன் திருமகளைப் பெறுவதற்கு 'வில்' என்று ஒரு முடிவிருந்தது. நப்பின்னைப் பிராட்டியைப் பெறுவதற்கு 'எருதுகள்' என்று ஒரு முடிவிருந்தது. அது போலே தன்னை பகவான் அடைவதற்கு ஒரு முடிவுயில்லையே என் செய்வேன்

என்று மிகவும் தளர்ந்து போயினாள். அப்போது சில பெரியோர்கள், கோபிமார்களுடனே ராஸக்ரீடை செய்த கண்ணன் அந்த ரஸமானது அதிகமாகச் செல்ல உடனே கோபிமார்களை விட்டு கண்ணன் பிரிந்தான். கண்ணனைப் பிரிந்த கோபிமார்கள் அவனைப் பிரிந்த ஆற்றாமையைத் தணிக்கத் தங்களிலே ஒருத்தி கண்ணனாகவும் ஒருத்தி காளியனாகவும் இப்படி க்ருஷ்ண விளையாட்டுக்களை நாடகமாக நடத்தி உயிர்த் தரித்திருந்தார்கள். அதுபோலவே நீயும் அனுகரிப்பாயாக என்று கூறினார்கள்.

திருவாய்ப்பாடியிலே கோபிமார்கள் நோன்பு என்கிற வ்யாஜத்தைக் கொண்டு கண்ணனிடத்திலே சென்றார்களே அதுபோலே, இவளும் ஸ்ரீவில்லிபுத்தூர் திருவாய்ப்பாடியாகவும் அங்குள்ள பெண்களை இடைப்பெண்களாகவும், தன்னை அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும் ஸ்ரீவடபெருங்கோயிலுடையானைக் கண்ணனாகவும் பாவித்து இடைப்பெண்கள் நோற்ற நோன்பைத் தான் நோற்கிறாள். பாவனையின் முதிர்ச்சியாலே இவளுக்கு இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடை நாற்றமும் உண்டாயின. திருவாய்ப்பாடியில் மழை பொழிய வேணும் என்று நோன்பு நோற்கும்படி கோபாலர்களால் நியமிக்கப்பட்ட இடைப்பெண்கள் அதை வியாஜமாக கொண்டு கண்ணனைப் பெற்று அவனுகந்த அடிமை செய்தார்கள். அவர்கள் செய்த நோன்பு நோற்ற ப்ரகாரத்தை அப்படியே நடத்தி, பாதகங்கள் தீர்ப்பதாய் பரமனடி காட்டுவதாய் வேதமனைத்துக்கும் வித்தான திருப்பாவையைப் பாடியருளினாள்.

முதல் பாசுரத்தில் தாங்கள் அடைய வேண்டியதான பலன், அந்தப் பலனை அடைவதற்குண்டான வழி இவைகளை அருளிச் செய்கிறாள். நீராட்டம் என்பதினாலே தாங்கள் அடைய வேண்டிய பலன். அதாவது கண்ணனோடே கூடியிருத்தல். அவனுகந்த அடிமை செய்தல். இப்பலனை அடைவதற்கு அதிகாரிகள் ஆர்? என்றால் ஆசையுடையவர்கள் அதிகாரிகள்; அதனாலே ஆசையுடையோர் ஒருவரும் இழக்கக் கூடாது. இப்பலனை பெற்றுத் தரக் கூடியவர் ஆர்? என்றால் நாராயணனே என்பதினாலே, அவன் தான் வழியே ஒழிய கர்ம ஞான முதலிய வேறு வழியாலே அடைய முடியாது என்று தெரிவிக்கிறாள். இரண்டாம் பாட்டில் இப்படி அவனையே பலனாகவும், அந்த பலனை அடைவதற்கு வழியும் அவன்தான் என்றிருக்கக் கூடிய அதிகாரிகள் செய்ய வேண்டியவை தவிர வேண்டியவை எவை எவை என்பதைத் தெரிவிக்கிறாள். பகவத் விஷயத்தைப் பற்ற வேண்டும். மற்றையவைத் தவிர வேண்டும். அதாவது நாட்காலே நீராடி பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் அடிபாட வேண்டும், ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்ட வேண்டும் என்பது செய்ய வேண்டியது. நெய்யுண்ணோம் பாலுண்ணோம் மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம் என்பது தவிர வேண்டுவது.

மூன்றாவது பாட்டில், நாம் நோன்பு நோற்க அனுமதி பண்ணின கோபாலர்களுக்கு அவர்கள் விரும்பிய மழையுண்டாகும் என்று சொல்லி, நான்காம் பாட்டில், மழைக்கு அதிபதியான வருண பகவானை அழைத்து நீ இன்னபடி இன்னபடி மழை பெய்ய வேணும் என்று நியமித்து அத்தால் தாங்கள் பெறக் கூடியதையும் சொல்லி ஐந்தாம் பாட்டால் தாங்கள் ஆரம்பிக்கக் கூடிய நோன்புக்குத் தடையாகயிருக்கக் கூடிய பாபங்கள் இந்த நோன்பை ஆரம்பிக்கவே அழியும் என்று மனது நிறைந்தவர்களாய் புறப்பட்டு, ஆறாம் பாட்டு முதல் பதினைந்தாம் பாட்டு வரை பத்து பெண் பிள்ளைகளை எழுப்புகிறார்கள். 'நாயகனாய்' பாசுரத்திலே கோயில் காவலனையும் வாயில் காவலனையும் முன்னிட்டு, பதினேழாவது பாசுரத்திலே நந்தகோபர் யசோதை, நம்பி மூத்தபிரான் இவர்களை எல்லாம் எழுப்பி போரப் பொலியக் கொண்டாடி அடுத்த மூன்று பாசுரங்களிலே நப்பின்னைப் பிராட்டியினுடைய செருக்கையும், லீலாரஸத்தையும், போக வைபவத்தையும் அவளுடைய அங்க அழகையும், உருவ அழகையும், அவளுக்கு எம்பெருமானிடத்திலே உண்டான ப்ரியத்தையும், எம்பெருமானுக்கு அவளிடத்திலே உண்டான ப்ரியத்தையும் புருஷகார வைபவத்தையும் சொல்லி எழுப்பி எல்லாருமாக கண்ணனுடைய குல ஒழுக்கம் முதலிய குணங்களைச் சொல்லிக் கொண்டு அவனுடைய குணங்களுக்கு தோற்று வந்தபடியையும் தங்களுடைய அபிமானத்தை விட்டும் அவனுடைய கடாக்ஷத்தையே பார்த்து வந்தபடியையும் அறிவித்தார்கள். பகவான் தன்னுடைய சோதிவாய் திறந்து உங்களுக்கு என்ன

வேணும் என்று கேட்க படுக்கையிலிருந்து கேட்க வொண்ணாது. திருவோலக்கமாக இருந்து கேட்க வேணும். அதற்காகத் திருப்பள்ளியறையிலிருந்து திவ்ய ஸிம்ஹாஸனத்தளவும் பத்தெட்டடி நடந்து உன் நடையழகைக் காட்ட வேணும் என்று ப்ரார்த்திக்க அப்படியே திருப்பள்ளியறையிலேயிருந்து திவ்ய ஸிம்ஹாஸனத்தளவும் எழுந்தருளினான். எழுந்தருளின பிறகு அவ்விருப்புக்கு மங்களாசாஸனம் பண்ணினார்கள். உடனே பகவான் கோபிமார்களைப் பார்த்துக் கேட்கிறான். இப்படி மிகவும் கஷ்டப்பட்டு நம்மிடத்திலே வந்திருக்கிறீர்களே. உங்களுக்கு வேண்டியது என்ன? என்று கேட்க உன்னை அருத்தித்து வந்தோம் என்று சொல்ல, இன்னம் சமயம் பார்த்துச் சொல்ல வேணும் என்று நோன்புக்கு வேண்டிய பறை முதலிய வஸ்துக்களை தருவாயானால் நாங்கள் வருத்தம் தீர்ந்து மகிழ்வோம் என்று சொன்னார்கள். உடனே பகவான் கேட்கிறான், நீங்கள் நோன்பு என்று சொல்லுகிறீர்களே அது என்ன நோன்பு? அதற்குத் தேவையான பொருள்கள் என்ன என்ன? என்பனவற்றைச் சொல்ல வேணும் என்று கேட்க, தங்களுடைய நோன்பைப் பற்றிச் சொல்லி அதற்குத் தேவையான பொருள்கள் பாலன்ன வண்ணத்து உன் பாஞ்ச சன்னியமே போல்வன சங்கங்கள், சாலப் பெரும்பறை, பல்லாண்டிசைப்பார், கோலவிளக்கு, கொடிவிதானம் இவை எல்லாவற்றையும் தரவேணும் என்று கேட்க, நீங்கள் கேட்பதெல்லாம் எப்படித் தர முடியும்? ஓர் ஒன்று தானேயிருக்கிறது. நீங்கள் பலவற்றைக் கேட்கிறீர்களே என்று சொன்னான். அதற்கு இவர்கள் உன்னால் முடியாதது எதுவுமில்லை என்று தெரிவித்தார்கள். இந்தப் பாசுரத்திலே 'மாலே! மணிவண்ணா' என்பதனாலே பகவானுடைய சௌலப்யமும் ஆலினிலையாய் என்பதனாலே அவனுடைய மேன்மையும் சொல்லப்பட்டது. இப்படி இவர்கள் கேட்க இவர்களுக்கு பகவான் தன்னிடத்தில் உண்டான அனைத்தையும் கொடுத்து விட்டான். எல்லாவற்றையும் கொடுத்தாகிவிட்டதே. இன்னம் ஏதோ நம்மிடத்திலே வேண்டுவது போல் இருக்கிறீர்களே? என்று கேட்டான். இப்பொழுது நோன்புக்குத் தேவையானவற்றை பெற்றோம். நோன்பு முடிந்த பிறகு இன்னம் சில உண்டு. அவைகளையும் தரவேணும் என்று சொல்லுகிறார்கள். அடுத்த இரண்டு பாசுரங்களிலே உபாய ஸ்வரூபத்தையும் உபேய ஸ்வரூபத்தையும் வெளியிடுகிறார்கள். பகவானைத் தவிர வேறு ஒரு உபாயம் (வழி) சாதனம் கிடையாது. நம்மிடம் உண்டான சிறுமை அவனிடம் உண்டான பெருமையைச் சொல்ல, அவனோடு உண்டான உறவைச் சொல்லிக் கொண்டு பூர்வகாலத்திலே பிழைகளுக்கு க்ஷாமணம் பண்ணிக் கொண்டார்கள். அடுத்த பாசுரத்திலே உபேய ஸ்வரூபத்தை வெளியிடுகிறார்கள். அதாவது "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்று கைங்கர்யத்தைப் ப்ரார்த்திக்கிறார்கள். இந்த ஆத்மாவிற்கு உண்டான பலன் பகவான் திருவடிகளிலே செய்யக் கூடியதான கைங்கர்யம் தான் என்பதைத் தெரிவிக்கிறார்கள். கடைசிப் பாசுரத்திலே இந்தத் திருப்பாவை ப்ரபந்தத்தை அனுசந்திப்பவர்களுக்கு உண்டான பலத்தைச் சொல்லுகிறார்கள். திருவாய்பாடியிலே கோபிமார்கள் நேரிடையாக எந்த பலனைப் பெற்றார்களோ, பின்பு ஆண்டாள் திருப்பாவை பாடி எந்தப் பலனை பெற்றாளோ, அந்தப் பலனை இந்தத் திருப்பாவையை அனுசந்திப்பவர்களுக்கும் பெறுவர்கள் என்று சொல்லித் தலைக் கட்டுகிறாள்.

ஸ்ரீஆண்டாள் அருளிச் செய்த இந்த திருப்பாவையிலே பலபல வேதாந்தார்த்தங்கள் ஸுலபமாக எல்லாரும் அறியும்படியாக இருக்கிறது. எல்லா வேதங்களிலேயும் இதிஹாஸங்களிலேயும் புராணங்களிலேயும் முக்யமாகச் சொல்லப்படக் கூடியது "அர்த்த பஞ்சகம்" என்கிறதான விஷயம். அந்த அர்த்த பஞ்சகத்தை விளக்கக் கூடிய ப்ரமாணம்.

ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந:
ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்தி விரோதி ச |
வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:
முநயஸ்ச மஹாத்மநோ வேதவேதார்த்த வேதிந: ||

எம்பெருமானுடைய ஸ்வரூபம் • மேன்மையும் சௌலப்யமும் உடையவன். "நாராயணனே" என்று மேன்மையைச் சொல்லக் கூடிய திருநாமம். "கோவிந்தா" என்று எளிமையைச் சொல்லக் கூடிய திருநாமம்.

இது பரஸ்வரூபம். அடுத்தது ஜீவஸ்வரூபம் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம்" என்கையாலே இந்த ஆத்மா பகவானுக்கு அடிமைப்பட்டதும் அவன் கை பார்த்திருப்பதும். இதே விஷயம் பாகவதர்களிடத்திலேயும் இருக்க வேண்டும். 6வது பாசுரம் முதல் 15வது பாசுரம் வரை அது தெரிவிக்கப்பட்டது. அடுத்தது உபாய ஸ்வரூபம். கறவைகள் பாசுரத்தில் சொன்னபடி நாமோ பிறரோ நமக்குத் தஞ்சமல்ல; நாராயணனே தஞ்சமாவான் (உபாயமாவான்) என்று சொல்லப்பட்டது. 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற பாசுரத்தின்படி "உனக்கே நாம் ஆட் செய்வோம்" என்று அவனுகந்த கைங்கர்யமும், பாகவத கைங்கர்யமுமே பல ஸ்வரூபம் என்று சொல்லப்பட்டது. "போய பிழையும் புகுதருவான் நின்றனவும்" என்று சொல்லப்பட்ட புண்ய பாபங்கள் தொடக்கமாக, "எல்லே! இளங்கிளியே" என்கிற பாசுரத்தில் உணர்த்தப் பெற்ற பாகவதாபசாரம் ஈறாக உள்ளவை அனைத்தும் விரோதி ஸ்வரூபம் என்று இப்படி அர்த்த பஞ்சகமும் இத்திருப்பாவையில் விவரிக்கப் பெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட அர்த்த விஷயங்களை அறிந்து ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்தபடி செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவோம்.

நாய்ச்சியார் திருமொழி

ஸ்ரீ உ.வே. ரகுராமன் (எ) பாலாஜி, ஆசிரியர், ஸ்ரீசைலேசதயாபாத்ரம்

"ஶ்ரிய:பதியான எம்பெருமான் திருவவதரிக்கும் போதெல்லாம், அநபாயிநியான *(விட்டுப்பிரியாதவளான)* பிராட்டியும் அவனோடொக்க அவதரிப்பள். ஆனால் எம்பெருமானுடைய விபவாவதாரங்கள் ஒன்றுமில்லாத காலத்தே, பூமிப்பிராட்டியானவள் சேதநர்கள் அனைவரும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்ற கருணையினால் பெரியாழ்வார் பெண்பிள்ளையாய், ஆண்டாளாகத் திருவவதரித்தனள்.

மற்றைய நாய்ச்சிமார்கள், தங்களுடைய அவதார காலத்திலே பலருக்கு உபகாரங்களைச் செய்திருந்தாலும், பிற்பட்டவர்கள் வாழ்ந்துபோகும்படி க்ரந்தங்களை உபகரித்திலர். பின்னானார் உஜ்ஜீவிக்கும்படி க்ரந்தங்களை உபகரித்த பெருமை பூமிப் பிராட்டியின் அவதாரமான ஆண்டாள் ஒருத்திக்கே உள்ளதொன்றாகும்.

எம்பெருமானுடைய திருவவதாரங்களுள், எப்படி ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தினால், லோகத்திற்கு மிகுந்த நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அதுபோல் பிராட்டிமாருடைய அவதாரங்களுள் ஆண்டாளுடைய திருவவதாரத்தினால், உலகிற்கு மிகுந்த நன்மைகள் உண்டாகியுள்ளன. திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி என்கிற இரண்டு உயர்ந்த திவ்யப்ரபந்தங்களை நமக்காக நல்கியிருக்கிறாள் ஆண்டாள். வேதமனைத்துக்கும் வித்து என்று குலாவப்படுகிறது கோதை தமிழ். பிறவி என்னும் நோய்க்கு மருந்தாக *(பெரியாழ்வார் திருமொழி 5-3-6)* நாம் - கோதை சொல்லாகிற மருந்தை *(நாச்சியார் திருமொழி 14-10)* உட்கொண்டோமேயானால், நச்சுமாமருந்தான நாராயணனுடைய நலங்கழங்களை நணுகலாம். இனி நாம், நாச்சியார் திருமொழியின் ஸாரத்தை ஒருவாறு அநுபவிக்கப் பெறுவோம்.

முதற்கண், மற்றைய நாய்ச்சிமார்களைவிட சூடிக்கொடுத்த நாய்ச்சியாருக்கு இருக்கின்ற பெருமைகளுள் சிலவற்றை, நாய்ச்சியார் திருமொழிகொண்டு நோக்குவோம்.

1. ஸ்வப்நாநுபவத்தில் பாடவல்ல நாய்ச்சியாரின் பாக்யவிஶேஷம்

ஸீதாப்பிராட்டி, அஶோகவநத்தில் சிறையிருந்தபோது, 'ஸ்வப்நத்திலாவது ராமபிரான் எனக்கு ஸேவை ஸாதிக்கமாட்டானா' என்று எதிர்பார்த்திருந்தாள். பத்து மாதங்களுள் ஒருமுறைகூட, ராமன் ஸீதைக்கு கனவில் காட்சிதரவில்லை.

"ஸ்வப்நேऽபி யத்$_3$யஹம் வீரம் ராக$_4$வம் ஸஹலக்ஷ்மணம் ।
பஶ்யேயம் யதி$_3$ ஜீவேயம் ஸ்வப்நோऽபி மம மத்ஸரீ ॥" - *(ரா. ஸு. 34-21)*

[லக்ஷ்மணனோடு கூடிய வீரனான ராமனைக் கனவிலாவது காண்பேனே யானால், நான் உயிர்வாழ்வேன்; (ஆனால்) ஸ்வப்நமும்கூட எனக்கு விரோதியா யன்றோ உள்ளது.] என்றாள் ஸீதாப்பிராட்டி.

'என்நிலையறிந்து உடனே முகம் காட்டாமல், பெருமாள்தான் என்னை நலிகிறாரென்றால், இக்கனவும் என்னை வஞ்சிக்கவேணுமோ' என்றாள் அவள். தான், பெருமாளைக் கனவில் காணாதபோதும், த்ரிஜடை முதலானவர்கள் கனவு கண்டுசொல்ல, அதைக் கேட்டு தரித்திருந்தாள் ஸீதை. அதுபோல், பிறர் கனவு கண்டு, தன் பர்த்தாவைப் பற்றிச் சொல்லக்கேட்டு தரித்திருக்கக்கூடியவளல்லள் ஆண்டாள். **''த்ரிஜடாதி$_3$கள் சொல்லக்கேட்டு தரித்திருந்தாற்போலே இருக்கவல்லளல்லலாய்த்து இவள்''** என்பது பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி. ஆண்டாள் உயிர்தரிக்க வேண்டுமென்பதற்காக, பாணிக்ரஹண பர்யந்தமான அநுபவத்தை அவளுக்குக் கனவிலே காட்டியருளினான் எம்பெருமான். ஒருமுறையேனும் காகுத்தனை கனவில் காணாத காரிகையைவிட, கனவிலே கண்ணனைக் கடிமணம்புரிந்த கோதை பாக்யமுடையவளன்றோ. இது ஸீதையிலும் கோதைக்குண்டான வாசி.

2. பாஞ்சஜந்யாழ்வானை ப்ரஶ்நம் பண்ணிய பெருமை

ஆண்டாள், ஏழாம் திருமொழியில் ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானைப் பார்த்து - 'வெளுத்திருக்கும் சங்காழ்வானே! குவலயாபீடமென்ற யானையினுடைய கொம்பை முறித்த கண்ணபிரானுடைய திருவதரத்தின் சுவையையும், நறுமணத்தையும் ஆசையோடே கேட்கிறேன். எம்பெருமானுடைய பவளம் போல் சிவந்துள்ள திருவதரமானது பச்சைக் கர்ப்பூரம் போல் நறுமணம் வீசுமோ? அல்லது தாமரைப் பூப்போல் நறுமணம் வீசுமோ? இனிய சுவையை உடையதாயிருக்குமோ? சொல்' என்று தொடங்கிக் கேள்விகள் கேட்கின்றாள்.

ஸீதாப்பிராட்டியும் பெருமாளைப் பிரிந்திருந்த காலத்தில், கேள்வி கேட்டிருக்கிறாள். அவள், தனக்குப் பழக்கமில்லாத புதியதொரு குரங்கைப் பார்த்து-

''கீத்$_3$ருஶம் தஸ்ய ஸம்ஸ்த$_2$ாநம் ரூபம் ராமஸ்ய கீத்$_3$ருஶம் |
கத$_2$மூரூ கத$_2$ம் ப$_3$ாஹூ லக்ஷ்மணஸ்ய ச ஶம்ஸ மே ||'' *- (ரா. ஸு. 35-4)*

[ராமபிரானுடையவும், லக்ஷ்மணனுடையவும் உடலமைப்பு எப்படிப் பட்டது? அவருடைய திருவுருவம் எப்படியிருக்கும் ? திருத்துடைகள் எப்படி யிருக்கும்? திருக்கைகள் எவ்விதமானவை?] என்று கேள்வி கேட்டிருக்கிறாள்.

ஸீதையைப் போல் பழக்கமில்லாத ஒருவரிடம் கேள்வி கேட்காமல், கோதையானவள் எம்பெருமானை அநுபவிப்பதற்கு வழிகாட்டுமவனாய், க்ஷணநேரமும் எம்பெருமானைப் பிரியாதவனாயுள்ள ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானிடம் கேள்வி கேட்டாள். ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானுக்கு மற்றையோருக்கு இல்லாத பல பெருமைகள் உள்ளன.

1. பிராட்டிமாரோடு எம்பெருமான் திரைக்குள்ளே ஏகாந்தமாய் இருக்கும்போதும் விட்டுப்பிரியாத அந்தரங்கனாயிருப்பவன் பாஞ்சஜந்யாழ்வான். இது ஸேநாபதியாழ்வானைவிட இவனுக்குள்ள ஏற்றம்.

2. திருவாழியாழ்வான் 'கைகழலாநேமி' என்று கூறப்பட்டாலும், எதிரிகளை அழிக்கும்போது சிறிது நேரம் எம்பெருமானைப் பிரிய நேருகிறது. பாஞ்சஜந் யாழ்வான் எதிரிகளை முடிக்க வேண்டுமென்றால், எம்பெருமான் திருவாயிலிருந்து கொண்டே, தம்முழக்கத்தால் எதிரிகளின் நெஞ்சை உளுக்காகப் பண்ணுவன். நொடிப் பொழுதும் பகவானைப் பிரியாமையாலே, இவன் திருவாழி யாழ்வானைவிடப் பெருமை பெற்றவனாகிறான்.

3. பிராட்டிமார்க்குக் கூட எப்போதும் கிடைக்காத அதராம்ருத பாநம் இவனுக்கே கிடைக்கிறது. ''பதினாறாமாயிரவர் தேவிமார் பார்த்திருப்ப மதுவாயில் கொண்டாற்போல் மாதவன் தன் வாயமுதம் பொதுவாக உண்பதனை புக்கு நீ உண்டக்கால்'' (7-9) என்று எப்பொழுதும் பகவானை அநுபவிப்பவனிவன். இது, பிராட்டிமாரிலும் இவனுக்குள்ள பெருமையாகும்.

4. 'இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கு ஏலானே' (7-4) என்று நாய்ச்சியார் அருளினமையால், எம்பெருமானைக் காட்டிலும் விஞ்சிய செல்வமுடையவன் பாஞ்சஜந்யாழ்வான் என்று தேறுகிறது. **''இதி$_3$-பரமைஶ்வர்யே''** என்று தாதுவாகையாலே, இந்த்ரஶப்தம் எல்லையில்லாத செல்வம்படைத்த பரமாத்மாவையே குறிக்கும்.

எம்பெருமானும் பாஞ்சஜன்யாழ்வானுடைய செல்வத்திற்கு ஒப்பாக மாட்டான் என்றது இவனுக்குண்டான பாரதந்த்ர்யமாகிற செல்வம் எம்பெருமானுக்கும் இல்லாமையாலேயாம். எம்பெருமானுக்குள்ளது ஸ்வாதந்த்ர்ய லக்ஷ்மி. பாஞ்சஜந்யத்திற்குள்ளது பாரதந்த்ர்ய லக்ஷ்மி. ஒரு சேதநன்அநாதி காலமாய் ஏறிட்டுக்கொண்டிருந்த ப்ராதிகூல்யத்தை விட்டு, அநுகூலனானவாறே, எம்பெருமானுக்கு சேதநனின் அபராதங்களைக் கண்டு ஏற்பட்ட ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்துவிடும். ஒரு காலத்தில் அழியக்கூடியதான எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ரியத்தைவிட, என்றுமிருப்பதான பாஞ்சஜந்யத்தின் பாரதந்த்ரியம் சிறந்ததன்றோ. ஆதலால், எம்பெருமானையும் விடப் பெருமை பெற்றுவிட்டான் பாஞ்சஜந்யாழ்வான்.

இதனால், புதியதொரு வாநரத்திடம் வினாவெழுப்பிய வைதேஹியைவிட, பலபெருமைகள் பொருந்திய பாஞ்சஜந்யாழ்வானிடம் ப்ரஶ்நம் பண்ணிய பாடவல்ல நாய்ச்சியாரின் பெருமை புலப்படுகிறது.

3. சங்கொலியும், சார்ங்கவில் நாணொலியும்

அசோகவநத்தில் சிறையிருந்தபோது ஸீதாப்பிராட்டிக்கு உண்டான நிலையையும், ஶிஶுபாலனுக்கு மறுநாள் மணம்செய்து கொடுப்பதாகவிருந்த

ஸமயத்தில் ருக்மிணிப் பிராட்டிக்கு ஏற்பட்ட வருந்தத்தக்க நிலையையும் விட மிகவும் வருந்தும்படியான நிலையையடைந்தாளாம் ஆண்டாள். ஆதலால்,

"பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்று கொலோ" *(9-9)*

என்று எதிர்பார்க்கிறாள் ஆண்டாள்.

ராவணன் ராமபிரானுடையதைப் போன்றதொரு மாயா ஶிரஸ்ஸைக் காட்டினபோது, ஸீதாப்பிராட்டி, கடலைத் தாண்டி இலங்கை சேர்ந்த ராமன் செய்த சார்ங்கவில் நாணொலியைக் கேட்டு உயிர்தரித்தாள். ஶிஶுபாலனுக்கு மணம் முடிக்க நிச்சயிக்கப் பெற்றிருந்தபோது, புறச்சோலையில் கண்ணபிரானுடைய ஸ்ரீபாஞ்சஜந்ய கோஷம் கேட்டு உயிர்தரித்தாள் ருக்மிணிப்பிராட்டி. தம்முடைய ஆற்றாமை, அவர்களுடையதைவிட அதிகமாகையாலே, அவ்விரண்டு ஒலிகளும் சேர்ந்து ஒலித்தால்தான் 'என்னால் உயிர்தரிக்கமுடியும்' என்கிறாள் கோதை. **"இரண்டவதாரத்திலுள்ளவையும் மடுத்தொலிக்க வேண்டும்படியாய்த்து இவள் விடாய்; அவர்கள் அளவல்லவாய்த்து இவள் ஆற்றாமை"** என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. மற்றைய நாய்ச்சிமார்களைவிட சூடிக்கொடுத்த நாய்ச்சியாருக்கு இன்னமும் பல பெருமைகள் இருப்பினும், அவற்றை விஸ்தர பயத்தாலே சொல்லுகிறிலோம்.

இனி, நாம் நாச்சியார் திருமொழியின் ஸாரத்தை ஒருவாறு அநுபவத்தில் கொள்வோம். நாச்சியார் திருமொழியில் மொத்தம் பதினாலு திருமொழிகள் உள்ளன. பாசுரங்களின் எண்ணிக்கை 143. ஆண்டாளுக்கு திருப்பாவையைப் போல் திருமொழியிலும் கோபிமார் பாவநை பின்னாட்டுகிறது.

முதல் திருமொழி - தையொரு திங்களும்

ஆண்டாள் - திருப்பாவையில் "புண்ணியம் யாமுடையோம்" *(28)* என்று எம்பெருமானை உபாயமாகப் பற்றி, "உனக்கே நாம் ஆட்செய்வோம்" *(29)* என்று அவனுகப்புக்கான கைங்கர்யத்தையே ப்ராப்யம் என்று அறுதியிட்ட பின்பும், எம்பெருமான் வந்து தன்னைக் கைக்கொள்ளாதபடியால், மிகுந்த கலக்க மடைந்தாள். ஸித்தோபாயமான எம்பெருமானைப் பற்றியிருந்தபோதிலும், பேறு கிட்டப் பெறாமையாலே 'இன்னது செய்யலாம்; இன்னது செய்யக்கூடாது' என்று நிர்ணயம் பண்ணமுடியாத நிலையுண்டாகி, பிரிந்தவர்களை சேர்த்து வைப்பவன் என்பதே காரணமாக, காமன் காலிலே விழத் தொடங்குகிறாள் முதல் திருமொழியில்.

ஸாத்த்விகாக்ரேஸரரான பெரியாழ்வார் பெண்பிள்ளை "உன்னையும் உம்பியையும் தொழுதேன்" *(1-1)* என்று காமன் காலிலே விழலாமோ?வென்னில்; பெருமாளும், பிராட்டியுமான சேர்த்தி நித்யமாய்ச் செல்லவேணுமென்பதற்காக **"ஸர்வாந் தே$_3$வாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே$_2$"** என்கிறபடியே அயோத்யாவாஸி ஜநங்கள் ராமனுக்காக எல்லா தேவதைகளின் காலிலும் விழுந்தாற்போன்றது இது.

எம்பெருமானைப் பிரிந்திருக்கிற வ்யஸநம் பொறுக்கமாட்டாமல், அறிவு மழுங்கிக் கலங்கி 'எப்படியாவது எம்பெருமானைப் பெற்றுவிட வேணும்' என்னும் த்வரையாலே காமன் காலிலே விழுகிறாளிவள். காமன் காலிலே விழுந்தபோதிலும், "கேசவநம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் இப்பேறு எனக்கு அருள்செய் கண்டாய்" (1-8) என்று பகவத் கைங்கர்யமாகிற புருஷார்த்தத்தையே ப்ரார்த்தித்தாள் ஆண்டாள். "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்னும் உறுதியோடிருந்தாளவள்.

ஜ்ஞாநபரிபாகரூபமான பக்தியின் கார்யமாக உண்டாகிற செயல்பாடுகள் அனைத்தும் புகழத்தக்கனவேயாகும். கருமமடியாக அஜ்ஞாநத்தினால் வருமவையே ஹேயமாம். ப்ராப்யத்தைக் கடுகப் பெறவேணும் என்கிற விரைவின் மிகுதியினால் இவள் 'திருந்தவே நோற்கின்றேன்' என்று நோன்பு நோற்பது உபேயத்தில் சேர்ந்துவிடும். ஆதலால், நாய்ச்சியாருடைய காம ஸமாச்ரயணம் ஸ்வரூபத்திற்குச் சேராததன்று.

இரண்டாம் திருமொழி - நாமமாயிரம்

கோபிமார் பாவநையில் ஆண்டாள் காம ஸமாச்ரயணம் பண்ணியது கண்ட கண்ணன் வருத்தமுற்றான். "உடைமையான இவளைப் பெற, நாம் வருந்தி முயற்சி செய்யவேண்டியிருக்க, இவள் நம்மைப் பெறுவதற்கு முயற்சி செய்யும் படியாய்விட்டதே! நம்முடையவர்கள், நம்மைப் பெறுவதற்காக ஒரு தேவதாந்தரத்தின் காலில் விழும்படி நாம் காலம் தாழ்த்திவிட்டோமே!" என்று போர நொந்து, கஜேந்த்ராழ்வானை ரக்ஷிக்கப் பிற்பட்டபோது மனம் வருந்தினாப் போலே வருத்தமுற்று, விரைந்து வந்து முகம் காட்டினான்.

அவன் தங்களை சிரமப்படுத்தியதனால் உண்டான கோபத்தாலே ஆயர் சிறுமியர், அவனுக்கு முகம் கொடாமல், பங்குனி மாஸத்தில் காமன் வரும்வழியை மணலாலே கோலமிட்டுக் கொண்டிருந்தனர். கண்ணன் இவர்களிழைத்த சிற்றில் எனப்படும் கோலத்தை அழிக்கத் தொடங்கினான். இவர்கள் அதனைத் தடுக்க, அவன் 'அப்படித்தான் அழிப்பேன்' என்ன, அவ்விடத்தில் ஒரு போராட்டமே நடைபெற்றது. இறுதியில், "எம்மைப் பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்" (2-9) (நீ எங்களை வலிந்து பற்றி, உடம்பை அணைத்துக் கொண்டால், அருகிலிப்பவர்கள் அபவாதம் சொல்ல மாட்டார்களா?) என்பதனால் கண்ணனோடு ஏற்பட்ட கலவியைச் சொல்லி, இத்திருமொழியைத் தலைக் கட்டுகிறாள் கோதை.

மூன்றாம் திருமொழி - கோழியழைப்பதன்

சிற்றில் சிதைத்து கோபிமாரோடு கூடினான் கண்ணன். அவனிடமிருந்து பிரித்து, இடைப்பெண்களை நிலவறைகளிலே அடைத்தனர் ஆயர்கள். ஆயர் சிறுமியர் பிரிவாற்றாமையாலே வருந்தத்தக்க நிலையை அடைந்தனர். இந்நிலையையறிந்த பெற்றோர்கள் - 'இவர்களைக் கடைசிவரை கண்ணனோடு சேரவொட்டாமல் தடுத்தால், இவர்களை இழக்க நேரிடும்' என்று சிந்தித்து, 'பெண்கள்

நல்ல கணவனை அடைவதன்பொருட்டு 'பனிநீராடல்' என்றதோர் வழக்கமுண்டு. அதற்கு அநுமதி அளித்தால், அவ்வளவிலே இவர்கள் (கோபிகள்) தங்கள் மநோரதத்தையும் அடையப் பெறுவார்கள். நாம் அதனை அறியாததுபோலே இருந்துவிடுவோம்' என்று தங்களுக்குள் பேசி முடிவெடுத்து, இடைப்பெண்களைப் பனிநீராட அநுமதித்தனர்.

ஆயர்சிறுமியர் விரஹதாபம் ஆறும்படி பனிநீராடப் புறப்பட்டார்கள். முன்பு கண்ணனும், தாங்களும் வழக்கமாகக் குளிக்கும் பொய்கைக்குச் சென்றால் அவனும் வந்துவிடுவன். 'அவனோடு கூடினால், அக்கலவியானது பிரிவிலேயே தலைக் கட்டும்; பிரிவுத் துன்பத்தை அநுபவிப்பதிற் காட்டில், அவனோடு கூடாமலே இருந்துவிடலாம். ஸம்ச்லேஷம் ஏற்படாமைக்கு அவன் அறியாததொரு பொய்கையிலே போய்க் குளிக்கவேண்டும். எல்லாரும் திரண்டு சென்றால், நாம் செல்லுமிடத்தை அவன் அறிந்து விடுவன். ஆகையால் ஒவ்வொருவராகப் போவோம். போகும்போது நம்முடைய அடிச்சுவடு தெரியாதபடி, அதை அழித்துக் கொண்டே போவோம், என்று தங்களுக்குள் பேசி முடிவுசெய்து அவ்வண்ணமே செய்து பொய்கை புக்கார்கள். இருளன்னமாமேனியனான கண்ணனோவென்றால், நடந்துசெல்பவர்களை அவர்களுடைய நிழல் பின்தொடர்வதுபோல, இவர்களுடைய நிழலிலே ஒதுங்கிப்போய், இவர்களுக்கு முன்னே கரையில் ஒளிந்து கொண்டான். ஆயர்சிறுமியர் உடுத்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் களைந்து, கரையிலே வைத்துவிட்டு நீரிலே குடைந்தாடினார்கள். கரையில் வைத்தவற்றையடைய வாரிக்கொண்டு, கண்ணன் குருந்தமரத்தின்மேல் ஏறிக் கொண்டான். இடைப்பெண்கள் நீராடிய பின்னர், வஸ்திரங்களைக் காணாது திகைத்தபோது, கண்ணனைக் குருந்த மரத்தின்மீது கண்டார்கள். அப்போது வஸ்த்ரங்களைப் பெறுவதற்காக 'துகிலைப் பணித்தருளாயே' (3-1) என்று சிலர் கண்ணனை யாசித்தார்கள்; 'எங்கள் அமுதே' (3-2) என்று சிலர் இவனை ஏத்தினார்கள்;

''குரக்கரசாவதறிந்தோம் குருந்திடைக் கூறை பணியாய்'' (3-4),

''மசிமையிலீ! கூறை தாராய்'' (3-9) என்று கண்ணனைச் சிலர் - சீறினார்கள்;

''அஞ்ச உரப்பாள் அசோதை ஆணாட விட்டிட்டிருக்கும்'' (3-9)

(தீம்பிலே தகணேறும் இவனைப் பெற்ற அசோதையும் ஒருத்தியே!) என்று சிலர் யசோதையை வெறுத்துப் பேசினார்கள்.

''நெஞ்சு துக்கம் செய்ய போந்தாய் நின்ற இக்கன்னியரோமை'' என்று கோபிகள் நெஞ்சு மிகவும் நொந்து சொன்னவாறே, அடியவர் துயரறுக்குமவனான கண்ணன் பரியட்டங்களைத் தந்தருள, அவனோடு கூடினார்கள்.

நாலாம் திருமொழி - தெள்ளியார்பலர்

''ஸம்யோக₃ா: விப்ரயோக₃ாந்தா:'' *(ரா.அ.105-16)* (கலவியானது பிரிவிலே தலைக்கட்டியல்லது நில்லாது) என்கிறபடியே கூடல் பிரிவிலே கொண்டுபோய்ச்

சேர்த்தது. இந்த ஸம்ஸாரமண்டலத்திலே எந்த போகமும் நிலைநிற்பதாய் இருக்கக் கூடாதாகையாலே, கண்ணன் இடைப்பெண்களை விட்டு மறைந்தான். ஆயர் சிறுமியர் 'இன்னமொருமுறை அவன் வஸ்த்ராபஹாரம் பண்ணினாலும் பரவாயில்லை, அவனைக் காணப்பெறுவோமாகில், என்று அவனைக் காண்பதற்காகக் கூடலிழைக்கிறார்கள்.

கூடலிழைத்தலாவது - வட்டமாகக் கோடு கீறி, அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து, இரண்டிரண்டு சுழிகளாக எண்ணிப் பார்க்கும்போது இரட்டைப் படையாக வந்தால் கூடலும், ஒற்றைப் படையாக வந்தால் கூடாமையும் ஏற்படும் என்று கொண்டு குறிபார்த்தலாம். ஆண்டாள் - எம்பெருமானைப் பெற வேண்டும் என்ற த்வரையின் மிகுதியினால், உபாயாந்தர நிஷ்டர்களைப் போலே அசேதநமான கூடலின் காலில் விழுகிறாள் இத்திருமொழியில்.

ஐந்தாம் திருமொழி - மன்னுபெரும்புகழ்

சென்ற திருமொழியில் ''மணாளனார் பள்ளி கொள்ளுமிடத்து அடிகொட்டிட'' (4-1) என்று திவ்யதேசத்தெம்பெருமான்கள் பள்ளிகொள்ளும் திருவரங்கத்திலே, பெரியபெருமாளுடைய திருவடிகளைப் பிடித்துவிடும் கைங்கர்யத்தை ஆண்டாள் ஆசைப்பட்டுக் கூடலிழைத்தபோதிலும் அசேதநமானவது, 'கூடுவாய்' என்றோ 'கூடமாட்டாய்' என்றோ மறுமாற்றம் சொல்லக்கேட்டிலள். அசேதநத்தின் காலில் விழுவதில் பயனில்லை என்றுணர்ந்து, அருகிருந்த குயிலை நோக்கி 'நீயாவது என்னை அவனோடு பொருந்து விடு' என்று ஆண்டாள் இத்திருமொழியில் வேண்டுகிறாள்.

முன்பு, தான் கண்ணபிரானோடு கலந்திருந்த காலங்களிலே. வார்த்தை கேட்டால் பதில் சொல்லும் பழக்கத்தையுடையதாகையாலே 'குயிலே! எப்படியாவது என் வேங்கடவன் வரக்கூவாய்' என்று குயிலின் காலிலே விழுகிறாள் இத்திருமொழியில்.

ஆறாம் திருமொழி - வாரணமாயிரம்

குயிலைப் பார்த்து ''கடல்வண்ணனைக் கூவு கருங்குயிலே'' (5-11) என்று வேண்டிய பின்னரும், அது அப்படிச் செய்யாமற் போயிற்று. அது கூவியிருந்தால் கண்ணன் வந்திருப்பனன்றோ? 'அவன் வரும்போது வரட்டும்' என்று ஆறியிருக்கக் கூடியவளல்லளே இவள். அவனை உடனே அடையப் பெறாமையாலே ஆண்டாள் மிகவும் அவஸந்நையானாள். அதைக் கண்ட எம்பெருமான் - 'நாம் விரைந்து சென்று காட்சியளித்தால், அதனை இப்போது இவளால் தாங்கமுடியாது; ஆதலால் இவளை மணம்புரிந்து கொள்வதாகக் கனவிலே ஓர் அநுபவத்தைக் கொடுத்து, தரிப்படையச் செய்து, பின்பு கூடுவோம்' என்றெண்ணினான். பூரணபொற்குடம் வைத்துப் புறமெங்கும் தோரணம் நாட்டியது, மணமாலை அந்தரி சூட்டியது, காப்பு நாண் கட்டியது, மதுரையார் மன்னன் அதிரப் புகுந்தது, கைத்தலம் பற்றியது,

தீவலஞ்செய்தது, அம்மி மிதித்தது, பொரிமுகந்து அட்டியது, உடன்மணநீராடியது ஆகியனவற்றைக் கனாக்கண்டு தோழிக்குச் சொல்லி தரிப்படைகிறாள் ஆண்டாள்.

ஏழாம் திருமொழி - கருப்பூரம் நாறுமோ

கண்ணனைக் கல்யாணம் செய்துகொள்வதாகக் கனாக் கண்டதோடல்லாமல், அவனோடு கலந்துமிருக்கிறாள் கோதை. ஆனால் அக்கலவியை, அவள் உடனே இழந்தும்விட்டாள். க்ஷணகால ஸம்ச்லேஷத்தாலே நாய்ச்சியாருக்கு திருப்தி ஏற்படவில்லை; அதனால்தான் பெறவேண்டிய அதராம்ருதாநுபவத்தை இடைவிடாமல் எப்பொழுதும் பெற்றிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானிடம் வினவுகிறாள் இத்திருமொழியில்.

''உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்
கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே'' (7-8)

என்று இச்சங்கரையன் உண்பது, உலகளந்த எம்பெருமானுடைய திருவாயிலுள்ள அம்ருதம்; ஶயநித்துக்கொள்வது, கடல் போன்ற திருநிறமுடைய திருமாலுடைய திருக்கையில். இப்படிப்பட்ட பெருமை மற்றைய ஸூரிகளுக்கும் இல்லாமையாலேயே, ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானிடம் ப்ரஶ்நம் பண்ணுகிறார் பாடவல்ல நாய்ச்சியார்.

எட்டாம் திருமொழி - விண்ணீலமேலாப்பு

பாடவல்ல நாச்சியாரின் ப்ரஶ்நங்களுக்கும் பாஞ்சஜந்யாழ்வான் பதிலளிக்காமற் போயினன். கார்மேகவண்ணன் வருவதாகக் கூறிச் சென்ற கார்காலமும் வந்தது. மழைக்காலம் வந்தவாறே, மேகங்கள் முழங்கின; ஆனால், எம்பெருமான் வரவில்லை. அவன் வடிவுக்குப் போலியான மேகங்கள் தோன்றினவாறே, 'முகில்வண்ணனும் வந்தானோ' என்று ப்ரமித்தாள் ஆண்டாள். அவனைக் காணாமையாலே கலங்கினாள். மேகமுழக்கத்தைக் கேட்டு, அம்மேகங்களிடம் - 'எம்பெருமான் வாழும் திருவேங்கடமலையில் வஸிக்கையாலே, உங்களுக்கும் அவனுக்கும் ஒரே ஊரில் வஸிப்பதாகிற தொடர்புண்டு; ஆதலால் என்னுடைய நிலையை, நீங்களே அவனிடம் தூது சென்று அறிவியுங்கோள்' என்கிறாள் இத்திருமொழியில்.

''குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்'' (ஆ.ஹ்ரு.), ''தே₃ஶிகாஸ் தத்ர தூ₃தா:'' (தாத்பர்ய ரத்நாவளி) என்று ப்ரமாணங்கள் கூறுகையாலே, தூதுவிடப்படும் மேகங்கள் என்பது புருஷகார பூதர்களான ஆசார்யர்களையே குறிக்கும் என்று நாம் உணரவேண்டும்.

ஒன்பதாம் திருமொழி - சிந்துரச்செம்பொடி

சென்ற திருமொழியில், சூடிக்கொடுத்த நாய்ச்சியார் ''ஒருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்'' (8-7) (ஒருநாளாகிலும் அவன் வந்து கூடுவனானால், என் உயிர் தங்கும்) என்றார். அவன் வரக்காணாமையாலே, - ஸீதாப்பிராட்டிக்கு ''ப்ராணாநாமபி ஸந்தே₃ஹோ மம ஸ்யாத்'' (ரா.ஸு.ந். 39-22) (நான் உயிர் வாழ்வது ஸந்தேஹமாகும்.)

என்ற நிலை ஏற்பட்டாற் போன்ற நிலை, ஆண்டாளுக்கும் உண்டானது. வேங்கடக்கோனிடம் தூதுசெல்லும்படி நியமிக்கப்பெற்ற மேகங்கள், இருந்த இடத்திலேயே நின்று மழைபொழிந்தன. அதனால் மழைக்காலத்திலே தோன்றக்கூடிய புஷ்பங்கள் அலரத் தொடங்கின. அவை எம்பெருமானுடைய திருமேனி அவயவங்களின் அழகை நினைவுபடுத்தி, ஆண்டாளை நலியத் தொடங்கின.

நாய்ச்சியார் இத்திருமொழியில் மாலிருஞ்சோலைநம்பிக்கு நூறுதடா வெண்ணெயும், நூறுதடா அக்காரவடிசிலும் ஸமர்ப்பிப்பதாக வாய்நேர்ந்து கொள்கிறார். 'பெரியாழ்வார் பெண்பிள்ளை ப்ரார்த்தித்தாளேயன்றி, ஸமர்ப்பித் தாளாகத் தெரியவில்லை; அவளுடைய ப்ரார்த்தனையை நிறைவேற்றுவது ப்ரபந்நகுலத்திலே தோன்றிய நம்முடைய கடமையாகும்' என்று சொல்லி ஸ்வாமி எம்பெருமானார் அழகருக்கு நூறுதடா வெண்ணெயும், அக்காரவடிசிலும் ஸமர்ப்பித்தும் கோயிலண்ணார் என்று ஆண்டாளால் அன்புடன் அழைக்கப் பெற்றதும் அனைவரும் அறிந்ததேயாம்.

பத்தாம் திருமொழி - கார்க்கோடல்

கீழ்த்திருமொழியில், ''செங்கட்கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல் தொங்கிய வண்டினங்கள்..... எனக்கோர் சரண் சாற்றுமினே' (9-5) என்று நாய்ச்சியார் வண்டுகள் முதலானவற்றின் காலிலே விழுந்தும், எம்பெருமான் வந்து முகம் காட்டிற்றிலன். அவன் நேரேவந்து முகம் காட்டினாலோ, அல்லது அவன் வரப்போகிறான் என்பதை உணர்ந்தும் அடையாளங்கள் உண்டானாலோ தான், உயிர்வாழலாம் என்னும்படி ஆண்டாளுக்கு ஆற்றாமை கரைபுரண்டது. கார் காலத்தில் பூக்கள் எங்கும் மலர்ந்து, எம்பெருமானுடைய அவயவ அழகு, திருமேனி ஆகியவற்றை நினைவூட்டிக் கொண்டிருந்தன. இனி, உயிர்வாழவேண்டுமானால் 'அடியார்களைக் கைவிடமாட்டேன்' என்ற அவன் வார்த்தையையும், பெரியாழ்வார் ஸம்பந்தத்தையுமே நம்பியிருக்கவேண்டும். **'ந மே மோக$_4$ம் வசோ ப$_4$வேத்'** (என் வார்த்தை வீணாகாது) என்ற அவன் வார்த்தையைக் கொண்டு வாழலாமென்றால், ஸ்வதந்த்ரனானவவனை இவ்வார்த்தை கொண்டு நிர்பந்திக்க முடியாது. அவன் வார்த்தை தப்பினாலும், பெரியாழ்வார் ஸம்பந்தம் பேற்றைத் தராமல் போகாது. அதுவும் பலிக்காமற் போகுமோ என்ற ஐயம் ஆண்டாளுக்கு ஏற்பட்டு, 'மற்றவையெல்லாம் தப்பினாலும் பெரியாழ்வாரோடுண்டான ஸம்பந்தம் பழுதாகாது; அது எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யத்தையும் மாற்றி, நம்மை அவன் திருவடிகளிலே சேர்த்தல்லது விடாது' என்று உறுதி பூண்டு தான் உயிர்தரித் திருந்தமையைச் சொல்கிறாள் பத்தாம் திருமொழியில்.

எம்பெருமான் **'ந த்யஜேயம்'** (கைவிட மாட்டேன்) என்றாலும், சேதநனை எம்பெருமானோடு சேர்ப்பதற்கு புருஷகாரபூதரான ஆசார்யர் வேண்டும் என்பது இத்திருமொழியின் ஸாரார்த்தமாகும்.

பதினோராம் திருமொழி - தாமுகக்கும்

எம்பெருமான் வந்து முகங்காட்டாமையாலே, ஆண்டாள் மிகவும் அவஸந்நையாய்க் கிடந்தாள். அர்ஜுநனுடைய அம்புகளாலே அடிபட்டு, பாணப் படுக்கையில் கிடந்த பீஷ்மரைப் போலே, எம்பெருமானை நினைவுபடுத்தும் பொருள்களாலே மிகவும் நலிவுபட்டுக் கிடந்த நாய்ச்சியாரைக் காண, தாய்மார்களும் தோழிமார்களும் மற்றுமுண்டானவர்களும் திரண்டு வந்தார்கள். நாய்ச்சியார் அவர்களைப் பார்த்து ''பெரியாழ்வார் ஸம்பந்தம் பேற்றுக்கு உடலென்றிருந்தேன்; திருவரங்கன் என்னுடையவளைகளும் கழலும்படி செய்துவிட்டான். ஸீதாப் பிராட்டிக்காக உண்ணாது உறங்காது ஒலிகடலை ஊடறுத்து (இடைவெளியறும்படி அணைகட்டி)த் தான் பட்டபாடுகளை நினைக்காமல், நான் படும் பாடுகளைப் பார்த்து உகக்கிறான். நான் அவனை மறந்து நிம்மதியாக விருக்கலாமென்றால், அவனுடைய குணங்களும், சேஷ்டிதங்களும் என்னால் மறக்க வொண்ணாதவையாய் உள்ளன'' என்கிறார். அவன் ருக்மிணிப் பிராட்டியை ஶிஶுபாலனிடமிருந்து காப்பாற்றி, உதவிய செயல், பெண்பிறந்தார் எல்லார்க்கும் உதவிய செயலன்றோ என்றநுஸந்தித்து தரிக்கப்பார்க்கிறார் நாய்ச்சியார்.

''சரமஶ்லோகத்தின் பொருளைக்கேட்டு, அதிலேயே ஊன்றியிருக்கும் பெரியாழ்வார் ஸம்பந்தத்தாலேயே எம்பெருமானை உகந்திருக்கும் என்னை, பெரியாழ்வார் ஸம்பந்தத்தையும், 'தம்மையுகந்தாரைத் தாம் உகக்கவேணும்' என்னும் நீதியையும் மீறி எம்பெருமான் கைவிட்டானானால், அவனை ஆராலே நிர்பந்திக்க முடியும்'' என்று கூறி, இத்திருமொழியைத் தலைக்கட்டுகிறாள் ஆண்டாள்.

பன்னிரண்டாம் திருமொழி - மற்றிருந்தீர்கட்கு

ஆண்டாள் நம்பிக்கையோடிருந்தும், நம்பெருமாள் விரைந்து வந்து வ்யஸநத்தைப் போக்கக் கண்டிலள். அவன் வராவிடிலும், அவன் வரும்வரை பொறுத்திருக்கக் கூடியவளல்லளிவள். உடனே அவனை அடையவேண்டு மென்னும் ப்ராப்யத்வரையாலே, ஸ்வரூபத்திற்குச் சேராதனவற்றைச் செய்தாவது, அவன் முகத்திலே விழிக்க வேண்டுமென்று பார்க்கிறாள் ஆண்டாள்.

தானே சென்று அவன் முகத்திலே விழிப்பதற்கு, இவளுக்கு ஶக்தியில்லை. ''மன்னுமதுரை தொடக்கமாக வண்துவராபதி தன்னளவும் தன்னைத் தமருய்த்துப் பெய்யவேண்டி'' (12-10) என்கிறபடியே அவன் பிறந்த மதுரைப்புறம், அவன் வளர்ந்த ஆய்ப்பாடி, அவன் எழுந்தருளியிருந்த நந்தகோபாலன் திருமாளிகை வாசல், அவனும் பெண்களுமாய்த் திளைத்த யமுனை, அவன் நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனம், பிலம்பன்தன்னைப் பலதேவன் வென்ற பாண்டிவடம், அவனெடுத்த கோவர்த்தனம், பதினாறாமாயிரவர் தேவிமாரொடு அவன் கொலு வீற்றிருந்த துவாரகை ஆகிய தலங்களுக்குத் தன்னைத் தன் உறவினர் கொண்டு போய்ச் சேர்க்கும்படி நாய்ச்சியார் இத்திருமொழியில் வேண்டுகிறார்.

பதின்மூன்றாம் திருமொழி - கண்ணனென்னும்

உறவுமுறையார், தன்னை, அவனுகந்தவிடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பினாள் ஆண்டாள். இவளுடைய நிலையைப் பார்த்தவர்களுக்கு இவளை அழைத்துச் செல்ல காலில் பலமிருக்காது. செல்வதானால், ஒரு கட்டணத்திலே கிடக்க வைத்துக் கொண்டு செல்ல வேண்டும்; அப்படிப் போகும்வரை இவள் உயிர்தரித்திருக்கவேண்டும். ஏன் எனில்; உள்ளூரில் எழுந்தருளியுள்ள வடபெருங்கோயிலுடையானையே அவர்களால், இவளுக்கு ஸேவை பண்ணி வைக்க முடியாது.

கோயிலுக்குள் நுழைந்தால், நம்மைப் போலே அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் திரும்பக்கூடியவளல்லளிவள்; வடபத்ரசாயியை ஸேவித்தமாத்ரத்தில், மயங்கி விழுவள். அதனால் ஆண்டாளுடைய பந்துக்கள், 'இவளை இழக்க வொண்ணாது' என்று, இவளைக் கோயிலுக்குள்ளே அழைத்துச் செல்லவே மாட்டார்களாம். அதனாலேயே இவள் **"வில்லிபுத்தூர் உறைவான்தன் பொன்னடி காண்பதோர் ஆசையினால் என்பொருகயற்கண் இணைதுஞ்சா"** (5-5) என்றருளினாள்.

'வடபெருங்கோயிலுடையானையே தரித்துநின்று வணங்கவியலாத இவளை, வடநாட்டிலுள்ள தலங்களுக்கு அழைத்துச் செல்வதெப்படி?' என்று உறவினர்கள் தயங்கினார்கள். அப்போது இவள் - அவர்களைப் பார்த்து, 'என்னை உயிர்தரிக்கச் செய்ய நினைத்தீர்களாகில், அவன் திருமேனியோடு தொடர்புடையதொன்றைக் கொணர்ந்து, அதனை நான் தொடும்படிசெய்து, என்னைக் காக்கப் பாருங்கோள்' என்கிறாள்.

இத்திருமொழியில், வாய்கொண்டு சொல்லவொண்ணாத வ்யஸநத்தை யடைந்தாள் ஆண்டாள். கறுத்த காளை போன்ற கண்ணனுடைய கடைக்கண் பார்வையாகிற அம்பினாலே நெஞ்சிலே அடிக்கப்பெற்று, நாலடி நடக்கவும் முடியாதபடி எலும்புமூட்டுகள் குலைந்து, 'இனி இவளை ஓர் அவயவி (அவயவங்களோடு சேர்ந்தவள்) ஆக்கிக் காணமுடியாது' என்னும் நிலையையடைந்தாள் கோதை. "புடையும் பெயரகில்லேன் நான்" (13-6) என்று இடம்வலம் புரண்டு படுக்கவும் இயலாதவளானாள்.

'கண்ணபிரானோ அழுதாலும், தொழுதாலும் தன் உருவைக் காட்டுகிறானில்லை; ஆகையால் தாய்மார்களே! நீங்கள், அவனுடைய அமுதத் திருவாயில் ஊறுகிற உமிழ்நீரையாவது கொண்டுவந்து நான் பருகும்படிசெய்து, எனது உடல் உலர்ந்து போகாதபடி நோக்கி, எனது களைப்பை நீக்குங்கோள்; நெடுமால் ஊதிவருகின்ற புல்லாங்குழலின் துளைகளிலிருந்து வெளிவரும் நீரைக் கொண்டுவந்து என் முகத்திலே தடவுங்கோள்; என்னுடைய திருமுலைத் தடத்தை எம்பெருமானுடைய கற்பகக் கிளைபோன்ற திருத்தோளோடே சேர்த்து

அணைய அமுக்கிக் கட்டுங்கோள்' என்று ஆற்றாமை அறவிஞ்சி அழுது அலற்றுகிறாள். ''உளளோ விலளோ'' (13-8) (இருக்கிறாளோ, இல்லையோ) என்னும் நிலை அடைந்தாள்.

பதினாலாந் திருமொழி:

இத்திருமொழியில், ஆண்டாளுக்கு எம்பெருமானைப் பெற்றல்லது, தரிக்க வொண்ணாதபடியான நிலை உண்டாயிற்று. இவளுக்கு ஆற்றாமை அறவிஞ்சிச் சென்றாலும், பேற்றையடையும்போது பரமபக்தி தலையெடுத்திருக்க வேணுமென்று, இதுவரை காலம் தாழ்த்தினானவன். எம்பெருமானைப் பெற்றால் உயிர்வாழ்வது, பெறாவிடில் முடிவது என்னும் நிலை ஏற்பட்டது. பரமபக்தி தலையெடுத்தவாறே, அவன் வந்து முகம்காட்டி ஆட்கொண்டான்.

தனக்குப் பிறந்த பரமபக்தியும், அந்தப் பரமபக்திக்குச் சேரத் தான் பெற்றபேறும் இவ்வுலகிலே காணக்கூடியதல்லாமையாலே, இத்திருமொழியிலுள்ள பாசுரங்கள் ஒவ்வொன்றிலும், முற்பாதியில், ''கண்டீரே'' என்று கேட்கிறவர்கள் பேச்சாலே, அவனைக் கண்டல்லது தரிக்கவொண்ணாதபடியான தம்முடைய பரமபக்தியையும், பிற்பாதியில் ''கண்டோமே'' என்று தான் பெற்ற பேற்றையும் சொல்லி ஆண்டாள் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறாள். ஆய்ச்சி பாவனையில் திருமொழிபாடினாலும், சாற்றுப் பாசுரத்தில் தாமான தன்மையில் தலையெடுத்து 'விட்டுசித்தன் கோதை' என்று இவளால் பெரியாழ்வார் ஸம்பந்தத்தைச் சொல்லா திருக்கவொண்ணாது.

ஆசார்யாபிமாந நிஷ்டையில் ஊன்றியவள் ஆண்டாள். இவளுடைய நாச்சியார் திருமொழியை முழுமையாக அநுபவிக்கப் பெற்றிலோமாயினும், ஸ்தாலீபுலாகந்யாயத்தை *(ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற நியாயத்தை)*க் கொண்டு, ஒரு பாசுரத்தையாவது விரிவாக அநுபவிப்போம்.

''நல்லவென் தோழீ! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே.'' - (10-10)

இப்பாசுரத்தில் ஆண்டாளுடைய தோழியானவள், இவளுடைய நிலை கண்டு, இவளைக் காட்டிலும் மிகுந்த வருத்தமடைந்து, 'இவள் உயிர் வாழ்வதற்கு ஒரு வழியும் தெரியவில்லையே' என்று கலங்குவது கண்ட கோதை - 'நீ பயப்பட வேண்டா; நாம் வாழ்வதற்கு ஓர் உபாயமுள்ளது; நம் ஆசார்யரான பெரியாழ்வார் நிச்சயம் எம்பெருமானை வரவழைத்துக் கொடுப்பர்' என்கிறாள்.

நல்லவென்தோழீ! - என்னைவிட என் இழப்பைக் கண்டு நொந்திருக்கும் தோழியே! **நாகணைமிசைநம்பரர்** - பர்யங்கவித்யையில் பரமாத்மாவை 'அநந்தஶாயி' என்று கூறுகையாலே, ஆதிஶேஷன் மேலே ஶயநித்திருக்கும்

பெருமையுடையவர். **நம்பரர் - "நாராயண பரம்ப்$_3$ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:|"** (தை.நா. -11) (நாராயணனே பரப்ரஹ்மம்; நாராயணனே மேலான உண்மைப் பொருள்) முதலான வேதாந்த வாக்யங்களாலே ப்ரஸித்தமான மேன்மையுடையவர். **செல்வர்** - திருவின் நாயகர். **பெரியர்** - பிராட்டிக்கு மணவாளராயிருப்பதாலேயே அனைவரிலும் பெரியவர். **சிறுமானிடவர் நாம்** - இப்படிப்பெருமைபெற்ற அறப்பெரியவரான அவருக்கும், மிகத் தாழ்ந்தவர்களான நமக்கும் பர்வதத்திற்கும் பரமாணுவிற்கு மிடையேயுண்டான வேற்றுமையுள்ளது. அவர் நமக்கு எட்டக் கூடியவரல்லர். நாம் தேவஜாதியிலே பிறந்து, அவ்வெம்பெருமானைச் சிறிது நெருங்கி நிற்பவர்களும் அல்லோம்; ஜ்ஞாநிகளாய் எம்பெருமானைக் கிட்டியிருப்பவர்களும் அல்லோம்; பேரறிவு படைத்திருந்தும், அறிவற்ற பொருளைப்போலே, படுக்கையாகவிருந்து எம்பெருமானை அணைந்து கிடக்கும் திருவநந்தாழ்வானைப் போன்றவர்களும் அல்லோம்; இடக்கையும் வலக்கையும் அறியாதிருந்தும் கண்ணபிரானை அணைந்து நின்ற ஆய்ச்சிகளும் அல்லோம்; மிகத் தாழ்ந்த மனிதர்களாகவன்றோ விருக்கின்றோம் நாம். ***செய்வதென்?*** - 'அடியார்களைக் கைவிடமாட்டேன்' என்றோர் வார்த்தையை அவர் முன்பொருக்கால் சொல்லிவைத்தது கொண்டு, நாம் அவரை நிர்பந்திக்க முடியுமா?

'அப்படியானால் நாம் பகவத் விஷயத்தை இழந்துவிடவேண்டியது தானா' என்று தோழியானவள் கேட்க, அதற்கு ஆண்டாள் 'நாம் இழக்கவேண்டியதில்லை; அவனை அடைவதற்கு ஓர் உபாயம் உள்ளது' என்கிறாள் மேல் -

வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை - சேதநர்கள் அனைவர்க்கும் பொதுவானவர் என்பதனால், நாம் எம்பெருமானைப் பற்றுகிறோமல்லோம். நம் ஆசார்யரான பெரியாழ்வார் உகந்த வஸ்து என்றாயிற்று நாம் அவரை உகக்கிறோம். நம்முடைய ஆசார்யரான பெரியாழ்வாரே நமக்குப் பேற்றை நல்கும் உபாயமுமாவார்.

விஷ்ணுவை எப்பொழுதும் உள்ளத்திலே கொண்டிருப்பவர் அவர். 'அனந்தன் பாலும் கருடன்பாலும் ஐது நொய்தாகவைத்து என் மனந்தனுள்ளே வந்து வைகி" *(பெரியாழ்வார் திருமொழி 5-4-1)* என்கிறபடியே திருவடி, திருவநந்தாழ்வானைவிட பெரியாழ்வாரிடம் மிகுந்த அன்புகொண்டு, அவர் திருவுள்ளத்திலே உகந்து எழுந்தருளியிருப்பவன் எம்பெருமான். பெரியாழ்வார் இட்டவழக்காயிருப்பவன் அவன். பெரியாழ்வாரைக் கொண்டு அவனை ஸுலபமாகப் பெற்றுவிடலாம்.

வல்லபரிசு வருவிப்பரேல் - பெரியாழ்வார் எம்பெருமானை வரவழைப்பதற்குப் பல வழிகளுண்டு. அவர் 'நாரணா! நீராடவாராய்' என்றாலும், 'செண்பகப் பூச்சூட்டவராய்' என்றாலும், 'அழகனே! காப்பிடவராய்' என்றாலும் எம்பெருமானால் வாராதிருக்க முடியாது. தகுந்த வகைகளாலே, பெரியாழ்வார் எம்பெருமானை வருவிப்பரானால். **அது காண்டுமே!** - அவ்வழியாலே, நாம் எம்பெருமானைக் காண்போம். ஆதலால், நாம் அவனை அடையப்பெறுவது உறுதி

என்கிறாள் ஆண்டாள். ஆசார்யாபிமாநமே பேற்றுக்கு உடலென்று அறுதியிட்ட இப்பாசுரம் நாய்ச்சியார் திருமொழியின் ஸாரமென்று கொள்ளத்தகும்.

ஆக, இப்ரபந்தத்தின் முதல் திருமொழியிலே காம ஸமாஸ்ரயணம் பண்ணி, இரண்டாம் திருமொழியில் சிற்றிலிழைத்து, மூன்றாம் திருமொழியில் பனிநீராடி, நாலாம் திருமொழியில் கூடலிழைத்து, ஐந்தாம் திருமொழியில் குயிலைக் கூவவேண்டி, ஆறாம் திருமொழியில் கண்டகனாவினைத் தோழிக்குச் சொல்லி உகந்து, ஏழாம் திருமொழியில் பகவதநுபவமிருக்கும்படியை பாஞ்சசன்னியத்திடம் கேட்டு, எட்டாம் திருமொழியில் திருவேங்கடமுடையானிடம் மேகங்களைத் தூதுவிடுத்து, ஒன்பதாம் திருமொழியில் மாலிருஞ்சோலைநின்ற சுந்தரனைத் தொகுத்துரைத்து, பத்தாம் திருமொழியில் பெரியாழ்வார் வயிற்றில் பிறப்பு பேற்றுக்குடலென்றறுதியிட்டு, பதினோராம் திருமொழியில் 'நம்மைப் போன்ற சில பெண்களுக்கு உதவியவன் நம் கார்யம் செய்யாதொழியான்' என்றிருந்து, பன்னிரண்டாம் திருமொழியில் அவனிருந்த தேசத்திலே கொடுபோய்ச் சேர்க்க வேண்டி, பதின்மூன்றாம் திருமொழியில் அவனோடு தொடர்புடையதொன்றைக் கொண்டு வந்து தம்மீதிட்டு உயிர்ப்பிக்க வேண்டி, பதினாலாந் திருமொழியில் பரமபக்தி தலையெடுத்துப் பேறு பெற்றபடியைப் பேசித்தலைகட்டுகிறாள் ஆண்டாள்.

ஸ்வாதந்த்ரியம் தலையெடுத்தவர்கள் இந்நாய்ச்சியாருடைய பாசுரங்களைக் கேட்கைக்கு அதிகாரிகளல்லர்; பக்தி தலையெடுத்தவர்களே கேட்கவேணும்; "பத்து ஆழ்வார்களுடைய ஸாரரூ$_4$தையான தானே சொல்லித் தானே கேட்குமித்தனை" என்பராம் எம்பெருமானார். இப்படிப் பெருமைபடைத்தவளான ஆண்டாளுடைய திருவடிகள் வாழி வாழி வாழி என்று வாழ்த்துகின்றோம்.

ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் கண்டருளும் மண்டயம் அநந்தாண்பிள்ளை ஸ்ரீ.உ.வே. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்களை ரக்ஷிப்பதில் அக்ரகண்யராய்த் திகழ்பவர். அச்சிடப்பெறாத நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு உபகரிப்பவர். முப்பத்தைந்தாண்டுகளாக கீதாசார்யன் பத்திரிகையைச் சிறப்பாக நடத்தி வருமவர். பார்த்தஸாரதி எம்பெருமானுடைய அத்யாபக கோஷ்டியை அலங்கரிப்பர். இவர் அரோகத்ருடகாத்ரராய் நீர்மலி வையத்தே நீடு நிற்க வேணுமென்று பங்கஜாநாதனான புண்டரீகாக்ஷனின் பாதாரவிந்தங்களில் ப்ரார்த்திக்கிறோம்.

- - - - -

பெருமாள் திருமொழி

ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ.வே. பராசர பத்ரி நாராயண பட்டர் ஸ்வாமி

"பெருமாளை அறியாதார் பெருமாளை அறியாதாரே" – ஆழ்வார்களில் குலசேகரப் பெருமாளை அறியாதவர்கள் சக்கரவர்த்தி திருமகனாம் ராமபிரானை (பெருமாளை) அறியாதவர்களே என்பது பெரியோர் வாக்கு. குலசேகரப் பெருமாள் அருளிய திவ்ய ப்ரபந்தமாகையாலே "பெருமாள் திருமொழி" என்று இதற்குப் பெயராயிற்று. 105 பாசுரங்கள் கொண்டது. பத்து பதிகங்களாக பிரித்துக் காட்டப்படுகிறது. இப்பிரபந்தத்தில் திருவரங்கத்தைப்பற்றி மூன்று பத்தும், திருவேங்கடத்தைப் பற்றி ஒரு பத்தும், வித்துவக் கோட்டம்மானைப் பற்றி ஒரு பத்தும், தில்லைத் திருச்சித்திரகூடத்தைப் பற்றி ஒரு பத்தும் பாடியுள்ளார். மேலும் ஸ்ரீராமாவதாரத்தைப பற்றி தாலாட்டாகவும், தயரதன் புலம்பலாகவும், ஸம்க்ஷேப ராமாயணமாகவும் பாடியுள்ளார். ஸ்ரீக்ருஷ்ணனைப் பற்றி ஆய்ச்சியர்கள் கூடுவது, பிரிவது, ஊடுவதாகிற தசைகளை நாயகி பாவத்துடன் பாடியுள்ளார். தேவகியின் புலம்பலாகவும் பாசுரமருளியிருக்கிறார்.

பெருமாள் திருமொழி தனியன்கள்

பெருமாள் திருமொழி திவ்ய ப்ரபந்தத்திற்கு இரண்டு தனியன்களில் ஒரு தனியனை ஸ்வாமி எம்பெருமானாரே அருளிச் செய்துள்ளார். "இன்னமுதம் ஊட்டுகேன் இங்கே வா பைங்கிளியே......" என்று தொடங்கும் முதல் தனியனில் இன்னமுதம் ஊட்டுவதாக குலசேகரப் பெருமாளின் திருநாமத்தை சொல் என்று பைங்கிளிக்கு உரைக்கிறார். திருவரங்கத்தைப் பற்றி பாடவல்லவராய், பக்த்யாதி குணங்கள் நிரம்பினவராய், பெருமாள் என்கிற திருநாமத்தை உடையவராய், ஸ்த்ரீகளுக்கு மன்மதன் போல் மநோஹராய், எங்கள் ப்ரபந்ந குலத்துக்கு திருவாபரணமாகத் திகழ்பவர் போன்ற பெருமைகளை உடையவர் ஸ்ரீகுலசேகரப் பெருமாள் என்று அறுதியிட்டார் எம்பெருமானார்.

"ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று....." என்கிற இரண்டாவது தனியனில் ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் குலசேகரப் பெருமாளுக்கு இருக்கிற ஈடுபாட்டை பறைசாற்றுகிறார். ஸ்ரீவைஷ்ணவர்கள் திருட மாட்டார்கள் என்று பாம்பு இருக்கும்படியான குடத்திலே கையை விட்டு சத்யம் செய்தவர் இவ்வாழ்வார். செங்கோலையுடையவராய், கொல்லி என்னும் நகருக்கு நிர்வாஹகராய், மற்றுமுள்ள அரசர்களுக்கு அதிபதியாய், சேர குலத்திற்கே ரத்னம் போன்றவராய், முடிசூடின அரசர்களுக்கு தலையாபரணமாய் விளங்குபவர் இவ்வாழ்வார் என்கிறார் மணக்கால் நம்பி.

முதல் திருமொழி - இருளிரிய

திருவின் மணாளனான திருமாலால் மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர் இவ்வாழ்வார். ஆகையால், எம்பெருமானிடத்திலே அளவு கடந்த பக்தி உண்டாயிற்று. உடனே சென்று அவனைக் கிட்டி அநுபவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். தாம் மிகவும் உகந்து நிற்கும் பெரிய பெருமாளைக் கோயிலிலே சென்று அநுபவிக்க ஆசைப்பட்டார். அதற்குப் பல இடையூறுகள் தன்னுடைய அரச பதவி நிர்ப்பந்தத்தாலே ஏற்படலாயின. அவையெல்லாம் நீங்கி, ஸ்ரீரங்கத்தில் நித்ய வாஸமும், கைங்கர்யபரர்களோடு நித்ய ஸஹவாஸமும் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று திருவரங்கநாதனிடத்தில் இத்திருமொழியில் வேண்டி நிற்கிறார். "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என் கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே" என்று முதற்பாட்டில் தன் அவாவை வெளியிடத் தொடங்கும் ஆழ்வார், பத்தாவது பாசுரத்தின் திருவரங்கத்திருமுற்றத்தடியார் திரளைக் கண்டு அனுபவித்து அவர்களில் தானும் ஒருவனாக கூடி ஸேவிக்கப் பெறும் நாள் என்று கொலோ என்று வெளியிட்டருள்கிறார். கடைசியாக, 11ம் பாசுரத்தில் இந்த பதிகத்தை அநுஸந்திப்பார் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிக்கீழ் நண்ணுவர்கள் என்று பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

இரண்டாம் திருமொழி - அடியார்களுக்கு அடிமையாய் இருக்க ஆசைப்படுதல்

எம்பெருமான் உகக்கிற அடியவர்கள் திறத்தில் அடிமையாய் இருக்க ஆசைப்படுகிறார் இத்திருமொழியில். எல்லாவிதத்தாலும் பூர்ணனாக இருக்கிற எம்பெருமானுக்கு இவன் செய்ய வேண்டிய ஆநுகூல்யங்கள் ஒன்றுமில்லை. ஆனால், எம்பெருமான் தானே உகந்திருக்கிற அடியவர்கள் திறத்தில் ஆசை உண்டானாலல்லவோ எம்பெருமானிடத்தில் உண்மையான ஆசை உண்டானதாகும். ஆகையால் அடியவர்கள் பால் உள்ள ஆசையை வெளியிடுகிறார்.

1. திருவரங்கனிடத்தில் காதல் கொண்டு வாழும் மெய்யடியவர்கள் கூட்டத்தைக் (குழாங்களை) கண்களால் காண்போமாகில் அதுவே கண் படைத்த பயன்.

2. திருவரங்கனின் திவ்ய சரித்திரங்களையே எண்ணி ஆனந்தத்தால் ஆடிப்பாடி "ஓ! அரங்கனே!" என்று அழைக்கிற தொண்டரடிப்பொடிகளிலே நாம் ஆடப்பெற்றால் கங்கை நீரில் குடைந்தாட வேணும் என்கிற ஆசையும் எதற்கு?

3. எம்பெருமானின் திவ்ய சரித்திரங்களை எண்ணி ஆடிப்பாடி காவிரி போல் வருகிற கண்ண நீரால் திருவரங்க திருமுற்றத்தை சேறாக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களால் மிதிக்கப்பட்ட சேற்றை தலையால் தரித்து நிற்பேன்.

4. நாத்தழும்பு எழ "நாராயணா!" என்று அழைத்து, உடம்பு தழும்பேற சேவித்து நிற்கும் தொண்டரின் சேவடியை ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சம்.

5. ஸ்ரீரங்கநாதனையே தம் நெஞ்சில் நினைத்து மெய்சிலிர்க்கும் அடியவர்களையே நினைத்து என் நெஞ்சு மெய் சிலிர்க்கிறது.

6. எல்லாப் பிறப்பிலும் என் நெஞ்சம் திருவரங்கனின் அடியவர்கள் திறத்தில் அன்பு உடையதாகவே திகழும்.

7. பக்தியையுடைய நெஞ்சினராய் கண்ணநீர் பெருகி ஓடும் அடியவர்களாய் நிற்பவர்களின் இரண்டு திருவடிகளிலும் என் மனம் அன்புடையதாகும்.

8. ஸ்ரீரங்கநாதனிடத்தில் பித்தேறித் திரியும் தொண்டர்களித்தில் என் மனம் ஒப்பில்லா அன்பு உடையது.

9. பெரிய பெருமாளிடத்தில் பக்தி பூண்டு திரிபவர்கள் பித்தர்கள் அல்லர். அப்படி பக்தி இல்லாதவர்களே பித்தர்கள்.

10. குலசேகரன் இயற்றிய இப்பதிகத்தை அநுசந்திப்பவர்கள் தொண்டர்களுக்கு தொண்டராவர்கள்.

மூன்றாம் திருமொழி - அடியாரல்லாதவர்களிடத்தில் தனக்குப் பொருந்தாமை

எம்பெருமானின் அடியவர்கள் திறத்தில் உள்ள அன்பை முழுவதுமாக வெளியிட்டருளினார் இரண்டாம் திருமொழியில். இப்பதிகத்தில் அடியாரல்லாதவராய் திரியும் உலகத்தார் திறத்தில் தனக்கு உண்டான பொருந்தாமையை வெளியிடுகிறார்.

நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையை நிலையானது என்று நினைக்கும் இவ்வுலகத்தாரோடு தான் ஒருபோதும் சேருவதில்லை, "ஸ்ரீரங்கா!" என்று அழைத்து அன்புடைய அரங்கனிடத்திலேயே அன்பு பூண்டவனாக இருக்கிறேன். "உண்டியே உடையே" என்று உணவையும் உடையையும் மட்டுமே வேண்டித் திரிகிற இந்த உலகத்தாரோடு தான் கூடுவதில்லை என்று பலவாறாக பகவத் விஷயம் அறவே இல்லாத உலகத்தார் தமக்கு த்யாஜ்யம் என்கிறார்.

நான்காம் திருமொழி - திருமலையில் பிறப்புகளை ஆசைப்படுதல்

பகவத் விஷயத்தில் ருசி பிறந்தும், இதர விஷயத்தில் அருசியும் பிறந்தும் எம்பெருமானைக் கிட்ட முடியாமல் தம் த்வரையை வெளியிடுகிறார் இதில்.

பெரிய பெருமாள் தாமே மந்தி பாய் வடவேங்கட மாமலையில் திருவேங்கடமுடையானாக நிற்பதால் அவரை அநுபவிக்கிறார். திருவேங்கடமலையில் பகவத் ஸம்பந்தமுடைய யாரேனுமொரு பிறப்பை ஆழ்வார்

ஆசைப்படுகிறார் இத்திருவாய்மொழியில். திருவேங்கடமலையில் திருக்கோனேரியில் வாழும் நாரையாக; சுனையில் வாழும் மீனாக; தங்கவட்டில் கையேந்துபவனாக; ஒரு செண்பகமாக; ஒரு புதராக; தவத்தை உடையவனாக; ஒரு காட்டாறாகப் போகின்ற வழியாக; படியாகத் தான் பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். எம்பெருமானும் தானும் கூட அறியாத ஏதேனுமாக திருமலையில் ஆக வேண்டும் என்று அவாவுற்றார்.

ஐந்தாம் திருமொழி - வேறு புகலில்லாமையை வெளியிடுதல்

எம்பெருமானுக்கே உரியது இவ்வாத்மா என்று (ஸம்ஸ்) முதலான ப்ரமாணங்களால் வேதம் முழங்கி நிற்கிறது. அப்படியிருக்கச் செய்தே, "யானே, என்தனதே" என்று அஹங்கார மமகார புத்தி பண்ணி வாழுபவர்கள் ஸம்ஸாரிகள். அவனுக்கே அடிமை பூண்டு இருத்தல்; அவனையொழிய வேறு புகலில்லாதிருத்தல் இவ்வாத்மாவிற்கு உண்டான மிக முக்கிய லக்ஷணம். அதை இப்பதிகத்தில் குலசேகராழ்வார் வெளியிட்டு அருள்கிறார் திருவித்துவக்கோட்டு எம்பெருமானிடத்தில்.

ஈன்ற தாயானவள் கோபங் கொண்டு தனது குழந்தையை வெறுத்துத் தள்ளினாலும் பின்பு அத்தாயினுடைய அருளை நினைந்து அழும் சிறு குழந்தையை ஒத்திருந்தேன் எம்பெருமானே என்று உரைக்கிறார். "கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்" திருவித்துவக்கோட்டம்மானே உன் திருவடிகளில் அடிமை பூண்டவனாக விளங்கி நின்றேன். நீரை அண்டி வாழும் மீன் போல், அரசனையே எதிர்பார்த்திருக்கும் மக்களைப் போல் உன்னையே சரணமாகப் பற்றி வாழ்கிறேன். எனக்கு வேறு ஒரு புகலில்லை.

ஆறாம் திருமொழி - கண்ணனோடு ஆய்ச்சியர் ஊடல்

பகவத் விஷயத்தில் உண்டான ஊற்றம் வளர்ந்து காதலாக மலர்ந்து பெண் நிலைமை எய்தி, ஆய்ச்சியர்கள் க்ருஷ்ணனிடத்தில் கூடுவது, பிரிவது, ஊடுவதாம்படி இவர் தாமும் ஆனார். திருவாய்ப்பாடி பெண்கள் பேச்சாலே இப்பதிகத்தில் பேசுகிறார்.

"ஸ்ரீ வஸுதேவனின் புத்திரனானவனே! உன் பொய்யான வார்த்தையை நம்பி பனியால் குளிரிலே அகப்பட்டு, யமுனை நதியில் பெரிய மணல் மேட்டில் உன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்" என்று ஒரு பிராட்டி க்ருஷ்ணனிடத்தில் ஊடிச் சொல்லுகிற வார்த்தையாகத் தொடங்குகிறார். ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு ஆய்ச்சியாக க்ருஷ்ணனிடத்தில் அவன் செய்த கள்ளமாயத்தைக் குறித்து ஊடலிழைத்தமையை உரைக்கிறார்.

ஏழாம் திருமொழி - தேவகி வருந்துதல்

ஸ்ரீதேவகிப்பிராட்டியாகிற ஒருத்தியின் மகனாகப் பிறந்து, யசோதைப் பிராட்டியின் மகனாக வளர்ந்தவன் ஸ்ரீக்ருஷ்ணன். ஸ்ரீக்ருஷ்ணனின் பால்யாவஸ்தைகளை அநுபவிக்கிற பேறு ஸ்ரீ யசோதைப் பிராட்டியே பெற்றாள்; தேவகிப் பிராட்டி இழந்தாள். தம்முடைய வருத்தமெல்லாம் தோற்ற ஸ்ரீதேவகிப் பிராட்டியார் பாசுரத்தாலே இப்பதகத்தில் சொல்லுகிறார்.

ஹே க்ருஷ்ண! உனக்கு தாலாட்டுப் பாடி மகிழ உறங்க வைக்கும் பேற்றை இழந்த தாயானேனே! அழகிய சிறவிரல்களை மடித்துப் பிடித்துக் கொண்டு நீ உறங்குகிற அழகை காணாத பாவியானேனே! உன் தகப்பனாரைக் காட்டு என்றவுடன் நீ சுட்டிக் காட்டுகிற பேற்றை நந்தகோபர் பெற்றாரே! வஸுதேவர் அந்தப் பேற்றைப் பெறவில்லையே ! "இவள் என்னுடைய தாய்" என்று மட்டும் அறியும்படியான பிள்ளைப் பருவத்தின் ஆனந்தத்தை இழந்தேனே! என்று பலபடியாக தேவகி புலம்பாக பகர்கிறார் குலசேகரப் பெருமாள்.

எட்டாம் திருமொழி - பெருமாளைத் திருக்கண்ணபுரத்தில் அநுபவித்தல்

ஸ்ரீ கௌசல்யைப் பிராட்டி பெற்ற ஸ்ரீராம அநுபவத்தைப் பெற்றோமோ? அதையும் இழந்தோமே என்று அவ்வநுபவத்தை திருக்கண்ணபுரத்தில் அநுபவிக்கிறார்.

"மன்னுபுகழ்க் கௌசலை தன் மணிவயிறு வாய்த்த எம்பெருமானே! பெரிய மதில்களாய் சூழப்பட்ட திருக்கண்ணபுரத்தில் உறைபவனே, ராகவனே! உனக்குத் தாலாட்டு என்று தொடங்கி பத்து பாசுரங்களாலே ஸ்ரீராகவனுக்கு தாலாட்டு பாடுகிறார். பதினோராவது பாசுரத்தாலே பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

ஒன்பதாம் திருமொழி - ஸ்ரீராமபிரான் காடு புக்கபோது தசரதன் புலம்பல்.

ஸ்ரீராமபிரானின் பால்யாவஸ்தைகளையெல்லாம் கண்டு அநுபவித்த தசரதன், யௌவநரானவாறே அநுபவிக்கப் பெறாதே இழந்தோமே என்கிற தசரதன் பாசுரத்தாலே இப்பதிகத்தில் அநுபவிக்கிறார்.

"நெடுங்கானம் படப்போகு' என்று உரைத்த கைகேயி சொல்லைக் கேட்டு என் சொல் தவறாது நடக்கும் நீ காட்டுக்குப் போனாயே!" என்றும், "எவ்வாறு நடந்தனை எம்மிராமாவோ!" என்று கானகமெல்லாம் எப்படி சிரமப்பட்டு நடந்தாயோ" என்றும், "காட்டிலே சென்று கற்களின் மீது துயில் கொள்ளக் கற்றுக் கொண்டாயோ, மெல்லணையை விட்டு" என்றும் "நீ காட்டிற்குச் சென்றும் என் நெஞ்சம் இரு பிளவாய் பிளந்து போகாமல் நிற்கிறதே" என்றும், "கைகேயின் வார்த்தையைக் கேட்டு உன்னைக் கானகத்திற்கு அனுப்பிய கொடியேனான நான்" என்றும் "உன்னை இழந்திட்டு இன்னும் அழிந்திடாமல் உயிர் வாழ்ந்திருக்கின்றேனே" என்றும் பலவாறாகப் பெருமாளை இழந்த தசரத சக்கரவர்த்தியின் புலம்பலாக அமையப் பெற்றிருக்கிறது இப்பதிகம்.

பத்தாம் திருமொழி - ராமாயண ஸாரம்

கீழில் திருமொழிகளில் தமக்கு ஏற்பட்ட வருத்தமெல்லாம் தீரும்படியாக, சக்கரவர்த்தி திருமகன் நித்யவாஸம் பண்ணுகிற திருச்சித்ர கூடமாகிற திருப்பதியிலே திருவவதாரம் தொடங்கி அந்த அவதார சேஷ்டிதங்களை ஸ்ரீ வால்மீகி பகவான் பேசி அநுபவித்தாற் போல் தம்முடைய ஞானத்தின் ஏற்றத்தால் ஸமகாலத்தைப் போல் இப்பதிகத்தில் அநுபவிக்கிறார்.

உயரமான மதில்கள் சூழ்ந்த திருவயோத்தியில் வந்து திருவவதரித்தவனே! வடிவழகாலும், கண்ணழகாலும் களிப்பிக்குமவனும் திருச்சித்ரகூடத்தில் உறைபவனே! உன்னை என் கண்குளிரக் காணும் நாள் என்று கொலோ என்றும் பலவாறாக திருச்சித்ர கூடத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை அநுபவிக்க ஆசைப்படுகிறார் இப்பதிகத்தில்.

பதினோராவது பாசுரத்தில் பலம் (பயன்) சொல்லித் தலைக்கட்டுகிறார். திருச்சித்ர கூடத்தில் நித்யவாஸம் பண்ணுகிற ஸ்ரீராமனைக் குறித்து, விரோதிகளைக் கொலை செய்வதில் ஈடுபாடுள்ள ஆயுதங்களையுடைய சேனையையும், வெற்றியையும், அழகையுமுடைய வாளையுடையவரும், உறையூருக்கு அதிபதியும், வெண்கொற்றக் குடையை உடையவருமான ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த சிறந்த இயல் என்னும் தமிழ் இலக்கணத்திற்குப் பொருந்திய இனிய தமிழ்ப் பாமாலையிலுள்ள பத்துப் பாட்டுக்களையும் சொல்லவல்லவர்கள் பரமபதத்தில் விளங்குகிற எம்பெருமானுடைய திருவடிகளை அடைந்து ஆனந்திக்கப் பெறுவர்கள்.

திருச்சந்த விருத்தம்

திருவெள்ளறை அம்மாள், ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி,

முன்னொரு காலத்தில் முனிவர்கள் அனைவரும் ஒன்று கூடினார்கள்; புகழ் என்கிற துலாக்கோலைக் கையில் எடுத்தார்கள்; திருமழிசையை ஒரு தட்டிலே வைத்தார்கள்; மற்றொரு தட்டிலே எஞ்சிய உலகையெல்லாம் வைத்தும் திருமழிசைக்கு ஈடாகக் கண்டார்களல்லர். அவ்வளவு மஹிமையுடையதாம் இந்த மஹிஸார (திருமழிசை) க்ஷேத்ரம். தங்கத்திலே ரத்னத்தைப் பதித்தது போல் 'பக்திஸாரர்' என்றழைக்கப்பட்ட திருமழிசையாழ்வாரின் திருவவதாரத்தால் திருமழிசை மற்றுமோர் பெருமை பெற்றது.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்த கண்ணனைப் போல், திருமழிசையாழ்வாரும் தருப்பை அறுக்கும் ரிஷிபுத்ரராய்ப் பிறந்து, பிரம்பறுக்கும் தாழ்ந்த குலத்திலே வளர்ந்தவர். ஒரு குலத்திலே பிறந்து, மற்றொரு குலத்திலே வளர்ந்த இவர் பல மதங்களில் புகுந்து இறுதியாக ஒரு மதத்திலே (ஸ்ரீவைஷ்ணமதம்) நிலைத்தவர். பேயாழ்வாரால் திருத்தப்பட்ட இவர் திருமாலை நின்ற நின்றபக்கம் நோக்க வைப்பதிலும், சொன்ன வண்ணம் செய்ய வைப்பதிலும் ஸமர்த்தர். பரத்வ ஸ்தாபநமாகிற வாளை உறையிலிடாதவர். விஷ்ணோர் மார்க்க ப்ரதர்சநம் செய்யும் ஸுதர்சநத்தின் அம்சமானவர். நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்கிற இரு ப்ரபந்தங்கள் அருளினவர். சந்தப்பூமலர்ச் சோலைத் தாரணியின் துயர் துடைத்து சந்தத்தால் உயர்ந்து நிற்பது திருச்சந்த விருத்தமாகிற சரமப்ரபந்தம்.

கணக்கு

நம்மில் பலர் கணக்குடன் பிணக்குக் கொண்டிருப்போம். இவ்வாழ்வாரோ எண்களை எழுத்தில் புகுத்தி, எண்ணிலாத சாஸ்த்ரார்த்தங்களை எடுத்தியம்புவதில் இணையற்றவர். முதற் பாடலிலேயே தம் கணக்கைத் தொடங்கி, எம்பெருமான் 'கணக்கறு நலந்தனன்' என்று காட்டுகிறார். பூமியிலிருக்கும் சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களாகிற ஐந்துமாய், நீரிலிருக்கும் சப்த ஸ்பர்ச ரூப ரஸங்களாகிற நான்குமாய், நெருப்பிலிருக்கும் சப்த ஸ்பர்ச ரூபங்களாகிற மூன்றுமாய், காற்றிலிருக்கும் சப்த ஸ்பர்சங்களாகிற இரண்டுமாய், ஆகாசத்திலிருக்கும் சப்தமாகிற ஒன்றுமாய், பஞ்சபூதங்களுக்கும் அந்தராத்மாவாய் நிற்கிற எம்பெருமானே ஜகத்காரணன் என்று கூறி, எம்பெருமானுடைய இந்த ஜகத்காரணத்வத்தை அறியவல்லவர் யார்? என்கிறார் முதற்பாட்டிலேயே ஆழ்வார். ஐந்து முதல் ஒன்று வரை எண்களை இறங்குவரிசையில் காட்டி, எம்பெருமானின் பெருமையை எழுத்தில் ஏற்றி வைக்கிறார்.

கேள்விக்கணை

எதிராளியை நோக்கி வில்லம்புகளை எய்து தன் பெருமையைக் காட்டுபவன் ராமன். இவரோ அந்த எம்பெருமானை நோக்கித் தம் சொல்லம்புகளை (கேள்விக்கணை) எய்து அவனது பெருமையை நிலை நாட்டுவதில் வல்லவர். "ஜகத்காரணனான உன்னைக் காண வல்லவர் யார்? நான் ஓர் உபாஸநமும் செய்யாதிருக்கச் செய்தேயும் உன் நீர்மையால் என் மனத்தே வந்து புகுந்தது ஏன்? நான்முகனைப் படைத்த ஆதிதேவனல்லையா நீ? முக்கண்ணனாலும் உன்னை ஏத்த முடியுமா? ஆதிகாலத்திருந்த உன்னைக் காண வல்லவர் யார்? உன் குணங்களைச் சுருக்கமாகவது சொல்லவல்லவர் யார்? உன்னை உள்ளபடி உள்ளவல்லவர் யார்? ஆதியாகவும், ஆயனாகவும் நின்ற மாயம் என்ன மாயம்?' என்றெல்லாம் அவனைத் திக்குமுக்காடச் செய்யும் கேள்விகளால் துளைத்து, 'அவன் அளப்பில்லாத குணங்களையுடைய ஆரமுது' என்கிற எண்ணத்தை நம் உள்ளத்தே விளைவித்து விடுகிறார் திருமழிசையாழ்வார்.

சூச்சம்

இவ்வாழ்வாரை 'உறையிலிடாதவர்' என்று புகழ்கிறார்கள் நம் பூர்வர்கள். எம்பெருமானின் பரத்வத்தை எடுத்துரைப்பதில் இவர் இணையற்றவர். "மந்தரம் நாட்டி அன்று மதுரக் கொழுஞ் சாறான அமுதம் கொண்ட போது சூரர் என்று மார்தட்டும் தேவர்கள் அனைவரும் அருகில் வெறுமனே நின்று என்ன செய்தார்கள்?"

என்று இதர தேவதைகளுக்குப் பரத்வம் கற்பிப்பவரை நோக்கி வாளை வீசுகிறார் ஆழ்வார். இப்படிப் பல பாசுரங்களில் கூச்சமின்றிப் பரத்வ நிர்ணயம் செய்வதோடு நில்லாமல் எம்பெருமானையும் "நீ உன் மேன்மையைக் கூச்சமில்லாமல் கூறு" என்றும் கூறுகிறார் இவர். 'பாற்கடலில் வந்து அமுதம் கடைய வேண்டித் தேவர்கள் துதிக்க, அவர்களுக்குக் கடைவதில் உதவி செய்தது மட்டுமின்றி, ஆமையாகி மந்தர மலையைத் தாங்கியதும் நீதான் என்பதனை யாவரும் தேறும்படியாகக் கூச்சமின்றி கூறு" என்கிறார். குன்றெடுத்து ஆநிரை காத்து இந்திரனின் மதத்தைத்தீர்த்து, கோவிந்தனாக ஆயர்களுடன் கைகோர்த்து நிற்கிறான் கண்ணன். அவன் செயற்கரிய செயல்கள் செய்வதைக் கண்ட ஆயர்கள் 'நீ தேவனா, தானவனா, யக்ஷனா, கந்தர்வனா?' என்று கேட்க, அவன் 'அப்படி ஒருவனுமல்லன்; உங்களில் ஒருவன்' என்று பொருள் பட 'அஹம்வோ பாந்தவோ ஜாத:' என்று தன் மேன்மையை மறைத்துக் கூறுகிறான். இப்படி மறைப்பதில் இவ்வாழ்வார்க்கு உடன்பாடே கிடையாது போலும்! 'உண்மையை மறைக்காதே உரத்துக் கூறு' என்கிறார்:—

"வேறிசைந்த செக்கர்மேனி நீறணிந்த புன்சடை
கீறுதிங்கள் வைத்தவன் கைவைத்தவன் கபால்மிசை
ஊறு செங்குருதியால் நிறைந்த காரணந்தனை
ஏறு சென்றடர்த்த ஈச! பேசு கூசமின்றியே." (42)

"என் (எம்பெருமான்) பெருமையைக் கபால நன் மோக்கத்துக் கண்டு கொண்மின்" என்று கூச்சமின்றி கூறச் சொல்கிறார் இப்பாட்டில் ஆழ்வார். எம்பெருமானின் மேன்மையை நாட்டார் அறியவேணும் என்பதில் இவ்வாழ்வார் உறுதியுள்ளவராதலால், செயற்கரிய செயல்களைச் செய்துவிட்டு ஆயர்களிடம் கண்ணன் மறைத்தது போன்ற செயல்களில் ஆழ்வார்க்குத் திருவுள்ளமில்லை. தாம் தம் பெருமையைத் தயங்காமல் கூறவேணும் என்று விரும்புமவர். "ஸம்ஸாரிகள் அனைவரும் 'கண்ணனல்லால் தெய்வமில்லை; கண்ணன் கழல்களன்றி மற்றில்லை சரண்' என்று துணிய வேண்டும்" என்று திருவுள்ளம் பற்றிய ஆழ்வார் எம்பெருமானிடம் "பிரானே! கபால்மிசை ஊறு செங்குருதியால் நிறைத்தது முதலான உன் பெருமேன்மைகளைத் தயங்காமல் கூச்சமின்றிப் பேசு" என்கிறார்.

அநுபவம்

வாள்வீசும் பாசுரங்கள் தவிர, அநுபவத்தோடு பேசும் பாசுரங்கள் கிடையாதோ என்று நினைத்து விடவேண்டாம். 'பாலினீர்மை செம்பொனீர்மை' (44) என்ற பாசுரத்தில் எம்பெருமான் நான்கு யுகங்களிலும் நான்கு நிறத்தில் இருப்பதை நமக்கு அநுபவிக்கத் தருகிறார் ஆழ்வார். திருவரங்கம், திருக்குடந்தை, திருவேங்கடம் முதலான திவ்யதேச அநுபவங்களையும் அள்ளித் தருகிறார். "நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தை பாடகத்து, அன்று வெஃகணைக் கிடந்தது என்னிலாத முன்னெலாம்"(64) என்று நின்ற இருந்த கிடந்த திருக்கோலங்களைத் தனித் தனியே தந்துவிட்டு இப்போது மூன்று திருக்கோலங்களுமே தம் நெஞ்சில் நிறைந்திருப்பதாகக் காட்டுகிறார். திருவரங்கத்தில் வண்டினம் முரலும் சோலைகள் இருப்பதை தொண்டரடிப் பொடியாழ்வார் காட்டியது போல், இவரும் 'வண்டிரைத்த சோலைவேலி மன்னுசீரரங்கமே' (50) என்று அச்சோலைகளே திருவரங்கத்துக்கு வேலிகளாக இருப்பதாக அநுபவிக்கிறார். "சாலிவேலி, தண்வயல் தடங்கிடங்கு பூம்பொழில் கோலநீடுமாடம்" (59) என்று குடந்தையின் எழில் அநுபவிக்கத் தருகிறார்.

திருப்பல்லாண்டு

எம்பெருமானுக்குத் திருப்பல்லாண்டு பாடிப் பெருமை பெற்றார் பெரியாழ்வார். அதே போல், திருச்சந்த விருத்தத்துக்குள்ளும் ஒரு திருப்பல்லாண்டைப் பாடிய பெருமை இவ்வாழ்வார்க்கு உண்டு. திருக்குடந்தை எம்பெருமானைத் திருவடிதொழச் செல்கிறார் ஆழ்வார். ஆராவமுதன் திருமழிசைப்பிரானைக் கண் திறந்து பார்ப்பதோ, அவருடன் வாய் திறந்து பேசுவதோ செய்யாமல் ஒரே விதமாகக் கண் வளர்ந்தருள்கிறான். இதோ அவனிடம் பேசத் தொடங்குகிறார் ஆழ்வார். "மலர் மகளும் நிலமகளும் பிடித்தால் கூடக் கூசும் மெல்லடிகள் த்ரிவிக்ரமாவதாரத்தில் உலகளந்ததால் நொந்தனவோ? ராமாவதாரத்தில் காடுமேடெல்லாம்

கடந்ததால் திருவடிகள் வருந்தினவோ? பூமிப்பிராட்டி பாதாளத்தில் அழுந்தி நடுங்கியபோது மஹாவராஹமாய் அவளை இடந்தெடுத்ததால் வந்த ஆயாஸத்தாலே கண் வளர்ந்தருளுகிறதோ? மலைகளையும் காடுகளையும் கடந்து வந்தாகிலும் உன் ஸௌகுமார்யத்துக்கு அநுகூலமாக சிசிரோபசாரம் பண்ண வேணுமென்று காவிரி திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொண்டிருக்கும் நீ கிடந்தவாறு எழுந்திருந்து பேச வேணும்" என்று கேட்டு, அவனது கிடந்த திருக்கோலத்துக்கு 'வாழிகேசனே' என்று பல்லாண்டு பாடுகிறார் ஆழ்வார். இதோ அவரது பாசுரம்:-

"நடந்தகால்கள் நொந்தவோ? நடுங்கஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கவோ? விலங்குமால்வரைச் சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு வாழி கேசனே!" (61)

உபதேசம்

தீ நெறிக்கண் சென்றார் எனப்படும் சொல் நமக்கு வராமல் காப்பதற்காகப் பல பாசுரங்களில் உபதேசங்கள் செய்கிறார் நன்னெறியோர் ஏய்ந்த பக்திசாரர். எம்பெருமானின் புண்டரீகபாதத்தைக் கண்களால் பருகியும், அவனது புண்ணிய கீர்த்தியைச் செவிகளால் பருகியும் வினைத்துயரை மாய்க்கச் சொல்கிறார். திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய், திவ்யாத்ம குணங்களையுடையவனாய் விளங்கும் எம்பெருமானே வீட்டின்பம் தரவல்லவன் என்று காட்டுகிறார் 'சண்ட மண்டலத்துனூடு' (67) என்கிற பாசுரத்தில். எத்திறத்தும் உய்வதற்கு மாலைத் தவிர உபாயமில்லை என்றும், காணச் சகிக்காத உருவத்தராய், கேட்கச் சகிக்காத இகழ்ச்சியினராய், வரம் தரும் சக்தியில்லாதவராய் நிற்கும் சிறு தெய்வங்களை அடைந்து அல்லல் அடையாமல், ஆதியான எம்பெருமானை அடைவதே மேன்மை என்றும், வாணனின் தோள்களை எம்பெருமான் துணித்ததிலிருந்தும் வேதங்களின் உண்மையுரைகளிலிருந்தும் இதை உணரலாம் என்றும் ஊசியால் குத்துவது போல் குத்தி நம்மனத்தில் உண்மையைத் தைத்து விடுகிறார் ஆழ்வார். எட்டெழுத்தும் ஓதி அந்த நின்மலனின் நலங்கழலை வணங்கினால் அந்த வேங்கடத்து மாலின் பாதமே நமக்கு உபாயமாயும் உபேயமாயும் இருக்கும் என்றும் உபதேசிக்கிறார் அவர்.

வீட்டின்பம்

உபதேசம் செய்து வந்த ஆழ்வாருக்குப் பரமபக்தி தலையெடுக்கிறது. எம்பெருமானிடம் இவ்வுலக மாயையிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டுகிறார். "குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன் நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன் புலன்களைந்தும் வென்றிலேன்" (90) என்று ஐம்பொறிகளிடம் அகப்பட்டிருக்கும் தம்மிடம் கைம்முதல் ஒன்றுமில்லை என்று கதறுகிறார். 'நின் இலங்கு பாதமன்றி மற்றொர் பற்றிலேன்' 'நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டும்,' 'செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே' 'மீள்விலாத போகம் நல்க வேண்டும் மாலபாதமே' என்றெல்லாம் ஓலமிட்டழைத்து அவனை அடைய அவனே உபாயமாக வரவேண்டும் என்று 'கோலமேனி காண வாராய்' என்று துடிக்கிறார்.

வாழி நெஞ்சமே

தேஹாவஸாநத்திலே மோக்ஷம் கிட்டுமாகையால், மூப்பெய்தி மாளும் நாள் குறுகும்வரை மாலின் பாதங்களையே வணங்கி வாழ்த்தி வருமாறு நெஞ்சுக்கு உபதேசம் செய்யும் ஆழ்வார், முகுந்தனார் தம்முள் புகுந்து விட்டபடியால் நெஞ்சுக்கு இனி இடர்க் கடலிலிருந்து விடுதலை என்று கூறும் முன், நலங்கொள் மாலை நண்ணும் வண்ணம் எண்ணி வாழ்ச்சி பெறு என்று நெஞ்சை வாழ்த்தவும் செய்கிறார். இறுதியாக, ஆழ்வாரை வானிலேற்ற வேதகீதன் சிந்தை கொள்ள, அவனது பாத போதினை ஆழ்வார் தம் உள்ளத்தில் பூண்டு, பொன்னிசூழ் அரங்கனிடம் ஆதரம் பெருகி நிற்க, இயக்கறாத பல்பிறப்புகளினின்றும் மாற்றி அவரை மேகவண்ணனன் இன்ப வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான்.

திருமாலை

வானமாமலை வித்வான் திருமலை அனந்தாண்பிள்ளை ஸ்ரீ உ.வே. என்.எஸ். கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி

எம்பெருமானுடைய விசேஷமான அருளால் அவன் மீது அன்பு பூண்டு, இன்தமிழால் பாடல்கள் பாடியவர்கள் ஆழ்வார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் எம்பெருமானுடைய ஓரோர் நிலைகளில் ஈடுபாடு கொண்டவர்கள். மன்னியசீர் மார்கழிக் கேட்டை நாளில் அவதரித்தவர் விப்ரநாராயணர் என்கிற தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

திருமண்டங்குடியில் பூர்வசிகை அந்தணர் குலத்தில் அவதரித்து உரிய காலத்தில் சௌள உபயநயநாதி கர்மங்கள் செய்யப் பெற்று, உரிய காலத்தில் எல்லா சாஸ்திரங்களையும் கற்றுத் தெளிந்து பரம வைராக்ய சாலியாகத் திகழ்ந்தார். அன்று முதல் திருமந்திரத்திற்கு உள்ளீடு பொருளான எம்பெருமானுடைய சீர்க்கடலில் ஆழ்ந்த சிந்தனையுடையவராய் அதனால் இவ்வுலகியல் வாழ்வினை வெறுத்து ப்ரஹ்மசர்ய ஆசிரமத்திலே நின்று பெரிய கோயிலை (ஸ்ரீரங்கத்தை) அடைந்தார்; அங்கு உபய காவேரி மத்தியில் "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி", பள்ளிக் கொண்டுள்ள பெருமாளை சேவித்தவராய், அந்தப் பெருமாள் தம்முடைய வடிவழகினால் இவரைத் தம் பக்கல் மிகுந்த பக்தியுடையவராய் செய்தருளினார்.

நித்யஸூரிகளைப் போலே இவ்வுலகத்தவரும் எம்பெருமானை அனுபவித்து பேரின்பம் எய்தலாம்படி இருந்தும் அதில் விருப்பமின்றி இவ்வுலகத்திலேயே மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து படும் துன்பங்களைக் கண்ணுற்ற திருமகள் கேள்வனான எம்பெருமான் இவர்களை உய்விக்கும் பொருட்டுத் தான் பல சாஸ்திரங்களைப் வெளியிட்டான். அவைகளில் இவர்கள் கடைத் தேறுவதற்கான உபாயங்களையும் காட்டியருளினான். அவையெல்லாம் செய்வதற்கு அரியனவாதலால் எம்பெருமானுடைய திருநாம ஸங்கீர்த்தனமே சிறந்த உபாயம் என்று அறுதியிட்டமையால் அப்படிப்பட்ட நாம ஸங்கீர்த்தனத்தாலே ஆழ்வார் அத்திருநாமத்தின் வைபவத்தைப் பேசுகிறார் – இத்திருமாலையில். இதற்குப் பிரமாணம்:

பாண்டவர்களுக்கு நாலைந்து தலைமுறைக்குப் பின் "சதாநீகன்" என்ற அரசன் இருந்தான். அவன் நற்குடியில் பிறந்தவனாகையாலே நல்லவனாய் அறநெறி தவறாது அரசாண்டு வருகையில் ஒரு கால் ஸ்ரீசௌனக பகவானிடம் சென்று, "உடலுக்கே கரைந்து நைந்து திரிகிற ஸம்ஸாரிகளுக்கு உய்வதற்கு ஒரு உபாயத்தை அருளிச் செய்ய வேணும்" என்று வேண்ட, ஸ்ரீசௌனகபகவான், "தல முழுதும் கலியே ஆட்சி செய்கின்ற காலத்தில் தீவினை மிகுதியாலே வேறு உபாயங்கள் செய்ய வழியில்லாமல் ஸர்வாதிகாரமான பகவந்நாம ஸங்கீர்த்தனம் ஆத்மாக்களுக்கு உய்யும் வழியாயிருப்பது" என்று கூறியதாக "ஸ்ரீவிஷ்ணு தர்மம்" என்ற நூலில் அருளிச் செய்யப்பட்டுள்ளது. இதுவே திருமாலைக்கு" அடிப்படை என்பது பூர்வாசார்யர்களின் கருத்தாகும்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்தப் பிரபந்தங்கள் " திருமாலை" திருப்பள்ளியெழுச்சி" என இரண்டாகும். முதலாவது "திருமாலை" ஆகும். "திருமாலை அறியான் திருமாலை அறியான்" என்ற முதுமொழியே இதன் பெருமையைக் கூறும். இப்பிரபந்தம் முதலாயிரத்துள் உள்ளது.

ஒரு பொருள் குறித்துப் பல பாடல்களைக் கொண்டது மாலை எனப்படும். தமிழில் உள்ள சிறு பிரபந்தங்களில் ஒன்று. திரு+மாலை = திருமாலை. திருவை மயக்குகிறவனும், திருவிடம் மயங்குகிறவனும் ஆகிய எம்பெருமான் என்று பொருள்படும். அவனுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளைக் கூறுவதாகும். "திரு" என்ற சொல் அடைமொழி ஆகும். "முதனூல் கருத்தல் அளவு மிகுதி, பொருளை செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியாலும் நூற்கும் எய்தும் பெயரே" (நன்னூல் இலக்கணம் பொதுப்பாயிரம்) என்று கூறப்பட்டுள்ளதால் நுதலிய பொருளினாலும், தன்மையினாலும் இந்நூல் இப்பேர் பெற்றது.

ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் மேன்மைக்கு எல்லை நிலமான பரத்வத்திலும், நீர்மைக்கு எல்லை நிலமான திருவேங்கடமலையிலும் ஈடுபட்டனர். நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் க்ருஷ்ணாவதாரத்தில் ஊன்றினர். திருமழிசைப்பிரான் அந்தர்யாமித்வத்தில் ஊன்றினார். குலசேகரப் பெருமாள் இராமாவதாரத்தில் ஆழ்ந்தார். திருப்பாணாழ்வார் திருவேங்கடமலையிலும், திருவரங்கத்திலும் ஈடுபட்டார் திருமங்கையாழ்வார் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் (எல்லா திவ்யதேசங்களிலும்) ஆழ்ந்தார். இவ்வாழ்வார் பெரிய பெருமாளை அன்றி வேறொருவரை அறியாதவர். அரங்கனைப் பாடிய வாயால் வேறொருவரைப் பாட மாட்டேன் என உறுதி பூண்டிருந்தார். இதனால்தான் அரங்கன் "பதின்மர் பாடும் பெருமாள்" என்ற பெயரும் பெற்றார். இனிப் பாசுரங்களை அநுபவிப்போம்.

"காவலில் புலனை வைத்துக் கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட்டு உழிதருகின்றோம் நமன்தமர் தலைகள் மீதே
மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ! நின் நாமம் கற்ற
ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே!

ப்ரணவம் போலே சுருக்கமாக இல்லாமலும், மஹாபாரதம் போலே மிகவும் விஸ்தரமாய் அறிய வேண்டியதை அறியமுடியாமலும் இல்லாமல் நாற்பத்தைந்து பாசுரமாய், மிக்க சுருக்கமும் மிகுந்த விரிவும் ஆகிய இரு குறைகளும் இல்லாமல் அமைந்துள்ளது. முமுக்ஷுக்கள் அறிய வேண்டிய எல்லா அர்த்தங்களையும் உள்ளடக்கி இத்திருமாலையை அருளிச் செய்துள்ளார்.

இவ்வாழ்வார் முன்பு நீதியல்லாதன செய்து ஸபை நடுவே சென்று நிற்க தகுதியற்றவராய் இருந்தார். திருநாம ஸங்கீர்த்தனத்தால் ஆழ்வார்க்கு பெரியோருடன் சேர்ந்த பெருமை உண்டாயிற்று. ஸபை நடுவே நிற்கக் கூசி நின்றவர், பெரியோருடைய ஸம்பந்தத்தால் உண்டான பெருமையால் பெரும் ஸபையில் யாரையும் மதியாமல் செல்லலாம்படியான தன்மையும், அவர்கள் இவனைத் தலையாலே கொண்டாடிடுவர். அப்படியே நெடுங்காலமாக யமன் முதலானோர்க்கு அஞ்சிக் கிடந்து புகலிடமில்லாமல் தடுமாறிய இவ்வாழ்வார் திருநாம ஸங்கீர்த்தனத்தை அண்டை கொண்ட பலத்தாலே யமன் முதலானோர் தலையில் தன் கால்களை வைக்கும்படியான வல்லமை படைத்தவரானார்.

பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா! அமரர்ஏறே! ஆயர் தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

முதல் பாசுரத்தாலே திருநாமத்தின் தூய்மையையும், அதைச் சொல்லுவதால் தமக்கு ஏற்பட்ட ராஜகுலப் பெருமையையும் கூறினார். இப்பாட்டில் திருநாமத்தின் இனிமையைப் பேசுகிறார். அதாவது, இந்நிலவுலகிலிருந்து திருநாமத்தை அநுபவிக்கும் இனிமைக்கு பரமபத அநுபவமாகிய பேரானந்தமும் ஒப்பாகாது. தாழ்ந்தவர்களுக்கு முகம் கொடுக்கும் நீர்மையை அநுபவிப்பதற்கு அங்குள்ளாரும் (நித்ய ஸூரிகளும்) இங்கே வர, என்னை அங்கு நித்ய விபூதிக்குப் போகும்படி செய்வது ஏன்? என்று கேட்கிறார்.

"நாட்டினான் தெய்வம் எங்கும் நல்லதோர் அருள் தன்னால்
காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பிமீர்காள்! கெருடவாகனனும் நிற்கச்
சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே"

"தண் துழாய் மாலை மார்பன்" என்கிறபடி பரமபதத்தில் உள்ளவனை சென்று அடைய முடியாது. "சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவன் ஆவான்" என்கிறபடி இராமாவதாரத்தைக் கூறினார். அதனிலும் எளியதான "கற்றினம் மேய்த்த எந்தை" என க்ருஷ்ணாவதாரத்தையும் கூறினார். இரண்டு அவதாரத்திலும் பிற்பட்ட எங்களுக்கு அடைய முடியாததன்றோ! என்று ஸம்ஸாரிகள் கேட்க, அவைகள் போல் அல்லாமல் எல்லாரும் வந்து கிட்டும்படி திருவரங்கத்திலே பெரிய பெருமாளாக சேவை சாதிக்கிறார்.

இங்கே வந்து இவரைப் பற்றுங்கோள். இவரை விட்டு மோட்சத்தை விரும்பி வேறொரு தெய்வத்தைப் பற்றுவது. செல்வம் வேண்டும் என்று மூதேவியைப் பற்றுவது போலாகும். அது நடக்குமா? நடக்காது. திருவரங்கம் திருப்பதியில் எம்பெருமான் சயனித்திருப்பது "தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே, யாவரும் வந்தடி வணங்க அரங்க நகர்த்துயின்றவனே" (பெருமாள் திருமொழி 8–10) என்ற பாசுரத்தையும்," கைந்நாகத்திடர் கடிந்த கனலாழிப் படையுடையான் கருதும் கோயில்; தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்" (பெரியாழ்வார்–திரு–4–9–11) என்ற பாசுரங்களும் இவ்விடத்தில் ஒப்பு நோக்கத் தக்கன.

எம்பெருமானே! திருநாமத்தைச் சொல்லச் சொன்னீர். அதற்குரியச் சக்தி படைத்தவர் அல்லோம். கண்ட விஷயங்களைப் பேச முடிகிறதேயொழிய திருநாமம் சொல்ல முடிகிறதில்லை என்று கூற, ஆனால் கேள்வியினால் உங்களை உய்விக்கும் முத்கலோபாக்யானத்தைக் கூறி தெளிவிக்க, அப்படிப்பட்ட திருநாமப் பொருளானவன், மஹிமையையுடையவனல்லவா எழுந்தருளியிருக்கும் திவ்யதேசம் பெரிய கோயில் எனப்படும் திருவரங்கமாகும். அவனை சேவித்து உய்வித்துக் கொள்ள வேண்டியிருக்க நரகாநுபவத்துக்கு ஆளாகிறார்களே! என்று ஆழ்வார் வருந்துகிறார்.

நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி
அவனது ஊர் அரங்கமென்னாது அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர்
கவலையுள் படுகின்றார் என்றதனுக்கே கவல்கின்றேனே.

என்று ஆழ்வார் மக்களைக் கருதி வருந்துகிறார். அப்போது ஆழ்வார் முற்கலன் என்பவனுடைய கதையைச் சொல்கிறார். அது வருமாறு.

முன்னொரு காலத்தில் "முத்கலன்" என்பான் ஒருவன் பாவமே செய்து பாவியாயிருந்தான். ஒரு சமயம் அவன் தான் செய்த பாவத்துக்கு பரிஹாரமாக, எள்ளினால் செய்த பசுவை தானம் செய்த போது "கிருஷ்ணார்ப்பணம்" என்று கூறி தானம் செய்தான். பின்பு அவன் இறந்தபோது யமதூதர்கள் அவனைப் பாசக் கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்று யமன் முன் கொண்டு சென்று நிறுத்தினர். அங்கு யமன் அவரை எதிர் கொண்டழைத்து உபசரித்தான். அப்போது யமனிடம், "உனது தூதர்கள் கயிற்றினால் கட்டி இழுத்து வந்தனர். நீயோ என்னை எதிர் கொண்டழைத்து உபசரித்தாய். இதற்குக் காரணம் என்ன?" என்று முத்கலன் கேட்டான். அதற்கு யமன், "உன் பெருமை யமபடர்களுக்கும் தெரியாது; உனக்கும் தெரியாது. ஒரு சமயம் நீ தானம் செய்த போது "க்ருஷ்ணார்ப்பணம்" என்று பகவானின் பெயரைச் சொல்லிக் கொடுத்தாய். அதனால் உன்னை உபசரிக்கின்றேன்" என்று திருநாம ப்ரபாவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான். இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருப்பதை நரகாநுபவம் பண்ணிக் கொண்டிருந்தவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். திருநாம மகிமையைக் கேட்ட நரகத்தில் துன்பப்படுகின்றவர்கள் காதால் கேட்டார்கள். கேட்ட மாத்திரத்தில் அவர்கள் நரகாநுபவம் நீங்கி இன்பத்தை அநுபவித்தனர். இந்தக் கதை ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில் கூறப்பட்டுள்ளது. அதை ஆழ்வார் எடுத்துக் காட்டுகிறார்.

திருமாலையில் முப்பத்து எட்டாம் பாசுரம் மிக முக்கியமானதாகக் கருதுவர். வேதத்தின் ஸாரம் மகாபாரதம் போலவும் மஹாபாரதத்தின் ஸாரம் ஸ்ரீ பகவத் கீதை போலவும், கீதையின் ஸாரம் சரமச்லோகம் போலவும் திருமாலையின் ஸாரமாக முப்பத்தெட்டாம் பாசுரம் அமைந்துள்ளதாக ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் அருளிச்செய்துள்ளனர். தமக்கு அருள்புரிய வேண்டும் என்ற ஆழ்வார், அது பெறாமையினால் கதறினார். முப்பத்தாறு முப்பத்தேழாம் பாசுரங்களில் பெரிய பெருமாள் ஆழ்வாரைக் குளிரக் கடாக்ஷித்தார். உடனே ஆழ்வார், "உம்மையே பேறாகவும், ஆறாகவும் (உபாயமாகவும்) கொண்டு உம்மை அடையத் துடிக்கும் ப்ரபந்நரிடம் உமக்கு இத்தனை ப்ரீதி உண்டோ?" என்கிறார்.

"மேம் பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக உணர்ந்து
ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கி

காம்பறத்தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்து வாழும்
சோம்பரை உகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே''

என்று பெரிய பெருமாள் திருமுகத்தைப் பார்த்து விண்ணப்பிக்கிறார் இப்பாசுரத்தில். "என்னையே உபாயமாகக் கொள் என்று ப்ரபத்தியை விதிக்கிறான் என்ற கருத்தும் இந்த ஸித்தோபாயத்தில் உறுதி உடையார் திறத்திலிருப்பவர்களுடைய அநுஸந்தானமாயிருப்பது த்வயம். இந்த த்வயத்திலும் அதன் பொருளிலும் ஊன்றி நிற்கும் ப்ரபந்நர்களிடம் எம்பெருமானுக்குள்ள உகப்பைக் கூறுகிறது இப்பாட்டு.

காவிரி சூழ்ந்த திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானே! மேன்மையை விளைவிப்பதற்காக மயங்கச் செய்யும் இவ்வுலக விஷயங்களை வாஸனையுடன் விட்டு உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தை உணர்ந்து, ஆத்ம ஸ்வரூபத்துக்குத் தகுதியான பகவத் கைங்கர்யத்தை தன் ஆநந்தத்துக்கு என்று கருதாமல், ஐந்து புலன்களையும் அடக்கி, வேறு உபாயங்களில் பற்று ஏற்படாதவாறு தலையிலுள்ள சுமைகளைப் போக்கி, உன் திருவாசலில் காவல் புரிந்து வாழ்கின்ற தங்கள் நலத்தில் சோம்பி யிருப்பவர்களான அடியார்களை உகக்குமவன் அல்லையோ நீ? என்பது இப்பாசுரத்தின் கருத்தாகும்.

முந்தைய பாசுரத்தில் "அளியல், நம்பையல் என்னார் அம்மாவோ கொடியவாறே" என்று மிக வருந்திக் கூறியவுடன், மற்ற விஷயங்களில் ஆசையை உண்டாக்கும் ஸம்ஸாரத்திலே கைங்கர்யத்தை வேண்டுவதும் அது கிடைப்பதற்குத் தன் முயற்சியில் ஈடுபடாமல் எம்பெருமான் கைபார்த்திருப்பதும், புருஷார்த்தம் பெற காலதாமத்தைப் பொறுக்காமல் வருந்துவதுமாகிற இவ்வளவு தன்மைகள் நிறைந்திருக்கும். மஹாத்மாவான இவ்வாழ்வாரைக் கிடைக்கப் பெற்றோமே என்று பெரிய பெருமாள் திருவுள்ளம் உகந்து, தன் உள்ளத்தில் உள்ள மகிழ்ச்சியெல்லாம் தனது திருமுகமண்டலத்திலே தோன்றும்படி ஆழ்வாருக்குக் காட்டிக் கொடுக்க "எம்பிரானே! தங்களைத் தாங்களே ரக்ஷித்துக் கொள்ளும் பொறுப்பை தேவரீரிடம் ஒப்படைத்து, நாங்களே ரக்ஷித்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து கை வாங்கிக் கொண்டோம். இப்படிப்பட்ட எங்களைக் கண்டால் இப்படியோ தேவரீர் திருவுள்ளம் உகந்திருப்பது!" என்று பெரியப் பெருமாள் முன்பு விண்ணப்பம் செய்கிறார். த்வயமந்த்ரத்திலும், உள்ளீடு பொருளாகிய எம்பெருமானிடத்திலும் ஊன்றி இருப்பவர்களிடம் எம்பெருமானுக்குள்ள பேரானந்தத்தை சொல்லுகிறது இப்பாசுரம். முப்பத்து ஒன்பதாம் பாட்டில் முற்பாட்டில் கூறிய ஞானமுடையார்க்கு பிறப்பில் தாழ்வால் குறையில்லை என்கிறார்.

நாற்பதாம் பாட்டில் அவர்கள் முற்பிறவியில் செய்த வினையின் பயனை அனுபவிக்கமாட்டார்கள் என்பது கூறப்பட்டது. நாற்பத்தோராம் பாட்டில் அவர்கள் தம்மோடு ஸம்பந்தப்பட்டவர்களையும் பரிசுத்தப்படுத்துவர் என்றார். நாற்பத்திரண்டாம் பாட்டில் எம்பெருமானைப் போலே அவர்கள் வணங்கத் தக்கவர்கள் என்றார்.

நாற்பத்துமூன்றாம் பாசுரத்தில் உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்கள், அவர்களுடைய பிறப்பு, ஒழுக்கம் முதலானவற்றைப் பார்த்துக் குறைவாக எண்ணுபவர் எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும் சண்டாளர் ஆகிவிடுவர் என்கிறார். நாற்பத்து நான்காம் பாசுரத்தில் பிரமன் முதலானோரால் பெறுதற்கு அரிய பேற்றை கஜேந்திரனாகிய ஒரு விலங்குக்கு அளித்தாய் என்று கூறித் தாமும் அத்தகைய பேறு பெற்றதைக் கூறினார். நாற்பத்தைந்தாம் பாட்டில் இப்பிரபந்தம் கற்றார்க்கு கிடைக்கும் பலனை அருளிச் செய்து நூலைத் தலைக் கட்டினார்.

திருப்பள்ளியெழுச்சி

ஸ்ரீ உ.வே. பரதன் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சியாகிற திவ்யபிரபந்தம் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் நித்யாநுஸந்தேயமாய் உள்ளது. இதற்கு "தஞ்சீரை ஞானியர்கள் தாம் புகழும்" வேதாந்தியான நஞ்சீயரும் 'வ்யாக்யான சக்ரவர்த்தி' என்று புகழ்பெற்ற பெரியவாச்சான்பிள்ளையும் வ்யாக்யானமிட்டருளியுள்ளார்கள். அவ்வியாக்யானங்களைத் தழுவியும் பெரியோர் பணித்த அர்த்த விசேஷங்களைக் கொண்டும் இக்கட்டுரை வரையப்படுகிறது.

பகவத் ப்ராவண்யத்தில் வைலக்ஷண்யம்

ஆழ்வார்கள் அனைவரும் பகவத் பக்தியாகிற ஒரே நதியில் ஆழ்ந்தவர்களாயினும் அவர்கள் இழிந்த துறைகள் வெவ்வேறு. "மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடையாப்புண்டு எத்திறம்! உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே" என்று கண்ணபிரானது நவநீத சௌர்ய வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தபோதும் 'பிறந்தவாறும்' என்று அகர்மவச்யனான அவன் கர்மவச்யரைப் போலே பிறந்தபடியை அநுஸந்தித்தபோதும் ஆறாறு மாதங்கள் மோஹித்துக் கிடந்தார் நம்மாழ்வார். ஆதலால் "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றிருந்த அம்மஹாத்மா 'க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம்' என்று கொண்டாடப்படுகிறார்.

"எம்பெருமான் தன்சரிதை செவியால் கண்ணால் பருகுவோம் இன்னமுதம் மதியோமன்றே" என்று இராமபிரானை அனுபவிப்பதிலேயே ஈடுபட்டு மற்றொன்றையும் மதியாத குலசேகரப்பெருமாள் 'ராமத்ருஷ்ணா தத்வம்' ஆகிறார்.

"உலகமேத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை" என்று "சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே மதிள்கச்சி ஊரகமே பேரகமே பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ஆராமம் சூழ்ந்த அரங்கம்" என்றும் திவ்யதேசங்களில் உறையும் அர்ச்சாவதார எம்பெருமான்களிடத்திலேயே மண்டியிருந்த திருமங்கையாழ்வார் 'அர்ச்சா த்ருஷ்ணா தத்வ'மாகத் திகழ்கிறார்.

"அரங்கத் தன்னுள் எங்கள் மால் இறைவன் ஈசன் கிடந்ததோர் கிடக்கைக் கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன்" என்றும் "கடல் நிறக் கடவுளெந்தை அரவணைத் துயிலுமாகண்டு உடலெனக்கு உருகுமாலோ" என்றும் அரங்கனிடத்தில் உள்ள தம்பெருங்காதலை வெளிப்படுத்திய தொண்டரடிப்பொடியாழ்வார் 'ரங்கத்ருஷ்ணா தத்துவ' மாய்ப் பொலிகிறார்.

தொண்டிரடிப்பொடியாழ்வாரின் ஏற்றம்

மற்றைய ஆழ்வார்கள் போலன்றி "இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று பரமபதநாதனையும் நாடாதவர் தொண்டரடிப்பொடியாழ்வார். இப்புடையில் "அணியரங்கன் என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றுருகி அரங்கனுடன் கலந்த திருப்பாணாழ்வாரை இவ்வாழ்வாருக்கு ஒப்பாகச் சொல்லலாமெனினும், "மந்திபாய் வடவேங்கடமாமலை" என்று திருவேங்கடத்தையும் "விரையார் பொழில் வேங்கடவன்" என்று அங்கு கோயில் கொண்டிருக்கும் அப்பனையும் சேர்த்தே மங்களாசாஸநம் செய்த அவரைப்போலன்றிக்கே திருவரங்கமல்லாத திவ்யதேசம் எதனையும் பாடாத இவர் ஆழ்வார்கள் கோஷ்டியில் தனித்த பெருமையுடையராகிறார்.

அரங்கன்பால் அன்பு விளைந்த க்ரமம்

அஜ்ஞாநமாகிற உறக்கத்தின் பாற்பட்டிருந்த இவ்வாழ்வாரைத் திருவரங்கநாதன் அவ்வுறக்கத்தினின்றும் எழுப்பி நிர்ஹேதுக க்ருபையால் தன்பால் மதிநலம் அருளினன். அம்மதிநலத்தின்

பயனாய் அவ்வெம்பெருமானுக்குத் துளவதொண்டாற்றி வந்த ஆழ்வார் அநாதிவாஸநையினால் சிறிதுகாலம் மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்தினார். அச்சமயம் அரங்கமாநகருளான் தானே தன்பேரழகைக் காட்டி இவரது விஷயாந்தர ப்ராவண்யத்தை நீக்கித் தன்பால் ஆதரம் பெருக வைத்தான்.

திருப்பள்ளியெழுச்சியின் தோற்றமும் நோக்கமும்

இப்படி மேன்மேலென எழுந்த காதல் உள்ளடங்காது அனுபவ பரீவாஹமாக திருமாலையென்னும் திவ்ய ப்ரபந்தமாய் உருவெடுத்தது. அத்தைத் திருச்செவி சாற்றிய அரங்கநகரப்பன் பரகத ஸ்வீகார நிஷ்டராய் பரார்த்த கைங்கர்யபரராய் இவ்வாழ்வாரைப் பெற்றோமே என்று இவர் விஷயத்தில் க்ருதக்ருத்யராய் மற்றவர்களையும் இவரைப் போலே நம்பக்கலிலே ப்ரவணராக்கும் விரகேது என்னுமத்தையே சிந்திப்பவனாய் பள்ளிகொண்டருளினான். சுத்தஸத்த்வ மயனான எம்பெருமான் திருப்பள்ளி கொள்ளுதல் என்பது பொருந்துமோ என்று சங்கிக்க வேண்டா. அஃது நம்போல்வாரது உறக்கம் போல் தமோகுணத்தின் மிகுதியால் அன்று; ஜகத் ரக்ஷணசிந்தையினாலேயாம் "ஆத்மமாயாமயீம் திவ்யாம் யோகநித்ராம் ஸமாச்ரித: ஆத்மாநாம் வாஸுதேவாக்யம் சிந்தயந் மதுஸூதந:" என்ற ஸ்ரீவிஷ்ணுபுராணவசநமும் "பைய உயோகு துயில் கொண்ட பரம்பரனே" "உறங்குவான் போல் யோகுசெய்த பெருமான்" என்கிற அருளிச்செயல் சந்தைகளும் இவ்விடத்தே குறிக்கொள்ளத் தக்கவை.

ஆண்டாள் "உம்பர் கோமானே உறங்காதெழுந்திராய்" என்று கண்ணபிரானைத் திருப்பள்ளியுணர்த்தி "உனக்கே நாமாட்செய்வோம்" என்று தத்கைங்கர்யத்தையே ப்ரார்த்தித்துப் பெற்றாள். அதுபோல், இவ்வாழ்வாரும் "எம்பிராற்கு ஆட்செய்யாதே என்செய்வான் தோன்றினேனே" என்றிருக்குமவராகையாலே கைங்கர்யத்வரையால் "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்று தம்மை முன்னம் உணர்த்தியருளிய பெரியபெருமாளை, இப்பொழுது தாம் திருப்பள்ளியுணர்த்துகிறார்.

ராஜவதர்ஹணீயர்

பகவச்சாஸ்த்ரமான ஸ்ரீபாஞ்சராத்ரம் அர்ச்சாவதார எம்பெருமானை ஓர் அரசன் போல் உபசரிக்கவேண்டும் என்று கூறுகிறது. ஆகையால் அரசர்களை வந்திகள் விடியற்காலையில் மங்கள வாசகங்களால் போற்றித் துயிலெழுப்பி உகப்பிக்குமாபோலே அரசர்களுக்கெல்லாம் மேலான அரசரான சக்ரவர்த்தி திருமகனாராலும் தொழப்பட்டவராய் அரவணைப் பள்ளியில் திருக்கண்வளர்ந்தருளும் ஸ்ரீரங்கராஜரான பெரியபெருமாளைச் செவிக்கினிய திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங்களாலே துயிலுணர்த்தி உகப்பிக்க விழைகிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

ஆழ்வார் இப்பாசுரங்கள் வாயிலாக பெரியபெருமாளுக்குப் பொழுது புலர்வதை அறிவித்து அவரது திருக்கண்ணோக்கிற்கு இலக்காகக் காத்திருக்கும் அடியார்களின் ஈட்டத்தைத் தெரிவித்து, தொண்டர்களான தங்கள் அனைவரையும் தமது கைங்கர்யத்தில் ஏவிக்கொள்ளவேணும் என்று வேண்டிக்கொள்கிறார்.

திருப்பள்ளியுணர்த்தும் தொழுகுலம்

வேதபுருஷன், தைத்திரிய நாராயணவல்லியில் எம்பெருமானை நோக்கி "உத்திஷ்ட புருஷ ஹரீ லோஹிதபிங்கலாக்ஷி!" (பரமபுருஷனான ஹரியே! செந்தாமரைக் கண்ணனே! பள்ளியெழுந்தருளாயே) என்று ஓதியருளினபடியால் திருப்பள்ளியுணர்த்துதல் ப்ரமாணஸித்தம் என்றதாயிற்று.

மேலும் விபவாவதாரங்களுள் சக்ரவர்த்தி திருமகனை விச்வாமித்ரமஹர்ஷி "கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே! உத்திஷ்ட நரசார்தூல!" என்று கூறித் திருப்பள்ளியுணர்த்தியதை ஸ்ரீராமாயணத்தில் காணலாம். பெரியாழ்வார் யசோதையின் பாவனையில் "அரவணையாய்! ஆயரேறே! அம்மம் உண்ணத் துயிலெழாயே" என்று பொங்கும் பரிவுடன் கண்ணனைத் துயிலெழுப்பினார். திருக்குறுங்குடியில் கோயில் கொண்டுள்ள நம்பியைச் சிற்றஞ்சிறு காலையில் பாடிப்பரவித் துயிலுணர்த்துவதை விரதமாகக் கொண்டிருந்தான் நம்பாடுவானாகிற பரமபாகவதோத்தமன் என

கைசிகமாஹாத்ம்யம் பகர்கிறது. இங்கு அர்ச்சாவதாரங்களுக்கெல்லாம் வேர்ப்பற்றான பெரியபெருமாளைத் திருப்பள்ளியுணர்த்துகிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் தமது ஆசார்யஹ்ருதயத்தில் "ம்லேச்சனும் பக்தனானால்" என்று தொடங்கும் சூர்ணிகையில் "விச்வாமித்ர விஷ்ணுசித்த துலஸீ ப்ருத்யரோடே உள் கலந்து தொழுகுலமானவன்" என்று திருப்பள்ளியெழுச்சி பாடிய இந்நால்வரையும் "தொழுகுலம்" என்று கொண்டாடுவது நோக்கத் தக்கது.

பொழுது புலர்வதற்காக அடையாளங்கள்

ஆழ்வார் முதலில் சில பாசுரங்களாலே பொழுது புலர்வதற்கான அடையாளங்களைக் கூறிப் பெரியபெருமாளைத் திருப்பள்ளியுணர்த்துகிறார்.

கதிரவன் கிழக்குத் திக்கின் மலை முகட்டைத் தொட இரவில் அடர்ந்திருந்த இருள் விலகுகிறது. அதனால் பகவதாராதனத்துக்குரிய அழகிய மலர்களெல்லாம் மலர்ந்து தேனைப் பெருக்குகின்றன. "பீஷோதேதி ஸூர்ய:" என்கிற வேதவாக்கின்படி தேவரீரிடத்தில் உள்ள பயத்தினால் வெய்யகதிரோன் விளக்காக உதிக்கையில் வெளியிருளே நீங்குகிறது. ராமதிவாகரனாகவும் அச்யுதபாநுவாகவும் இருக்கிற தேவரீர், இப்பொழுது திருப்பள்ளியுணர்ந்து உணர்வெனும் ஒளிகொள்விளக்கை எமக்குள் ஏற்றி அகவிருளைப் போக்கவேணும். இதனால் அடியோங்களது இதயத்தாமரை மலர்ந்து பக்தியெனும் தேன் பெருகவேணும். (1)

கிழக்குக் காற்றானது, இதோ செழுமையான முல்லைக் கொடிகளின் அழகிய மலர்களை அளைந்து நறுமணத்துடன் வீசுகிறது. மலர்ப்படுக்கையில் பள்ளிகொண்டிருந்த அன்னங்கள் விழித்துக் கொண்டு பனிச் செரிவாலே நனைந்த தம் அழகிய சிறகுகளை உதறியவாறே எழுந்தன. அன்னமாய் அன்று அங்கு அருமறை பயந்த அரங்கமாநகரமர்ந்தானே! தேவரீரும் திருப்பள்ளியுணர்ந்து அடியோங்களைக் குளிர நோக்கவேணும். (2)

எல்லாத் திசைகளிலும் ஸூர்யகிரணங்கள் பரவிவிட்டன. அதனால் நக்ஷத்திரங்களும் அவைகளுக்குத் தலைமைபெற்ற சந்திரனும் ஒளி மழுங்கின. சோலைகளில் உள்ள கமுகுகளின் பாளைகள் விரிய அவற்றின் நறுமணத்தை முகந்து கொண்டு காலைத் தென்றல் இனிதாய் வீசுகிறது. "பயிலும் சுடரொளி" என்று போற்றப்படும் தேவரீருடைய திருமேனியின் ஒளி எங்கும் பரவும்படி இப்பொழுது உணர்ந்தருளவேணும் (3)

இளமைச் செழுமையுடன் ஓங்கியிருக்கும் எருமைகளை பெரு மேய்ச்சலுக்குக் கட்டவிழ்த்து பின்பு கார்யபரம் ஏதுமின்றிக்கே இருக்கும் ஆயர்கள் ஊதுகின்ற குழலோசையும், எருதுகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணிகளின் ஓசையும் மலர்களிலிருந்து பெருகும் தேனைப் பருகிய களிப்புடன் வண்டுகள் செய்யும் ரீங்காரமும் கலந்து எல்லாத் திசைகளிலும் பரவிற்று. ஜ்ஞாநமற்றவர்களுக்கு உதாஹரணமாகச் சொல்லப்பட்ட பிராணிகளும் அவற்றின் பின்னே செல்பவராய் அறிவொன்றுமில்லாத ஆயர்களும் இங்ஙனே உணர்ந்து ஸஞ்சரியாநிற்க ஸர்வஜ்ஞரான தேவரீர் உணர்ந்தருள வேண்டாவோ? (4)

பூஞ்சோலைகளில் உள்ள பறவையினங்கள் எல்லாம் ஆரவாரம் செய்யாநின்றன. இஃது பெரியபெருமாள் விடிந்தபின்பும் நமக்கு முகங்கொடுக்காமல் பள்ளி கொள்வதே என்று கூப்பிடுவது போன்றுள்ளது. அனைவரையும் உறக்கத்தில் ஆழ்த்தும் தமோகுணமாகிற இருளுக்கு இருப்பிடமான இரவு முற்றிலும் நீங்கி ஸத்த்வ குணம் தலையெடுக்கும் பகற்பொழுதும் வந்து விட்டது. இச்சமயத்தில் தேவரீர் திருப்பள்ளியெழுந்தருளி ஸத்த்வகார்யமான கைங்கர்யத்தில் அடியோங்களை ஏவிக்கொள்ளவேணும். (5)

இவ்வாறு பொழுது விடிந்தமைக்கான அடையாளங்களைக் கூறுவதன் மூலமாக ஆழ்வார் எம்பெருமான் அடியார்களைக் குளிர நோக்கி ஆட்கொள்ளவேணும் எனத் தெரிவித்தருள்கிறார்.

காத்திருக்கும் அடியார்கள்

வைகறைப் பொழுதில் பெரியபெருமாளுடைய திருக்கண்ணோக்குக்கு இலக்காவதன் பொருட்டும் அவருக்குக் கைங்கர்யங்கள் செய்யவும் அவர் திருமுன்னே வேட்கையுடன் காத்திருக்கும் அடியவர் திரளைப்

பற்றியும் பெரியபெருமாளுக்கு எடுத்துரைக்கிறார் ஆழ்வார். இவ்வாறு "ஈச்வரோஹம்" என்று செருக்குற்றிருந்த தேவர்களும் அரசர்களும் தேவரீரது அருளால் அச்செருக்கு நீங்கியவர்களாய் தங்களுடைய பதவிகளில் தாங்கள் நிலை பெற்றிருக்கவும் எதிர்ப்படும் இன்னல்கள் விலகவும் தேவரீருடைய திவ்யகடாக்ஷமே காரணம் என்று அறுதியிட்டு அக்கடாக்ஷத்தைப் பெறுவதற்காக இப்பொழுது ஒருவரையொருவர் முந்திக் கொண்டு வந்து தேவரீர் திருமுன்னே நெருங்கி நிற்கிறார்கள். இவர்களுடன் வந்திருக்கும் களிறுகளும் அவற்றைப் பிரியமாட்டாத பிடிகளும் இங்கே வந்து சேர அவைகளின் பிளிறலும் முரசங்களின் முழக்கமும் சேர்ந்து அலையெறியாநின்ற ஸமுத்திரத்தின் கோஷம் போல ஒலிக்கிறது.

தேனைப் பருகிக் களித்திருக்கும் வண்டுகளோடு கூடிய பலவகை தேவலோக புஷ்பங்களாலே தொடுக்கப் பெற்ற கதம்பமாலைகளைக் கையிலே ஏந்தியவர்களாய் அவற்றை தேவரீருடைய திருவடிகளில் சாத்துகைக்கு அருளப்பாடிடுவது எப்போதோ என்று ப்ரயோஜநாந்தரபரரான தேவர்கள் ஏங்கி நிற்கையில் தேவரீர் திருப்பள்ளியுணர்ந்து அவர்களுக்கு முகங்கொடுத்து அருளலாகாதோ? (5)

தேவரீரது நியமனத்தால் நாள்தோறும் உதித்து மறையும் ஸூர்யனுடன் மற்றைய ஆதித்யர்களும் கூடிப் பன்னிருவராக ஒரு சேரத் தங்கள் அழகிய பெருந்தேருடன் வந்துள்ளார்கள். பசுபதியாய் இரக்கும் வரத்தினை தேவரீரிடம் வேண்டிப் பெற்ற சங்கரனார் முதலிய பதினொரு ருத்ரர்களும் தங்களுடைய வாஹநங்களான ரிஷபங்களுடன் வந்து நின்றனர். தனது வாஹநமாகிய மயிலை விட்டுப் பிரியாதவனான அறுமுகனும், நாற்பத்தொன்பது மருத்துக்களும், அஷ்டவஸுக்களும், குதிரைகள் பூண்ட தேரும் பாட்டுக்களும் ஆட்டமுமாய், அளவிட வொண்ணாப் பெருந்திரளாக மேருமலை போல் விளங்காநின்ற கோயிலில் கூடியுள்ளார்கள். தேவரீரது திருக்கண் மலர்த்தியையே எதிர்நோக்கும் இவ்வனைவரையும் திருப்பள்ளியுணர்ந்து கடாக்ஷித்தருளவேணும் (6)

"பீஷாஸ்மாத் அக்நிச் சேந்த்ரஸ்ச்ச" என்று வேதம் விளம்பியபடி தேவரீரிடத்தில் உள்ள பயத்தால் தேவரீருடைய ஆணைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றும் இந்திரன் தன்னுடைய ஐராவதம் என்னும் யானையோடே வந்துள்ளான். அமரர்களும் அருந்தவம் புரியும் ஸநகாதி முனிவர்களும் மருத்தேவதைகளும், திருக்கோயில் வாசலிலே கூட்டம் கூட்டமாய்த் திரண்டுள்ளார்கள். அழகான உருவம் உடையவராய் இனிய கானங்களைப் பாடுகிறவரான கந்தர்வர்கள் நெருக்கிக் கொண்டு வர அவர்களை முன்கைவலியரான வித்யாதரர்கள் தள்ள, ம்ருதுப்ரக்ருதிகளான யக்ஷர்கள் இக்கூட்டத்தின் நெருக்கத்தைப் பொறுக்கவியலாது மயங்கிக் கிடக்கின்றனர். தேவரீரைத் திருவடிதொழும் ஆசையே இவர்களை இப்பாடுபடுத்துகிறது. ஆகாயத்திலும் பூமியிலும் இடமில்லாதபடியாய் திருவாசல் காக்கும் முதலிகளுக்கும் நிற்கையரிதாம்படி ஆயிற்று. தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளவேணும் (7)

திருவாராதநத்திற்குரிய ப்ராத: காலம் வந்தபடியால் தேவர்களும் ரிஷிகளும் அதற்கு அங்கமாக உள்ள பலவகை மங்கள த்ரவ்யங்களையும் உபகரணங்களையும் கொணர்ந்துள்ளார்கள். தேவர்கள் கையும் அருகம்புல்லுமாய் வந்து சங்கநிதி, பதுமநிதி ஆகிய தேவலோக நிதிகளை தேவரீர் திருவடிகளில் ஸமர்ப்பித்தெழுகின்றனர். மங்களமான கபிலைப் பசுக்களும் வந்து சேர்ந்தன. தேவரீர் கண்டருளுகைக்கு உறுப்பான கண்ணாடி முதலிய படிமைக்கலங்களை அநந்யப்ரயோஜநர்களான ரிஷிகள் தேவரீர் திருவுள்ள உகப்பையே கருதிக் கொணர்ந்துள்ளார்கள். தேவரீர் திருப்பள்ளியுணர்கையில் மங்கள கீதங்களைக் கேட்டக்கொண்டே மகிழ்வுடன் எழவேணும் என்று தும்புருவும் நாரதரும் பாடுவதற்காக வந்துள்ளார்கள். கதிரவனும் ஆயிரக்கணக்கான தன் இளங்காலைக் கிரணங்களால் ஒளியைப் பரப்பிக் கொண்டு வந்து தோன்றினன். இதனால் ஆகாயத்திலேயும் ஸஞ்சரிக்கமுடியாதபடி இருள் முழுதும் மறைந்தது. தேவரீரும் விழித்தெழுந்து சேதநர்களின் அகவிருளைப் போக்கியருளவேணும் (8)

பறை, மத்தளம், யாழ், குழல் முதலிய வாத்யங்களின் முழக்கத்துடன் மங்கள கானங்களைப் பாடும் கின்னரர்கள் கருட ஜாதியினர், கந்தர்வர்கள், பெருந்தவ முனிவர்கள், விமாநங்களில் ஸஞ்சரிப்பவரான தேவர்கள், உலவித் திரியும் சாரணர்கள், யக்ஷர்கள், ஸித்தர்கள் ஆகிய அனைவரும் உயர்ந்தார், தாழ்ந்தார்

என்று வானிலுறை தேவரீர் திருப்பள்ளியுணர்ந்தருளிய பொழுதில் பெறுதல் உடனிருக்கையைப் பெற விரும்பியவர்களாய் நெருக்கில் கொண்டு நிற்கின்றனர். தேவரீர் திருப்பள்ளியுணர்ந்து இவர்களனைவரையும் திவ்ய கடாக்ஷத்தால் நன்றாகவும் வாழ்வித்தருளவேணும் (9).

பெரியபெருமாளின் பெருமைகள்

இப்படித் திருப்பள்ளியெழுச்சி பாடுகையில் பெரியபெருமாளை விளிக்கும் பொழுது அவர் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நல்லியல்புகள் பலவற்றையும் அநுபவிக்கிறார் ஆழ்வார். பெற்றுக்கு தவிக்கும் பொழுதுகளில் தினமும் அதிகாலையில் கண்விழித்தவுடன் வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை உள்ளத்துக் கொண்டு மெள்ள எழுந்து அரியென்ற பேரரவத்துடன் அநுஸந்திக்க வேண்டியது கஜேந்த்ரமோக்ஷ வ்ருத்தாந்தத்தை. இப்போது எம்பெருமான் திருப்பள்ளியுணரும்பொழுது கஜேந்திராழ்வானைக் காத்த துன்பம் களைந்த அப்பிரானுக்கே அந்நிகழ்வினை நினைவூட்டுகிறார் ஆழ்வார்.

தொழுங்காதல் களிறளித்தல்

"கைகளைக் கூப்பியவனான கஜேந்திராழ்வான் ஒரு தடாகத்தில் இறங்கி தேவரீருக்கு ஸமர்ப்பிப்பதற்காக ஒரு தாமரைப் பூவினைத் துதிக்கையால் கொய்தெடுத்தவளவில் குகைபோல அகன்ற வாயினை உடைய பெரிய முதலையொன்று தன் கொடு நெஞ்சு கொண்ட வெண்பற்களால் அவன் காலைப் பிடித்திழுக்க, அத்துன்பம் தாளாது அவன் துதித்துக் கூவியபொழுது அரைகுலையத் தலை குலைய ஓடிவந்து சக்கரத்தால் முதலையைக் கொன்று அவ்யானையின் கொடுந்துயரத்தை நீக்கியருளி, அவன் தேவரீருக்காகக் கொய்து வைத்திருந்த மலரினை வாடாது திருவடிகளிலே இடும்படி செய்து கொண்ட எம்பெருமானே! தேவரீர் அந்நிலையுடன் அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழியுழல்வேனான அடியேனையும் மீட்டெடுத்து அடிமைகொள்ள வேண்டாவோ? ஒரு சிறு மடுவில் நீர்ப்புழு எனத்தகும் ஒரு முதலை ஒரு யானையின் காலைக் கவ்வி இழுக்க, அவ்யானையும் தன் பலமனைத்தும் கொண்டு தன்னைக் காத்துக் கொள்ள ஆயிரம் தேவ வருடங்கள் முயன்றும் அது பலிக்காமல் போகவே முழுதும் நிலையில் தேவரீரைக் கூவியழைக்க ஓடிவந்து அவனைக் காத்து அவன் ஸமர்ப்பித்த தாமரை மலரை ஏற்றருளினீரே! மிகவும் துர்பலனான அடியேனோ அபார எல்லையில்லா ஸம்ஸாரக்கடலில் ஐம்புலன்களாகிய கொடு முதலைகளால் அநாதிகாலமாக பிடித்திழுக்கப்பட்டு மூழ்கிவிட்ட நிலையில் "ஆருளர் களைகணம்மா அரங்கமா நகருளானே" என்றும் "அளித்தெனக்கருள் செய் கண்டாய்" என்றும் கதறுகின்ற கூக்குரலைக் கேட்டு ஓடிவந்து அடியேனை மீட்டு செய்யும் பசுந்துளவத் தொழில் மாலையும் செந்தமிழில் பெய்யும் மறைத் தமிழ்மாலையும் தேவரீர் திருவடிகளுக்கு அணிவிப்பதற்காகக் காத்திருக்கும் அடியேனை அடிமை கொள்ளலாகாதோ" என வாய்வெருவுகிறார் ஆழ்வார்.

மாமுனிவேள்வியைக் காத்தல் முதலியன

காலக்கினியைக் கொளுத்தும் கூரம்புகளால் இலங்கைக்கு அதிபனான இராவணனை அவன் கூட்டத்தாரோடு சுட்டெரித்துச் சாம்பலாக்கிய வில்லாளா! சார்ங்கவில்லேந்திய வானவர் கோமானே! வேள்வியைத் தீய புத்தி நீசர் பலரும் பாழ்படுத்தாமல் மற்றும் பெற்ற விச்வாமித்ர மஹர்ஷியின் யாகத்தை நன்கு ரக்ஷித்து அவர்க்கு ஸந்தோஷத்தை அளித்து கொண்டருளும்படி பண்ணியருளினீர். அயோத்தியிலிருந்து கொண்டு உலகையெல்லாம் பதினோராயிரம் ஆண்டுகள் அரசாண்டு பின்பு தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளுகையன்றிக்கே, பின்னானார் வணங்கும் சோதியாக இரண்டாற்றின் இடையே பள்ளிகொண்டீரே! அந்த ஸௌந்தர்யமுடைய இப்போது திருக்கண் மலர்ந்து அடியோங்களைக் குளிர்நோக்கல் கொள்ளலாகாதோ" என்று இரைஞ்சுகிறார் ஆழ்வார்.

இங்கும் பெரியோர் பணிக்கும் சுவையான அர்த்தவிசேஷம் ஒன்றுண்டு. அதாவது பெருமாள் ஸமாராதநமூர்த்தியின் பெருவேலையினை பலவும் விட்டு ஸ்ரீ முடிசூட்டுவிழாவின் ஸம்ப்ரதாயத்தைத் தன் திருமுன்னே நடத்த ஆசைப்பட்டு அதற்காக ஒருவருடகாலம் தனது உத்ஸவங்களையெல்லாம் நிறுத்தி

தானும் அதில் அந்வயித்து, நிர்விக்நமாக நடத்தி வைத்து வேள்விக்கு அவப்ருதம் போல் காலக்ஷேப சாற்றுமுறை தினத்தன்று மாமுனிகளுக்குத் தனியனும் ஸமர்ப்பித்துப் பூர்த்தி செய்வித்தான் திருவரங்கத்தெம்பெருமான். அவ்விருத்தாந்தத்தை நிலைநிறுத்துவதுபோல அமைந்தது "மாமுனிவேள்வியைக் காத்து அவப்ரதமாட்டிய அடுதிறல்.. அரங்கத்தம்மா" என்று ஆழ்வாரின் இப்பாசுரம் என்று.

இலங்கையர் கோன்வழிபாடு செய்தல்

"தேவரீர் இராமபிரானாய் அவதரித்து பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்து தர்மாத்மாவான விபீஷணனை இலங்கைவேந்தனாக முடிசூட்டி அதற்குமேல் அயோத்தியில் இக்ஷ்வாகு குலதனமாக எழுந்தருளியிருந்த உம்மையே அவனிடம் "ராக்ஷஸேந்த்ர மஹாபதே! ஆராதய ஜகந்நாதம் இக்ஷ்வாகுகுலதைவதம்" என்று ப்ரணவாகார விமாந ஸஹிதமாகக் கொடுக்க அவன் ஆகாசமார்க்கமாக அக்கோயிலாழ்வாரை இலங்கைக்கு எழுந்தருளிப் பண்ணிக் கொண்டு வருகையில், சோழ மன்னான தர்மவர்மா முன்னொருகால் ப்ரார்த்தித்ததை திருவுள்ளத்தில் கொண்ட தேவரீர் விபீஷணாழ்வானின் புத்தியுள் புகுந்து அவனைக் கொண்டே உபய காவேரி மத்யத்தில் உம்மை எழுந்தருளப்பண்ணிக் கொண்டீர். தேவரீருக்கு அன்று முதல் நித்யதிருவாராதன ப்ரஹ்மோத்ஸவாதிகளை ஏற்படுத்திவைத்து தினமும் தேவரீரை வழிபட்டு வருகின்ற அவ்விபீஷணாழ்வான் வந்து ப்ரார்த்தித்தால் தான் திருப்பள்ளியுணர்வீரோ? பக்தபராதீநரான தேவரீர் அடியேனுக்காக உணர்ந்தருளினீர் என்கிற பெருமையை அடியேனுக்குத் தந்தருளலாகாதோ? என்று வேண்டுகிறார் ஆழ்வார்.

ஆழ்வாரது இறுதி விண்ணப்பம்

தொண்டரடிப்பொடியாழ்வார் தாம் அருளிச் செய்த இத்திருப்பள்ளியெழுச்சியின் இறுதிப்பாசுரத்தில் பெரியபெருமாளிடத்தில் தம் திருவுள்ளக்கிடக்கையை இவ்வாறு ஸாரமாக விண்ணப்பிக்கிறார். நறுமணம் கமழும் தாமரைகள் இதோ மலர்ந்துவிட்டன. இந்தத் தாமரைகளை அலர்த்தும் கதிரவனும், முழங்கும் அலைகள் நிறைந்த கீழைக்கடலின் மேற்பரப்பில் தலைகாட்டி இதோ! உயர்ந்தெழுகிறான். நுண்ணிய இடையும் சுருண்ட குழலையும் உடைய அழகிய பெண்கள் திருக்காவேரியில் நீராடிக் கரையேறினார்கள். பரமபதத்தில் விளங்கும் விரஜையையும் ஸ்ரீபிருந்தாவனத்தைத் தழுவிச் செல்லும் தூயபெருநீர் யமுனையையும் அயோத்தியின் அரவணைக்கும் சரயூநதியையும் தேவரீர் மறக்கும்படிச் செய்யும் எழிற்கோலங்கொண்ட திருக்காவேரியால் சூழப்பெற்ற திரவரங்கத்தில் கோயில் கொண்டருள்பவரே! தேவரீருடைய திருக்குழலுக்கும் திருமார்புக்கும் பொருத்தமாக திருத்துழாய் மாலையைத் தொடுப்பதையும் அம்மாலையைக் கொண்ட திருப்பூக்கூடையைத் தோளில் சுமந்துகொண்டு வருவதையுமே அடியேன் பெரும்பேறாகக் கருதுகிறேன். இவ்வாறு தேவரீருக்குக் கைங்கர்யம் செய்து அதற்கு யாம்பெரும் சம்மானமாக வேண்டுவது யாதெனில், "இவன் நம்மிடமும் நம்மடியார்களிடமும் அன்பு மீதூறப் பெற்றவன் அளியன் நம்பையல் என்று தேவரீர் அடியேனைக் கைக் கொண்டருளி உம்மடியார்க்கு ஆட்படுத்தி அச்சரமபர்வத்திலேயே நிலைநிறுத்தவேணும் என்பதே" என்று.

ஆசார்யன் முன்னுருச்சொல்ல சிஷ்யன் பின்னுருச் சொல்லும் க்ரமத்தால் இவ்வாழ்வாருக்குப் பெரியபெருமாள் தாமே தம்திருநாமத்தை ஓதுவித்தருளியதை இவர் தாமே தம் முதல் பிரபந்தமான திருமாலையின் தொடக்கத்தில் "நின்நாமம் கற்ற ஆவலிப்புடைமை கண்டாய்" எனத் தெரிவித்தருளினார். இத்தகைய பெருமைபெற்ற ஆழ்வார் இறுதியில் தாம் நாடும் பயனாக "அடியார்க்கு என்னை ஆட்படுத்தாய்" என்று ப்ரார்த்திப்பதும் வயலாலி மணவாளனிடமிருந்து திருமந்த்ரத்தைக் கற்ற திருமங்கையாழ்வார் "மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட்டெழுத்தும் கற்று உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்று அருளிச் செய்ததும் ஒப்பு நோக்கத் தக்கவை. இதனால் பாகவதசேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வமே இவ்வாத்மாவிற்கு ஸ்வரூபம் என்று அறுதியிடப்பட்டதாயிற்று.

அமலனாதிபிரான்

திருப்புல்லாணி ஸ்ரீ உ.வே. ஸௌந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி

ச்ரிய:பதியான எம்பெருமான் திருப்பாணாழ்வாரை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தான். அதனால், பெரிய பெருமாளிடம் ருசி பெருகப் பெற்ற ஆழ்வார் தமக்கு ப்ராப்யரும், ப்ராபகரும், ருசி ஜனகரும், விரோதி நிவர்த்தகமும் எல்லாம் பெரிய பெருமாளே என்று இருக்கிறார்.

பலபோக்த்ருத்வம் தம்மதாயிருக்க, "எல்லாமவரே' என்கிறபடி யெங்ஙனே யென்னில்; ப்ரதமஸுக்ருதமும் தானாய், பேற்றுக்கு வேண்டுவன நிர்வஹித்துப் போந்த ஸௌஹார்த்தமும் அத்தலையிலே கிடக்கையாலே, பேற்றுக்கு இத்தலையிலுள்ளது சொல்லப் பாத்தம் போராதிறே; உள்ளதுண்டாகில் அவன் அநுக்ரஹத்துக்கு ஹேதுவாமித்தனை. இதர விஷயங்களில் அருசியும் பகவத் விஷயத்தில் அப்ரதிஷேதமும் விளைந்த இம்மாத்திரத்திலே பெரிய பெருமாள் தம்முடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைக் காட்டக் கண்டு அநுபவித்து ப்ரீதராகிறார்.

முதற் பாட்டு

பெரிய பெருமாள் திருவடிகளிலழகு மேல் விழுந்து தம்மை அடிமை கொண்டதென்கிறார். ஹிதாநுசாஸநம் பண்ணுகிற ச்ருதி ஸ்ம்ருத்யாதி சாஸ்த்ரங்களானவை, அருசி பிறக்கும்படி இதர விஷயங்களினுடைய தோஷாதிக்யத்தையும், ருசி பிறக்கும்படி பகவத் விஷயத்தினுடைய குணாதிக்யத்தையும் உபதேசித்தாலும் அவற்றால் இதர விஷயங்களை விட்டு இவ்விஷயத்தைப் பற்றும்படி பண்ண இயலவில்லை. "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு யா புத்திர் பாவிதா ந்ருணாம் தாமேவ பஜதே ஜந்துருபதேஸோ நிரார்த்தக:" என்கிறபடியே துர்வாஸநாபலம் உபதேசத்தை நிரார்த்தகமாக்கி விடுமிறே.

"சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார் திறத்தனாய் அறத்தையே மறந்து புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கி" (பெரிய திரு. 1–6–2) என்றும், "சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த" (பெரிய திருமொழி 1–6–3) என்றும், "மாதரார் கயற்கணென்னும் வலையுள்பட்டழுந்துவேனை" (திருமாலை–16) என்றும் சொல்லுகிறபடியே இதர விஷயங்களிலே அத்யபிநிவிஷ்டராய், "யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை" (திருவிருத்தம் – 95) ஏறிட்டுக் கொண்டு, பகவத் விஷயத்தில் முகம் வைக்காதிருந்தவரை "போதரேயென்று சொல்லிப் புந்தியுள் புகுந்து தன் பாலாதரம் பெருக வைத்த அழகன்" (திருமாலை–16) என்கிறபடியே ஸ்வஸௌந்தர்யாதிகளாலே சித்தாபஹாரம் பண்ணி, தன்னைக் காண வேண்டாமென்றிருக்குமிருப்பைக் குலைத்து, கண்டகண் மாற வைக்க மாட்டாதபடி பண்ணினான். எம்பெருமான் பண்ணின நிர்ஹேதுக விஷயீகாரத்தையே 'திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே"– என்று முதற் பாட்டில் அநுஸந்தித்தார் ஆழ்வார்.

இரண்டாம் பாட்டு

இரண்டாம் பாட்டில் தாம் மேல் விழுந்தபடி சொல்லுகிறார். ஸம்ஸாரிகளுடைய தண்மையைப் பார்த்துக் கைவிடாதே, ஸ்வாபாவிக ஸம்பந்தமே ஹேதுவாக விடமாட்டாதே எதிர்சூழல் புக்குத் திரிகிற ஸர்வபூத ஸுஹ்ருத்தான ஸர்வேச்வரனுடைய யத்ந விசேஷம் ஒரு நாளிலே ஓர் அவகாசத்திலே பலித்து, அத்வேஷாபிஸந்தியையுடையராய், மோக்ஷ ஸமீக்ஷாயுக்தராய், ப்ரவ்ருத்தமான வைராக்யயுக்தராய் விவேகத்தில் அபிநிவேசத்தையுடையராய், ஸம்ஸாரத்தினுடைய கொடுமையை அநுஸந்தித்து, ஸர்ப்பாஸ்ய கதமான மண்டூகம் போலேயும், காட்டுத் தீ கதுவின மான்பேடை போலேயும், "இருபாடெரி கொள்ளியினுள் எறும்பு போலேயும்", (பெரிய திரு. 11–8–4) "ஆவாரார் துணையென்றலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய் போலேயும்," (திருவாய். 5–1–9), "ஆற்றத்துளங்கி" (பெரிய திரு. 11–8–2), "பல நீ காட்டிப் படுப்பாயோ" திருவாய் (6–9–9), "இன்னங்கெடுப்பாயோ" (திருவாய். 6–9–8), "ஐவர் திசை திசை வலித்தெற்றுகின்றனர்"

(திருவாய். 7–1–10), "கூறை சோறிவைதாவென்று குமைத்துப் போகார்" (பெரிய திரு. 7–7–9) என்று இந்த்ரியங்களினுடைய கொடுமையை நினைத்து வருந்தி "நாட்டாரோடியல்வொழிந்து"(திருவாய்.10–6–2) என்று சொல்லுகிறபடியே, பிராட்டிக்கு ராக்ஷஸிகளோட்டை ஸஹவாஸம் அஸஹ்யமானாற்போலே, "மெய்யில் வாழ்க்கையை மெய்யென"க் கொண்டு (பெருமாள் திரு 3–1), உண்டியேயுடையே உகந்தோடுகிற சௌரி சிந்தா விமுகரான ஸம்ஸாரிகளோட்டை ஸஹவாஸம் துஸ்ஸஹமாய், "க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே" என்கிறபடியே, ஆக்கைவிடும் பொழுதை மநோரதித்து, மஹிஷியினுடைய உச்சிஷ்டத்தை விரும்பும் ராஜபுத்ரனைப்போலே தான் த்யஜித்த தேஹத்தை விரும்புகிற ஈச்வரனை "உண்டிட்டாயினி யுண்டொழியாய்" (திருவாய் 10–10–6) 'முற்றக்கரந்தொளித்தாய் (திருவாய்மொழி 10–10–8) என்கிறபடியே பரமபக்தி தலையெடுத்தவராய் ஆனார். அதனால்தான் எம்பெருமான் மேல் விழுந்து அநுபவிக்க தொடங்குகிறார்.

மூன்றாம் பாட்டு

மூன்றாம் பாட்டில் திருப்பீதாம்பரத்தினழகின் மிகுதி திருநாபீ கமலத்திலே வீசிற்று. முதற்பாட்டிலே "ஆதி பிரான்" என்று ஜகத்காரணபூதனாய் ஸர்வஸ்மாத்பரனாயிருக்குமென்று சொல்லக் கேட்டவர்கள், "ப்ரஹ்ம விஷ்ணு சிவாத்மிகாம்" (வி.பு 1–2–16) என்று மூவர் ஜகத்காரணபூதரென்று ப்ரஸித்தமாயிருக்க, இவனே ஜகத்காரணபூதனென்றறியும்படி யென்னென்ன; சாஸ்த்ர முகத்தாலே நம்முடைய காரணத்வத்தை ப்ரகாசிப்பித்தோமாகில் அது அயதாவாக ப்ரகாசிக்குமென்று பார்த்தருளி, தன் திருநாபீ கமலத்திலே ஜகத்காரணபூதராக ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ரர்களை ஸ்ருஷ்டித்துக் காட்ட, நாபீ கமலம் அம்முகத்தாலே தன்னுடைய மேன்மையையும் அழகையும் காட்டி, திருப்பீதாம்பரத்திலே துவக்குண்கிறவென்னுடைய மநஸ்ஸைத் தன் பக்கலிலே இழுத்துக் கொள்ளா நின்றது என்கிறார். அநுபாவ்யத்தை எல்லை கண்டு மீளுதல், தம்முடைய ஆதரம் மட்டமாய் மீளுதல் செய்கிறாரல்லரே; தம்முடைய சாபலமடியாக இழுப்புண்கிறார் இத்தனையிறே.

நான்காம் பாட்டு

பத்த – முக்த – நித்ய – ரூபமான த்ரிவித சேதநர்க்கும், த்ரிகுணாத்மகமாயும், சுத்தஸத்த்வாத்கமாயும், ஸத்த்வஶூந்யமாயுமுள்ள அசேதநவர்க்கத்துக்கும் ஆச்ரயமான மேன்மையையும், ஆச்ரிதர்க்குக் கட்டவும் அடிக்கவுமாம்படி எளியோமான ஸௌலப்ய நீர்மையையும் உடையோமான ஏற்றத்தாலே பட்டங்கட்டியன்றோ வயிறான நாமிருப்பது என்று, தனக்குத் (வயிற்றுக்குத்) திருநாபீ கமலத்தில் உண்டான ஏற்றத்தைக் காட்டி திருநாபீ கமலத்திலே ஆழங்கால் படுகிற ஆழ்வார் நெஞ்சைத் தன் பக்கலிலே வர இசிக்க (இழுக்க), அத்திரு வயிற்றை ஆச்ரயமாகப் பற்றி நிற்கிற திருவுதரபந்தநம் தன் பக்கலிலே வர ஈர்த்து மேலிட்டு நின்று தந்திருவுள்ளத்திலே ஸ்வைரஸஞ்சாரம் பண்ணுகிறபடியைச் சொல்லுகிறார் நான்காம் பாட்டில்.

ஐந்தாம் பாட்டு

எனக்குப் பற்றாசான பெரிய பிராட்டியாருடனே திருவார மார்பானது என்னை ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக் கொண்டதென்கிறார். மூன்றாம் பாட்டிலே திருநாபீ கமலம் ப்ரஹ்மாவை தரித்துக் கொண்டிருக்கிற தன் மதிப்பையும் அழகையுங் காட்டி, தம்முடைய திருவுள்ளத்தைத் திருப்பி பீதாம்பரத்தினின்றும் தன் பக்கலிலே இழுத்துக்கொள்ள, அங்கே அது சுழியாறு பட்டபடியிறே சொல்லிற்று; கீழிற் பாட்டில் இத்தைக் கண்ட திருவயிறானது ஸகல சேதநாசேதநங்களையும் தானே தரித்துக் கொண்டிருக்கிற மதிப்பையும், யசோதைப் பிராட்டி கட்டக் கட்டுண்ட தழும்பைக் காட்டி தன்னுடைய ஸௌலப்யத்தையும் சிற்றிடையான அழகையுங்காட்டி, அத்திருநாபீ கமலத்தினின்றும் திருவுள்ளத்தைத் தன் பக்கலிலேயிசிக்க (இழுக்க), அங்குப் போக ஒட்டாதே அப்படிக்குப் பட்டங்கட்டி யிருக்கிறாப்போலே இருக்கிற திருவுதரபந்தம் மேலிட்டு நின்று ஸ்வைரஸஞ்சாரம் பண்ணுகிற படியையிறே சொல்லிற்று.

அந்தத் திருவயிற்றுக்கு ஒரு கால விசேஷத்திலே காதாசித்கமாக ஸகல அண்டங்களையும் வைத்ததாலுண்டான மதிப்பும், ஒருகால் யசோதைப்பிராட்டி கட்ட, அத்தால் வந்த ஸௌலப்யமுமிறே

யிருப்பது. அப்படியன்றே திருமார்பு ஸகலகாலமும் சேதநாசேதநங்களை ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முகத்தாலே தரித்துக் கொண்டிருக்கிற பெரிய மதிப்பையும், அவனுடைய ஸ்வரூபாதிகளுக்கு நிரூபக பூதையாய், நீர்மைக்கெல்லை நிலமாயிருக்கிற பெரிய பிராட்டியாருக்குக் கோயிற் கட்டணமாயிருக்கிற ஏற்றத்தையும் உபய விபூதிநாதனென்றிட்ட தனிமாலையை தரித்துக் கொண்டிருக்கிற ஆகாரத்தையுமுடைத்தாய் யசோதைப்பிராட்டி பூட்டின ஆபரணங்களையும் உடைத்தாயிறேயிருப்பது. ஆகையாலே அத்திருமார்பானது திருவயிற்றில் காட்டில் தனக்குண்டான ஆதிக்யத்தையும் ஸௌலப்யத்தையும் திருவாரமுள்ளிட்ட ஆபரணச்சேர்த்தியால் வந்த வழகையுமுடையோம் நாமன்றோ? என்று தன்னிறுமாப்பைக் காட்டி அத் திருவுதரபந்தநத்தினின்றும் தன் பக்கலிலே இசித்துக் (இழுத்து) கொள்ள, தம்முடைய நெஞ்சளவன்றிக்கே கரணியான தம்மையும் ஸ்வரூபஜ்ஞாநாதிகளைப் பிறப்பித்து அடிமை கொண்ட படியைச் சொல்லுகிறார்.

ஆறாம்பாட்டு

ஸர்வலோகத்தையும் அமுது செய்தருளின கண்டத்தினழகு என்னை யுண்டாக்கிற்றென்கிறார். திருமார்பினழகு திருக்கழுத்தில் ஏறிட்டதென்றுமாம். கீழ்ப்பாட்டில் திருமார்பானது ஹாராத்யாபரண சோபையையும் பெரியபிராட்டியாருக்குக் கோயில் கட்டணமாயிருக்கிற மேன்மையையும் காட்டி, தம்மைத் திருவயிற்றினின்றும் வரவீர்த்து எழுதிக் கொண்ட படியிறே சொல்லிற்று; இதில் அந்தத் திருமார்புக்கு மேலாய் கமுகுக் கன்றின் (சிறிய பாக்கு மரத்தின்) கழுத்துப் போலே பசுகு பசுகு என்று இருப்பதாய், ரேகாத்ரயாங்கிதமாய் (மூன்று கோடுகளாலே அலங்கரிக்கப்பட்டதாய்), இரண்டருகும் நெருங்கி நடுவு பெருத்திருக்கையாலும், மொசுகு மொசுகு என்றிருக்கிற நாதத்தை உடைத்தாயிருக்கையாலும் ஸ்ரீபாஞ்சசந்யம் போலேயிருக்குமது திருக்கழுத்தாகும் என்று சொல்லப்பட்டது.

இந்தத் திருமார்புக்குள்ளது, "அலர்மேல் மங்கையுறை மார்பா" (திருவாய் 6–10–10) என்கிறபடியே பெரிய பிராட்டியாருக்குக் கோயில் கட்டணமாயிருக்கிற ஆகாரமும், திருவாரத்தாலே அலங்க்ருதமான வாகாரமுமே யன்றோ; இவளைப் போலே சங்கு தங்கு முன்கை நங்கையாயிருப்பார் அநேகம் நாய்ச்சிமார் ஸாபரணமான தங்கள் கைகளாலே அணைக்கையாலே அவவாபரணங்கள் அழுத்த அவற்றாலே முத்ரிதராயிருப்போரும் நாமல்லவோ? ப்ரளயாபத்துவர ஸகலாண்டங்களையும் ததந்தர்வர்த்திகளையும் ரக்ஷித்தோமும் நாமல்லோமோ? அதுகிடக்க அவள் தான் மார்பிலே யிருந்தணைப்பதும் நம்மையன்றோ. அதுவுங்கிடக்கப் பாண்டவர்கள் தூதுவிடுகிறபோது கட்டிவிட்ட மடக்கோலை இன்றும் நம்பக்கலிலே யன்றோ கிடக்கிறது. அந்த ஹாரந்தனக்கும் தாரகம் நாமல்லோமோ என்றாப்போலே தன்னுடைய ஆபரணசோபையையும் யௌவநத்தையும் ஆபந்நிவாரகத்வத்தையும் காட்டி என்னை ஸம்ஸாரமாகிற ப்ரளயத்தினின்றும் எடுத்து உஜ்ஜீவிப்பித்த தென்கிறார்.

ஏழாம் பாட்டு

ஏழாம்பாட்டில், திருவதரத்தில் அகப்பட்டபடி சொல்லுகிறார். நீஞ்சப்புக்குத் தெப்பமிழந்தேன் என்னுமாப்போலே கீழ்ப்பாட்டில் "முற்றுமுண்ட கண்டம் கண்டீர் அடியேனையுய்யக் கொண்டது" என்று திருக்கழுத்தானது தன்னுடைய ஆபத்ஸகத்வாதிகளைக் காட்டித் தம்மையெழுதிக் கொண்டபடியையிறே சொல்லிற்று; இதுக்கு மேலான திருப்பவளச்செவ்வாயானது "உலகமுண்ட பெருவாயா" (திருவாய் 6–10–1) என்கிறபடியே ஆபத்ஸகத்வத்திலும் முற்பாடர் நாமல்லோமோ; ஆச்ரிதரக்ஷணத்துக் குறுப்பாக "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" (கீதா 18.66) என்று சொல்லுகிற மெய்ம்மைப் பெருவார்[illegible]தக்கு எல்லாம் ப்ரதாநகாரணம் நாமல்லோமோ, ஓராபரணத்தால் இடுசிவப்பன்றிக்கே ஸ்வாபாவிக ஸௌந்தர்யமுடையோமும் நாமல்லோமோ, "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ" (நாச். திரு.7–1) என்று தேசிகரைக் கேட்கும்படியான ஸௌகந்த்ய ஸாரஸ்யமுள்ளிட்ட போக்யதையை உடையோமும் நாமல்லோமோ என்றாப்போலே, தன்னுடைய ஏற்றத்தைக் காட்டி தம்முடைய திருவுள்ளத்தை அந்தக் கழுத்தினின்றும் தன் பக்கலிலே வர இசித்துத் துவக்க, "செவ்வாய் முறுவலோடு எனதுள்ளத்திருந்த அவ்வாயன்றியானறியேன்" (திருவாய் 8–7–7) என்கிறபடியே

அந்தத் திருப்பவளச் செவ்வாயிலே தாம் அபஹ்ருதஹ்ருதயராய் அகப்பட்டபடியைச் சொல்லுகிறார்.

எட்டாம் பாட்டு

எட்டாம் பாட்டில் திருக்கண்கள் என்னை அறிவு கெடுத்தது என்கிறார். கீழிற்பாட்டிலே "செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே" என்று திருப்பவளத்திலே இவர் அபஹ்ருதஹ்ருதயர் ஆகிறபடியைக் கடைக்கணித்துக் கொண்டு கிடக்கிற திருக்கண்களானவை, 'செய்யவாய் ஐயோ' என்று இவர் தாமே சொன்னார். அப்படியே சிவப்பால் வந்த அழகொன்றுமேயன்றோ அந்தத் திருவதரத்துக்குள்ளது, சிவப்பும் கருப்பும் வெளுப்புமான பரபாகத்தாலுள்ள அழகுடையோமாயிருப்போமும் நாமல்லோமோ, "மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம்" (ரா–யு–18–3) என்றாப்போலே சொல்லுகிற வார்த்தைகளுமெல்லாம் ஜீவிக்கையாகிறது "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத்" (பார. ஸாந். 358–73) என்று ஜாயமாந தசையில் நாம் கடாக்ஷித்த பின்பு ஸாத்விகனாய் முமுக்ஷுவான அளவிலேயன்றோ, அதுகிடக்க அந்த வார்த்தை தான் "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தாப்போலே யன்றிக்கே, 'மெய்மைப் பெருவார்த்தை" (நாச்.திரு. 11–10) என்று விச்வஸித்திருக்கலாம்படி வாத்ஸல்யமடியாகப் பிறந்த வார்த்தையென்று அந்த அகவாயில் வாத்ஸல்யத்துக்கு ப்ரகாசகமாய் இருப்போமும் நாமல்லோமோ, அதுகிடக்க, "யதா கப்யாஸம் புண்டரீகமேவம் அக்ஷிணீ" (சாந்–1–6–7) என்றும் "அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனன்" (திருவாய் 6–7–10) என்றும் சொல்லுகிறபடியே மேன்மைக்கு ப்ரகாசகமாயிருப்போமும் நாமல்லோமோ; அதுக்குமேலே "புண்டரீகாக்ஷ ரக்ஷமாம்" (பார.ஸபா.66) என்றும், "புண்டரீகாக்ஷ! ந ஜாநே சரணம் பரம்" (ஜிதந்தே 1–8) என்றும் சொல்லுகிறபடியே தந்தாமுடைய ஆபந்நிவாரணத்துக்கு உபாயமாகப் பற்றுவதும் நம்மைப் புரஸ்கரிக்கையாலே உபாயபாவத்தை பூரிக்கிறோமும் நாமன்றோ, "தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை" (திருவாய் 2–6–3) என்று அவனுக்கு போக்யதா ப்ரகர்ஷமுண்டாகிறது நம்மோட்டைச் சேர்த்தியாலன்றோ என்றாப்போலே தங்களுடைய ஏற்றத்தைக் காட்டி, "அவ்வாயன்றி யானறியேன்" என்றிருக்கிற தம்மை, "தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்து" (திருவாய் 7–3–3) என்னும்படி பண்ணிக் கொண்டபடியைச் சொல்லுகிறார். "செங்கனிவாயின் திறத்ததாயும் செஞ்சுடர் நீண்முடித் தாழ்ந்ததாயும் சங்கொடு சக்கரம் கண்டுகந்தும்" (திருவாய் 7–3–3) என்றவளவும் சொன்னார் கீழ், தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்தபடி சொல்லுகிறார் இதில்.

ஒன்பதாம் பாட்டு

கீழ்ப் பாட்டில் "கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே" என்றார். ராமசரம் போலே இருக்கிற கடாக்ஷ பாதங்களாலே இவர் படுகிறபாட்டைக் கண்ட திருமேனியானது, தனிப்பூச் சூடுவாரைப் போலே நம்முடைய அவயவஸௌந்தர்யத்தைத் தனித்தனியே அநுபவித்தாரித்தனையன்றோ, இவர் கலம்பகன் மாலை சூடுவாரைப் போல இந்த அவயவங்களுக்கு ஆச்ரயமான நம்மை அவற்றோடே கூட அநுபவிக்கப் பெற்றிலரே; இனி மற்றையாழ்வார்கள் போலே பரக்கப் பேசி நின்று அநுபவிக்கவும் வல்லரல்லர், ஆன பின்பு இந்த அவயவங்களோடும் ஆபரணங்களோடுமாகச் சேர்ந்த சேர்த்தியால் வந்தவழகும் ஸ்வாபாவிக ஸௌந்தர்யத்தால் வந்த அழகுமான நம்முடைய ஸமுதாயசோபையை இவரை அநுபவிப்பிக்க வேணுமென்று பார்த்து, இந்தத் திருமேனியானது அவயவங்களையும் ஆபரணங்களையுஞ் சேர்த்துக் கொண்டு, தன்னுடைய ஸமுதாயசோபையைக் காட்டி, "உய்விடம் ஏழையர்க்குமசுரர்க்குமரக்கர்கட்கும் எவ்விடம்" (திருவாய் 9–7–6) என்று கொண்டு மேல் விழுந்து தம்முடைய திருவுள்ளத்தைத் தன் பக்கலிலே இழுத்துக் கொள்ள, தாம் அதிலே யகப்பட்டு நெஞ்சழிந்தபடியைச் சொல்லுகிறார்– இந்த ஒன்பதாம் பாட்டில்.

பத்தாம் பாட்டு

நிகமத்தில், இவ்வாழ்வார், இவ்வூருக்குப் புறம்புள்ள தேசங்களிலுள்ளாரடைய ரஜஸ்தம: ப்ரசுரராய் சப்தாதி விஷயப்ரவணராய் அதுதானும் நேர் கொடு நேர் கிடையாமையாலே அர்த்தார்ஜநாதிகளிலே இழிந்து

பெரியதோளிடும்பைபூண்டு (திருமாலை–8) டிருக்கிறபடியையும், இவ்வூரிலுள்ளார் (திருவரங்கத்தில் உள்ளார்) பரமஸாத்விகராய் நிரதிசய போக்யபூதராயிருக்கிற பெரிய பெருமாளை அநுபவித்துக் கொண்டு தொண்டுபூண்டமுதமுண்டு களித்திருக்கிற படியையுங் கண்டு, தம்முடைய நைச்யத்தாலே இங்குப் புகவும் மாட்டாதே ஆந்த்ராளிகராய் (நடுவிலே நிற்பவராய்) "அன்பொடு தென்றிசை" (பெருமாள் திரு 1–10) நோக்கிக் கொண்டு கண் வளருகிற பெரிய பெருமாளுடைய த்ருஷ்டி பாதமான (திருக்கண் நோக்குக்கு இலக்கான) தென்னாற்றங்கரையைப் (காவிரியின் தெற்குக் கரையை)ப் பற்றி நின்றார்.

பெரிய பெருமாளும் இவர் மநநபராய் இருக்கையாலே ச்ரேஷ்டராயிருப்பாரொருவரை யிட்டழைப்பித்துக் கொள்ள வேணுமென்று பார்த்து, அருகே ஸேவித்திருக்கிற லோகஸாரங்க மஹாமுநிகளைப் பார்த்து, "ஆநயைநம்" (ரா.யு.18–34) என்று திருவுள்ளமானார். பாகவத வைபவத்தை ஆழ்வார்கள் அருளிச் செய்யக் கேட்டிருக்குமவராகையாலே கடுகப் போய் அவரை அருள்பாடிட்டுத் தாம் சிரஸாவஹித்துக் கொண்டு வர; இவரும் பெரிய பெருமாளுடைய கௌரவத்தைக் குலைக்க வொண்ணாதென்று முநிவாஹநராய் வந்து புகுந்து பெரிய பெருமாளைத் திருவடித்தொழ, பெரியபெருமாளும் "ஆவிர்பபூவ பகவாந் பீதாம்பரதரோ ஹரி:" (வி.பு 1–20–14) என்று ஸ்தோத்ரபரனான ப்ரஹ்லாதனுக்கு வந்து ஆவிர்ப்பவித்து அபேக்ஷிதங்களைக் கொடுத்து, அவன் ராஜ்யாதிகளிலே போது போக்கவல்லனாகையாலே அவன் பார்த்துக் கொடு நிற்க செய்தே "திரைவாந்தரதீயத" (பாகவதம் 7–10–31) என்று போக, பின்பு அந்த ராஜ்யாதிகளாலே ப்ரஹ்லாதனும் போதுபோக்கி இருந்தானிறே; இவர் அவனைப் போலே அன்றிகே, அநந்யஸாதநராய் அநந்ய ப்ரயோஜநராயிருக்கையாலே நம் விச்லேஷம் பொறுக்க வல்லவரல்லரென்று பார்த்தருளி, தம்முடைய ஸ்வரூபாதிகளைக்காட்ட, இவரும் ப்ரீதரான அளவிலே இவர் மாநஸாநுஸந்தாநம் பண்ணுகிற தசையிலே, "ஆதி" "விண்ணவர் கோன்" "நீதி வானவன்" "அரங்கத்தம்மான்" என்றும், "உலகமளந்தண்டமுற நிவர்ந்த நீண்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்" என்றும், "விரையார் பொழில் வேங்கடவன்" என்றாப்போலே தம்முடைய ப்ரவ்யூஹவிபவார்ச்சாவதாரங்களையும் தம் பக்கலிலே அநுஸந்திக்கையாலே இவற்றைத் தனித்தனியே அநுபவிக்க வேணுமென்கிற அபேக்ஷை இவர்க்கில்லையென்கிறவிடம் ஹ்ருதயஸ்தனாய்க் கொண்டு, 'உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறி' (திருமாலை –34) யா நிற்கச் செய்தேயும் இவரைச் சோதிக்கைக்காக இவற்றையும் இவர்க்குத் தனித்தனியே காட்டி இவரநுபவிக்கும்படி பண்ணுவோம் என்று பார்த்தருளி, அது செய்யுமிடத்துப் புருஷார்த்தமாக வேண்டுகையாலே இவருடைய அபேக்ஷையறிந்து செய்ய வேணும், இல்லையாகில் இவர், நாம் அத்தை ப்ரகாசிப்பிக்கக் கொள்ள, "ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே" (சிறிய திருமடல்) என்னும் திருமங்கையாழ்வாரைப் போலே நிந்தித்தல், தொண்டரடிப் பொடியாழ்வாரைப் போலே "அச்சுவை பெறினும் வேண்டேன்" (திருமாலை–2) என்று காற்கடைக் கொள்ளுதல் செய்வரோ, அறிய வேணுமென்று தந்திருவுள்ளத்திலே ஓடின எண்ணத்தை அறிந்து, இவர் கடலிலே குளப்படி உண்டானாப்போலே "பூர்ணம்" (கடவல்லி) என்கிறபடியே பெரிய பெருமாள் பாடே எல்லாமில்லையோ, ஆனபின்பு எனக்குப் பெரிய பெருமாள் ஒழிய வேறொருவரை அநுபவிக்க ச்ரத்தையில்லை, எனக்கு உண்டானாலும் அவரை யநுபவித்த "என் கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்கிறார்.

ஆக, இப்ப்ரபந்ததால் பெரிய பெருமாளுடைய நிர்ஹேதுக விஷயீகாரமும், அதைத் திருப்பாணாழ்வார் ஸபலமாக்கின ப்ரகாரமும் சொல்லப்பட்டன.

கண்ணிநுண் சிறுத்தாம்பு

வடகரை ஸ்ரீ உ.வே. நா. விஜயராகவ ஐயங்கார் ஸ்வாமி

ஸ்ரீமந் நாராயணனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானே ஸித்தோபாயம். நமக்கு உபாயமாய் இருக்கும் அந்த எம்பெருமான் நமது கர்மங்களைக் காரணமாகக் கொண்டு மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து ஸம்ஸாரத்தில் உழல வைக்கவும் பண்ணுவான். அல்லது அவனது க்ருபை காரணமாக நமக்கு மோக்ஷத்தை அளிப்பான். அவ்வளவு ஸ்வாதந்த்ர்யம் உள்ளவன். அப்படிப்பட்ட எம்பெருமானை நாம் அடையும் போது, நம்முடைய தோஷங்களைப் பார்த்து தள்ளி விடுவானோ என்கிற அச்சம் வரும். அல்லது அவனது க்ருபை காரணமாக நமக்கு மோக்ஷத்தை அருளுவான் என்று அச்சமில்லாத நினைவும் வரும். ஆக நம் போல்வார்களுக்கு அச்சமும் அச்சமின்மையும் மாறிமாறி வருவது போல், ஆழ்வார்களுக்கெல்லாம் பகவத் அநுபவம் கடல்புரைய விளைந்தால் ஒரு நிலையும், அந்த பகவத் அநுபவத்தால் வரும் ஆநந்தம் குறைந்தால் ஒரு நிலையும் இருக்கும்.

எம்பெருமானோடு கலந்து அநுபவிக்கும் போது, சேஷத்வத்தில் எல்லை நிலமான பாகவத சேஷத்வத்தில் அவாவைக் கொண்டு, "எம்மை ஆளும் பரமர்" "எம்மை ஆளும் நாதர்" "சன்ம சன்மாந்தரம் காப்பர்" "எம்மை உய்யக் கொள்கின்ற நம்பர்" "சிறுமாமனிசராய் என்னை ஆண்டார் இங்கே" என்று ஆர்ப்பரிப்பர். மேலும் அடியவர்களைக் கண்டால், "ஞானத்தின் ஒளியுருவை நினைவார் என் நாயகரே" என்று 'அவரை நச்சித் தொழுது' 'ஒருகாலும் பிரிகிலேனே' என்பர். 'அடியார்கள் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண் பயன்' என்றும் 'தொண்டர் சேவடி ஏத்தி வாழும் என் நெஞ்சமே' என்றும் பாடி, எம்பெருமானைக் காட்டிலும் அவனது அடியார்களே உபாயம் உபேயம் என்றும் இருப்பர்.

எம்பெருமானுடைய அநுபவம் இல்லாது போகும்படி வருந்தும் காலத்தில், அவனடியார்களே அருகில் உபாய உபேயமாய் இருந்தாலும், எம்பெருமானையே உபாய உபேயமாகப் பற்ற வேண்டி, 'ஒருநாள் காணவாராயே!' 'காணுமாறு அருளாய்' 'எம் அழகரும் வாரானால்' 'வாசுதேவா, உன் வரவு பார்த்தே' என்றெல்லாம் அலற்றி, 'உங்களோடு எங்களிடை இல்லை' என்று வெறுத்து உதறுவது போன்று வார்த்தைகள் வரும். இப்படிப்பட்ட நிலை பத்து ஆழ்வார்களுக்கும் ஏற்பட்டதுண்டு. இப்படி எம்பெருமானைப் பற்றி நிற்பவர்களின் நிலையானது ப்ரதம பர்வ நிலை. "ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்யமயீம் தநும்" என்னும் ப்ரமாணத்திற்கு ஏற்ப,

தேனார் கமலத் திருமா மகள் கொழுநன்
தானே குருவாகித் தன்னருளால் - மானிடர்க்காய்
இந்நிலத்தே தோன்றுதலால் ஆர்க்கும் அவன் தாளிணையை
உன்னுவதே சால உறும்"

என்று அருளாளப் பெருமாள் எம்பெருமானார் பாசுரம் இட்டருளினார். அதன்படி, சித்தோபாயமான ஸ்ரீமந் நாராயணனுக்கு புறம்பு இல்லாமல், அவனுக்கே எல்லை நிலமாய், பிறப்பிற்கும் மோக்ஷத்திற்கும் பொதுவானவன் என்கிறபடி இல்லாது, மோக்ஷத்திற்கே காரணமாய் உள்ளவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள். எனவே ஸ்வரூபத்திற்கும், பேற்றிற்கும் தகுதியான முடிந்த உபாயம் ஸதாசார்ய அபிமானமே என்று ஸகல வேதாந்தங்களுடைய ஸாரப் பொருளை நன்கு அறிந்த நமது பூர்வர்கள் எல்லாரும் உஜ்ஜீவிக்க அருளின நிஷ்டை சரம பர்வ நிஷ்டையான ஆசார்யனையே எல்லா உறவுமாய்க் கொள்வது. ப்ரதம நிஷ்டையை விட்டு சரம பர்வ நிஷ்டைக்கு வருவது மிகவும் துர்லபம். "விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு பகவத் விஷயத்திலே வருகைக்குள்ள அருமைப் போல் அன்று, ப்ரதம பர்வத்தை விட்டு சரம பர்வத்திலே வருகைக்குள்ள அருமை" என்பர் பிள்ளை உலகாசிரியன். சிற்றின்ப மோகத்தில் திளைத்தவனை,

கொள்ளமாளா இன்ப வெள்ளம் தந்திடும் வள்ளல் மணிவண்ணன் பால் கொண்டு சேர்க்க முடியும். அதற்கு அவர்களுக்கு சிற்றின்பத்தில் உள்ள தோஷங்களை எடுத்துக் கூறித் திருத்த முடியும்.

ஆனால், ஒரு குற்றமும் சொல்ல வொண்ணாத குறையொன்றும் இல்லாத கோவிந்தனுடைய ஸமஸ்த கல்யாண குணங்களும், வல்வினையேனை ஈர்கின்றது போல ஈர்க்கும். அதில் இருந்து மீள ஒண்ணாது. அப்படிப்பட்ட நிலையைக் கொள்ளாது, 'தேவுமற்றறியேன்' என்று ஸ்வாமியாக நம்மாழ்வாரையே கொண்டு "கண்ணிநுண் சிறுத்தாம்பு" அருளின நமது ஸ்ரீ மதுரகவியாழ்வார் சரம பர்வ நிஷ்டையில் உயர்ந்து விளங்கினார். அதனால் தான், நமது பூர்வாசார்யர்கள் அவரையும் ஆழ்வார்கள் கோஷ்டியில் சேர்த்து, அவர் அருளின பிரபந்தத்தையும் நாலாயிரத்தின் நடுவே சேர்த்துள்ளனர்.

பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீமதுரகவியாழ்வார் நிலைகொண்டு சரமபர்வ நிஷ்டையை விளங்க வைத்தார். 'உண்ட போது ஒரு வார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேர் உண்டிறே, அவர்கள் பாசுரம் கொண்டு அன்று இவ்வர்த்தம் அறுதியிடக் கடவது" என்று அருளினதில் இருந்து ஆழ்வார்களுக்குள்ளே ஸ்ரீ மதுரகவியாழ்வார் தான் மிக மிக உயர்ந்த தர்மமான பாகவத தர்மத்தை அநுஷ்டித்துக் காட்டியவர். அதனால்தான் மற்றையாழ்வார்களின் பாசுரங்களைத் தொகுத்து வழங்கிய ஸ்ரீமந் நாதமுனிகள் 'கண்ணிநுண் சிறுத்தாம்பினை' 'நம:' பதத்தின் அர்த்தமாய் இருப்பது கண்டு உகந்தார்.

வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம்பதம் போல்
சீர்த்த மதுரகவி செய் கலையே ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச் செயல் நடுவே
சேர்வித்தார் தாத்பரியம் தேர்ந்து.

என்று மாமுனிகளும் அருளினார். பகவானிடத்தில் நமக்கு பத்துவிதத்தில் தொடர்பு சொல்லாம். அதாவது, 1. அந்தமில் பேரின்பத்தைப் பெறுதல், 2. அவனையே சரணம் என்றும் பற்றுதல், 3. தன் ஸ்வரூபத்திற்கு தக்க பலனாக எம்பெருமானையே கொள்ளுதல், 4. நவவித ஸம்பந்தமாய் எல்லா உறவு முறையும் அவனிடத்தில் கொள்ளுதல், 5. தகாத விஷயங்களில் ஆசையை விட்டு ஒழித்தல், 6. அவன் விஷயமாகவே பற்று உண்டாதல், 7. பாபங்களை ஒழிக்கப் பெறுதல், 8. கருணைக்கு இலக்காய் இருத்தல், 9. தத்வஜ்ஞாநம் உண்டாகப் பெறுதல், 10. அவனைப் போல் ஆக்கப் பெறுதல், தம்முடைய ஒக்க அருள் செய்வர்.

இப்படிப்பட்ட பத்து நிலைகளும் பகவானிடத்தில் வருவது இயல்பு. ஆனால் அந்த பத்து நிலைகளையும் பத்துப் பாசுரங்களில் நம்மாழ்வாரையே பாடி அனுஷ்டித்து வாழ்ந்ததால் 'தொல்வழி' என்னும்படி நல்வழி காட்டி அருளினார் மதுரகவிகள். பதினொன்றாவது பாசுரம் பல ச்ருதியாகும். அதனால் தான்,

இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில் இகழாத பல்லுறவில் இராகம் மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில் தத்துவத்தை உணர்த்துதலில் தன்மை ஆக்கில்
அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்க்ககட்கே.

என்று ஸ்ரீ வேதாந்த தேசிகன் அருளினார். பகவத் அனுபவத்தில் பத்து நிலைகள் ஏற்படும்படி, அடியவர்களுக்கு மெய்யனாய், இனியனாய், புண்ணியன் க்ருஷ்ணன் வந்து அவதரித்து நின்றான். அக்காலத்தே தோன்றின மதுரகவிகள், அப்பத்து நிலைகளையும் 'தேவு மற்றறியேன்' என்ற குருகூர் நம்பி பால் கொண்ட நிலை தான் மிக மிக உயர்ந்த நம: பதத்தில் எல்லை நிலமாம். 'உற்றதும் உன்னடியார்க்கு அடிமை' என்று அடிமைதனில் எல்லை நிலம் என்று வாழ்ந்து காட்டினார் மதுரகவியாழ்வார்.

அதனால் தான் ஸ்ரீமந் நாதமுனிகளும் ஆழ்வாரைத் தவிர வேறு ஒரு விஷயத்தையும் அறியாதவராய், சடகோபரின் அருளிச் செயல்களை அநுதினமும் பாடுவதையே தனக்கு இன்பமாகக் கொண்டு, ஆழ்வாருடைய திருக்கல்யாண குணங்களுக்கு தோற்று, அவரையே ஸ்வாமியாகக் கொண்டு உறுதியோடு நிலை நின்ற ஸ்ரீமதுரகவிகள் எப்போதும் தமது நெஞ்சிலே நிலைத்து நிற்க வேண்டும் என்று,

அவிதித விஷயாந்தரஸ் சடாரே: உபநிஷதாம் உபகாந மாத்ர போக:
அபி ச குணவஸாத் ததேக சேஷீ மதுரகவிர் ஹ்ருதயே மமாவிரஸ்து

என்று தனியன் இட்டருளினார். அத்துடன் நில்லாமல், ஆழ்வாரைத் தவிர வேறு தெய்வத்தை அறியாத மதுரகவிகளே நமக்கு ரக்ஷகரும், ஸ்வாமியுமாய் இருக்கிறார் என்று தமிழிலும் தனியன் இட்டருளினார்.

வேறொன்றும் நானறியேன்! வேதம் தமிழ் செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறு எங்கள்
வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வார் அவரே அரண்.

என்று அருளினார். இப்படிப்பட்ட ஸ்ரீமதுரகவிகள் அருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பு பதினொரு பாசுரங்களைக் கொண்டது. நம் பூர்வாசார்யர்களில் நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ஆகிய மஹநீயர்கள் வ்யாக்யானம் இட்ட பெருமை இப்பிரபந்தத்திற்கே உரியது. மேலும் 'தம்பிரான்படி'' என்னும் உரையும் இப்பிரபந்தத்திற்கு உள்ளது.

பரதாழ்வானிடம் இருந்த இராமபக்தியைக் கழித்து ஸ்ரீசத்ருக்கனாழ்வான் பரதாழ்வானிடம் ஈடுபட்ட நிலைபோல் ஸ்ரீமதுரகவியாழ்வார் ஸ்ரீநம்மாழ்வாரிடம் ஈடுபட்டார். ஆழ்வார் எம்பெருமான் பக்கலிலும் அவன் அடியார் பக்கலிலும் ஈடுபட்ட அனைத்தையும் அந்த ஆழ்வார் திருவடிகளிலே ஆக்கி, அதையே விரும்பிப் பேசி அநுபவத்தால் புறப்பட்டது தான் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு'.

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் - என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே! (1)

முதல் பாட்டில் ஆழ்வாரிடத்தில் உள்ள 'இன்பத்தில்' மதுரகவிகள் திளைத்ததைச் சொல்லுகிறார். ஆழ்வார் உகந்த விஷயத்தை முதலில் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நடுக்கரும்பான க்ருஷ்ண லீலைகளில் உரலோடு கட்டுண்ட எளிமையில் மோகித்து ஆறுமாதம் ஆழ்வார் இருந்ததால் அதனைப் பேசினார். எதற்கும் உதவாத, சிறு சிறு முடிச்சுக்களைக் கொண்ட கயிறு அநந்ய ப்ரயோஜனமாய் உள்ள வஸ்து எம்பெருமான் உகப்பது. கண்ணி நுண் சிறுத்தாம்பு என்று ஜ்ஞான, பக்தி வைராக்யத்தாலே பகவானைக் கொண்டாடலாம். மேலும் ருசி, ஸங்கம், பக்தி பரபக்தி, பரஜ்ஞானம் பரமபக்தி என்று பல நிலைகளை உடையதாய் பல கண்ணிகள் கொண்டு எம்பெருமானை அடைகிறோம். அப்பேர்ப்பட்ட பெருமானாய் பல ஆச்சர்யங்களை தனது ஸங்கல்பத்தாலே செய்து காட்டின கண்ணனை 'என் அப்பன்' என்கிறார் மதுரகவிகள். ஆழ்வாரே தமக்கு எல்லாம் என்று கொண்ட மதுரகவிகள், எம்பெருமானைச் சொன்னதில் தவறு உண்டோ என்றால் இல்லை. ஒரு ஊருக்கு யாத்திரை செல்லும் வழியில், ஓரிடத்தில் நிழலும் நீரும் கிடைத்தால், அங்கு தங்கி சிறிது இளைப்பாறிச் செல்லும் போது ரஸிப்பது போல, ஆழ்வாருக்கு உத்தேச்யமானதைச் சொல்லுவதில் தவறில்லை. எம்பெருமானாகிற படுகுழியில் வீழாது மதுரகவிகள் ஆழ்வாரை நண்ணினேன் என்கிறார். பகவத் விஷயங்கள் அவனிடமே மனதைப் பறிகொடுக்கப் பண்ணும். அதனால், மாயன் எதிரில் வந்து நிற்க, என்? அப்ப! நில்! (என் அப்பனில்) என்று அவனை நிற்க வைத்து, அவனைக் காட்டிலும் மேன்மை கொண்ட குருகூர் நம்பியாய், சுந்தர பரிபூர்ண நம்பியை தன்னகத்தே கொண்டு "யான் பெரியன்'' என்று பூர்ணமாக எம்பெருமானைத் தனக்கே ஆக்கிக் கொண்ட ஆழ்வார் திருநாமமே என்றும் நாவில் இனிமையாய் இன்பத்தைத் தருகிறது என்கிறார்.

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்!
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன் குருகூர்நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே. (2)

"ப்ரத்யக்ஷே குரவ: ஸ்துத்யா:" என்கிறபடியே ஆசார்யனை நேரே துதிப்பதற்காகவே எம்பெருமான் நாக்கைப் படைத்தான். அதனைக் கொண்டு அடியேன் ஒருவனே பயன் பெற்றேன் என்கிறார். அப்ராக்ருத சரீரம் பெற்று பரமபதத்தில் சென்று எம்பெருமானை அநுபவிக்க வேண்டும். ஆழ்வாரை அநுபவிக்க இங்கேயே இந்த சரீரத்தில் இருந்து கொண்டே அவருடைய ஸ்ரீஸூக்திகளை அநுபவித்தே பெறலாம். "பாவோ நாந்யத்ர கச்சதி" என்ற அநுமனைப் போல, ஆழ்வாரைத் தவிர மற்றொன்றில் என் மனம் ஈடுபடாது என்கிறார். மனத்தின் துணையில்லாமல் நாவிற்கு ஏற்பட்ட இனிமையை முதல் பாட்டில் கூறி. சரீரம் விட்டு, அவாவற்று வீடு பெற்று திருவடி சேர்ந்து ஒன்றின ஆழ்வாரைப் போல் அல்லாமல், அந்த ஆநந்தத்தை அநுபவிக்க இங்கேயே ஆழ்வார் திருவடி நிலைகளைப் பற்றினேன். புருஷகாரம் வேண்டாத திருவடிகள் ஆழ்வாரின் திருவடி நிலைகளைப் பற்றினேன். புருஷகாரம் வேண்டாத திருவடிகள் ஆழ்வாருடையது. "ஆசார்ய தேவோ பவ" என்று சாஸ்த்ரம் காட்டிய வழியில் சென்றாலும் பகவத் விஷயத்தைப் பற்றித் தானே காலத்தைப் போக்க வேண்டும் என்றால், இல்லை, ஆழ்வாருடைய பாசுரங்களைத் தடையின்றி எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே என்று பாடித் திரிவேன் என்கிறார்.

திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்,
பெரியவண் குருகூர் நகர் நம்பிக்கு ஆள்
உரியனாய் அடியேன் பெற்ற நன்மையே. (3)

ஆழ்வார் உகந்த விஷயம் என்னும் அளவிலே எம்பெருமானையும் உகந்தேன் என்கிறார். ஆசார்ய ஸம்பந்தம் குலையாதே உள்ளமையும், ஆசார்யன் உகப்பும் தான் தன்னுகப்பு என்றும் வாழ்ந்த திரிபுரா தேவியும், கூரத்தாழ்வானும் மதுரகவி அடியொற்றி வந்தவர்கள். சேஷி உகந்ததை உகக்குமதுவே கைங்கர்யத்தின் எல்லை நிலம்.

திரிந்து போன வழிகளில் இருந்து மீண்டாகிலும் என்கிறார். அதாவது மதுரகவிகள் திருவாய்மொழியே பரம போக்யம் என்று பற்றி, அதை விட்டுவிட்டு அதில் உள்ள இசையை (பாவின் இசை) விட்டு, இனிமையை விட்டு, பாடிய ஆழ்வாரையும் விட்டு, அவர் உகந்த விஷயமான எம்பெருமானைக் கண்ட அநுபவத்தைச் சொல்லுகிறார். ஆழ்வாருக்குக் கண்ணனாய் காட்சி அளித்த எம்பெருமான் மதுரகவிகளுக்குக் கட்டுண்டு கிடந்த மாயனிலும் நில்லாது, அதற்கும் மூலமான நித்ய ஸூரிகள் அநுபவிக்கும் பரமபத நாதனாய் கரியகோலத் திருஉரு என்று திருமாமகளோடு கூடி எழுந்தருளினான்.

ஸர்வேச்வரனின் வண்மை (ஆர்ஜவம்) திருத்த முடியாத அளவிலே, பெரிய வண் (ஆழ்வாரின் வண்மை) பரமபத நாதனின் திருநாடு தோற்கும் படியாய் 'குருகூர் நகர்' என்று ஆழ்வார் அவதரித்து ஆனது. அப்படிப்பட்ட ஆழ்வாரின் கைங்கர்யத்தையே பரம போக்யமாய் கொண்டு, ஆழ்வாரின் திருவடிகளில் அவர் குணங்களுக்குத் தோற்ற அடியவனாகி பரமபத நாதனை இங்கேயே காணும்படி பண்ணின ஆழ்வாரின் உபகாரம் பெரிய பேறு என்கிறார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்தாலே 'பசுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ச்ரயா:" என்று மிருகமோ, மனிதனோ, பக்ஷிகளோ எதுவாயினும் பரமபதம் சென்றடையலாம். ஆனால், பரம ஸ்ரீவைஷ்ணவரான நம்மாழ்வாரின் திருவடி ஸம்பந்தத்தாலே, பரமபதநாதனே அங்கிருந்து இங்கே காணும்படி அடியவனுக்கு கிடைத்த நன்மை இவ்வுலகில் யார் பெறுவார் என்கிறார்.

நன்மையால் மிக்க நான் மறையாளர்கள்
புன்மையாகக் கருதுவராதலின்
அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்
தன்மையான் சடகோபன் என் நம்பியே! (4)

நலங்களாய நன்கலைகள் நவின்று நலத்தார் மிக்கார் என்று போற்றப்படும் வேதம் ஓதிய அந்தணர்கள் அனைவரும் அடியவனை தாழ்வுடையவன் என்று புன்மையாகவே என்னுடைய தாழ்மையைக் காட்டி விலக்கியது மிகவும் கொடியது. 'தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த அத்தா' என ஆழ்வாருக்கு

மயர்வற மதிநலம் அருளியவன் போல், எனக்கு எல்லா உறவு முறையுமாய் இருந்து பூர்ணமாய் சடத்தை (அசித்தை)ப் போன்று இருந்த என்னை மீட்டுத் தந்த சடகோபனே எனக்கு ஸ்வாமி என்கிறார்.

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன் மாடத் திருகுகூர் நம்பிக்கு
அன்பனாய், அடியேன் சதிர்ந்தேன் இன்றே. (5)

முதலிரண்டு அடிகளாலே தன்னுடைய புன்மையை, அதாவது தான் "கள்வனேன் ஆனேன்" என்பது போல, பொருளுக்கும் காமத்திற்கும் வசப்பட்டு திரிந்த தன்மையும் திரிந்து, ஆழ்வாரிடத்தில் வந்த பின்பு ஏற்பட்ட நன்மையைப் பிற்பகுதியில் அருளுகிறார்.

'பிறர்' என்று எம்பெருமானைச் சொல்கிறார். 'பிறர் நன்பொருள்' என்பதால் எம்பெருமானுக்கும் அவன் அடியார்க்கும் உரித்தான ஆத்மாவைக் களவு கொண்டேன்! அரசனுடைய விலை உயர்ந்த பொருளைக் களவு கொண்டவன், மக்களின் பொருளைக் கொள்ளை அடிப்பது சுலபம். அதுபோல எம்பெருமானின் வஸ்துவான இந்த ஆத்மாவைக் களவு கொண்டு, தேஹமே ஆத்மா என்று வாழும் ஸம்ஸாரிகள் நடுவே, பெண்களையும், பிறர் நன்பொருள் என்பது போல பிறர் மடவாரையும் அபஹரித்து மஹாபாதகங்கள் செய்து திரிந்தேன். பேற்றுக்கு ஸாதன அநுஷ்டானங்கள் பண்ணுவது போல, எனது பாதகங்கள் அநுஷ்டானங்களாக இருந்தது முன்பு. ஆனால் ஆழ்வாரின் கடாக்ஷத்தாலே இன்று அடியேன் என்று சொல்லும்படியாய் குருகூர்நம்பி என்னை மேன்மை அடையும்படி ரக்ஷித்தார்.

இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் ஏத்த அருளினான்
குன்றமாடத் திருக்குருகூர் நம்பி
என்றும் என்னை இகழ்விலன் காண்பனே. (6)

அநாதிகாலமாகப் புறத்தே திரிந்து உழன்று வந்த போதிலும், அது மீண்டும் தலை தூக்காமல் எப்போதும் ஆழ்வாரையே துதிக்கும்படி ஆழ்வார் அருளின உபகாரத்தைச் சொல்லுகிறார். எம்பெருமானின் அருள் "பழுதிலா ஒழுகல்" இருந்தால் தான் உண்டு. ஆனால் ஆழ்வாரின் அருளோ இன்று தொட்டு அது ஏழேழ் ஜன்மங்களுக்கும் உற்றோமே ஆவோம் என்று உண்டு. அவன் தன் புகழையே ஏத்தும்படியாய், எம்பெருமான் புகழும் உள் அடங்கி இருக்கும்படி என்னை இகழாது, என்றும் இகழாது, என்றும் என்னை அவர் திருவடிகளிலே சேர்த்து அருளுகிறார். இது நேரே காணலாம். சொல்வதற்கு இல்லை என்கிறார்.

கண்டு கொண்டு என்னை காரிமாறப் பிரான்
பண்டை வல்வினை பாற்றி அருளினான்
எண்திசையும் அறிய இயம்புகேன்
ஒண்தமிழ் சடகோபன் அருளையே. (7)

ஆழ்வாரின் நிர்ஹேதுக க்ருபையால் வீவில் காலம் இசைமாலைகள் ஏத்தி மேவப் பெற்ற அடியவனைப் போல, மற்றவர்களும் ஆழ்வார் அருள் பெறுவதற்கு, ஆழ்வாரின் பெருமையை எங்கும் சொல்லக் கடவேன் என்கிறார்.

"ஔஷத்யம் பரமம் மந்யே குரோ: அஜ்ஞாந வாரகாத்" என்று பராசர மஹரிஷி அஜ்ஞான நிவர்த்தகனான ஆசார்யனை அன்றி ஸம்ஸார நிவ்ருத்திக்கு வேறு மருந்தில்லை என்று அருளினதால், 'குரும் ப்ரகாசயேத் தீமாந்' என்னும் ப்ரமாணப்படி எட்டுத் திக்கிலும் ஆசார்யனான ஆழ்வாரின் பெருமையை, ஒளி பொருந்திய திருவாய்மொழி அருளிப் பண்ணின உபகாரத்தை பறை சாற்றுவேன். எனது தொன்மையான பாபங்களால் வன்மையோடு இருந்த வல்வினைகள் எல்லாம் விலகும்படி இருந்தான். கண்டு கொண்டு என்பதால் காரிமாறப் பிரான் என்று ஸ்வாமியான தன்மையோடு கூடினவர் ஆழ்வார். எனவே, என்றும் என்னை இகழாமல் அருளினதை அடியவன் எங்கும் இயம்புவேன் என்கிறார்.

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வருமறையின் பொருள்
அருள் கொண்டு ஆயிரம் இன் தமிழ் பாடினான்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே. (8)

'அருள் புரிந்த சிந்தை' யினால் "நின்னருளே புரிந்து இருந்தேன்". 'அருளாதொழியுமோ' 'ஆழியான் அருளே' 'அவனது இன்னருள்' என்று 'அருள் பெறுவார் அடியார் தம் அடியன்' என்று எம்பெருமானின் அருளே நமக்கு மோக்ஷத்திற்கு உபாயம். வேறு ஒரு நோற்ற நோன்பிலேன் என்று எம்பெருமானின் அருளைக் கொண்டாடும் அடியவர்கள் இன்புறும் படியாக, தெளியாத மறை நிலங்கள் தெளிய ஓதி அருளினான் ஆழ்வார். அந்த வேதத்தில் மறைந்திருந்த ரஹஸ்யப் பொருளை. 'ஸர்வ கந்தஸ் ஸர்வரஸ:' என்று தலை சிறந்ததை அருளினான்.

"திருமால் தாளில் தலை வைத்தேன் சடகோபன் அருளினாலே" என்று வேதாந்தங்களில் ஆழங்கால்பட்ட வேதாந்த தேசிகனும் ஆழ்வாரின் அருளைக் கொண்டாடினார். எம்பெருமானின் அருளைக் காட்டிலும் விஞ்சிய அருளாய் தாமும் வியந்து போகும்படி 'தப்புதல் இன்றி தனைக் கவிதான் சொல்லி', மொழிபட்டு ஓடும் தொண்டர்க்கு அமுதமான ஆயிரம் இன்தமிழ்ப் பாக்களாகிற திருவாய்மொழி ஆயிரமும் பாடி அருளினான். 'அசித்' என்னும்படியான பெரும்பாழ், 'சித்' என்னும்படியான மலர்ச்சோதி, ஈச்வரன் என்னும்படியான 'சுடர் ஞான இன்பம்' இம்மூன்று தத்வங்களைக் காட்டிலும் "சூழ்ந்ததனில் பெரிய என் அவா" என்று தம்முடைய பகவத் பக்தியைக் காட்டின ஆழ்வாரின் அருளானது மதுரகவிக்கும் இவ்வுலகினில் மிக்கதாய் இருந்தது என்கிறார்.

மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்
தக்கசீர்ச் சடகோபன் என் நம்பிக்கு ஆள்
புக்க காதல் அடிமைப் பயனன்றே. (9)

வெறும் வேதியராக இல்லாமல், 'மிக்கார் வேத விமலர்' என்னும்படி மிக்க வேதியர் வேதத்தை ஓதி ஜ்ஞான பக்தி வைராக்யத்தோடு கூடி, வேதத்தின் உட்பொருளாய், வேதவிளக்காய் உள்ள எம்பெருமானையே நாடி, அதன் உட்பொருளான சேஷத்வத்தை அறிந்து, "பயிலும் சுடரொளி" "நெடுமாற்கடிமை" என்னும் பதிகங்களில் காட்டின வேத ஸாரமான பாகவத சேஷத்வத்தை நன்கு தமது நெஞ்சிலே நிலை நிறுத்தின ஆழ்வாரைப் போற்றுகிறார். "திருமாலவன் கவி ஏற்கும் புகழ்" என்னும்படி ஸமஸ்த கல்யாண குணங்களோடு கூடின சடகோபரின் நீர்மை, எளிமை போன்ற குணங்களைக் காட்டி, அவரிடம் அன்பு கொண்டு உகந்து அடிமைப்பட்டிருத்தல் ஆகிய பயன் ஆழ்வார் அருளால் கிட்டியது என்கிறார். நிற்கும் நான்மறை என்பது போல் நாலு ப்ரபந்தங்களும், தமது நெஞ்சில் நிலையாக நிற்கச் செய்த அரிய செயலையும், அதனால் தாம் அப்போதே கிட்டின அடிமைப் பயனையும் அறிவிக்கிறார். ஆழ்வாருக்கு மயர்வற மதிநலம் அருளினாலும், அடிமைப்பயன் "முனியே நான்முகனே" என்கிற பதிகம் வரை சென்று தான் கிட்டியது. மதுரகவிகளுக்கோ ஆழ்வாருக்கு அடிமைப்பட நினைத்ததாலே உடனே கிட்டியது என்கிறார்.

பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்
செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயில் நின்றார் பொழில் சூழ் குருகூர் நம்பி
முயல்கின்றேன் உன்றன் மொய்கழற்கு அன்பையே. (10)

ஆழ்வார் தமக்குச் செய்த நன்மைகளை அநுஸந்தித்து, தாம் அவருக்குச் செய்த நற்செயல்கள் மிக மிகக் குறைவு என்கிறார். ஆசார்யன் செய்த உபகாரத்திற்கு ஈடாக சிஷ்யன் எந்தச் செயலும் செய்ய முடியாது. "ஆசார்யனுக்கு ஸத்ருச ப்ரத்யுபகாரம் பண்ணலாவது விபூதி சதுஷ்டயமும் ஈச்வரத்வயமும் உண்டாகில்" என்று பிள்ளை உலகாசிரியனும் அருளினாரே! சிஷ்யன் ஒரு கைம்மாறு செய்யாது போனாலும்,

ஆசார்யன் சொல்படி நடக்கும் பாங்காவது வேண்டுமே. அந்தப் பாங்கும் அல்லாது, ஒரு பயனும் இல்லாமல் இருக்கும் அடியவனை, அடியவனின் செயல்கள் நல்லதாக ஆகும்படி அடியவர் தம்மைத் திருத்திப் பணி கொள்ளவல்லராய் ஆழ்வார் பணிகொள்வான் என்கிறார். "என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கு என்செய்கேன்?" என்று ஆழ்வார் அருளினபடி மதுரகவிகளும் சிறந்த ஆழ்வார் திருவடிகளிலே மொய்கழலே ஏத்த முயல்கின்றேன் என்கிறார். ஆழ்வார் திருவடிகளின் இனிமையாலே, அன்பு செய்ய முடியாமல் திகைக்கிறேன் என்கிறார்.

அன்பன் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம்
அன்பன் தென்குருகூர் நகர் நம்பிக்கு
அன்பனாய் மதுரகவி சொன்ன சொல்
நம்புவார் பதிவைகுந்தம் காண்பனே! (11)

மதுரகவி சொன்ன கண்ணிநுண் சிறுத்தாம்பு ப்ரபந்தத்தையே தஞ்சமென்று நம்புவர்களுக்கு இருப்பிடம் பரமபதம் என்கிறார். உலகனைத்திற்கும் தாயாய்த் தந்தையாய் இருக்கும் எம்பெருமானை "அன்பன்" என்று பொதுவாகச் சொல்லி, 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்த' 'அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே' என்று அடியவர்களின் அன்பு பூண்டவர் நம்மாழ்வார். தன்னை அடைந்தவர்கட்கெல்லாம் அன்பன் தென்குருகூர்நம்பி. எம்பெருமானிடம் அன்பு பூண்டதோடு நில்லாமல், ஆசார்யரான நம்மாழ்வார் விஷயத்திலும் அன்பு பூண்டு, அதோடு நில்லாமல் எல்லா அடியவர்களிடமும் அன்பு பூண்டு அடியார்களை ப்ராப்ய ப்ராபகங்களாகக் கொண்டு ஒழுகும் மதுரகவிகள். சிஷ்யனும் பரமப்ராப்யனாகையால் நம்பிக்கு அன்பன். ஆழ்வார் பரமப்ராப்யம் போல் ஆழ்வார் திருநகரியும் பரமப்ராப்யம். அதுவே பரமபதம். ஆழ்வார் இருப்பிடம். 'உரைக்கவல்லாருக்கு வைகுந்தம் ஆகும் தம் ஊரெல்லாம்' என்பது போல மதுரகவி சொன்ன ப்ரபந்தம் நம்புவார் இருப்பிடமே பரமபதம். ஆகவே, ஸாக்ஷாத் விஷ்ணு ஸ்வரூபமான அவதாரமே ஆழ்வார்களும் ஆசார்யர்களும்,

சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு

என்னும்படி அவதரித்த நம்மாழ்வார். அவர் அருளிய திருவாய்மொழியும், ஆழ்வாருமே நமக்கு மோக்ஷத்தைக் கொடுக்க வல்லமை பெற்றன.

பிறவாத பேறு பெறுதற்கு எஞ்ஞான்றும்
மறவாது இறைஞ்சு என்மனனே! துறவாளன்
வண்குருகூர் வாவி வழுதிவள நாடுடைய
தண் குருகூர் நம்பி திருத்தாள்

என்று அடியேன் பிறந்த குலமான பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சாதித்தபடியும், மதுரகவி சொன்ன தொல்வழியுமே நம்போல்வாருக்கு உய்யும் வழி.

ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராரும் சித்திரையில் சித்திரை நாள் பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும்
உற்றது எமக்கென் நெஞ்சே ஓர்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி

திருச்சித்திரகூடம் முனைவர் ஸ்ரீ உ.வே. ஏ. வி. ரங்காசாரியர் ஸ்வாமி

முன்னுரை

ஆலி நாட்டரசரான திருமங்கை மன்னன் தெய்வங்களுக்கரசரான திருவரங்கரிடம், மரங்களுக்கு அரசான திருவரசின் அடியில், மந்திரங்களுக்கு அரசான திருமந்திரத்தை (வாள் வலியால்) உபதேசம் பெற்று, எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவித்து, கணையாழியைக் கழற்றும் போது திருவடி ஸம்பந்தம் பெற்று, மயர்வற மதிநலம் அருளப் பெற்று, எம்பெருமானைப் பூரணமாக அநுபவித்து, அவ்வநுபவம் உள்ளடங்காமல் "வாடினேன் வாடி" என்று தொடங்கி, பெரிய திருமொழியைப் பாடினார். அதில் தாம் எம்பெருமானிடம் பெற்றதும், தம்மை உய்வித்ததுமான அஷ்டாக்ஷரத்தின் பெருமையை "நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று தெரிவித்து, திருமந்திரத்தினால் சொல்லப்படுபவன் வாழுமிடமாய், பாரத தேசத்திலுள்ள அர்ச்சாவதார திவ்ய தேசங்களில் திருமந்திரத்தை எம்பெருமான்தானே சிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று வெளியிட்ட பதரிகாச்ரமம் தொடங்கி, மலை நாட்டுத் திருப்பதி அநுபவத்தோடு நிறைவு செய்து, விபவாவதாரத்தை அநுபவித்து முடித்து, பின்பு எம்பெருமானிடம் தேக ஸம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேணும் என்று பிரார்த்தித்து, தமது பெரிய திருமொழியைத் தலைக்கட்டினார்.

பெரிய திருமொழின் சிறப்பு

1. திருக்கோட்டியூர் நம்பி, எம்பெருமானார், கூரத்தாழ்வான், எம்பார் ஆகிய ப்ரதான ஆசாரியர்கள் தனியன் அருளிச் செய்திருப்பது.

2. திருமந்திரம் காட்டும் அர்ச்சாவதார எம்பெருமான்களை 86 திவ்ய தேசங்க்ளில் கண்டு, மங்களாசாஸனம் செய்து திருமொழி பாடியது.

3. பெரிய திருமொழியில் இவர் தொழுவது, தூது விடுவது, எம்பெருமானைக் கேள்வி கேட்பது, ஊடுவது ஆகியவை திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதார எம்பெருமான்களையே ஆகும்.

4. குமுதவல்லியைத் திருமணம் புரிய விரும்பிய இவ்வாழ்வார் அவள் விருப்பப்படி திருநறையூர் நம்பியிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றார். எம்பெருமானிடமிருந்து நேராக திருமந்த்ர உபதேசமும் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்ற ஆழ்வார் இவர் ஒருவரே. அதனால் இவர் மந்திரம் கொள் மங்கையர் கோன் என்று போற்றப்படுகிறார். இதனால் திருமந்த்ர ப்ரதிபாத்யனான எம்பெருமான் திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருப்பதை உணர்ந்து திவ்ய மங்களாசாஸனமான பெரிய திருமொழியை அருளிச் செய்தார்.

5. இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் அநுபவித்ததும் திருமந்த்ரார்த்தமே ஆகும். "வாடினேன் வாடி" என்ற முதல் திருமொழியில் "நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம் என்று தொடங்கி, பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும்," இமையோர் தலைவருடைய திருநாமம் நங்கள் வினைகள் தவிர உரைமின் நமோ நாராயணமே" என்று பிறர்ந்து உபதேசித்தார்.

திருமந்தரார்த்தப் பொருள் விளக்கம்

அஷ்டாக்ஷர திவ்ய தேசமான திருக்கண்ணபுரம் சென்று "நான் வணங்கும் கண்ணனைக் கண்ணபுரத்தானை" என்றபடி 10 திருமொழிகளில் அவரை மங்களாசாஸனம் செய்தார். பத்தாவது திருமொழியில், திருமந்த்ரார்த்த விளக்கத்தை

மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறை அம்மானே. (8-10-3)

என்று விவரித்துள்ளார். இப்பாசுரத்தில் 'வேறு தெய்வமும் ஆச்ரயிக்கத் தக்கது என்பவர்களோடு இணங்க மாட்டேன். திருமந்திரத்தில் அநேக அர்த்தங்கள் இருந்தாலும், நான் தெரிந்து கொண்ட பொருள் திருமால் அடியார்க்கு அடிமையாகிற பாகவத சேஷத்வமே' என்று பெருமாளிடம் விண்ணப்பிக்கிறார்.

பிள்ளைலோகாசாரியர் தமது முமுக்ஷுப்படி ரஹஸ்யத்தில், "மற்றெல்லாம் பேசிலும் என்கிறபடியே அறிய வேண்டிய அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு" என்று அருளிச் செய்துள்ளார். அதாவது 1. ஜீவ ஸ்வரூபம் 2. ஈச்வர ஸ்வரூபம் 3. அவனை அடைவதற்குரிய உபாயம் 4. ப்ராப்தி பலமான கைங்கர்யம் 5.அதனை அடையமுடையாமல் தடுக்கின்ற தடை ஆகியவையே அந்த அர்த்தங்கள். இப்படித் திருமந்த்ரத்தில் அநேக அர்த்தங்கள் இருந்தாலும், தான் அறுதியிட்ட பொருள் அநந்யார்ஹசேஷத்வம்; அதுவும் ததீய சேஷத்வ பர்யந்தாயிருக்கும். இதனை "உற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்கிற பாகவத சேஷத்வமாகிற அடியார்க்கு அடிமையே என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் திருக்கண்ணபுரத்துறையம்மானிடம் கற்றதை "கண்ணபுரத்துறை அம்மானே! நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க்கடிமை' என்று அறிவிக்கிறார். "இதுவன்றோ நீ இங்கு வந்து இருந்து ஓதுவித்த அர்த்தம்" என்பது பெரியவாச்சான் பிள்ளை உரை.

மேலும் 'மற்றுமோர் தெய்வம் உடையாரோடு' என்னாமல் 'உளதென்று இருப்பாரோடு' என்று அருளிச் செய்துள்ளதால், பிற தெய்வங்களோடு மாநஸ ஸ்பர்சமுடையாரோடும் உற்றிலேன் என்கிறார். இதனால் ச்ரிய: பதியே உபாயமும் உபேயமும் என்றிருத்தலும், தேவதாந்தர ஸ்பர்சமும், தாமஸ புருஷர்களோடு ஸம்ஸர்க்கமும இன்றிக்கே இருத்தலே ஸ்வரூபமாகும் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

இதனைத் திருமந்திரத்தின் முதல் பதமான ப்ரணவம் தெரிவிக்கிறது. அகாரம் ஸர்வதேச ஸர்வகால, ஸர்வ ப்ரகாரத்தாலும் எல்லா ஆத்மாக்களையும் ரக்ஷித்துக் கொண்டு போகிற ஸர்வேச்வரனுக்கே சேஷமாயிருக்க வேண்டும் என்கிறது; உகாரம் வேறு யாருக்கும் சேஷம் அன்று என்கிறது; மகாரம் அநந்யார்ஹ சேஷத்வத்தைக் கூறுகிறது. அதனாலேயே "மற்றுமோர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன். உற்றதும் உன் அடியார்க்கடிமை – நான் திருமந்த்ர அர்த்தமாக அறுதியிட்டது,சேஷபூதர்களான பாகவதர்களுக்கே அடிமை; அவர்களை விட்டு உன்னளவில் நின்றவன் அல்லேன் என்கிறார்.

இங்கு 'மற்றெல்லாம் பேசிலும்' என்பதற்கு வேறொரு வகையான விளக்கமும் சொல்லப்படுகிறது. உகாரத்தினால் வேறு ஒருவருடன் சேஷத்வத்தைக் கழித்திருக்க, எங்ஙனே பாகவத சேஷத்வம் கொள்வது? என்ற கேள்வி வரும் – இதற்குப் பதில் இதர சேஷத்வத்தைக் கழிப்பதானாலும் பாகவத சேஷத்வம் வேண்டுமென்பது அதன் பொருளாகும் எனலாம். அடுத்து, நாராயண பதத்திலே நார பதத்திற் சொன்ன எல்லா ஜீவர்களுடன் கூடிய பெருமாளுக்கு அடிமை பணிக்கப்பட்டிருக்க, எங்ஙனே, "உற்றிலேன்" என்பது சேரும்? என்ற கேள்வியாகும். நாரபதம் எல்லா ஜீவர்களையும் குறித்தாலும், இங்கே அவர்களின் அடிமை பொருளாகாது என்பது உணரத் தக்கது.

பெரியவாச்சான் பிள்ளை உரையில் "தர்மியை அநுபந்தித்திருக்கும் தர்மங்களை நேரே வ்யவஹரித்ததில்லையாகிலும் தர்மியைச் சொன்ன போதே தர்மங்களையெல்லாம் சொல்லிற்றாமிறே" என்றது பரமாத்மாவையோ, தேவதாந்தரத்தையோ, சேஷனான ஜீவனையோ சொல்லும் சொற்கள் அவரவர்களுக்கு ப்ரமாண ஸித்தமான ஆகாரங்களையும் நினைவூட்டுமாகையால் அந்தந்த ஆகாரத்தோடே அவர்கள் சொல்லப்படுவார்கள். அதனால் பகவத் பாகவதர்களுக்கு சேஷத்துவமும், இவனுக்கு அவர்களைப் பற்ற சேஷத்வமும், இவனுக்கு அவர்களைப் பற்ற சேஷத்வமும், தேவதாந்தரங்களுக்கு சேஷித்வம் இல்லாமையும், அவர்களைப் பற்ற இவனுக்கு சேஷத்வமில்லாமையும் ஸித்திக்கும்.

இந்த அனுஷ்டானத்தை நீர் எங்கே யார் சொல்லி கற்றீர்? என்று எம்பெருமான் கேட்க, ஆழ்வார் திருவரங்கன் உபதேசம் செய்த முதல் தடவையிலேயே திருமந்திரத்தின் அர்த்தமாக இதனை முதலிலேயே வாடினேன் வாடியில் "கண்டு கொண்டேன்" என்று நான் கண்டு கொண்டதைத் தெரிவித்தேன். இப்போது அதனைத் தெளிவாக உம்மிடம் கற்றுத் தெளிந்தேன் என்கிறார்.

இதனைப் பாரந்தபடியில், நம: சப்தார்த்தம் சேதன ஸ்வரூபம். அஹங்கார மமகாரங்கள் கழிந்தவுடன், பாகவத காஷ்டை வந்து விடும். அப்போது "அடியார்க்கு ஆட்படுத்தாய்" என்ற பகவத் பாரதந்தர்யமும், அதன் காஷ்டா பூமியான பாகவத பாரதந்தர்யமும் அநுஸந்தேயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த பாகவதர்களுக்குப் பாரதந்தர்யம் என்பதற்கு திவ்ய தேசங்களில் அர்ச்சாவதார எம்பெருமான்களிடத்திலே ஈடுபட்டுள்ள பாகவத பாரதந்தர்யம் என்பதைத் திருமங்கை ஆழ்வார் "தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேலாரே", "எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே", "பேராளன் பேரோதும் பெரியோரை ஒரு காலும் பிரிகிலேனே" "கடல் மல்லைத் தலைசயனம் ஆறெண்ணும் நெஞ்சுடையார் அவர் எம்மை ஆள்வாரே" என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு திருமந்த்ரார்த்த நிஷ்டரான திருமங்கை ஆழ்வார் தமது பெரிய திருமொழியில் திவ்ய தேச பாகவதர்களின் சேஷத்வத்தையே ஸாரமாகக் காட்டியுள்ளார். இதற்கு அடி நம்மாழ்வாரே. நம்மாழ்வார் திருவாய்மொழியில் "பயிலும் சுடரொளி"யில் பாகவத விஷயத்தில் சேஷித்வ அநுஸந்தானம் பண்ணி, "நெடுமாற்கடிமை"யில் போக்யதாநுஸந்தானம் பண்ணியுள்ளார். அந்த அடிப்படையிலேயே திருமங்கை ஆழ்வாரும் "நண்ணாத வாளவுணரில்" பாகவத போக்யதாநுஸந்தானம் பண்ணி, "கண் சோர வெங்குருதி"யில் பாகவத சேஷித்வ அநுஸந்தானம் பண்ணி, அஷ்டாக்ஷர திவ்ய தேசமான திருக்கண்ணபுரத்திலே "தாம் திருமந்த்ரார்த்தமாக அறுதியிட்டிருக்கும் அர்த்தம் அநந்யார்ஹ சேஷத்வம்; அதுதான் ததீய சேஷத்வ பர்யந்தமாக அல்லது இராது" என்பது பெரிய வாச்சான் பிள்ளையின் உரை. அதனைக் கண்ணபுரத்தம்மானிடம் "கண்ணபுரத்துறை அம்மானே! இதுவன்றோ நீ இங்கு வந்திருந்து ஓதுவித்த அர்த்தம்" என்றும் தெரிவிக்கிறார்.

இப்படிக் கண்ணபுரத்தம்மானிடம் "நான் உன்னளவில் நின்றேன் அல்லேன்" என்று சொன்னால் அவன் திருவுள்ளம் என்படுமோ" என்று நஞ்சீயர் கேட்க, பிள்ளை "அல்லிக் கமலக் கண்ணனாகிறான்" என்று அருளிச் செய்ததைப் பெரியவாச்சான்பிள்ளை தமது உரையில் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரபன்னனுடைய லக்ஷணமாகிறது ச்ரிய:பதியே உபாயோபேயம் என்றிருக்கை. தேவதாந்தர ஸ்பர்சமும், தாமஸ புருஷர்களோடு ஸம்ஸர்க்கமும் இன்றிக்கே இருக்கையும், பாகவதரையொழியச் செல்லாமை உண்டாயிருக்கையும் ஆகும்.

முடிவுரை

ஆக, பெரிய திருமொழியில் ஸாரமாகத் திருமங்கைஆழ்வார் காட்டியிருப்பது, ச்ரிய:பதியே உபாயோபேயம் என்பதும், திவ்ய தேசங்களில் அர்ச்சாவதார எம்பெருமான்களுக்கு நித்ய கைங்கர்யம் செய்யும் அடியார்களுக்கு அடியாராயிருக்கும் பாகவத தாஸ்யமே புருஷார்த்தம் என்பதுமாகும். இந்த வகையில் அடியார்க்குப் பல்லாண்டு பாடுவதே பெரிய திருமொழியின் ஸாரமாகத் திருமங்கையாழ்வார் காட்டிக் கொடுத்த "உற்றதும் உன் அடியார்க்கு அடிமையின்" அநுஷ்டான பூர்த்தியாகும்.

திருக்குறுந்தாண்டகம்

முனைவர் ஸ்ரீ உ.வே. கோ. க. அ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி

திருக்குறுந்தாண்டகம் – 'குறுந்தாண்டகம்' என்பது தமிழில் ஒரு வகைப் பிரபந்தம். ஆறு கணம் அளவு கொண்ட நான்கு பதங்களையோ எட்டு கணம் அளவு கொண்ட நான்கு பதங்களையோ விரும்பிய கடவுளைப் புகழ்ந்து பாடும் பிரபந்தம். ஆறு கணங்களைக் கொண்டது குறுந்தாண்டகம் ஆகும். குறுந்தாண்டகத்தில் ஒவ்வொரு மெய்யெழுத்தோடு கூடிய பதினைந்து எழுத்துக்களுக்குக் குறையாமல் இருபத்தாறு எழுத்துக்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்பது மரபு. திருமங்கையாழ்வார் தாம் 'வாள் வலியால் மந்திரங்கைக் கொண்டு எம்பெருமானைக் கண்டு இத்தனை நாள் இழந்த இழவு தீர அவனைக் குறித்து 'வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்' என்று பெரிய திருமொழியில் அவனுடைய ஸ்வரூபரூப குண விபூதிளைத் திருமந்திர முகத்தாலே அவனை உணர்ந்து, தம்முடைய முன்னை வினைகளையும் தாம் பெற்ற பேற்றின் பெருமையையும் அனுஸந்தித்துத் தலை சாய்க்கிறார். முதல் திருமொழியிலிருந்து பதினோராம் திருமொழி வரை எம்பெருமானின் அவதாரங்களின் குண விசேஷங்களை அனுபவித்து 'ஆற்றங்கரை வாழ்மரம்போல்' என்றும் 'இருபாடெரி கொள்ளியின் உள்ளெறும்பே போல்' என்றும் ஸம்ஸாரத்தின் இன்னல்களைப் பார்த்து இத்திருக்குறுந்தாண்டகத்தில் கூப்பிட்டு தாகங் கொண்டவன் தண்ணீரைக் கண்டதும் முகத்திலும் உடம்பிலும் அந்நீரை இறைத்துக் கொள்வதைப் போலே பேசி அனுபவிக்கிறார்.

ரக்ஷகன்

'வைத்தமா நிதியாம் மதுசூதனன் (திருவாய். 6.7.11) என்னுமா போலே நிதியானவன்; இந்நிதியினை ப்ரஹ்மம் என்றும், அழிவில்லாதவன் என்றும், 'யோ வேத நிஹிதம் குஹையாம்' (தைத்திரிய உப) என்கிறபடியே குஹையான ஹ்ருதயத்திலே இருப்பவன் என்றும், தாரகன் என்றும் 'நிதியினைப் பவளத்தூணை என்னும் முதற் பாசுரத்தாலே ஆழ்வார் தெரிவிக்கிறார். மேலும் ப்ராப்யன். ப்ராபகன் அவனே; அவனை நினைப்பவர்களே அதிகாரிகள் என்றும் அறிவிக்கிறார். 'பவளத்தூணை' என்பதில் 'தூண்' என்னும் சொல்லால் எம்பெருமான் உபாய உபேயன் என்பதை ஸ்ரீராமாயண ச்லோகத்தால் தெரிவிக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. அதாவது 'ராமோ ராஜ்யம் உபாஸித்வா' என்கிறபடியே சக்ரவர்த்தி திருமகன் ராஜ்யத்தை ஆண்டு இறுதியில் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளினாற் போலே கஞ்சன் நினைவை அவனுக்கே முன் வைத்து அவன் உயிர் மாள வைத்து நாட்டைப் பாதுகாத்து ரக்ஷித்தான் எம்பெருமான் என்கிறார். திருவரசு அடியிலே தனக்குக் காட்சிக் கொடுத்தமையைத் தாம் மறக்க முடியாமல் தனக்கு ஸ்வரூபஜ்ஞானம் பிறந்ததாகவும், எம்பெருமான் தலைவன் என்றும், தான் அடியான் என்றும் இவனை விட வேறு உபாயம் ஏதுமில்லை என்றும் தான் உணர்ந்ததாக ஆழ்வார் கருதுகிறார்.

காரணன்

ஸ்வரூபஜ்ஞானம் பெற்ற ஆழ்வார் எம்பெருமானைக் கார்ய காரணானவன் என்பதைத் தெரிவிக்கிறார். காற்று, நீர், தீ இவற்றுக்கெல்லாம் அந்தர்யாமியாயிருந்து உலகிற்கே சரீரியாக உள்ளவனே பரம் பொருள் என்பதை "ஸேயம் தேவதைக்ஷத – ஹந்தாஹமிமாஸ் திரோ தேவதா: அநேந ஜீவேந ஆத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி" (சாந் 6.3.2) என்ற உபநிஷத்தால் விளக்குகிறார். அதாவது நிலம், நீர், நெருப்பு இம்மூன்றினுள்ளும் ஜீவாத்மாவுடன் நுழைந்து உலகில் பல வடிவங்களையும் பெயர்களையும் படைக்கப் போகிறேன் என்பதிலிருந்து எம்பெருமானே பரம்பொருள் என்பது புலனாகின்றதல்லவா? ஆச்ரித விரோதியான ராவணனைக் கொன்றபடியால் எம்பெருமானுடைய தேஜஸ் மிகுந்து பிற்பட்டவர்கள் யாவராலும் அனுபவிக்குபடியான போக்யமானவன். 'ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான்' (தைத்திரீய உப.)

என்னும்படி பரமாத்மாவின் ஆநந்த குணத்தை அறிந்தவர்கள் உலகில் எதனிடத்தும் பயங்கொள்ளார் என்று வேதம் கூறுகிறது. அக்குணத்தில் மூழ்கி 'ஏததேவ அம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி' (சாந் 3.7.1) என்கிறபடி அவனைக் கண்டு புஜிக்கலாம்படி அம்ருதமானவன்; ப்ராப்யப்ராபகங்களிரண்டும் அவனேயாதலால் இந்த அம்ருதபானம் செய்வார் 'உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்..... ம்ருத்யுர்ம்ருத்யும் நமாம்யஹம்' (ந்ருஸிம்ஹ அனுஷ்டுப் 12.1) என்பதால் ப்ரஹ்லாதனின் விரோதியான ஹிரண்யன் பட்டது போலே விரோதி ஸ்வரூபம் அழியும் என்பதை உணர்த்துகிறார்.

உபகாரகன்

'பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்து' என்கிறபடி மிகவும் பரப்புடையதாயும், மிகுந்த ஆழமுடையதாயும், அகலமானதாயுமான திருப்பாற்கடலில் மந்தரமலையை மத்தாகக் கொண்டு கடைந்து; 'ஸர்வலோக சரண்யாய' என்னும்படித் தன்னைப் பொதுவாக ஆக்கிக் கொண்டு ப்ரயோஜனம் கருதுபவர்களுக்குத் தன்னை அழியமாறி அவர்களுக்காக உருவத்தை எடுத்து உபகரித்த உத்தமன். அவனே அம்ருதமானவன். அவன் திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள என் அப்பன். அதாவது ஸ்வாமி, தலைவன் என்று 'அப்பனை' என்னும் சொல்லால் தெரிவிக்கிறார். அவனே உபகாரகன் என்றும் புகழ்கிறார். 'அப்பனை' என்று சொல்லி 'மைந்தனை' என்று சொல்வானேன் என்பதற்கு அரும்பதவுரைகாரர் 'அரும்பினை, அலரை என்னுமாபோலே என்று குறிப்பிடுகிறார். 'அரும்பினை, அலரை'— அதாவது கௌமாரம் கழியத் தக்கதாய் யௌவனம் வந்து குடிபுக்கதான நடுப்பருவத்தைச் சொன்னவாறு என்பதாம் (திவ்யார்த்த தீபிகை). முதற் பாசுரத்தில் தன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்த ஆழ்வார் இப்பாசுரத்திலும் 'வணங்கினேனே' என்கிறார்.

பகவத் விஷயம்

'கேட்கயானுற்றதுண்டு' என்னும் பாசுரத்தில் ஸாமர்த்யமும் ஸௌகுமார்யமும் உடையவனான எம்பெருமானின் விஷயத்தைக் கேட்பதற்குத் தனக்கு ஆசை இருந்ததுண்டு. ஆனால் 'புஷ்பஹாஸ' என்னுமாபோலே ஸுகுமாரமான வடிவை மானமிலாப் பன்றியாக வந்து நிலங்கோட்டிடைக் கொண்டது போலே தனக்கும் அருள வேண்டும் என்கிறார் ஆழ்வார். மனம், மொழி, உடல் இவற்றாலும் பற்றுதலாலும் மிக்க ஆசை கொண்டவராய் அனுபவிப்பவர்களுக்கு இனியவனாய் இருக்கிறவன் தன்னுடைய விஷயத்தில் பகவத் விஷயத்தை இனியதாக செய்வித்து ஸம்ஸார ஸாகரத்திலிருந்துத் தன்னை மீட்கச் செய்தானாம் அதனாலே பகவத் விஷயம் இனிது என்கிறார்.

எளிமை

நெருப்பிலே காய்ச்சி எடுக்கப்பட்ட இரும்பைப் போலே தன்னுடைய விடாயானது பக்தி பிறந்து பகவத் விஷயத்திலே ஊன்றியிருக்கச் செய்தது நெருப்பின் நடுவிலே மலர்ந்த மலரைப் போலே அடிமை கொள்ள வைத்தது என்று 'இரும்பனனுண்ட நீர்போல்' ஆயிற்று என்கிறார் ஆழ்வார். அதாவது தன்னிடமிருந்த அஹங்கார மமகாரங்களாகிய நெருப்பு, 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று இளையபெருமாள் சொன்னது போலே வழுவில்லாத அடிமை செய்யப் பெற்றது. இதுவே இந்த ஆத்மாவுக்கு ஆபரணமாயிற்று என்கிறார். 'சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்' (முமுக்ஷு.55) என்பது உலகாரியனின் திருவாக்கு அல்லவா! இதுவே 'பகவத் தாஸ்யம்' என்பதாம். ஆதலால், தான் உய்ந்து போனதாகவும், முன்பு 'அஸந்நேவ' (அஸத்து) என்றிருந்ததாகவும் தெரிவிக்கிறார். இங்கே 'அன்று நான் பிறந்திலேன், பிறந்த பின் மறந்திலேன் (திருச்சந்த–64). என்னும் திருமழிசைப்பிரானின் திருவாக்கை நினைப்பது. எம்பெருமான், விமுகனாய் (பாராதவனாய்) இருந்த தன்னுடைய மனத்திலே கடலை மணலோடு பருகி வரும் மேகம் போலே புகுந்தானாம். அவனுக்கு வேறு புகலிடமில்லாது ஒன்றாய் நின்றானாம். இவ்வாறு 'கலக்கக் கலக்கப் பருகலாம்படி ஒரு நீரானான்; இதுவுமொரு நீர்மை இருந்தபடி என்?' என்று ஆழ்வார் வியப்படைந்த நிலைமையைப் பெரியவாச்சான்பிள்ளை வெளிப்படுத்துகிறார்.

புகழுக்கு அப்பாற்பட்டவன்

'மூவரில் முதல்வனாய' என்னும் பாசுரத்தில் பிரமன், உருத்திரன், இந்திரன் ஆகிய மூவர்க்கும் காரணமானவன் என்று தெரிவிக்கிறார் ஆழ்வார். உலக நாயகனாயிருந்துத் திருக்குடந்தையில் பள்ளி கொண்டுள்ளான். தேனை விட மிக இனியவன். 'ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவான் ஏக ஏவ ஜநார்த்தந: (வி.பு. 1.2.66) என்கிறபடியே பிரமனுக்கு வேதத்தைக் கொடுத்தான்; அவன்தன் மகனுக்கு ஓட்டைப் பிரித்துக் கொடுத்தான். இந்திரனுக்கு 'மூவடி தாவென்ற கள்வனாயிருந்து (திருவாய். 3.8.9) உபகரித்தான். 'க: புண்டரீக நயந: புருஷோத்தம: க:' (ஸ்தோ.ர.12) என்னும்படி ஈச்வரனாயிருப்பவன். இன்கவி பாடும் பரம கவிகளான முதலாழ்வார்களாலே புகழப்படுகிறவன். செவிக்கு மட்டுமல்லாது நாவுக்கும் இனியவன்; ஆபரணங்களைப் போலே அணிந்து கொள்ளும்படியான பரம ஸுலபன். நித்ய ஸூரிகள் தலையில் சூடும் பூவைப் போன்றவன். வெள்ளத்தில் மூழ்குவதைத் தவிர அவனைப் பாசுரமிட்டுப் புகழவொண்ணாது என்கிறார். மூவரில் 'முதல்வனாய ஒருவனை' என்பதற்கு 'ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம' என்ற ச்ருதிச் சாயையாலே 'ஒருவனை' என்கிறார் என்று காஞ்சீ ஸ்வாமி காட்டுகிறார்.

ஆச்ரித பரதந்த்ரன்

'இம்மையை மறுமை தன்னை' என்னும் பாசுரத்தில் திருமலையில் நின்று கொண்டு பரமபதத்திலிருக்கும் நித்யஸூரிகளுக்கும் இவ்வுலகிலுள்ள நித்ய ஸம்ஸாரிகளுக்கும் வேறுபாடில்லாது ஒருபடிப் பட்டவனாயிருந்து அருளைத் தரும் எம்பெருமானின் ஆச்ரித பாரதந்த்ரியத்தை நினைப்பவர்களின் திருவடிகளும் அவனுடைய திருவடிகளும் தம்முடைய சிரத்துக்குப் பொருந்துவன என்று சொல்லி "தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலைமேலாரே"(பெரிய திரு 7.4.1) என்ற ஆழ்வார் திருவுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

வெறிதே அருள் செய்பவன்

'...... போகதசையில் ஈச்வரனழிக்கும் போது நோக்க வேணும் என்று அழியாதொழிகை' (முமுக்ஷு.92) என்னும் உலகாரியனின் திருவாக்குக்கிற் கிணங்க இருப்பதே ஜீவாத்மாவின் நிலையாகும். சேஷத்வத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட வேண்டும்; எம்பெருமானின் ஆநந்தமே வேண்டுவது என்றபடி நிலையில்லாத தேஹ நினைவை ஸம்ஸாரிகள் விடாமல் அதைக் காப்பாற்றும் செயலை நினைந்து ஆழ்வார் வெறுக்கிறார். எம்பெருமான் வெறிதே அருள் செய்பவன் என்பதை உணராமல் மின்னலை விட நிலையற்ற தேஹத்துக்கு உறுதி வேண்டுகின்ற ஸம்ஸாரிகளைக் கண்டு ஆழ்வார் வியப்படைவதோடல்லாமல் வெறுப்புற்றும் பேசுகிறார்.

அகார வாச்யன்

'உள்ளமோ உருகி நில்லாது' என்னும் பாசுரத்தில் ஆழ்வார் எம்பெருமானைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்கிறார். அதற்கு உதாரணமாக எம்பெருமானுடைய ஔதார்ய (வள்ளல்) குணத்தைத் தெரிவிக்கிறார். 'மாறி மாறிப் பலபிறப்பை (திருவாய் 2.6.8) எண்ணி இருபாலும் எரிகிற கொள்ளியினுள்ளே தவிக்கும் எறும்பு போலே தான் இருப்பதாகச் சொல்கிறார். மஹாபலியின் வள்ளல் தன்மைக்குக் குறைவு ஏதும் வாராமலும் இந்திரனுடைய வேண்டுதலுக்கும் குறைவு வாராமலும் தன்னுடைய நெடிய கையைத் தாழ விட்டுக் கொண்டு பூமியை அளந்து, பிரயோஜநாந்தரபரனான இந்திரனுக்கு வழங்கியதால் எம்பெருமானுடைய வடிவிலே ஒப்புமையில்லாத ஒரு ஒளி (தேஜஸ்) ஏற்பட்டதாக ஆழ்வார் உணர்கிறார். ஆழ்வாருக்கு அரங்கநாதனுடைய துணையை விட வேறில்லை என்கிறார். '(குழையுமால்) இவன் சைதன்யத்துக்கு ப்ரயோஜநம் – இது பொல்லாது என்றறிகை; அவன் சைதன்யத்துக்கு ப்ரயோஜநம் – அப்படி செய்கை; அதாவது – ரக்ஷிக்கையிறே' என்பது பெரியவாச்சான்பிள்ளையின் பேருரை. அதாவது ஆழ்வாருடைய உணர்வுக்குப் பயன் தான் (ஆழ்வார்) வேறு துணையைத் தேடாதிருப்பது; எம்பெருமானுக்குப் பயன் ரக்ஷிக்கை என்பதாகும். 'அப்படிச் செய்கை' என்பதற்கு 'அகாரப்படியே செய்கை' என்பது அரும்பதவுரை.

இங்கே "இதில் அகாரம் ஸகல சப்தத்துக்கும் காரணமாய், நாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாய் ஸர்வ ரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது" (முமுக்ஷு.35) என்ற உலகாரியரின் திருவாக்கை நினைக்கத் தக்கது.

பக்தி-பரமபக்தி

'சித்தமும் செவ்வை நில்லாது' என்னும் பாசுரத்தில் ஸம்ஸாரத்திற்கு அஞ்சி, எம்பெருமான் திருவடிகளில் பக்தி ஏற்பட்டு அதுவே பரம பக்தி ஆயிற்று என்கிறார் ஆழ்வார். தன்னுடைய பாவத்தால் அவனை நினைக்கப் புகுந்தால் தரித்து நிற்கிறதில்லையாம். பக்தியை உண்டாக்கிய அவனே அளவுபடுத்த வேண்டும். அவனுடைய திருவடிகளில் கைங்கர்யமொழிய வேறொன்றும் அறியாராம். ஆழ்வார் அவனை மறந்ததாகவும் 'ஏது செய்தால் மறக்கேன்' என்று சொல்லும்படிச் செய்தவனை வேறொன்றால் அறிய விரகுண்டோ என்று தமக்கு ஏற்பட்ட பரமபக்தியைத் தெரிவிக்கிறார்.

பரஞ்சோதி ஸ்வரூபம்

'தொண்டெல்லாம் பரவி நின்னை' என்னும் பாசுரத்தில் செய்யும் அடிமையைச் செவ்வனே செய்து "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று பிரார்த்தித்தாலும் மனக்கவலையால் அடிமை செய்ய முடியுமோ என்று எதிர்மறைப் பொருளால் வினவுகிறார். 'வருநரகம் (மனக்கவலை) தீர்க்கும் மருந்து' (மூன்றாம் திருவ.3) என்கிறபடியே அந்த மனக்கவலையைத் தீர்க்குமவனான எம்பெருமானே நிர்வாஹகனாயிருந்து அருள் புரிய வேண்டும் என்கிறார். அவனே தனவான்; அவனே "நாராயண பரோஜ்யோதி" (புருஷ ஸூக்தம்) என்கிறபடியே பரஞ்சோதி ஸ்வரூபனான அவனையே முறையாகத் துதிப்பேன் என்கிறார் ஆழ்வார்.

சுய முயற்சியைக் கைவிடுதல்

'ஆவியை அரங்கமாலை' என்னும் பாசுரத்தில் உலகங்களுக்கெல்லாம் ஒருயிரானவனை நித்யஸூரிகள் நித்யமும் அனுஸந்திக்கும் "நமோ நாராயணாயவென்று" (திருப்பல்.4.12) பல்லாண்டு பாடும் திருநாமத்தை அழுக்குடம்பெச்சில் வாயால் தூய்மையற்ற நான் சொன்னதோடல்லாமல் 'நானும் சொன்னேன் நமருமுரைமின்' (பெரிய திரு 6.10.6) என்று என்னைச் சேர்ந்தவர்களையும் சொல்ல வைத்த பாவி என்று அலமாந்து கொள்கிறார் ஆழ்வார். அரங்கமாலாய் தாரகனாயிருப்பவன் கண்ணுக்கினியாயிருந்து மாசுச: என்று சொல்லி ஆழ்வாருடைய கண்ணுக்குள்ளே தோன்றினானாம். இதனால் சுயமுயற்சியைக் (ஸ்வயத்நமறுகை) கைவிடும்படி ஆயிற்று என்றபடி 'இவர் (ஆழ்வார்) கண் செம்பளித்துப் பார்க்கிறதெப்போதோ? ஏன்று பார்த்திருந்தான் போலே காணும் அவனும் (எம்பெருமான்)' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் கருத்து. கண்செம்பளிக்கை – ஸ்வயத்நமறுகை என்பது அரும்பதவுரை.

அகடிதகடநா ஸாமர்த்யம்

"பாபாநாம்" (ஸ்ரீராமா. யுத்.44) என்னுமாபோலே ஸகஜமாயும் ஸ்வாபாவிகமாயும் தான் செய்த பாவங்களனைத்தும் நன்கு தீயினால் காய்ந்த இரும்பானது நீரை உட்கொண்டு அந்த இரும்பானது குளிர்ந்து மீண்டும் நீரை வெளிக் கொணர்வது போல் தம்முடைய பாவங்கள் தம்மை விட்டு அகன்றன என்று 'இரும்பனன்றுண்ட நீரும்' என்னும் பாசுரத்தால் உணர்ந்தாகச் சொல்கிறார். இதற்குக் காரணம் எம்பெருமானின் அகடிதகடனா ஸாமர்த்யம் தான் என்கிறார். அரங்கத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் கண்ணாலே தின்னும் கரும்பு. அவனைத் தான் மகிழ்ச்சி கொள்ளாத கண்கள் இப்போது 'அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே' (அமலனாதி,10) என்னும்படியாயிற்று என்கிறார்.

ஆழ்வாரின் அலமாப்பு

'காவியை வென்ற கண்ணார்' என்னும் பாசுரத்தில் ஆழ்வார் தாம் பெண்டிரின் கலவியையே கருதி 'பழுதே பல பகலும் போயின' (முதல் திருவ.16) என்று தாம் செய்த பாவத்தை நினைந்து இழந்த நாளைக்கு

துக்கங் கொண்டாடுகிறார். 'தூவிசேரன்னமன்னும்' என்னும் தொடரால் அன்னப்பறவை போலுள்ள பெரியாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார் முதலானோர் எழுந்தருளியுள்ள தேசத்தில் தாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய நினையாது அந்த நினையாமையின் பயனே பாவியேனாக ஆக்கியது என்கிறார். 'தீயதும் நல்லதும் கார்யகாரண பாவத்தாலேயிறே வருவது' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் பேருரை.

சேஷ சேஷி பாவம்

பகவானுக்குத் திருமஞ்சனம் செய்வது, பூவாலே அலங்கரிப்பது முதலிய கைங்கர்யத்தாலே கண்ணனை மகிழ்வித்தாள் யசோதைப் பிராட்டி. அவள் பாவனையிலே பெரியாழ்வார் "பாதிரிப் பூச் சூட்டவாராய்', கருமுகப்பூச் சூட்டவாராய்' (பெரியாழ்.3.9) என்று கைங்கர்யம் செய்வதை அனுஸந்தித்த பாங்கிலே திருமங்கையாழ்வாரும் கைங்கர்யம் செய்ய ஆசையுற்று மானசீகமாகத் திருமஞ்சனம் செய்து மகிழ்கிறார். ஆழ்வார் 'முன்பொலாவிராவணன்தன்' என்னும் பாசுரத்தாலே அனுமன் செய்த கைங்கர்யத்தை நினைக்கிறார். அதாவது 'இத்தகையாலடையாளம் ஈதவன் கைமோதிரமே (பெரியாழ்.3.10.8) என்கிறபடியே ஸ்ரீராமனுடைய மோதிரத்தை அசோக வனத்திலிருக்கும் ஸீதாப் பிராட்டிக்குக் கொடுத்து அவளுடைய நலன்களைக் கேட்டுக் கொண்டு வந்து பிராட்டியினுடைய கணையாழியைப் பெற்று, தன் வாலில் வைத்த தீயால் இலங்கையைக் கொளுத்தி விட்டு, மீண்டும் ஸ்ரீராமனை அடைந்து "*கண்டேன் சீதையை*" என்று சொல்லி அந்தக் கணையாழியைக் கொடுத்தபோது ஸ்ரீராமன் ஆநந்தக் கடலில் மூழ்கினான். அதைக் கண்ட சிறிய திருவடி அன்பென்னும் மனத்தால், ஞானமென்னும் பரிமளம் நிறைந்த நீரால் மானசீகாக ஸ்ரீராமனை நீராட்டிய சிறிய திருவடியை நினைவு கூறுகிறார். இத்தால் தலைவனுக்கு அடியான் செய்ய வேண்டிய கைங்கர்யத்தை மனமுவந்து செய்ய வேண்டும் என்றபடி. 'சேஷி சேஷி முறையிலே அடிமை செய்கை' என்பது அரும்பதவுரை.

அவதாரங்கள்

'மாய மான் மாய செற்று' என்னும் பாடலில் நான்கு அவதாரங்களை அனுபவிக்கிறார். அதாவது மாய மானாக வந்த மாரீசனை நசிப்பித்த ஸ்ரீராமனின் அவதாரத்தையும், 'மருதிற நடந்து' என்பதாலே யசோதைப் பிராட்டி கண்ணனை உரலில் கட்டியபோது அவ்வுரலோடு இழுத்து வந்து இரு மருத மரங்களிடையே சென்று குபேர புத்திரர்களின் சாபத்தை நீக்கிய கிருஷ்ணாவதாரத்தையும், 'வையம் தாய்' என்பதில் 'தாய்' என்னும் சொல்லைத் 'தாவி' என்பதாகக் கொண்டு "பாயோரடி வைத்ததன் கீழ்ப் பரவை நிலமெல்லாம் தாய்' (திருவாய். 6.9.6) என்று வையமெல்லாம் வியாபித்து அளந்து கொண்ட திரிவிக்கிரமாவதாரத்தையும், 'அம்மா பரவை பொங்கத் தடவரை திரித்து' என்னுமத்தாலே மிகப் பெரிய கடலிலே புகுந்து வானவர்களுக்கு அமுதம் கடைந்தளித்த கூர்மாவதாரத்தையும் நினைக்கிறார். அநஸூயை பிராட்டிக்கு சூட்டினாற் போலே என்பதைச் 'சூட்டுவன் தொண்டனேனே' என்னும் தொடரால் குறிப்பிடுகிறார் பெரியவாச்சான்பிள்ளை.

மோக்ஷம்

எம்பெருமானின் பெருமையைப் பேசி அடியார்கள் உய்ந்து போகிறார்கள்; 'கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும், சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன் திருவடி தாட்பாலடைந்த' (திருவாய் 1.7.3) சிசுபாலன் மோக்ஷம் பெற்றான் என்றார் 'பேசினார் பிறவி நீத்தார்' என்னும் பாடலாலே. "ப்ரதிபவமபராத்துர் முக்த ஸாயுஜ்ய தோ பூ: (ஸ்தோ.ரத். 63) என்கிறார் ஆளவந்தார். அதாவது ஆச்ரயித்தார் பெறும் பேற்றைக் கொடுத்தது என்றபடி. ஸாயுஜ்யம் = ஸமானகுண யோகம் என்பது. 'என்பது இவ்வுலகின் வண்ணம்' என்பதற்கு 'எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லையென்றே (திருவாய். 4.10.6) என்னும் தொடருக்கு "ந நந்திதம் கர்ம ததஸ்தி லோகே" (ஸ்தோ.ர. 23) என்னும் ச்லோகத்தை எடுத்துக் காட்டுகிறார் பெரியவாச்சான்பிள்ளை. அதாவது நன்மைகளை உண்டாக்கிப் புருஷார்த்தத்தையும் தருவதாக பகவதபிப்ராயமாக ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி காண்கிறது. "நாட்டை அழியாமைக்காக சிசுபாலனைக் கொற்றவன் வாசலிலே சுழற்றி யடித்தானித்தனை. ருசி முன்னாகப் பெறுவதிறே பேறாவது" என்னும் ஆளவந்தார் நிர்வாஹமும்

நினைகிற்பாலது. 'பேசினேன் என்னும் சொல்லுக்கு 'உண்ணப்புக்கு பயிர்பட்டு அழகியதாக உண்டேன் என்னுமாபோலே' என்கிறார் உரைகாரர். அதாவது எளனமாகச் சொல்வதாம். எசிப் பெறும் போகஷும் வேண்டா என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

வெறிதே அருள் செய்தல்

'இளைப்பிலைனைந்தினை இயக்கம் நீக்கி' என்னும் பாசுரத்தால் துக்கமாய், அதற்குக் காரணமான அவித்யா, ஞானமின்மை, அஸ்மிதா (அஹங்காரம்), ராகம் (பொறாமை), த்வேஷம் (பகை), அபிநிவேஷம் (மரணபயம்) இவை ஐந்தையும் விட வேண்டும் என்கிறார் ஆழ்வார். தன் சிந்தையை ஒரு நிலைப்படுத்தி கண்ணின் மேல் இமையைக் கீழ் இமையோடு சேர்த்து மூக்கின் நுனியைப் பார்த்து கொண்டிருக்கும் நிலையை 'முன்னிமையைக் கூட்டி' என்னும் தொடரால் தெரிவிக்கிறார் ஆழ்வார். ஐம்புலன்களையும் அடக்கி, ஞானத்தாலே வைத தீபமான பகவானை சாஸ்த்ர விதிப்படி உபாஸனம் செய்து பெருமுயற்சியால் அவனைக் காண்பதரிது. பக்தியாலே அவனைத் துதித்தாலும் அவன் நிர்ஹேதுகமான (வெறிதே அருள் செய்வது) அனுக்ரஹித்தாலல்லது எம்பெருமானைக் காண முடியாது. 'தோன்றலும் சுடர்விட்டு ஆங்கே' என்பதற்கு கஜேந்திராழ்வானின் கதையைக் காஞ்சி ஸ்வாமி எடுத்தாளுகிறார். 'மெய்ம்மையே காண்கிற்பாரே' என்னும் தொடரால் ஸர்வேச்வரனைக் காணமுடியாது என்று சொல்லி யோக ஸாஸ்த்ரத்தில் சொல்லுகிறபடியே உபாஸித்துக் காண்பார்க்குக் காணலாம் என்று இரண்டாம் கூற்றாகப் பெரியவாச்சான்பிள்ளைத் தெரிவிக்கிறார்.

உய்யும் வகை

'பிண்டியார் மண்டையேந்தி' என்னும் பாடலில், எம்பெருமான் உகந்தருளின திருப்பதிகளிலே மனத்தை ஊன்றினவர்களைத் தவிர மற்றவர்கள் உய்ய வழியில்லை என்கிறார் ஆழ்வார். 'இளைப்பினை இயக்கம் நீக்கி' என்னும் பாடலில் சொன்னது போல் கவலைப்படாமல் "காம்பறத்தலை சிரைத்து உன் கடைத்தலை யிருந்து வாழும் சோம்பரை யுகத்திபோலும் சூழ்புனல் அரங்கத்தானே" (திருமாலை 38) என்னும் பாங்கில் திவ்ய தேசானுபவமே காலக்ஷேபமாக இருப்பவர்க்கு எம்பெருமானுடைய அனுக்ரஹம் எல்லையில்லாது அமையும் என்பது கருத்து என்பர் காஞ்சி ஸ்வாமி.

பயன்

பிரமனும் இந்திரனும் நல்ல மலர்களையிட்டுத் துதித்துத் தாமரைக் கண்ணனுடைய விஷயமாக பெரிய ஸ்வபாவத்தையுடைய வேலை ஏந்திய கலியன் அருளிச் செய்த இனிய இருபது தமிழ்ப் பாசுரங்களையும் அநந்ய ப்ரயோஜநராய் கற்க வல்லவர்கள் தெளிவிசும்பான பரமபதத்தை ஆளப் பெறுவர்கள் என்று பயனைச் சொல்லித் தலைக்கட்டுகிறார் ஆழ்வார்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

திருநெடுந்தாண்டகம்

முனைவர் மாடபூசி ஸ்ரீ உ.வே. வரதராஜன் ஸ்வாமி, திருப்பதி

முன்னுரை

பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்கு அறிய வேண்டிய ரகசியங்கள் மூன்று, அவை திருமந்திரம், துவயம், சரம ச்லோகம் என்பனவாகும். இவற்றின் விளக்கமாக அமைந்ததே ஆழ்வார்கள் அருளிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகும். இதில் திருமங்கையாழ்வார் அருளிய ஆறு பிரபந்தங்களில் முப்பது பாசுரங்கள் கொண்ட திருநெடுந்தாண்டகம் கடைசி பிரபந்தமாகும். இந்தப் பிரபந்தத்தில் எம்பெருமான் ஆழ்வாருக்கு ஒரு காரணமின்றி இயற்கை இன்னருளாலே அறிவுள்ள பொருள், அறிவில் பொருள், ஈச்வரன் ஆகிய மூன்று தத்துவப் பொருள்களையும் காட்டிக் கொடுக்கக் கண்டு அநுபவித்து "அதனில் பெரிய என் அவா" என்று நம்மாழ்வார் ஈடுபட்டாப்போலே தம்முடைய அதிகமான ஆசைக்கு இரை போராமையாலே தடுமாறிக் கதறி, பின்பு தாம் அவாவற்றுப் பேரின்பப் பெருவாழ்வான வீடுபேற்றைப் பெற்று மகிழ்ச்சியடைந்தவராய் இருந்தபடியைப் பேசி முடிக்கிறார். இப்பிரபந்தம் மூன்று பத்தாக வகுக்கப்பட்டுள்ளது. முதல் பத்துப்பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையிலிருந்து பேசினவை. நடுவில் பத்துப் பாசுரங்கள் தாய்ப் பாசுரமாக அமைந்தவை. கடைசிப் பத்துப் பாசுரங்கள் பரகால நாயகி பாசுரமாகச் செல்லுகின்றன.

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் இத்திருநெடுந்தாண்டகத்திலே மிகவும் கருத்து ஊன்றி இதன் ஆழ்பொருளில் ஈடுபட்டு, 'திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம்' வல்லவர் என்று ஒரு பெயர் பெற்றவராய் இப்பிரபந்தத்தின் அர்த்தத்தைத் தமது திருவோலக்கத்திலே பலகாலும் பரக்க உபந்யஸிப்பராம். அதிலும் "மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின்தாழ" என்ற 21வது பாசுரத்துக்கு மிக விரிவாக உபன்யாஸம் செய்வர். அது கேட்டு எம்பெருமானாருடைய ஆசார்யர்கள் ஐவருள் ஒருவரான திருவரங்கப் பெருமாள் அரையர் மிக வியந்து 'முன்பு ஓர் ஆசார்யரிடத்திலும் இப்படி பொருள் கேட்கப் பெற்றதில்லை. இப்போது இவரிடத்திலே இது கேட்கப் பெற்றோம்' என்று கொண்டாடிப் பட்டரை மிகவும் நன்கு மதிக்கலானார் என்ற வரலாற்றை உரைப்பர் மஹாவித்வான் காஞ்சீ ஸ்வாமிகள்.

இந்தப் பிரபந்தத்துக்கு ஒரு கீதா ச்லோக பரமாகவும், நான்கு வகையில் ரஹஸ்ய த்ரய பரமாகவும் பட்டர் அருளிய வ்யாக்யான பிரகாரத்தை அவர் சிஷ்ய பரம்பரையில் வந்தவராய் பெரியவாச்சான் பிள்ளையின் சீடருமான பரகாலநல்லான் என்னும் ஆசார்யர் ஏடுபடுத்தியுள்ளார். அவற்றுள் முதல்பத்தாலே திருமந்த்ரார்த்தமும், இரண்டாம் பத்தாலே த்வயார்த்தமும், மூன்றாம் பத்தாலே சரமச்லோகார்த்தமுமாகச் சொல்லப்பட்ட குறிப்பை விவரித்து அநுபவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பட்டர்அருளிய ரஹஸ்யத்ரயத்தை விளக்கும் அஷ்டச்லோகிக்குச் சேர அடியேனுடைய ஆசார்யர் கூறியபடி ஒருவாறு விளக்க முயலுகிறேன்.

திருமந்த்ரார்த்தம்

"ஓம் நமோ நாராயணாய" என்னும் திருமந்திரம் ஸ்ரீபதரிகாச்ரமத்தில் நரனுக்கு ஸ்ரீமந்நாராயணன் உபதேசித்ததாகும். "என்னுருவில் நின்ற எந்தை" (திரு நெ.1) என்று சொல்லுகையாலே ப்ரணவார்த்தம் சொல்லப்பட்டது என்பர். "என்னுருவில் நின்ற" என்பதற்கு ஆழ்வாருடைய ஆத்மாவிலே எம்பெருமான் வந்து நின்றான் என்பதனால் "அகாரார்த்தோ விஷ்ணு:" (அஷ்.ச்.1) என்று பட்டர் அருளியபடியே அகாரத்தின் பொருளான விஷ்ணு எங்கும் பரந்திருப்பவர் என்பது சொல்லப்பட்டதாயிற்று. இதில் 'நின்ற' என்பதனால் ஆழ்வாரின் கலக்கம் போகும்படியாக எம்பெருமான் தரித்து நின்றான். 'எந்தை' என்பதற்குச் சேர "உகாரோ(அ)நந்யார்ஹம் நியமயதி ஸம்பந்தம்"(1) என்கிறபடியே விஷ்ணுவுக்கும் ஜீவனுக்கும் உள்ள தலைவன்–அடியவன் தன்மை சொல்லப்பட்டது. இதனால் எம்பெருமானின் இருப்புபோல தலைவனாம் தன்மையும் உறுதியாக்கப்பட்டது என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

"நம:" என்பதற்கு "மத்யமேந நமஸா பும்ஸ: ஸ்வரூபம் கதி:" என்று அருளியபடியே நடுவிலுள்ள நம: என்று பிரிக்கத்தக்க நம: என்ற பதத்தாலே ஜீவாத்மாவினுடைய தலைவனுக்கு அடிமை செய்து மகிழ்ச்சியூட்டும் தன்மை சொல்லப்பட்டது. இதனால் எம்பெருமானே உபாயம் என்று கருத்து. இது தன்னை "தளிர்புரையும் திருவடி என் தலைமேலவே" (1) என்பதனால் நம: பதார்த்தம் சொல்லுகிறது என்பர். இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை, எம்பெருமான் திருவடிகள் ஆழ்வார் தலையில் தொட்ட பின்பு வாட்டம் நீங்கி செவ்வி பெற்றது என்பர். "ஸமுசிதா வ்ருத்தி: ச.........உசிதா தஸ்யைவேதி ஹரே:" (2) என்கிறபடியே அடிமையாகிற ஸ்வரூபத்துக்கு மிகவும் பொருந்திய பகவத்கைங்கர்யமாகிற வ்யாபாரமும் 'ஹரி' என்னும் அவருடைய மகிழ்ச்சிக்கே உரியதாகிறது என்றதாயிற்று.

"நாராயண" என்பதற்கு "நிவாஹா: நராணாம் நித்யாநாம் அயநமிதி' (3) என்கிறபடியே "நாராயண" என்ற சொல்லானது நாரங்கள் என்று நித்ய வஸ்துக்களுடைய சமூகங்களுக்கு அடைய தகுந்தவன் என்றும், அடைவதற்கு உபாயம் என்றும் ஆதாரம் என்றும் சொல்லப்படுகிறது. "மின்னுருவாய் முன்னுருவில்" (1) என்று தொடங்கி "அனலுருவு" வரை நாராயண சப்தார்த்தத்தின் பொருள். அறிவுள்ள பொருளான ஆத்மா ஆகியவற்றின் தன்மைகளைச் சொல்லி, "எண்ணும் பொன்னுருவாய்" என்று தொடங்கி எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணங்கள் சொல்லப்படுகிறது. "பொன்னுருவாய்" (1) என்பதனால் பொன்னினுடைய ஸ்வபாவத்தையுடையதாகையால் எம்பெருமானுடைய ஸ்வரூபம் சொல்லுகிறது என்பர் பெரியவாச்சான் பிள்ளை. "மணியுருவில் பூதமைந்தாய்" (1) என்பதனால் மணியின் ஸ்வபாவத்தையுடையதான வடிவில் ஒளிமயமாய் இருக்கையும், மாணிக்கச்செப்பிலே பொன் போலே தனக்கு இருப்பிடமான ஸ்வரூபத்துக்கும் அந்த ஸ்வரூபத்துக்கு இருப்பிடமான குணங்களுக்கும் எம்பெருமான் சுத்தஸத்வமயமாய் இருக்கையாலே ஒளியை உண்டு பண்ணுபவனாயிருப்பன். இதுக்குக் காரணம் ஐந்து பூதமான பஞ்சோபநிஷத்தான பாமபதம் என்பர். இதனால் தனக்கே உரிய திவ்யமங்கள விக்ரஹம் சொல்லப்பட்டது. "புனலுருவாய்" (1) என்பதனால் ஸௌலப்யம் சொல்லப்பட்டது. அதாவது வசிஷ்டர் சண்டாளர் என்ற வேறுபாடின்றி ஒரு தறையிலே பயன் கொள்ளலாயிருக்கும் நீர் போலே எல்லாருக்கும் எளியன் என்றபடி. அதே சமயத்தில் அடியார்கள் பற்றுவதற்கு எளியவனானது போல பகைவர்களால் கிட்டமுடியாதவன் என்பதற்குச் சேர "அனலுருவில் திகழும்" என்கிறார் ஆழ்வார். ஆக, "நாராயண" என்றதன் பொருள் சொல்லப்பட்டதாயிற்று.

த்வயார்த்தம்

"ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே. ஸ்ரீமதே நாராயணாய நம:" என்கிற துவயத்தை எம்பெருமான் ஸ்ரீவிஷ்ணு லோகத்தில் பிராட்டி விஷயமாக பிரகாசிப்பித்தான்.

ஸ்ரீமத் சப்தார்த்தம்: "வில்லிறுத்து மெல்லியள் தோள் தோய்ந்தாய்" (13) என்றும், "திருமாலைப் பாடக் கேட்டு" (14) என்பதனாலும் ஸ்ரீமத் பதார்த்தம் சொல்லப்பட்டது என்பர். "நித்யாநபாயாம் ச்ரியம்" (6) என்கிறபடியே எப்போதும் பிரிவில்லாமல் ஸர்வேச்வரனோடு சேர்ந்திருப்பவளான பெரியபிராட்டியார் என்பதற்குச் சேர பிராட்டியான சீதையைப் பெறுகைக்கு இடைச்சுவரான வில்லை முறித்து, அந்த ஆண்பிள்ளைத் தனத்தைக் காட்டி பெண்மையால் வந்த அபிமானத்தையும் போக்கி மென்மையான பிராட்டியோடே கலந்தவன் என்று உரையிட்டதனால் "ஸ்ரீ" என்ற சொல்லின் பொருளும் மதுப்பின் பொருளும் சொல்லப்பட்டதாயிற்று. அவ்வாறே "திருமாலைப் பாடக்கேட்டு" என்பதனால் "நித்யயோகம்"(5) என்கிறபடியே எம்பெருமானோடு அவளுக்குண்டான நித்யமான ஸம்பந்தம் சொன்னபடி. அதாவது பற்றப் படும் வேளையோடு அநுபவ வேளையோடு வாசியற ஒரு மிதுனமே அடைக்கலம் என்று சொன்னது காண்க.

நாராயண சப்தார்த்தம்: "நாராயண" சப்தமாவது "ஸமுசித குணஜாதம்"(5) என்கிறபடியே நாம் எம்பெருமானைச் சரணம் பற்றுவதற்குத் தகுதியான அவனிடம் உள்ள குண சமூகத்தைச் சொல்லுவதாகும். அந்த வகையில் "கன்று மேய்த்து இனிதுகந்த காளாய்" (16) என்பதனாலே கன்றுகளைக் காப்பாற்றி மிகவும் மகிழ்ச்சிகொண்ட செருக்குடையவன் என்று சொல்லப்பட்டது. கன்று மேய்த்ததனால் எல்லாவற்றையும் காக்கும் தன்மையின் நிறைவு சொல்லப்பட்டது என்பர். "கடிபொழில்சூழ் கணபுரத்து என்கனியே" (16) என்பதனால் மணம்மிக்க சோலைகளாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே பழுத்த என் பழமே என்று உரைப்பர். இதனால் போக்யத்வம் சொல்லப்பட்டது. "மன்றமரக்கூத்தாடி மகிழ்ந்தாய்" (16) என்பதனால்

நாற்சந்தியிலே குடக்கூத்தாடி மகிழ்ந்தவனே என்பர். இடையர்களைத் தன் கூத்தாலே எழுதிக் கொள்ளுவானும் தானாய் இருக்கை என்பர் பிள்ளை. இதனால் ஸௌசீல்ய குணம் சொல்லப்பட்டது. "வடதிருவேங்கடம் மேயவெந்தாய்" (16) என்பதனாலே வட திருவேங்கடத்திலே பொருந்தி வாழ்கின்ற மிடுக்கன் என்பர். "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்று ஈச்வராபிமாநிகளோடு தாழ்ந்த பிறவிகளோடு வாசியறக் கொள்ளை கொள்ளும் வடிவு அன்றோ பரகாலநாயகிக்கு அரிதாயிற்று என்று பிள்ளை உரைப்பர்.இதனால் கண்டு பற்றுகைக்கு எல்லை நிலமான அர்ச்சாவதார ஸௌலப்யம் சொல்லப்பட்டது. "வென்றசுரர் குலங்களைந்த வேந்தே"(16) என்பதனால் அசுரக் கூட்டங்களை வென்று அழித்த அரசனே என்பர். இதனால் விரோதியைப் போக்கும் விரிந்த சோலைகளால் சூழப்பட்ட திருநறையூரிலே நின்றருளினவன் என்றும் ஏகதாரவ்ரதன் வந்து நிற்கிறான் என்று தோற்றும்படியாயன்றோ இருப்பது என்றும் சுவைபட உரைப்பர் பிள்ளை. இதனால் ச்ரிய:பதித்வம் சொல்லப்பட்டது. "துன்னுகுழற் கருநிறத்தென் துணையே" (16) என்பதனால் அடர்ந்த திருகுழற்கற்றையையும் கறுத்த திருமேனியையும் உடையவனாய் எனக்கு துணையானவனே என்பர். இதனால் வாத்ஸல்யம் சொல்லப்பட்டது. ஆக நாராயண சப்தார்த்தம் சொல்லப்பட்டதாயிற்று.

சரணௌ சப்தார்த்தம்: "தநுக்யாபநம்' (5) என்கிறபடியே சரணௌ சப்தத்தாலே உபலக்ஷண வகையாலே திருமேனியைத் தெரிவிக்கிற திருவடிகளைச் சொன்னபடி. "அடியிணையும் கமலவண்ணம்" (18) என்பதனால் திருவடிகள் இரண்டும் தாமரைப் பூப்போன்ற நிறமுடையவை என்பர். இந்த இடத்தில் எம்பெருமானை அநுபவிக்க இழியும் துறையான திருவடிகள். பற்றப்படுவதாய் இருப்பதும் திருவடிகளே. போக்யமாயிருப்பதும் திருவடிகளே என்று பலபடியாக உரைப்பர் பிள்ளை. "கமலவண்ணம்" (18) என்பதனாலே தாமரையை ஒரு போலியாகச் சொல்லுமதொழிய மறு நொடியிலே சருகாய்ப்போகும் தாமரை என்று திருவடியின் பெருமையை உரைப்பர். இத்தால் சரணௌ சப்தார்த்தம் சொல்லப்பட்டதாயிற்று.

சரணம் ப்ரபத்யே சப்தார்த்தம்: "சரணம்" என்பதனால் "உபாயம்" (5) என்கிறபடியே அத்திருவடிகளே உபாயம் என்பதையும் "ப்ரபத்யே" என்பதனால் "கர்த்தவ்ய பாகம்" (5) என்கிறபடியே ஜீவாத்மா செய்ய வேண்டிய அம்சமான அத்திருவடிகளை உபாயமாக பற்றுதலையும் சொன்னபடி. "இது செய்தார்" (11) என்பதற்குச் சேர பரகாலநாயகிக்கு தெய்வம் காரணமாக வந்த நோயாகையாலே பிரிதொன்றுக்கில்லாச் சிறந்த நோய் என்றும். இத்தை ஒரு காரணமின்றி எம்பெருமான் அருளாலே பெற்றவள் என்றும் எம்பெருமானிடம் ருசி உண்டு பண்ணுவதாய் இருப்பதும், பற்றுவதாயிருப்பதும், இனிமையாயிருப்பதும் அவன் வடிவே என்பர் பிள்ளை. இதனால் உபாயம் சொல்லப்பட்டது. "பேர்பாடி" (19) என்பதனால் கோயிலுக்குப் போகையில் உண்டான மிக்க அன்பாலே திருக்குடந்தைக்குப் பிற்படச் சொல்லவேண்டிய திருப்பேரை என்னும் திவ்விய தேசத்தை முற்படச் சொல்லுகிறாள் என்பர். இதனால் உபாயத்தில் ஊற்றம் சொன்னபடி. "நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்"(18) என்கையாலே"பாதேயம்.... அம்ருதம்" என்கிறபடியே ஜீவனுக்கு தாமரைக் கண்ணனின் திருநாம சங்கீர்த்தனமாகிற அமுதமே கட்டுச் சோறாகும் என்கிற ஸ்தாநத்திலே திருநீர்மலை திவ்யதேசம் பரகால நாயகியுடைய கட்டு சோறாக இருக்கும்படி என்று அநுபவிப்பர் பிள்ளை. மேலும்"நீராடப் போனாள்" (19) என்கையாலே எம்பெருமானோடு கலவியைச் சொல்ல கடவர்கள். அதாவது அநுபவிக்கப் போனாள் என்கை. இதனால் உபாயமாகப் பற்றியது சொல்லப்பட்டது.

ஸ்ரீமத் சப்தார்த்தம்: துவயத்தின் இரண்டாவது வ்யாக்யமான "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்பதில் "ஸ்ரீமத்" என்ற பகுதியினால் "மிதுநபரம் ப்ராப்யமேவம் ப்ரஸித்தம்" (5) என்று பட்டர் அருளியது பிராட்டியும் எம்பெருமானுமாகிய இருவருமான சேர்த்தியை அடையத்தக்க மற்ற பொருள்களைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததென்று பிரசித்தமான அடையத்தக்க அந்த தம்பதிகளைக் குறிக்கும் என்பர். இது தன்னையே "பாவை மாயன் மொய்யகலத்துள் இருப்பாள்"(19) என்கிறபடியே அற்புதமான எம்பெருமானுடைய அழகிய திருமார்பினுள் அடங்கி வாழும்படி இருப்பவள் பெரியபிராட்டியார். அதாவது தலைவனான எம்பெருமான் சேஷவஸ்துவான பிராட்டியினிடத்தில் ஒரு அவயவயத்துக்கு அடிமையானான் என்பர். மேலும் திவ்யமங்கள விக்ரஹத்துக்கு அடையாளமாயன்றோ பிராட்டி இருப்பது என்பர். இதனால் இருவருமான சேர்த்தி சொல்லப்பட்டது. அதுமட்டுமின்றி திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கும் அடையாளமாயிருப்பவள் என்பர்

பெரியவாச்சான் பிள்ளை. "பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு"(18) என்றதனால் குளிர்ந்த தாமரைப்பூவில் பரிமளம் வடிவு கொண்டாற்போலே இருக்கிற பிராட்டி திறத்து மிகவும் ஆசையுடையவன் என்றும் "அல்லிமலர் மகள் போக மயக்குக்கள் ஆகியும் நிற்கும்" என்று நம்மாழ்வார் அருளியபடியே அவன் குமிழ் நீருண்ணும்படி அன்றோ பிராட்டியின் இனிமை இருப்பது என்பர். இதனால் "ஸ்ரீமத்" சப்தத்தின் பொருளான திருமகளோடு சேர்ந்திருப்பது விளக்கப்பட்டது.

நாராயண சப்தார்த்தம்: "நாராயண" சப்தத்தாலே "ஸ்வாமித்வம்" (5) என்கிறபடியே நம் கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்கையாகிற தலைவனாம் தன்மை சொல்லப்படுகிறது. இதுதன்னை ஆழ்வார், "பாரை உண்டு பாருமிழ்ந்து பாரிடந்து பாரளந்து பாரையாண்ட பேராளன்" (20) என்பர். அதாவது உலகைப் பிரளயம் கொள்ளும் போது தன் வயிற்றில் வைத்து காத்தது, கருணையாலே படைத்தது, எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்து முறையை உணர்த்தியது ஆகியவற்றால் தான் தலைவன் என்பதை உணர்த்தும் வகையில் குணத்துக்கும் வீரசரிதத்துக்கும் உரிய திருநாமங்களுக்கு எண்ணிக்கையில்லாமையால் "பேராளன்" என்பர். "பாரையாண்ட பேராளன்" என்ற தொடரைப் பாசுரத்தின் அடிதோறும் கூட்டி பரகாலநாயகி ஓதிய திருநாமங்கள் என்று அனுபவிப்பர் காஞ்சீ ஸ்வாமி. "ப்ரார்த்தநாம்"(5) என்கிறபடியே "ஆய" என்பதன் பொருளான எம்பெருமானிடத்தில் வேண்டிக் கொள்ளுகையாகிற ப்ரார்த்தனை சொல்லுகிறது. இதுபற்றியே "பேராளன் பேரோதும்" (20) என்பதற்குப் பொருந்த இப்படி கணக்கற்ற திருநாமங்கள் இத்தனையும் இடைவிடாமல் பேசவல்லமையும், காலக்ஷேபத்தின் பொருட்டு பகவானுடைய குணங்களிலும் திருவிளையாடல்களிலும் மூழ்கி அநுபவிக்க வல்லமையும் சொல்லப்பட்டதால் 'ஆய' என்பதன் பொருள் உரைக்கப்பட்டது. இதனால் "நாராயணாய" சப்தத்தின் பொருளான தலைவனாம் தன்மையும் கைங்கர்ய ப்ரார்த்தனையும் தெரிவிக்கப்பட்டது.

நமச்சப்தார்த்தம்: நமச்சப்தத்தாலே "ப்ரபலதர விரோதி ப்ரஹாணம்"(5) என்கிறபடியே அகங்கார மமகாரங்கள் என்னும் வலிமை மிக்க விரோதிகள் நீங்கி "அசேஷம் அப்ரதிஹதம் நித்யம் தாஸ்யம் அர்த்தயே" (6) என்கிறபடியே எல்லாவிதமானதும், தடை ஒன்றில்லாததும், விடாமல் தொடருவதுமான கைங்கர்யத்தைச் செய்வதற்கு வேண்டுகிறேன் என்பதற்கு "பேர்பாடித் தண்குடந்தை நகரும்படி"(19) என்று அருளுவர். இதற்குச் சேர பெரியவாச்சான் பிள்ளை விலக்குதல் இல்லாமல் பரமபதத்தில் "ஏதத் ஸாமகாயந்நாஸ்தே" (வீடு பெற்றவர் ஹாவு ஹாவு என்று ஸாம கானங்களைப் பாடிக் கொண்டிருக்கிறார் – தை. உ.10.5) என்று மிக வேகமாய்ச் செல்லத் தட்டில்லையன்றோ என்று உரைப்பர். இதனால் நமச் சப்தத்தின் பொருளான தடங்கலற்ற வாசிக கைங்கர்யம் அறிவுறுத்தப்பட்டது.

சரம ச்லோகார்த்தம்

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" என்ற ச்லோகம் கண்ணன் திருத்தேர்த்தட்டில் அர்ஜுனனுக்குச் சொன்னதாகும்.

"ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்ற தொடர் வாக்கியத்துக்கு "மத்ப்ராப்த்யர்த்ததயா மயோக்தமகிலம் ஸந்த்யஜ்ய" (7) என்று அருளுவர் பட்டர். இதில் "அகிலம்" என்பதனால் மோக்ஷமென்னும் பலத்துக்கு உபாயமாய், கருமயோக ஞானயோகங்களை அங்கமாகக் கொண்ட பக்தியோகத்தை "ஸர்வ" என்பதன் பொருளாகக் காட்டுவர். "மத்ப்ராப்த்யர்த்ததயா மயோக்தம்" என்பதனால், எம்பெருமானை அடைவதற்குக் காரணமான எல்லா தர்மங்களையும் என்று "தர்மாந்" என்பதையும் "ஸந்த்யஜ்ய" என்பதனால் நன்றாக விட்டு, ருசி வாசனைகளோடு சேர்த்து மறுபடியும் அத்தருமங்களில் பற்று ஏற்படாதபடி விட்டுத் தொலைப்பதை "பரித்யஜ்ய" என்பதையும் பொருளாகக் காட்டுவர். இது தன்னையே ஆழ்வார், "கைவளையும் மேகலையும் காணேன்" (22) என்றதனால் ஸ்வாபதேசத்தில் அகங்கார மமகாரங்கள் போனதைச் சொல்லிற்று என்பர் பெரியவாச்சான் பிள்ளை. "இருகையில் சங்கிவை நில்லா" (24) என்பதற்கு எம்பெருமான் வந்து போன போதே ஆற்றாமை குடி புகுந்தது. இரு கைவளையும் அவனுக்கு முன்னே போய் நின்றது. அதாவது அவனை அடைவதற்குக் காரணமான எல்லா தருமங்களையும் விட்டதைச் சொன்னபடி. இதனால் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதன் பொருள் சொன்னதாயிற்று.

"மாமேகம்" என்பதற்குச் சேர "புந: மாமேகம் ப்ரதி' (7) என்பர் பட்டர். அதாவது எம்பெருமானைப் பற்றுவது எளிது என்பதைத் தெரிவிக்கிற வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் ஆகிய குணங்களோடு கூடிய எம்பெருமானையே குறித்து என்று பொருள். இதுபற்றியே ஆழ்வார், "கருமுகில் ஒப்பர் வண்ணம்"(24) என்றதற்கு ஏற்ப ஒரு காளமேகத்தை ஒரு மின் தழுவினாற் போலே இயற்கையான எழிலுக்கு மேலே பரகால நாயகியின் எழிலும் அங்கே குடிகொள்ளுகையாலே மேலும் வடிவு இரட்டித்தது என்பர் பிள்ளை. இதனால் ஸௌலப்யம் சொல்லப்பட்டது. "ஒரு கையில் சங்கு ஒருகை மற்றாழி ஏந்தி இங்கே வந்து"(24) என்பதற்கு ஏற்ப, எம்பெருமான் ஒரு கையில் திருச்சங்கையும் மற்றொரு திருக்கையில் திருவாழியையும் தரித்துக் கொண்டு என்று ஸ்வாமித்வமாகிற மேன்மைக்கு எல்லை சொல்லப்பட்டது. ஆக "மாமேகம்" என்பதன் பொருள் சொல்லப்பட்டதாயிற்று.

"சரணம் வ்ரஜ" என்பதற்குச் சேர "சரணமிதி ஆர்த்தோ அவஸாயம் குரு" (7) என்கிறபடியே மிகவும் வருந்தியவளாய்க் கொண்டு எம்பெருமானை அடைவதற்காக தானே உபாயம் என்ற நிச்சியத்தைச் செய்யச் சொன்னதை ஆழ்வாரும், "என்தன் பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு" (28) என்று எம்பெருமானைப் பிரிந்து படும் துக்கம் எல்லாம் அவன் ஸந்நிதியிலே படக்கடவேன் என்பதை "சரணம் வ்ரஜ" என்றதன் பொருளுக்குச் சேர அநுட்டானபரமாக அமைத்தது காணலாம். மேலும் "அன்றாயர்... நினைந்திட்டேனே" (29) என்ற பாசுரத்துக்குச் சேர நம்மாழ்வாருக்கு முனியே நான்முகனில் பிறந்த பரமபக்தி ஆழ்வாருக்கு பிறந்து தமக்கு எம்பெருமானைத் தவிர வேறு கதியின்மையும் தனது குற்றங்களின் மிகுதியையும் முன்னிட்டு எம்பெருமான் முகம் காட்டாமைக்குக் கூப்பிடுவதாக உரைப்பர் பிள்ளை. இதனால் "சரணம் வ்ரஜ" என்பதன் பொருள் சொல்லப்பட்டதாயிற்று.

"அஹம்" என்தற்குச் சேர அகிலஜ்ஞாநாதி பூர்ண: ஹி அஹம்" (7) என்பதை அடியார்கள் காரியம் செய்ய ஞானம் முதலான எல்லாக்குணங்களாலும் நிறையப் பெற்றவன் என்று வேதாந்த பிரசித்தனான நான் என்று பொருள். "மின்னுமாமழைதவழும் மேகவண்ணா விண்ணவர்தம் பெருமானே"(30) என்பதனால் "அஹம்" சப்தார்த்தம் சொல்லப்பட்டது என்பர். இதில் "மின்னுமாழை தவழும்" என்பதனால் எம்பெருமானுடைய மின்னலோடு கூடி மிகவும் குளிர்ந்து தவழ்ந்து வருகின்ற மேகம் போன்ற வடிவு சொல்லப்பட்டது. "விண்ணவர் தம் பெருமானே" என்பதனால் இந்த வடிவை அநுபவிக்க ஜீவித்திருக்குமவர்களைச் சொல்லுகிறது என்பர். அதாவது அயர்வறுமமரர்களுக்கு தன்னை அநுபவிக்க கொடுத்துக் கொண்டு இருப்பவன் என்பதனால் "அஹம்" என்பதற்குச் சேர அடியார்கள் கார்யம் செய்யும் குணம் உள்ளமை சொல்லப்பட்டது.

"த்வா" என்பதனால் "த்வாமேவம் வ்யவஸாய உக்தம்" (7) என்கிறபடியே எம்பெருமானே உபாயம் என்று நிச்சயத்தோடு கூடியவனும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள காக்கும் தன்மையாகிற ஸம்பந்தம் இல்லாதவனுமானவனைச் சொன்னபடி. "அருளாய்" (30) என்ற இடத்தில் "விண்ணவர்...... என்னை அருளாய்" என்று "த்வா" என்ற சொல்லின் பொருளைச் சேர்த்துச் சொல்ல வேணும் என்பர் பரகால நல்லான். இதனால் எம்பெருமானை அநுபவிப்பதற்கும் சரீர சம்பந்தமற்று எப்போதும் தர்சனம் பண்ணும்படி கருணைபுரிய வேணும் என்று இரக்கமே ஸாதநம் என்று இருப்பதாக உரைப்பர் பிள்ளை. "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்பதற்குச் சேர "மத்ப்ராப்தி ப்ரதிபந்தகை: விரஹிதம் குர்யாம்" (7) என்று அருளுவர் பட்டர். அதாவது எம்பெருமானை அடைவதற்கு தடையாக உள்ள எல்லாப் பாபங்களிலிருந்தும் ஜீவாத்மாவை விடப்பட்டவனாகச் செய்பவன் என்றவாறு. இது தன்னை, ஆழ்வார் அருளிய "தொல்லைப் பழவினையை முதலறிய வல்லார் தாமே"(30) என்பதற்குப் பெரியவாச்சான்பிள்ளை கார்யகாரண ரூபத்தாலே அநாதியாய் வருகிற அறியாமை, கருமம், வாசனை, ருசி, சரீர சம்பந்தம் ஆகியவைகளைத்தாங்களே வாசைன தெரியாமல் போக்கவல்லவர் என்று உரையிடுவர். ஆக இதனால் "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றதன் பொருள் விளக்கப்பட்டதாயிற்று. "மாசுச:" என்பதனால் "சுசம் மா க்ருதா:"(7) என்று வருத்தத்தை அடையாதே என்பர். ஆழ்வாரும் "அருளாய்" என்றதினாலே பரபக்தி வரையிலான விடாய் பிறந்த இடத்திலும் இரக்கமே ஸாதநம் என்று இருப்பதாக உரைப்பர் பிள்ளை. இதனால் "அருளாய்"(30) என்று மாசுச: என்பதற்கு ஏற்ப இரக்கம் தோற்ற சொன்னபடி.

முதல் திருவந்தாதி

திருமலை அனந்தாண்பிள்ளை அக்காரக்கனி ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிதி ஸ்வாமி

அநாதியான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம், ஸ்ரீ ஆழ்வார்களாலும், திவ்ய ப்ரபந்தங்களாலும் பெரு மேன்மை பெற்றுத் திகழ்கின்றது. அந்தமிழினாலான நற்கலைகளாம் திவ்யப்ரபந்தங்கள், எம்பெருமானுடைய ஸ்வரூப, ரூப, குண விபூதிகளை, கரதலாமலகமாக நமக்குத் தரவல்ல, உணர்த்தவல்ல ஏற்றம் பெற்றவையாகும். எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களிலே ஆழங்காற்பட்டு அவனையே உண்ணுஞ்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலை என்று எல்லாமுமாகக் கொண்டு "பரமாத்மநி யோ ரக்த: விரக்த: அபரமாத்மநி" என்று அவனையொழிந்த மற்றைய விஷயங்களில் துளியும் விருப்பம் அற்றவர்களாய் திகழும் பெருமை ஆழ்வார்களுக்கேயாம்.

அவ்வோ ஆழ்வார்களுக்குள்ளே முதலில் திருவவதரித்ததின் காரணமாக, பொய்கையார், பூதத்தார், பேயார் மூவரும் முதலாழ்வார்கள் என்று வழங்கப்படுகின்றனர். "மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே அவதரித்து நற்றமிழால் நூல் செய்து நாட்டை" ஆண்ட பெருமையினால் அவர்கள் முதலாழ்வார்கள் என்கிற ஏற்றம் பெறுகின்றனர். அம்மூவருக்குள்ளும் முதலில் திருவவதரித்த பெருமை, வனசமலர்க் கருவதனில் வந்தமைந்தவரான பொய்கையாழ்வாரையே சாரும். இன்கவி பாடும் பரமகவிகளிலே ஒருவராயும், செந்தமிழ் பாடுவார் திரளிலே முக்யராயும் திகழும் பெருமை, திருவெஃகாவிலே தோன்றிய இச்செம்மலின் தனிச்சிறப்புக்களாகும்.

ஐப்பசித் திங்களிலே, விஷ்ணுவின் நக்ஷத்திரமான திருவோண நன்னாளிலே திருவவதரித்தார் பொய்கையாழ்வார். அயோநிஜராய் (ஒரு தாய் வயிற்றிலே கர்ப்ப வாஸம் பண்ணிப் பிறவாதவர்) செங்கண் மால் திறத்திலே சித்தம் பொருந்தினவராய், பகவதிச்சையாலே திருக்கோவலூரிலே இடை கழியிலே பூதத்தாழ்வாரோடும், பேயாழ்வாரோடும் கூடித் திருமகளோடு நின்ற ஆயனை தரிசித்து, அவ்வனுபவத்தின் பரீவாஹத்தாலே "முதல் திருவந்தாதி" என்கிற திவ்யப்ரபந்தத்தை அருளிச் செய்து இவ்வுலகத்தை வாழ்வித்தருளின ஏற்றம் மிக்கவராவார் இவ்வாழ்வார். மற்றைய ஆழ்வார்களுக்கு வழிகாட்டியாய், ஸநாதன தர்மமான வைணவ மதத்தின் மாண்புகளை தீந்தமிழில் முதன் முதலில் "கனைத்தவர்" என்கிற பெருமை இவ்வாழ்வாருக்கே அஸாதாரணமாகும். (கனைத்திளங்கற்றெருமை – திருப்பாவைப் பாசுரத்தின் ஸ்ரீகாஞ்சீ ப்ர.ப. அண்ணா ஸ்வாமியின் நறுமண உரை காண்க.) மறையின் குருத்தின் பொருளையும், செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்து அன்று (விளக்கு) எரித்தமையால் பொய்கைப் "பிரான்" என்று குலாவப்படுகிறார் இவ்வாழ்வார். பிரான் என்றால் உபகாரகன் என்பது பொருள். முதல் திருவந்தாதி அருளிச் செய்தமையால் பரம உபகாரகர்.

ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவம் கண்டருளும் "மேதாவிமணி", "மிகு ஞானச் சிறுகுழவி" "கம்பீர வாக் வர்ஷீ" ஸ்ரீமான் உவே. மண்டயம் அனந்தாண்பிள்ளை வேங்கட க்ருஷ்ணன் ஸ்வாமி அரும்பாடு பட்டுப் பதிப்பித்த "இயற்பா"+ நம்பிள்ளை படி வ்யாக்யாந விவரணத்தின் துணை கொண்டே முதல் திருவந்தாதியின் ஏற்றங்களிலே சில திவலைகளை அநுபவிக்க முற்படுவோம்.

பொய்கையாழ்வார் ஒரு விளக்கு ஏற்றினார், பூதத்தாழ்வார் மற்றொரு விளக்கு ஏற்றினார். கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டு அநுபவித்தார் தமிழ்த் தலைவனான பேயாழ்வார்.

பொய்கையாழ்வார் ஏற்றிய விளக்கு எத்தன்மையது? காண்போம். எம்பெருமானைத் தவிர்த்த பொருள்களைனைத்தும் அவனுடைமைகள்; அவற்றிற்கு அவன் தலைவன் என்ற இந்த ஜ்ஞாநத்தால் ஒரு விளக்கு ஏற்றினார் பொய்கையாழ்வார்.

ஜகத்காரணபூதன் ஒருவனுளன் என்பதனை நன்கு நிலை நாட்டும் விதமாக நூறு பாசுரங்களாலான முதல் திருவந்தாதியை நமக்கு அநுக்ரஹித்தருளினார் பொய்கையார். திவ்ய ப்ரபந்தம் தொடங்கும் போதே

ஜகத்துக்கு காரணபூதன் உண்டு என்று அருளுகின்றமையால் நிரீச்வர வாதம் பண்ணுமவருடைய வாதத்தை தகர்க்கிறார் இவ்வாழ்வார். இனி முதல் பாசுரத்தின் பெருமைகளில் சிலவற்றை அநுபவித்து மகிழ்வோம்.

வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

பஞ்சபூதங்களிலே பூமி, நீர், ஒளி ஆகிய மூன்றையும் வையம், வார்கடல், கதிரோன் என்னும் சொற்களாலே கூறி, மூன்றைச் சொன்னதாலே ஐந்தினையும் அறிவித்து, நினைவூட்டி, மேலும் இவ்வைந்தாலும் அண்டம் வரை நினைத்து, அதிலும் பூமி தொடங்கிச் சொல்லும் பொழுது, பூமியின் கடினத் தன்மையையும், நீரின் நெகிழ்வையும், ஒளியின் வெப்பத்தையும் கூறிக்கொண்டு வந்து, இவ்வழியால் லீலா விபூதி முழுவதையும் நினைத்து, மேலும் நித்ய விபூதியை நினைவூட்டும் முகமாக சுடராழியான் என்று நித்யர் திரளிலே ஒருவரான ஸ்ரீஸுதர்ஸநாழ்வானைக் கூறி, இப்படி லீலாவிபூதி, நித்ய விபூதி வர்ணநங்களாலே பகவான் இவ்விரண்டு செல்வங்களையும் தனதாக உடையவன் என்பதை அறிவித்தாராகிறார். மேலும் இறைவனுடைய தலைவனாம் தன்மையையும், தம்முடைய அடிமைத் தன்மையையும் கூறி அதற்குச் சேர அப்பெருமானது திருவடிகளிலே தொண்டு செய்வது பற்றியும் கூறினார். "அடிக்கே சூட்டினேன்" என்றமையால் பகவானுடைய திருவடிகளிலே தொண்டு செய்வதில் தமக்குள்ள விருப்பத்தை வெளியிட்டருளினார். பரமனுடைய உகப்பையே தமக்குப் பெரும் பேறாக நினைத்திருக்குமிவர், தாம் செய்ததனைத்தையும் பெருமான் தனக்கு அலங்காரமாகவும், இனிமையாகவும் நினைத்திருப்பதையும் சொல்லி, இத்தகு கைங்கர்யம் இதுவரை தாம் செய்யப் பெறாமையால் வந்த தாழ்வை போக்கிக் கொள்வதற்காக, 'அடிக்கே சூட்டினேன் சொல்மாலை' என்கிறார். எப்பொழுது வரை நாம் இறைவனை மறந்து, அவன் திருவடிகளிலே கைங்கர்யத்தையும் இழந்து, உண்டியே உடையே உகந்து ஓடிக் கொண்டிருக்கிறோமோ அது வரை நம்முடைய ஆத்மா கடைத்தேற வழியே கிடையாது. நாம் எம்பெருமானுடைய அடிமை என்கிற ஜ்ஞானமும், அவன் திருவடிகளிலே கைங்கர்யமே நமக்கு பரமோத்தேச்யம் என்கிற நினைவும் ஸம்ஸாரத்தை அறுத்துப் பரமப்ராப்யமான வைகுந்தத்தைத் தரவல்லவையாம். மாறாக, மேற் சொன்ன அறிவு நமக்கு ஏற்படாத வரை நமக்கு ஸம்ஸாரமே நித்தியமாகத் தொடரும். ஸம்ஸாரம் நித்தியமாகத் தொடர்ந்தால் அது பெரும் பிணியும், பேரிடருமாகும். எனவே அத்துன்பத்தைத் தொலைத்தருள வேணுமென்று அடிக்கே சொன்மாலைகள் சூட்டி மகிழ்கிறார் ஆழ்வார்.

அநசூயை சீதாப்பிராட்டிக்குச் செய்த அலங்காரம் போலே இவர் செய்த சொல்மாலை ஆகிற அலங்காரமும் மிகவும் அழகாக உள்ளமை கூறப்படுகிறது. ஆழ்வார் அன்போடே சூட்டிய சொல்மாலையை பெரு விருப்பத்தோடு, தனக்கு அலங்காரமாய் எம்பெருமான் கொள்ளுகையால், இவர் (ஆழ்வார்) தொண்டு செய்தமையும், அதனை பகவான் உகப்போடே கொண்டமையும் கூறப்படுகிறது. அவன் அணிந்திருக்கிற துழாய் மாலை, அவனே ஸர்வேச்வரன் என்பதை பறைசாற்றுமாப் போலே, ஆழ்வாருடைய இப்பிரபந்தமாகிய மாலையும் அவனுடைய பரத்வத்தை மூதலித்தருளுகிறதாம்.

'சொல்மாலை' என்றதால் வேதங்களாலும் அளவிட முடியாத குணங்களையுடைய எம்பெருமானை ஆழ்வார் உள்ளபடியறிந்து முழுவதுமாக வர்ணித்தருளுகிறார். ஸ்ரீபராசர பட்டபாதர் தமது ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலே வேதங்களின் நிலைமை கண்டு வருந்தினவராய் வெகு அழகாக ஒரு விஷயத்தை விண்ணப்பித்து அருளுகிறார். பகவானுடைய ஆநந்தத்தை அளவிட முற்பட்ட வேதம் முடியாமல் தயங்கி ஒதுங்கி பின் வாங்கியது ப்ரஸித்தம். பட்டர் தெரிவிக்கிறார், நல்ல வேளை வேதங்கள் இறைவனுடைய குணங்களை அளவிடுகிறேன் என்று புறப்படவில்லை. ஆநந்தத்தையே அளவிட முடியாத அவைகள் குணங்களின் பால் செல்லவும் கூடுமோ? எண்ணில் பல் குணங்கள் உடைய பெருமானை உள்ளபடி உணரும் பெருமை வேதங்களுக்குத் தான் உண்டோ? இல்லை' அப்பெருமை ஆழ்வார்களுக்கு மட்டுமே உண்டு.

ஏனெனில் இவர்கள் தாம் "மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்களாயிற்றே." ஆதனாலன்றோ "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதி தெளியாத மறைநிலங்கள் தெளிவது." ஆக பகவானை உள்ளபடி உணர்ந்த பெருமைக்குரியர் ஆழ்வார்கள் மட்டுமே. எனவே தான் பொய்கையார், உள்ளபடி அறிந்து சொல்மாலை சூட்டி பகவானை உகப்பித்துத் தாமும் மகிழ்கிறார். தாம் இதுவரை இவ்வாறு சொல்மாலைகள் சூட்டாத விடாய் தீரப் (இடர் ஆழி நீங்குகவே என்று) பாடுகிறார்.

"பகவதநுபவத்தாலே நிறைந்து இப்படிச் சொல்லாதவன்று தாம் உளராக மாட்டாத ஸ்வபாவத்தை உடையராய் ஆய்ந்து இவர் தாம் இருப்பது" என்கிற வ்யாக்யாந ஸ்ரீ சூக்திகள் சேவித்தற்குரியது.

மாறநேரி நம்பியிடம் ஒருவர் "எம்பெருமானை நினைப்பதற்கு ஒரு வழி சொல்ல முடியுமா? என்றாராம். ஸம்ஸாரிகள் பகவானை நினைப்பதற்கு சக்தியற்றவர்கள். ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அவனை மறப்பதற்கு சக்தியற்றவர்கள். ஸம்ஸாரிகளுடைய துன்பக்கடலை நினைத்து, அவை நீங்க வேண்டும் என்று ஆழ்வார் வேண்டுவதாகவும் கொள்ளலாம். இப்படிப் பல அர்த்தங்கள் இப்பாசுரத்தின்கண் உணரலாம்.

எம்பெருமானுக்கு அடிமை செய்வது ஜீவாத்மாவுக்கு ஸ்வரூபம். ஜீவனுடைய தொண்டினை ஏற்றுக் கொள்வது பரமாத்மாவுக்கு ஸ்வரூபம்.

இவர்கள் (ஜீவாத்மாக்கள்) தங்கள் ஸ்வரூபத்திற்குச் (தன்மைக்கு) சேர்ந்த செயல்களைச் செய்தால், பகவானும் அவர்களுக்கு ஈடாகத் தன்னை ஆக்கிக் கொடுப்பான் என்பதனை முதல் திருவந்தாதி 44-ம் பாசுரமான "தமருகந்ததெவ்வுருவம்" நமக்கு நன்கு உணர்த்துகிறது. வாருங்கள்! அப்பாசுரத்தினையும் சற்றே அநுபவிப்போம்.

நம் மேதாவி மணி ஸ்வாமி வெளிக் கொணர்ந்த நம்பிள்ளை படி வ்யாக்யானம்: "ஆச்ரிதரானவர்கள் ஏதேனுமாக ஒரு திருமேனியை விரும்பியிருந்தால், அவனும் அத்தைத் தனக்கு அஸாதாரணமான திருமேனியாகக் கொண்டு விரும்பக் கடவனாயிருக்கும்."

அடியவர்கள் எதை இறைவனுடைய திருமேனியாகக் கொண்டாலும், எம்பெருமான் அந்தப் பொருளையே விரும்பித் தனக்கே உரிய திருமேனியாகவே கொள்வான். அடியவர்களுக்கு எந்தப் பொருளிலே விருப்பம் உள்ளதோ அப்பொருளையே தனக்குரிய திருமேனியாக எம்பெருமான் கொள்வான். (நம் மேதாவிமணி ஸ்வாமியின் எளிய நடை விவரணம்) அடியவர்களிடத்தே அளவற்ற அன்பையுடையவனான எம்பெருமான் அவ்வடியவர்களையே தனக்கு உயிர் நிலையாகக் கொண்டவன், அடியவர்களைக் கவரவே அர்ச்சை நிலையில் அருள் பாலிக்கிறான் பரமன். பகவான் பற்பல அவதாரங்களைச் செய்திருந்தாலும், பின்புள்ளார் அவற்றால் பெருநன்மை அடைய வாய்ப்பில்லாமல் போயிற்று. அக்காலத்தில் வாழ்ந்தார் மட்டுமே அவனைக் காணவும், அவனோடு கலந்து பரிமாறவும் பேறு பெற்றனர். எனவே தான், "பின்னானார் வணங்கும் சோதியாய்" ஆனான் இறைவன். மேலும் நம் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் எம்பெருமானுடைய பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி அர்ச்சைகளுக்குள்ளே, அர்ச்சாவதாரத்திலேயே ஊன்றி மகிழ்ந்தார்கள். இறைவனுடைய மற்றைய நிலைகளைக் காட்டிலும் அர்ச்சாவதாரமே சிறந்தது என்பது அவர்களுடைய துணிபு. "ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே" என்கிற திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்தியும் மேற்சொன்ன கூற்றுக்குச் சான்றாம். "எய்துமவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது என்றான் பன்னு தமிழ் மாறன் பயின்று" என்று நம்மாழ்வாரின் திருவுள்ளக் கருத்தினை விளக்கும் விசதவாக் சிகாமணிகளான மாமுனிகள் திருவாக்கும் நோக்கற்பாலது. ஸ்ரீவசந பூஷணத்தில் பிள்ளை லோகாசார்யர் அர்ச்சாவதாரத்தின் மஹிமைகளை அருளிச் செய்ததும் நினைத்தற்குரியது.

அர்ச்சாவதாரத்தில் ஏற்றங்களை நன்கு பறை சாற்றும் இத் "தமருகந்ததெவ்வுருவம்' பாசுரத்தில் எம்பெருமானார் வாழ்வில் நிகழ்ந்த ஓர் அற்புதமான ஐதிஹ்யம் காட்டப்படுகிறது. அஃதாவது, உடையவர் ஒருமுறை பிக்ஷைக்கு எழுந்தருளிக் கொண்டிருந்த பொழுது, வழியில் விளையாடிக் கொண்டிருந்த சில சிறுவர்கள் மணல் உருண்டைகளை எம்பெருமானாகவே பாவித்து தங்களுக்குள்ளே திளைத்திருந்தனர்.

அவ்வமயம் உடையவரைக் கண்ட அப்பிள்ளைகள், தாங்கள் சமைத்திருந்த மணல் பிம்பங்களை (உருண்டைகளை) தரிசிக்க அவரையழைத்தனர். ராமாநுஜரும் பிக்ஷை பாத்திரத்தை கீழே வைத்து, அப்பிள்ளைகள் காட்டியவிடத்தே விழுந்து வணங்கினார். அச்சமயம் "தமருகந்ததெவ்வுருவம்" எனும் இம்முதல் திருவந்தாதிப் பாசுரத்தையே எம்பெருமானார் அநுஸந்தித்தாக அறிகிறோம்.

உருவம் மட்டுமல்லாமல், அடியவர்கள் எந்தப் பெயர்களைத் தனக்குச் சூட்டுகிறார்களோ, அதையே தானும் கொள்ளுகிறான். தனக்கென்று எத்தனையோ உயர்ந்த திருநாமங்கள் இருப்பினும், அடியவர் நாவில் நின்றும் புறப்படும் திருநாமங்களையே மிக விரும்பினாயிற்று. இதற்குச் சான்றாக மற்றொரு ஐதிஹ்யத்தையும் காண்போம்.

கஞ்சனூர் எனும் ஊரிலே வண்துவரைப் பெருமாள் என்கிற அடியவர் தம்முடைய திருவாராதனப் பெருமாளுக்கு "சதங்கை அழகியார்" என்று திருநாமம் சூட்டியிருந்தார். பகவான் இத்திருநாமத்தைத் தான் மிக விரும்பி இருப்பதைக் காட்டத் திருவுள்ளம் பற்றினான். அதற்காக, ஒரு செயலையும் செய்தான். ஒரு நாள் அவ்வடியவருடைய கனவில் சதங்கையோடு ஆடினான். அவர் நீ யார்? என்று வினவ, அதற்கு எம்பெருமான் "நான் சதங்கை அழகியார்" என்றானாம். (இவ்விஷயத்தை தம்முடைய இயற்பா – நம்பிள்ளை படியிலே நம் மேதாவிமணி ஸ்வாமி விவரித்திருக்கிறார்) என்னே! பகவானின் எளிமை! தம்முடைய திருவாராதனப் பெருமாளுக்கு "ஆயர் தேவு" என்று பெயர் சூட்டியிருந்தார் நஞ்சீயர். இது நஞ்சீயர் மட்டுமே அறிந்திருந்த விஷயம். ஆனால் அப்பெருமானோ எங்களாழ்வான் கனவில் தோன்றி தன்னை "நஞ்சீயர் மகன் ஆயர்தேவு" என்று அறிமுகப்படுத்திக் கொண்டானாம். மெய் சிலிர்க்கிறதல்லவா?! அந்தவளவுக்கு அடியவர்களோடு தொடர்பினை எம்பெருமான் விரும்பியிருக்கிறான் என்பது தெள்ளிதின் விளங்குகிறதல்லவா? "பக்தானாம் த்வம் ப்ரகாசஸே" "வரத ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த" போன்ற ப்ரமாணங்களின் படி அடியவர்களுக்காகவே எம்பெருமானுடைய பெயர், உருவம் மட்டுமல்லாமல், அவனுடைய குணங்கள், செயல்கள் முதலியவைகளும் அடியவர்களின் நினைப்பின் படியே இருக்கும் என்பது காட்டப்படுகிறது.

ஸூசய: கவீந்த்ரா: என்று வேதாந்தாசார்யரால் கொண்டாடப் பெற்ற முதலாழ்வார்களுக்குள்ளே முதல்வரான பொய்கைப்பிரானுடைய முதல் திருவந்தாதி மற்றைய திவ்யப்ரபந்தங்கள் தோன்றுதற்கு வழி காட்டியாகும்.

இரண்டாம் திருவந்தாதி

பெருமாள்கோவில் ஸ்ரீ உ.வே. ப்ர. ப. ராஜஹம்ஸம் ஸ்வாமி

திருமகள் கேள்வனாலே மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். எம்பெருமானுடைய குணங்கள், திருமேனி, அழகு முதலியவற்றை ஆழ்ந்து அனுபவித்து அவ்வனுபவத்தையே செவிக்கினிய செஞ்சொற்களாக வெளியிட்டருளினர் ஆழ்வார்கள். அவர்கள் பதின்மர். முந்துற முன்னம் அவதரித்தவர் முதலாழ்வார்கள். இக்காரணம் கொண்டே ஸ்ரீ மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் "மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து" எனப் புகழ்கின்றார். அம் மூவருள் நடுநாயகமானவரான பூதத்தாழ்வார் அருளிச் செய்ததும், நாலாயிர திவ்யப் ப்ரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிற இயற்பாவில் இரண்டாவதாக ஸ்ரீமந்நாதமுனிகளால் வகுக்கப்பட்ட இரண்டாம் திருவந்தாதியின் ஸாரத்தை மேலே அனுபவிப்போமாக.

பகவானை எப்போதும் அனுபவிப்பதற்கு மிகவும் முக்யமானது மூன்று. அவையாவன பரபக்தி, பரஜ்ஞானம், பரம பக்திகள். இம் மூன்றினுள் எம்பெருமானை அனுபவிக்க வேணுமென்ற ஆசையே பரபக்தி. நன்றாக அனுபவித்தல் பரஜ்ஞானம். இது மேலும் மேலும் பெருகி தடைபடாமல் அனுபவிக்க ஆசைப்படுவதே பரமபக்தி. இதையே 'தர்சனம் பரபக்தி ஸ்யாத் பரஜ்ஞானம் து ஸங்கம: புனர்விச்லேஷ பீருத்வம் பரமாபக்திருச்யதே' என்ற ச்லோகமும் வலியுறுத்துகிறது. நம் முன்னோர்கள் மற்றொரு விதமாகவும் தெரிவிக்கின்றனர். அதாவது எம்பெருமானோடு கூடுவது ஸுகம். பிரிவது துக்கம் என இருப்பது பரபக்தி. அவனை நன்றாக அனுபவித்தல் பரஜ்ஞானம். அவ்வாறு அனுபவம் கிடைக்காவிட்டால் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போலே மூச்சு அடங்கும் படியிருக்கை பரமபக்தி. இப்படிப்பட்ட பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்தி முதலான மூன்றும் முதலாழ்வார்கள் மூவருக்கும் தனித்தனியாக இருந்தாலும் ஒவ்வொரு ஆழ்வாருக்கும் ஒன்று தலையெடுத்து மற்றவையிரண்டும் அதற்குள்ளே அடங்கியிருக்கும். பொய்கையாழ்வார்க்கு பரபக்தி மிகுந்திருக்க பரஜ்ஞான, பரமபக்திகள் உள்ளடங்கியிருக்கும். பூதத்தாழ்வார்க்கு பரபக்தி நன்கு முற்றி பக்குவமாய் பரஜ்ஞானமாகி மேலே பரபக்தியும் பரமபக்தியும் உள்ளடங்கியிருக்கும். பேயாழ்வார்க்குப் பரமபக்தியே அதிகமாகி மற்றவையிரண்டும் அதற்குள்ளேயே மறைந்து கிடக்கிறது. இவ்வாறு ஒன்று வெளிப்பட்டும் மற்றவையிரண்டும் அதனுள் மறைந்திருப்பது ஈச்வரவனுடைய ஸங்கல்பத்தினாலேயே ஆகும். மேலும் இவை முக்தி தசையிலே உண்டாகக் கூடியதாக இருந்தாலும் ஆழ்வார்களுக்கு மட்டும் லீலாவிபூதியிலேயே விளைந்ததற்குக் காரணம் அவனதின்னருளே.

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில் நித்யவிபூதி, லீலா விபூதி இரண்டிற்கும் தலைவன் எம்பெருமான் என்பதை வெளியிட்டருளினார். இவ்விஷயத்தை பூதத்தாழ்வார்க்கு உணர்த்துவதற்காக ஜ்ஞானமானது பக்தியெனும் நிலையை அடைந்தது. அந்தபக்தியும் 'நிரம்பின ஏரி நெளிக்குமாபோலே'' என்பது போல் நிறைந்த காரணத்தினால் வழிந்து புறப்பட்ட பாசுரங்களே இரண்டாம் திருவந்தாதியாகும். அப்படியானால் பொய்கையாழ்வார்க்கு பக்தி என்பதே கிடையாதா? என சந்தேகம் பிறக்கும். இவ்வாறில்லை. பொய்கையாழ்வார்க்கும் பக்தி உண்டு. நூலானது தறியில் ஏற்றி நெசவு செய்து முடிந்த பிறகு துணி என்ற பெயருடன் திகழ்வது போலே பொய்கையாழ்வாருடைய அறிவானது திருக்கோவலூர் இடைகழியிலே நெருக்குண்ட போது உராய்ந்ததனால் பூதத்தாழ்வாருக்கும் ஏற்பட்டது. அவ்வறிவின் முதிர்ச்சியான பக்தி பாசுரங்களாக வெளிப்பட்டது.

அறிவு முதிர்ந்து பக்தியானது என்றால் இரண்டு அந்தாதிகளும் ஒருவரே செய்திருக்க வேண்டாமா? வேறு வேறு ஆழ்வார்கள் அருளியதாகக் காணப்படுகிறதே? என்னில் மும்முனிகள் தனித்தனியே எழுதியிருந்தாலும் ஒரே விஷயத்தைத் தெரிவிக்கின்ற காரணத்தினால் இலக்கணங்களை விளக்கும் வ்யாகரண சாத்திரம் ஒன்றாகவே கொள்ளப்படுகிறது. அது போலவே ஜைமினி பன்னிரண்டு

அத்யாயங்களும் வ்யாஸர் நான்கு அத்யாயங்களுக்கு எழுதியிருப்பினும் விஷயத்தின் ஒன்று பட்ட தன்மையினாலேயே ஒரே சாத்திரமாகக் கொள்ளப்படுகிறது. இவ்விரண்டு காரணங்களைப் போலவே இவ்விடத்திலும் கொள்ள வேண்டும்.

பகவான் அளவற்ற ஜ்ஞானமும், சக்தியும் உடையவன். உலகைப் படைத்தவன். சங்கு சக்கரங்களை தரித்தவன் என முதற்றிருவந்தாதியில் கூறியுள்ளது பக்தியினுடைய கார்யமே ஆகும். இதற்கு முன் பொய்கையாழ்வாராகிற தனக்கு இல்லாத அறிவை நெருக்கி இப்போது உண்டாக்கினபடியால் பாசுரங்களாக வெளிப்பட்டது. எவ்வாறென்றால் 'பழுதே பலபகலும் போயினவென்று'' தானே கூறிக் கொள்கிறார். நாமெல்லாரும் அடையத் தகுந்தவன் எம்பெருமானே. அவ்வாறு அடைவதற்குத் தேவையான பக்தியை உண்டாக்குமவனும் அவனே. இவ்வுலகையெல்லாம் நிர்வஹிப்பது எவ்வளவு கடினம். எப்படிச் செய்கிறான் என்பதை நினைத்தாலே வியப்பூட்டுகிறது. அதுபோல் என் மனத்தைச் சரி செய்து நல்வழியில் திருப்பி விட்டதை நினைத்து வியப்பூட்டுகிறார் முதல் திருவந்தாதியில். ஆழ்வார்கள் அனைவருக்கும் ஜ்ஞானம், பக்தி முதலான எல்லாம் உண்டு. ஆனாலும் பொய்கையார் ஜ்ஞானத்தை முக்யமாகவும் பூதத்தார் பக்தியை முக்யமாகவும் கொண்டுள்ளனர். இவ்வாழ்வார்கள் அனைவரும் ஒருவர் மற்றவருடைய உள்ளத்தை அறிந்து கொண்டவர்கள். இக்காரணம் கொண்டே 'பேசிறே பேசும் ஏககண்டர்கள்' என்று கொண்டாடப்படுகிறது. ஆதிசேஷனுக்கு பல தலைகள் இருந்தாலும் கருத்து ஒன்றேயானாப் போலே இவர்கள் பதின்மராக இருந்தாலும் பேச்சு ஒரே விஷயமான எம்பெருமானைப் பற்றி தான்.

இப்படி பக்தியினால் பேசின பூதத்தாழ்வாரை கொண்டாடுகிறார் தனியன் மூலமாகத் திருக்குருகைப்பிரான் பிள்ளான். பூதத்தாழ்வாரை வணங்கினால் அடியவர்களுடைய பிறப்பது இறப்பதாகிற ஸம்ஸாரம் தொலைந்து மோக்ஷத்தை அடையும் பேறு நமக்கு கண்டிப்பாக கிடைக்கும். ஆகவே பூதத்தாரை வணங்குகின்றேன். அவர் அளித்த அந்தாதிப் பாசுரங்கள் எவ்வாறு இருக்கும்? என ஸம்ஸாரிகள் கேட்க அதற்கு விடையளிக்கிறார். ''தொண்டர்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்'' என்பது போலே அடியவர்களுக்கு அம்ருதமயமாக உள்ளது. இவ்வாழ்வாரே 85ம் பாசுரத்தில் 'அமுதன்ன சொன்மாலை ஏத்தித் தொழுதேன்'' என உரைக்கின்றார். இதன்பின் அவர் அவதரித்த ஊரின் பெருமை பேசப்படுகிறது. நல்ல புகழை உடைய இடம், முத்துக்கள் சேருமிடம் என்பது கடன் மல்லைக்கு விசேஷணங்கள். கடன்மல்லைக்கு நன்புகழாவது தலசயனத்துறைவாரையும் பூதத்தாரையும் தன்னிடத்தே கொண்டிருப்பதே. முத்துக்கள் என்கிற பன்மைக்குச் சேர ஸ்வரஸ்யமான பொருள்களைக் கூறலாம். 1. கடலில் தோன்றும் முத்துற 'வானவரால் வணங்கப்படும் முத்து' என்னப்பட்ட தலைசயனப் பெருமாளாகிற முத்து. 2. இவ்விபூதியிலிருந்துக் கொண்டே முக்தர் என்னும்படியாக கரைகடந்த முத்தான பூதத்தாழ்வாராகிற முத்து என மூன்று வகை முத்துக்கள் சேருங் கடல்மல்லை என்கிறது காஞ்சீ ஸ்வாமியின் தீபிகையுரை. பூதத்தார் என்பது வடமொழியில் பூ ஸத்தாயாம் என்கிற தாதுவடியாகப் பிறந்தது பூதம் என்னும் சொல். ஸத்தை பெற்றது என்று பொருள். எம்பெருமானுடைய திருக்குணங்களை அனுபவித்தே ஸத்தைப் பெற்றாரென்னும் காரணத்தினால் பூதத்தாழ்வார் என்கிற திருநாமம் ஆயிற்று. இனி பாசுரங்களின் சுவையை அனுபவிப்போம்.

முதற் பாசுரத்தில், பூதத்தார் எம்பெருமானிடத்தில் உண்டான அன்பினால் உண்டான தம்முடைய அடிமைத் தன்மையையும் பகவானின் தலைமைத் தன்மையையும் அனுமானத்தால் நிலை நாட்டுகிறார். கீழே உலகம் முழுவதையும் பக்தியாலே நினைத்து பக்தியையே அகலாகக் கொண்டு விளக்கேற்றினார். விளக்கெரிவதற்கு நெய்யாக ஈஸ்வரனை அனுபவித்தாலல்லது தரிக்க முடியாத ஆர்வமே மாறிற்று. இது அன்பின் இரண்டாம் நிலை. எம்பெருமானிடம் பரிவுடனிருத்தல் அன்பு. அவனை விட்டு நீங்க முடியாத தன்மை ஆர்வம். இனிமையான எம்பெருமானை அனுபவிப்பதனால் சிதையும் மனமே விளக்கிற்கு இட்ட தீயாகிறது. எல்லாவித மங்கள குணங்களுக்கும் இருப்பிடமான எம்பெருமானை நினைத்து உருகும் மனோரதமே திரியாக ஆயிற்று. உருகும் நிலையிலே மனம் இருப்பதனால் அது அறிவையே ஸாரமாகக் கொண்ட ஆத்மாவைக் குறிக்கிறது. ஆத்மா ஜ்ஞான ஆனந்தங்களை உடையது. பகவானுக்கே

அடிமைப்பட்ட நல்ல வஸ்து. ஆத்மாவானது வெட்டவோ, எரிக்கவோ, நனைக்கவோ முடியாதது என்கிற கீதாசார்யன் வார்த்தைக்கு ஏற்ப பகவத் விஷயத்தில் உருகி த்ரவபதார்த்தம் போல் ஆய்விட்டது. எம்பெருமானிடம் ஈடுபாடு மூழ்கின தன்மையையே உருகியது என்றதனால் சொல்லப்பட்டுள்ளது. ப்ரஹ்லாதன் ஈஸ்வரனையே மனதில் நினைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் பாம்பு கடித்ததையும் அறியவில்லை என்பதை விஷ்ணு புராணத்தில் கூறப்பட்டுள்ளதே. அது போலவே ஆழ்வார்க்கும் பக்தியில் ஏற்பட்ட மாற்றங்களைச் சொல்லி அதன் மூலமே விளக்கேற்றினார். விளக்கானது தன்னையும் காட்டி மற்றவற்றையும் காட்டும்படி இருக்கும். அது போலவே பக்தியாகிற விளக்கினால் உண்டான முதிர்ந்த அறிவினால் தலைவன் அவன். அவனுக்கு அடிமையுடனிருப்பதே நமக்குத் தகுந்தது. அதற்காக நாம் செய்ய வேண்டியது கைங்கர்யமே. ஆகையால் நாராயணர்க்கு இவ்வழியில் கைங்கர்யம் செய்தேன். அடியேனுக்கு உண்டான பக்தியின் வெள்ளம் பின்புள்ளார் அனைவரும் அனுபவிக்கும்படி பாசுரமாகச் செய்துள்ளேன். என்னை ஈக்வரன் நோக்கின விதத்தில் இப்பாசுரங்கள் கற்பவர்களுக்கும் பகவானில் நோக்குதல் ஏற்படும். எல்லாப் பாசுரங்களுக்கும் முடிவில் பலம். ஆனால் இங்கோ தொடங்கும் போதே பலத்தைச் சொல்லுவது சிறப்பானது என முடிக்கிறார் முதற்பாசுரத்தினாலே.

எம்பெருமானின் திருநாமங்களை பக்தியுடன் கிரமம் எதுவும் இல்லாமல் எவ்வாறு சொல்லினும் நித்ய ஸம்ஸாரிகளையும் நித்ய ஸுரிகளுக்கு ஸமமாக ஆக்குவன் என்கிறார் இரண்டாம் பாசுரத்தில். இவ்வுலகத்து ஸம்ஸாரிகள் தம்மூரில் கிடைக்கும் பூக்களைக் கொண்டு திருவடியைப் பணிந்தவர்கள். ஸ்ரீவைகுண்டத்தை அடைவது ஆச்சர்யமானது எனப் பேசுகிறார் 3ம் பாசுரத்தில். 4 ஆம் பாட்டில் தம்முடைய மமகாரம் தொலைந்து எம்பெருமானின் எளிமைத் தன்மையை நினைத்து உருகுகின்றார். அவ்வெளிமைத் தன்மையின் நிலை இவ்வாறானது என்று சொல்ல முடியாததை விளக்குகிறார் 5ம் பாசுரத்தில். அவ்வெண்மைத் தன்மை நம்போல்வார் பலிக்காமல் இழந்தே போகவேண்டுமா? எனில் இல்லை. மற்றைய ஆசைகளை ஒழித்து திருநாமத்தைச் சொல்லுபவர்கள் திருவடி சம்பந்தத்தை பெற்றே தீருவர்கள் என்கிறார் 6ம் பாட்டில். அவ்வாறு சம்பந்தம் பெற்றவர்களோடு நீயும் சேர்ந்து பற்றினால் நமுசி எம்பெருமான் கையில் கழன்றது போல் நம்முடைய பாபங்களும் கழன்று ஓடி விடும் என்பதை விளக்குகிறார் 7ம் பாசுரத்தில். எம்பெருமானைப் பற்றும் போது முன்விரோதங்கள் தொடராதபடி பற்ற வேணும். பொய்யாகப் பற்றாமல் உண்மையாகப் பற்ற வேணும். அவ்வாறு பற்றுமவனக்கு ஏற்படும் தடைகளையும் பூதனையை முடித்தது போல் தகர்த்தெரிந்து காப்பவள் என்பதைப் பேசுகின்றார் 8ம் பாசுரத்தில். 9ம் பாட்டில் எதற்கு பூதனையை நினைக்கிறீர்கள்? தேவையானால் எப்பொழுதும் எம்பெருமானிடதறில் அன்புடையவளான யசோதையைப் பற்றித் தெரிவியுங்கள். யசோதையின் அன்பு யாருக்காவது உண்டா? பூதனையை நினைத்த வருத்தம் தீர யசோதையைக் கொண்டாடி 'அவளும் ஒருத்தியே' எனக் கொண்டாடுகிறார். இப்பாசுரத்தை அடியொற்றியே ஆண்டாள் திருப்பாவையில் 25ம் பாசுரத்தில் 'ஒருத்தி மகனாய்' என்று அருளிச் செய்தாளோ? ஏன நினைக்கத் தோன்றுகிறது. யசோதையைப் போல் அன்பு இல்லாவிடினும் ஓரளவாவது அன்பு உண்டாயிற்று. இது என்றென்றும் தொடரவேணும். கழிந்த காலங்களில் இதர தேவதைகளின் கால்களில் விழுந்துப் பட்ட துன்பம் எப்போதும் ஏற்படக் கூடாது அவர்களை அவ்வாபத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என வேண்டுகிறார். 10, 11, 12, 14 பாசுரங்களில். இந்த 11ம் பாசுரத்தை நோக்கும் போது 'யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்கிற பழமொழி இப்பாசுரனாலேயே ஏற்பட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது. அவனைப் பற்ற இன்னார் இனையார் என்பது கிடையாது. கஜேந்த்ரனை காத்தது போல் நம்மையும் காப்பான். எல்லோரும் பற்றுங்கோள் என அறை கூவல் விடுகிறார் 12ம் பாசுரத்தில். லோகத்தார் உடலுக்குப் பூண் கட்டிக் கொள்கின்றனர். ஆனால் நமக்காக வாமன, ராம, க்ருஷ்ணாவதாரங்களில் பட்ட துன்பங்களை நினைத்துப் பாருங்கள். அவனே படும போது நாம் சிரமப்படக் கூடாதா? என சுகவாசிகளை வெறுத்துப் பேசுகிறார் 15ம் பாட்டில். இவ்வாறு பல பாசுரங்களைத் தெரிவித்த பூதத்தார் 56ம் பாசுரத்தில் ஒரு சிறப்பையும் காட்டுகிறார்.

அதாவது மற்றைய ஆழ்வார்கள் பிராட்டியை விளிக்கும் போது எம்பெருமானுக்கு விசேஷணமாகவே காட்டுகின்றனர். ஆனால் இவரோ 'பேணிக் கருமாலைப் பொன்மேனி காட்டா முன் காட்டும்' என்கிறார். கரிய நிறத்தவனான திருமால் திருமேனியழகை காட்டுவதற்கு முன்பே லோகமாதாவான பிராட்டி எம்பெருமானை நமக்கு காட்டிக் கொடுப்பாள் எனக் கூறுவது சிறப்பானது 74ம் பாசுரத்தில். தன்னை "பெருந்தமிழன் நல்லேன் பெரிது" எனமார்த் தட்டிக் கொள்கிறார். இவ்வாறு நான் என அஹங்காரப்படுவது தவறில்லையோ எனில்? தவறில்லை. இது ஸாத்விக அஹங்காரம் எனப்படும். தம்முடைய பெருமையைச் சொல்லிக் கொள்ளலாம் என்பதை 'மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்" என்கிற நன்னூல் சூத்திரமும் பகர்கிறது. இப்பாசுத்தைப் பின்பற்றியே 'என்மதிக்கு விண்ணெல்லாம் உண்டோ விலை?' 'கவி சொல்ல வல்லேற்கு இனிமாறுண்டோ' 'இல்லை எனக்கெதிர் இல்லை எனக்கெதிர்' என்பவை தோன்றின போலும்.

பெருந்தமிழனான நீர் ஒரு கவி சொல்லும் என்று எம்பெருமான் கேட்க, அதுவே இப்பாசுரமாக (75) உருவெடுத்துள்ளது. பெருகும் மதநீரை உடைய யானையானது பெண் யானைக்கு இரண்டு கணுக்களை உடைய இன மூங்கிலைத் தேனில் தோய்த்து நீட்டும் திருவேங்கடமலை எனக் கொண்டாடுகிறார். இப்பாசுரத்திற்கு திருமலை அனந்தாழ்வான் நிர்வாஹமாக காஞ்சீ ஸ்வாமி காட்டும் விளக்கமானது சுவையானது. யதிராஜரைப் புகழும் அமுதனார் 'எங்கள் இராமாநுச முனிவேழம்' எனக் கொண்டாடுகிறார். யானையான இராமாநுசர் திருவேங்கட யாத்திரையாக விடை கொண்டபோது சிஷ்யர்கள் அனைவரும் "நம்மாழ்வாரின் சரணாகதி பலித்தது திருமலையிலேயே. அவனுக்கு இரண்டு பிரிவுகள் உடைய த்வயார்த்தத்தை அளித்துள்ளார். அந்த த்வயார்த்தத்தை எங்களுக்கு அருளவேணும்" என வேண்ட அருளினார். அது எவ்வாறு இருந்தது என்பதை காட்டுகிறார். மத்தகஜத்தை போல் த்வயார்த்த விஷயங்களை உடைய எம்பெருமானார் இரண்டு கணுக்களைப் போலிருக்கும். இரண்டு பிரிவுகளை உடைய த்வயார்த்தை பக்கத்திலிருக்கும் தேனான திருமந்திரத்தையும் சரம ச்லோகத்தையும் கலந்து உபதேசித்தார் என்பதை பெரியோர்கள் வாயிலாகத் தாம் கேட்டதாகக் காட்டியுள்ளார்.

இவ்வாறு பெருமையுடைய எம்பெருமான் ஸந்நிதிக்கு நாம் போகும் போது செல்ல வேண்டிய விதத்தைப் பேசுகிறார் வரைச் சந்தனக் குழம்பும் என்கிற 76ம் பாசுரத்தினாலே. 95ம் பாசுரமான என்னெஞ்சமேயாள் என்கிற பாசுரத்தில் லோகத்திற்கு காரணன், அனைவரையும் காப்பவன். திருவத்தியூராகிற காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்து என்னுடைய எல்லா அவயங்களிலும் புகுந்து நிற்கின்றான். அவ்வாறானவன் வார்த்தையே 'ஜ்ஞாநீ து ஆத்மைவமேமதம்" என்பது. இதனால் எம்பெருமான் அடியவர்களைத் தவிர மற்றவர்களை அறியாத தன்மை வெளிப்படுகிறது. 'என்னெஞ்சமேயான்' என்கிற பதத்திற்குச் சேர தேவப் பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ள பூதத்தார் மூலவர் தன்னுடைய ஹ்ருதத்தில் கைகளை வைத்துக் கொண்டு "தொழுதெழன் மனனே" என்கிற நம்மாழ்வார் எழுந்தருளியுள்ளது போலுள்ளது குறிக்கொள்ளத்தக்கது. அத்தேவப் பெருமாளின் பெருமை (96) சில. அவையாவன பெரிய திருவடியை வாஹனமாக உடைய தன்மை. ஆதிசேஷன் மீது கண்வளர்ந்தருளும் நிலை. இத்தோடு கூடிய தேவப் பெருமாளையே வேதங்கள் எல்லாம் பூஜிக்கத் தகுந்தவன் எனக் கொண்டாடுகிறது. அவனைவிட மேலானவர்கள் யாரும் இல்லை. அவனைக் காண வைகுந்தம் செல்ல வேண்டாம். நமக்காகவே கச்சியில் கோயில் கொண்டுள்ளான். அவனை அனுபவியுங்கள் என வேண்டுகிறார். இவ்வாறான எம்பெருமான் என்னோடு கலந்து பழகினது செயற்கரிய செயல் எனக் கொண்டாட தகுந்தது. இதற்குக் காரணம் ஆழ்வாரை விட்டு எம்பெருமான் இருக்க முடியாத நிலை. இதையே வேதமும் 'ப்ரஜாபதிஸ்த்வோவேத....... ஸ புண்யோ பவதி" என்றும், 'வாரிக் கொண்டு....... முற்றப் பருகினான்' என்கிற திருவாய்மொழிப் பாசுரமும், 'அவனை இவன் பற்றும்...... ஸ்வீகாரமே ரக்ஷகம்" என்கிற பிள்ளையுலாகாசிரியரின் வார்த்தையும் உறுதிப்படுத்துகிறது. இப்பெருமையுடைய ஈச்வரன் பூதத்தாரிடத்தில் உமக்குத் தேவையானது என்ன? என்று கேட்க, உன்னிடம் அடியேன் வைத்துள்ள அன்பைத் தாங்குமளவு சுருக்கித் தரவேணும் எனக் கூறி அந்தாதியை முடித்தருளுகிறார். இக்கட்டுரையின் கண் உள்ள குற்றங்களை நற்றமாகக் கொள்ளவேண்டும்.

மூன்றாம் திருவந்தாதி

முனைவர் ஸ்ரீ உ.வே. வி.வி. ராமாநுஜன் ஸ்வாமி, திருவல்லிக்கேணி

"மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்த நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த பெற்றிமையோர் முதலாழ்வார்கள்" என்று ஸமுச்சயமாக அழைக்கப்படும் மூவர் – பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோர். அயோநிஜர்களாய் வெவ்வேறு இடங்களில் தோன்றிய இவர்கள் 'நாட்டோடியல் வொழிந்து நாரணனை நண்ணமே' – என்கிறபடியே தனித்தனியே பெரும்பாலும் காடுகளிலே பகவதநுபவத்திலே ஆழ்ந்து அலைந்து கொண்டிருக்க, எம்பெருமான் இவர்களை ஒன்று சேர்த்து அநுபவிக்கத் திருவுள்ளங் கொண்டு திருக்கோவலூரில் ஒரு அகத்து இடைகழியில் சேரும்படி பண்ணினான். இடைகழி என்பது வீட்டின் வாசலுக்கும் உள்ளுக்கும் இடையே உள்ள சிறிய இடம். ரேழி என்றும் அழைப்பர். தேஹளி என்பதும் இதுவே. இச்சிறு இடத்தில் யாத்ருச்சிகமாகச் சேர்ந்த மூவரும் ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொண்டு நின்று பகவதநுபவத்தில் மூழ்கியிருக்க, இவர்களை நெருக்கிக் கொண்டு எம்பெருமான் திருமகளுடன் அங்கு வந்து நின்றான். "வாசல் கடைகழியா உள்புகாக் காமர்பூங்கோவல் இடைகழியே பற்றியினி" என்று ஆழ்வாரே பேசி மகிழ்கிறார். இருட்டு வேளை; வெளியே இடியும் மழையுமாயிருந்தது. "வையந்தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக" என்று ஒரு விளக்கை ஏற்றி வைத்தார் பொய்கையார். "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தையிடுதிரியா" என்று ஒரு சுடர் விளக்கேற்றினார் பூதத்தார். இவற்றின் பேரொளியில் "திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன் – பொன்னாழிகண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்" என்று தாம் கண்டதைப் பட்டியலிட்டுப் பேசினார் பேயார்.

'வையந்தகளியா' என்று தொடங்கித் தமது அநுபவங்களை ஒரு நூறு இனிய தமிழ்ப் பாசுரங்களாகப் பாடினார் பொய்கையார். பூதத்தார் 'அன்பே தகளியா' என்று தொடங்கி ஒரு நூறு பாசுரங்கள் பாட அடுத்து பேயார் 'திருக்கண்டேன்' என்று தொடங்கி நூறு பாசுரங்கள் பாடினார். இம்மூன்று ப்ரபந்தங்களும் முறையே முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என அழைக்கப்படுகின்றன. மூன்றும் சேர்ந்து ஒரே ப்ரபந்தம் என்னலாம்படி இவற்றுள் உள்ள நெருங்கிய தொடர்பை நம் ஆசாரியர்கள் காட்டியருளினார்கள். இப்ப்ரபந்தங்களுக்கு நம்பிள்ளை அருளிச் செய்த வியாக்யானமொன்றும் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானமொன்றுமாக இரண்டு விளக்க நூல்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றிலுள்ள கருத்துக்களை ஒருவாறு தொகுத்து விண்ணப்பிக்கிறேன்.

முதலில் வையம், கடல், சூரியன் என்று விபூதியைச் சொல்லி சுடராழியான் என்று விபூதிமானான எம்பெருமானைச் சொன்னது ஞானதசையாகக் கொள்ள வேணும். எம்பெருமான் ஸர்வஜகத்ஸ்வாமி–எல்லா சேதநாசேதனா சேதநங்களும் அவனுடைமைகள் என்ற அடிப்படை ஞானமே இங்கு விஷயம். அடுத்து, அன்பையும் ஆர்வத்தையும் சொன்னது ஞாநத்தின் முதிர்ச்சியான பக்தி, அதனால் பிறக்கும் அபிநிவேசம். "பக்திச்ச ஜ்ஞாந விசேஷ ஏவ" என்றாரிறே எம்பெருமானாரும் (வேதார்த்தஸங்க்ரஹம்). ஜ்ஞாந பக்திகளின் விளைவு ஸாக்ஷாத்காரம் (நேரே காணுதல்) ஆகையால் 'கண்டேன் கண்டேன் கண்டேன்' என்று களித்துப் பேசுகிறார் பேயாழ்வார். மூன்று ஆழ்வார்களுக்கும் ஜ்ஞாநம், பக்தி, ஸாக்ஷாத்காரம் என்ற மூன்று நிலைகளும் உண்டு. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒன்று விஞ்சி இருக்கும். இவை அடுத்தடுத்து வரும் நிலைகளாகச் சொன்னது காரணாவஸ்தையிலிருந்து கார்யாவஸ்தைக்கு மாறுவது போல என்று கொள்க.

நம்பிள்ளை அருளிச் செய்வது: "முதலாழ்வார்கள் மூவருமாகிறார்–சாலஜ்நாதிகநாயிருப்பாருமாய் பகவத் விஷயத்தில் முற்பாடருமாயாய்த்து இருப்பது. மற்ற ஆழ்வார்கள் தங்களைக் காட்டிலும் பகவத் விஷயத்தில் மிக்க ஆழ்ந்திருப்பதாலே இவர்கள் மூவரையும் நமதாசாரியர்கள் நித்ய ஸூரிகளோபாதி நினைத்திருப்பர். "செஞ்சொற்கவிகள்" என்றும் "செந்தமிழ்பாடுவார்" என்றும் "இன்கவிபாடும்

பரமைகாந்திகள்" என்றும் போற்றப்படுபவர்களுக்குப் பரதசையோடு உகந்தருளின நிலங்களோடு வாசியற எங்குமொக்க ஜ்ஞாநபக்திகள் வ்யாபித்திருக்கச் செய்தேயும் வெள்ளப் பெருக்கு நீர் பள்ளங்களிலே தங்கியிருக்குமாபோலே திருவுள்ளமுகந்தருளினவிடத்தும் திருமலையிலும் ஊன்றியிருப்பர்கள்.

இவர்கள் அநுபவம் முதலில் ஜ்ஞாநமாய், அடுத்து பக்தியாய் பின்னர் தர்சநமாயிறே இருப்பது. இவைதான் மூன்றும் ஒருவர்க்கே பிறந்த அவஸ்தைகள் போலேயிருக்கிறது. மூன்று ப்ரபந்தங்களும் சேர்ந்து ஒரே ப்ரபந்தமாகச் சொல்லலாமாயிருக்கிறது.

எம்பெருமான் தனதருளாலே ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலம் அருளினான். மதிநலமாவது பக்தியாகிற ஜ்ஞாநம். இது மூன்று நிலைகளிலே இருக்கும். பரபக்தி, பரஜ்ஞாநம், பரமபக்தி என்று. எம்பெருமானின் படிகளை அறிந்து அவனை ஸாக்ஷாத்கரிக்க வேணும் என்ற அதிகமான ஆவல் பரபக்தி; மாநஸாநுபவமும் ஸம்பவிக்கும். பகவதநுபவம் ஏற்படும் போது இன்பமயமாயிருக்கும். இது தடையின்றி தொடர்ந்து வாராமையால் அவ்வநுபவமில்லாத போது மிகவும் துக்கிக்கும்படியாயிருக்கும். பகவானுடைய பூர்ண ஸாக்ஷாத்காரம் பரஜ்ஞாநம். அவனது அநுபவம் தடைப்பட்டால் நீரை விட்டுப் பிரிந்த மீன்போல மூச்சடங்கும்படியான நிலை பரமபக்தி. முதலாழ்வார்களது அருளிச் செயல்கள் மூன்றையும் ஆராய்ந்து நமது பூருவர்கள் பொய்கையாழ்வாரது அநுபவம் பரபக்தி, பூதத்தாழ்வாரது நிலை பரஜ்ஞாநம், பேயாழ்வாரது நிலை பரமபக்தி என்று வகுத்துள்ளனர்.

மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களில் தலைவராகப் போற்றப்படும் நம்மாழ்வாருக்கு அவர் பாடியருளிய திருவாய்மொழியில் முதல் தொண்ணூற்றெட்டு திருப்பதிகங்களில் பரபக்தி நிலை என்றும் அடுத்த "சூழ்விசும்பணிமுகில்" பரஜ்ஞாநதசையில் அருளிச்செய்யபட்டதென்றும் இறுதித் திருவாய்மொழியான "முனியே நான்முகனே"யில் பரமபக்தி தலையெடுத்தபடி என்றும் நமதாசாரியர்கள் நிர்வாஹம். இந்த பக்தியை ஆசார்யர்கள் எம்பெருமானிடம் தமக்கருளும்படி ப்ரார்த்தித்தனர். "பகவந்! பக்திமபி ப்ரயச்சமே" என்று யாசித்தார் ஆளவந்தார் (ஸ்தோத்ரரத்நம்). "பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேகஸ்வபாவம் மாம்குருஷ்வ" என்று வேண்டினார் எம்பெருமானார் (சரணாகதிகத்யம்).

"எம்பெருமானை உபயவிபூதியுக்தன், ஸர்வஜகத்ஸ்வாமி" என்றார் பொய்கையார். அவன் "நாராயண சப்தத்தினால் சொல்லப்பட்டவன்" என்றார் பூதத்தார். "ஸ்ரீமந்நாராயணன்" என்ன வேணும் என்பர் பேயாழ்வார். இது ஒரு ரஸமான நிர்வாஹம். மூன்றாம் திருவந்தாதியநுபவத்திற்கு வருவோம்.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்(1) என்று தாம் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்தபடியை முதல் முன்னம் அருளிச் செய்கிறார். 'திரு' என்று மங்களமாகத் தொடங்குவது இப்ப்ரபந்தத்திற்குத் தனிச்சிறப்பு. 'கண்டோம் கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்' (திருவாய். 5–2–1) என்பாரைப் போலே "திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்" என்று அடுக்கிக் கொண்டே போகிறார். மேலே "இன்றே கழல் கண்டேன்" (2) என்று தமது ப்ராப்பத்தை அருளிச் செய்கிறார். "திருமாலே! உன்னை மருக்கண்டு கொண்டென் மனம்; ஏழ் பிறப்பும் யானறுத்தேன்" என்று அவனிடமே விண்ணப்பிக்கிறார். எனது மனம் உன்னிடம் பொருந்திவிட்டது. இனிப் பிறவி என்பதில்லை. உன்னைப் பெற்றினிப் போக்குவனோ? இன்னும் சொல்லுகிறார்– "மாகடல் நீருள்ளான் மலராள் தனத்துள்ளான்" – மனத்துள்ளான் (3), தான் விரும்பி வாழும் திருப்பாற்கடலையும் பிராட்டியின் மார்பகங்களையும் விட்டுப் பெயர்ந்து வந்து என் மனத்தே நிறைந்துள்ளான். எனக்கேலினி என் குறை? 'மண் கொண்டு விண்கடந்த ....ங்கழலான்–இனியவன்–உள்ளத்தின் உள்ளே உளன்' (81) "உணர்வென்னும் ஒளி கொள் விளக்கேற்றி வைத்தவனை நாடி வலைப்படுத்தேன்–மெத்தெனவே நின்றான், இருந்தான், கிடந்தான் என் நெஞ்சத்து, பொன்றாமை மாயன் புகுந்து" (94). முன்னிரண்டு ஆழ்வார்கள் போல் தகளி, நெய், திரி ஏதும் கொள்ளாமல் ஞானமே பேரொளியாக விளங்க ஒரு விளக்கை ஏற்றி வைத்து அவனைத் தம்மிடமிருந்து பிரிந்து போகாதபடி நெஞ்சென்னும் வலையில் அகப்படுத்திக் கொண்டேன். அவனும் அவ்வலையுள் புகுந்து நிற்பது, இருப்பது, படுப்பது எல்லாம் அங்கேயாக உளன்.

எம்பெருமானது இணையடிகளின் போக்யதையை (இனிமையை)ப் பலபடியாலும் பேசி, அவற்றைப் பணிந்து உய்யுமாறு தம் நெஞ்சுக்கே உபதேசித்து, பிறருக்கும் உபதேசிக்கிறார். "சுடராழி ஒன்றுடையான் சூழ்கழலே நாளும் தொடராழி நெஞ்சே தொழுது" (24) "செம்பொன் கழல் பாடியாம் தொழுதும் கை" (35). "கரியான் கழலே தெருள் தன் மேல் கண்டாய் தெளி" (57). "வாழும் வகை அறிந்தேன்–செங்கண்மால் எங்கள் பெருமான் அடிசேரப் பெற்று" (59). "மது நின்ற தண் துழாய்மார்பன் பொது நின்ற பொன்னங்கழலே தொழுமின்" (88) "வாணன் தோள் செற்றான் கழலே நிறை செய்து என் நெஞ்சே நினை" (92) "திருமால் திருவடியே வந்தித்து என் நெஞ்சமே வாழ்த்து" (95) "தாள் முதலே நங்கட்குச் சார்வு" (99) என்று தம் ப்ராப்யத்தைத் தெளிய அருளிச் செய்கிறார்.

அமலனாதிபிரான் வ்யாக்யான அவதாரிகையில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்யும்படி: வேதம் போலே முதலாழ்வார்கள் மூவரும் பரத்வத்திலே மண்டி அர்ச்சையையும் தொட்டுக் கொண்டு போந்தார்கள். திருமங்கையாழ்வார் பரத்வத்தைக் காற்கடைக் கொண்டு தானுகந்த ஊரெல்லாம் தன் தாள் பாடிப் பரபரப்பாய் திரிந்தார்" என்பதே.

"நன்கோதும் நால்வேதத்துள்ளான்–பாற்கடலான், பாம்பணையின் மேலான், பயின்றுரைப் பார் நூற்கடலான் நுண்ணறிவினான்" (11) பதக்ரமப்பிழையின்றி ஸுஸ்வரமாக ஓதப்பட்ட நாலுவேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்பட்டவன். "வேதைஸ்சஸர்வைரஹமேவ வேத்ய:" (கீதை 15–15) எல்லா வேதங்களிலும் அறியப்படுபவன் நானே (மற்று ஆருமில்லை). வேதத்தை விரித்துரைத்த நூற்கடல்களான இதிஹாஸபுராணங்களுக்கெல்லாம் ப்ரமேயம் இவனே. பாற்கடலில் பாம்பணை மேல் பையத்துயின்ற பரமன்; அவனருளால் பெற்ற நுண்ணிய அறிவினால் மட்டுமே அறியக் கூடியவன். "பண்டுலகம் அளப்ப நீண்ட முடிவட்டம் ஆகாய மூடறுத்து அண்டம் போய் நீண்டதே மாகாயமாய் நின்ற மாற்கு" (13). முன்பொருகால் பெருவுருவு கொண்டு பூமியை அளக்கப்புக்கு அவன் திருமுடி (கிரீடம்) ஆகாசத்தையூடறுத்து அண்ட பித்திக்கு அவ்வருகே நீண்டதன்றோ? "மாலே! நெடியோனே! கண்ணனே ! விண்ணவர்க்கு மேலா!" என்றார் பூதத்தாரும் (2–திரு–100). இவற்றுக்கு மேலும் வேணுமோ அவனது பரத்வத்தை பறை சாற்ற? மேலே தொடர்வது.

"நாற்பால வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும் பாதத்தான் பாதம் பணிந்து– நூற்பால் மனம் வைக்க நொய்விதான்" (14) நாலு வேதங்களாலே பேசப்படுமவன் வேதங்களாலேயே அடையத் தக்கவனோ? எனில், நாம் கண்ணாலே கண்டநுபவிக்கும்படி திருமலையிலே (திருவேங்கடம் திருப்பதியிலே) வந்து நிற்கிறான். நித்யஸூரிகளும் வந்து பணியும் அவன் திருவடிகளிலே தலையாலே பணிந்தால் அவனை உள்ளபடி அறியும்படிக் காட்டித் தருவான்.

எம்பெருமானின் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகளையும் இத்திருவந்தாதியில் பேயாழ்வார் அநுபவிக்கிறார். "பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்– வண்பூங்கடிகை இளங்குமரன்தன் விண்ணகர்" (61). வைகுந்தத்திலும் பாற்கடலிலும் நித்யவாஸம் பண்ணும் இளங்குமரனார்க்கு திருவேங்கடம், திருக்கடிகை, திருவிண்ணகர் ஆகிய இவ்விடங்கள் ஆச்ரிதர் வந்து எளிதில் கிட்டும்படி வாஸஸ்தலங்களாக அமைந்துள்ளன என்கிறார். "விண்ணகரம், வெஃகா, விரிதிரைநீர் வேங்கடம், மண்ணகரம் மாமாட வேளுக்கை, தென் குடந்தை, தேனார் திருவரங்கம், தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு" (62). முன்பு மஹாபலி தானமாய் நீர்வார்க்க, அதைக் கையிலேற்று உலகங்களை யெல்லாம் அளந்து கொண்ட நெடியோன் பரம ஸுலபனாய் உகந்து எழுந்தருளியுள்ள தலங்கள் திருவேங்கடம், திருவெஃகா, வேளுக்கை, திருக்குடந்தை, திருவரங்கம், திருக்கோட்டியூர் இவையாம்.

முதலாழ்வார்கள் மூவருமே திருவேங்கட மலையையும், அங்கு காணும் காட்சிகளையும் அங்கு கோயில் கொண்டுள்ள திருவேங்கடவனையும் அதிகமாக ஈடுபட்டுப் பாடுகிறார்கள். 'செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் தேவர்' (பெரிய திருமொழி 2–8–2) என்றொரு தனி விருதை கலியன் இவ்வெம்பெருமானுக்குச் சூட்டுகிறார். இவர்கள் மூவருமாக திருவேங்கடத்தைப் பாடும் பாடல்கள் ஐம்பது; அவற்றுள் பேயாழ்வாரது

பங்கு பத்தொன்பது. அடுத்து திருவரங்கத்துக்குப் பத்தே பாசுரங்கள் தாம். திருமலையில் நாலாயிர ஸேவாக்ரமம் அநுஸந்திக்கு போது முதலாழ்வார்கள் பாடிய மூன்று திருவந்தாதிகளே முதலில் ஸேவிக்கப்படுகின்றன. பின்னர் தான் முதலாயிரம்.

ஆழ்வார்கள் எவருமே திருமலையின் மீதேறி மலையின் வளங்களையும் அங்கு கோயில் கொண்டுள்ள பெருமாளையும் கிட்டி ஸேவித்தநுபவித்ததாக சரித்திரம் இல்லை. ஆயினும் அம்மலையில் வாழும் வானரங்கள், யானைகள், புலி, சிங்கம், வேடர், குறத்தி, இவர்கள் சூழ வாழும் எம்பெருமான், இவர்கள் பங்கேற்கும் பல நிகழ்ச்சிகளையும் நாம் நேரில் கண்டு அநுபவிக்கும்படி அருளிச் செய்கின்றனர்.

"பெருகுமதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று இருகண் இளமூங்கில் வாங்கி, அருகிருந்த தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர் வான்கலந்த வண்ணன்வரை" (2.திரு.75) மதம் பெருகும் வேழம் (ஆண்யானை) தன்பிடிக்கு (பெண்யானை) முன் நின்று இளமூங்கிலைப் பறித்து அதைத் தேனில் தோய்த்து ஆசையுடன் கொடுக்கிறதாம்–பூதத்தார் கண்டு சொல்வதிது. இந்த கலவிக்கு மாறாக ஒரு ஊடல் காட்சி: "புரிந்து மதவேழம் மாப்பிடியோடு ஊடி திரிந்து சினத்தால் பொருது– விரிந்த சீர் வெண்கோட்டு முத்து உதிர்க்கும் வேங்கடமே–மேலொரு நாள் மண் கோட்டுக் கொண்டான் மலை" (3 திரு 45). ஒரு மத வேழம் தன் பிடியுடன் கலந்து மகிழ்ந்திருந்து, பின் அப்பிடியோடு ஊடல் ஏற்பட்டு, மிகுந்த கோபத்துடன் ஓடித் திரிந்து தன் பெரிய தந்தங்களால் மலையைக் குத்த அதினின்றும் முத்துக்கள் தெரித்து விழுவதாகக் காண்கிறார் பேயார். இதுவே பூமிதேவியை தன் தந்தங்களில் தாங்கி எடுத்த வராஹப்பிரான் மலை. இன்னுமொரு காட்சி – "தேன் விண்ட மலர் கொண்டு விறல் வேங்கடவனையே கண்டு வணங்கும் களிறு" (3.திரு.70). இந்த யானை ஆசாரத்தில் குறையாதது. "புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்த் தாழ்ந்து அருவி உகுமதத்தால் கால்கழுவி– கண்டு வணங்கும் களிறு". இதுவும் ஒரு பெருகுமதவேழம். அருவிபோல் பெருகும் தன்மத ஜலத்தினாலேயே கால் கழுவி, முகத்தில் பெருகும் மத ஜலத்தால் வாய் கொப்பளித்து (ஆசமநம் பண்ணி!) வேங்கடவனை புதுமலர் கொண்டு அர்ச்சித்து வணங்குகிறதாம். இன்னுமொரு மதயானை தன் மதத்தால் துதிக்கையை உயரே எடுத்து மேகத்தைப் பிடிக்கப் போக அதன் தந்தங்களின் ஒளி கொண்டு ஒரு யாளி அந்த யானையின் தந்தங்களை முறித்து யானை அலறி விழும்படிக் கொன்றதைக் கண்டு பேசுகிறார் ஆழ்வார் (71).

"பார்த்த கடுவன் சுனைநீர் நிழல் கண்டு பேர்த்தோர் கடுவனெனப் பேர்ந்து கார்த்தகளங்கனிக்குக் கைநீட்டும் வேங்கடம்" (68). ஒரு கடுவன் (ஆண் குரங்கு) சுனை நீரில் தன் நிழலைக் கண்டு " இது வேறு ஒரு கடுவன்" என்று நினைத்து அங்கு களாப் பழங்களைப் பரித்துத்தா என்று கைநீட்டிக் கேட்கிறதாம்.

திருவேங்கடமலைச் சிகரங்கள் வானில் சந்திரனைத் தொட்டுப் பிடிக்கலாம்படி ஓங்கியுள்ளன. முழு நிலவில் முயல் போன்ற ஒரு உருவம் தோன்றுவதை மெய்யான முயலென நினைத்து அதைப் பிடிக்க வேண்டுமென வேங்கைப்புலி கோபத்துடன் நோக்குவதை "வெண்மதியினொண் முயலைச் சேர்ந்து சின வேங்கை பார்க்கும் திருமலை" (3 திரு 75) என்று வர்ணித்தருளுகிறார். "வைப்பன் மணி விளக்கா மாமதியை மாலுக்கு என்று எப்பொழுது கை நீட்டும் யானை" (4.திரு.46) என்பதும் ஒரு உள்ளத்தைத் தொடும் காட்சி.

தாம் பிறந்த ஊரான மயிலைத் திருவல்லிக்கேணியை இவர் பாடுமழகைக் காணீர்! (3 திரு 16): "வந்துதைத்த வெண் திரைகள் செம்பவள வெண்முத்தம் அந்தி விளக்கும் அணி விளக்காம் – எந்தை ஒருவல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்வன் திருவல்லிக்கேணி யான் சென்று". நமது "மெரீனாபீச்"சை ஆழ்வார் வியந்து வர்ணிக்குமழகை காணீர்! கடலலைகள் செம்பவளம் வெண்முத்து இவைகளைக் கரையில் கொண்டு வந்து தள்ளுகின்றன. ஸாயங்காலங்களில் இவற்றின் ஒளி கடற்கரையில் ஒளி விளக்காய் விளங்குகின்றன. இத்தகு கடற்கரையிலமைந்த திருவல்லிக்கேணி அல்லித்தாமரையாளான பிராட்டி உறையும் திருமார்பினனான ஸ்ரீபார்த்தஸாரதி அஸ்மத் ஸ்வாமி.

அவதார சேஷ்டிதங்களில் ஈடுபட்டுப் பேசும் பாசுரங்கள் பல. க்ருஷ்ணாவதார லீலைகளில் ஈடுபாடே அதிகம். திருவல்லிக்கேணியில் ஆழ்வார் எழுந்தருளியுள்ள தனிக்கோயிலில் ஆராத்ய தேவனாக ஸேவை ஸாதிப்பது கண்ணனே என்பதும் அறியத்தக்கது.

"அடைந்ததரவணை மேல் ஐவர்க்காய் அன்று மிடைந்தது பாரதவெம்போர்– உடைந்ததுவும் ஆய்ச்சிபால் மத்துக்கே அம்மனே வாள் எயிற்றுப் பேய்ச்சி பாலுண்டபிரான்" (28). "பேய்ச்சி பாலுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து ஆய்ச்சி முலை கொடுத்தாள் அஞ்சாதே" (29).

ஸ்ரீபார்த்தஸாரதியாய் பாண்டவர் ஐவர்க்கு பாரதப் போரில் வெற்றி பெற உதவியவன் முன்னர் சிறுவனாய் ஆய்ப்பாடியில் வெண்ணெய் திருடி உண்டு, தாய் யசோதை மத்தால் அடிக்கப் புக, பயந்தோடியவன் பேய்ச்சியான பூதனையின் முலையை உண்டு, கூட உயிரையும் பறித்த கண்ணனை தாயன்பால் பயமின்றி எடுத்த யசோதை, தன் முலைப்பாலை விஷத்துக்கு மாற்றாக உண்ணச் செய்தாளன்றோ?

புருஷோத்தமனான எம்பெருமான் ஒருவனே ஆண்மகன். "ஸ்த்ரீப்ராயமிதரம் ஜகத்" என்கிறபடியே அவனையொழிந்த மற்ற யாவரும் பெண்களாய் மதிக்கப்பட வேண்டியவரே. எனினும் உலகில் பிறவிகள் ஆண்பாலராகவும் பெண் பாலராகவும் காணப்படுவது ப்ரத்யக்ஷம். ஆண்களாய்ப் பிறந்த ஆழ்வார்கள் தாங்கள் பெண்மையை ஏறிட்டுக் கொண்டு பாடும் பாசுரங்கள் பல பல உண்டு. பெண்மையில் தாயாகவும் தோழியாகவும் தலைமகளாகவும் பேசும் பாடல்கள் பலபல உண்டு.

ஆழ்வார்களின் பாசுரங்கள் அனைத்திலும் பேயார் பாடிய ஒரு பாசுரமே இந்தப் பெண் பேச்சுக்கு மூலமாகக் காணப்படுகிறது. இதோ பாசுரம்:

வெற்பென்று வேங்கடம்பாடும் வியன்துழாய்
கற்பென்று சூடும் கருங்குழல் மேல்–மற்பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த நீள்கடல் நீராடுவான்
பூண்ட நாளெல்லாம் புகும். (69)

தனது மகள் படியைத் தாய் எடுத்துச் சொல்லுவதாக அமைந்துள்ளது இப்பாசுரம். "ஏதாவது மலையைச் சொல்லப்புக்கால் என் பெண் வேங்கடம் என்றே சொல்லுகிறாள். அவனுகந்த திருத்துழாய் மலரையே தனது மேலான தர்மமாக (கற்பு) தனது கருங்குழலில் சூடுகிறாள். மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன் உகந்து சயனிக்கும் பரந்த திருப்பாற்கடலில் நீராட வேணுமென்று விடிந்த விடிவுகள் தோறும் (நாள்தோறும்) புறப்படா நின்றாள்" என்கிறாள் தாய்.

இத்திருவந்தாதி வ்யாக்யானத் தலைப்பில் நம்பிள்ளை அருளிச் செய்வது: "இத்திருவந்தாதி ஒருவருக்கு நிலமல்ல, கண்டு அடைவு கெட்டுப் பேசுகையாலே. ஆகையாலன்றோ பேயராய்த்து." (பேயார் என்று பெயராயிற்று). மஹதாஹ்வயர் என்று இவர் அழைக்கப்படுகிறார். மஹத்– எல்லை காணவியலாத பெருமையைச் சொல்வது. இவர் அநுபவபூர்வமாகப் பாடியுள்ள இத்திருவந்தாதியில் ஆழ்வார் உரைத்துள்ளவை முழுவதுமாகப் பேசுவது இயலாத காரியம்.

முடிவில் ஆழ்வார் அருளிச் செய்வது: 'குட்டத்துக் கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் தாள் முதலே நங்கட்குச் சார்வு' (99). அன்று யானையின் துயரம் தீர்க்கப் புள்ளூர்ந்து வந்து அதன் காலைக் கவ்விய முதலையைத் தன் சக்கரப்படையால் முடித்த எம்பெருமான் திருவடிகளே நமக்கு மேலான ஆச்ரயம் (பற்ற வேண்டியது), பரம ப்ராப்யம். இதை நாம் கார்யகரமாக்கப் பிராட்டியின் அருள் அவசியமாவதைச் சொல்லி ப்ரபந்தத்தைத் தலைக் கட்டுகிறார். "சார்வு நமக்கு என்றும்–தேனமரும் பூமேல் திரு" (100). ஆச்ரித ரக்ஷணத்திலே குளிர நோக்காநின்ற கண்ணையுடையவளாய்த் தேன் செறிந்த பூவின் மேல் இருக்கிற திரு சார்வு நமக்கு என்றும்–பெரிய பிராட்டியார் எல்லாக் காலத்துக்கும் அபாச்ரயம் (புகலிடம்) என்று இங்கு பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானம் காண்க. திரு என்று மங்களகரமாகத் தொடங்கி திரு என்றே சுபமாக முடித்தருளுகிறார்.

நான்முகன் திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. கே.பி தேவராஜன் ஸ்வாமி
ஆஸ்தான வித்வான், ஸ்ரீ வானமாமலை மடம்.

ச்ரிய: பதியான ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். அவர்களுள் க்ருஷ்ணனோடு ஒப்புச் சொல்லாம்படி இருப்பவர் திருமழிசையாழ்வார். "ஒரு பிறவியிலே இருபிறவியரானார்" என்று அருளுகிறார் அழகியமணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்ய ஹ்ருதயத்தில். கண்ணன் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளர்ந்தவன். அதாவது யதுகுலத்தில் பிறந்து கோபகுலத்தில் வளர்ந்தவன். அப்படியே திருமழிசையாழ்வாரும் பார்கவகுலத்தில் அவதரித்துப் பிரம்பன் குடியில் வளர்ந்தவர். ஆகவே இருவரும் ஒரு பிறவியிலே இருபிறவியரானவர்கள். கண்ணனும் கீதாசாஸ்த்ரத்தின் மூலமாகவும் தன்னுடைய சரித்ரங்கள் வாயிலாகவும் தானே பரதத்வம் என்பதை அருளினான். அவ்வண்ணமே திருமழிசைப்பிரானும் தம்முடைய நான்முகன் திருவந்தாதி திருச்சந்தவிருத்தம் என்கிற இரு திவ்யப்ரபந்தங்கள் மூலமாக கண்ணனான பகவானே பரதத்வம் என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளார். நான்முகன் திருவந்தாதியின் ஸாரத்தை ஈண்டு அனுபவிப்போம்.

ஆசார்ய ஹ்ருதயத்தில் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருமழிசையாழ்வாரை "உறையிலிடாதவர்" என்றருளுகிறார். இவ்விடத்து வ்யாக்யானத்தில் மணவாளமாமுனிகள் "உருவினவாள் உறையிலிடாதே ஆதி மத்ய அந்தங்களில் தேவதாந்தர அவரத்வ ப்ரதிபாதந பூர்வகமாக பகவத்பரத்வத்தை உபபாதிக்கும் திருமழிசைப்பிரான்" என்றருளியுள்ளார். திருமழிசையாழ்வார், தம் நாவாகிற வாளைக் கொண்டு, தேவதாந்தரங்களுக்குப் பரத்வம் சொல்லும் வாதங்களை வெட்டியெறிந்து எம்பெருமானுடைய பரத்வத்தை வெளிக்காட்டியுள்ளார் தம்மிரு ப்ரபந்தங்களிலும். அவற்றுள் நான்முகன் திருவந்தாதியில் காட்டப்பட்டுள்ளபடியை இப்பொழுது அனுபவிப்போம்.

முதலாழ்வார்களில், பொய்கையாழ்வார், எம்பெருமான் உபயவிபூதியுக்தன் என்பதை ஸாதித்தருளினார். தமது முதற்பாசுரத்திலேயே, வையம், வார்கடல், வெய்யகதிரோன் என்கிற சொற்களினால் லீலாவிபூதியான ப்ரக்ருதிமண்டலத்தையும், செய்யசுடராழியான் என்று திருவாழியாழ்வானைச் சொன்னதனால் நித்யவிபூதியான பரமபதத்தையும் அருளியுள்ளபடியால் எம்பெருமான் உபயவிபூதியுக்தன் என்றருளினபடி. பூதத்தாழ்வார் "நன்புருகி ஞானச்சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு" என்ற இரண்டாந்திருவந்தாதிப் பாசுரத்தில் அவ்வுபயவிபூதியுக்தன் நாராயணன் என்றருளினார். நாராயணநாமம் அநந்யபரமிறே. மற்ற பல திருநாமங்களை அவற்றின் பொருளைக் கொண்டு பலரிடத்திலும் பொருத்திவிட வாய்ப்புள்ளது. ஆனால், "நாராயணன்" என்ற திருநாமம் நாராயணனாகிற எம்பெருமானைத் தவிர மற்ற எத்தெய்வத்தையும் குறிக்காது. இது வ்யாகரண விதி. மூன்றாமவரான பேயாழ்வார் அந்த நாராயணன் திருவான பிராட்டியுடன் சேர்ந்திருப்பவனானபடியால் "ஸ்ரீமாந்" என்பதை மூன்றாம் திருவந்தாதி முதற் பாசுரத்தில் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்கிற ஸ்ரீஸூக்தியால் வெளியிட்டார். இவ்வண்ணம், "ஸ்ரீமானான நாராயணனே உபயவிபூதிநாதன்" என்று மூவரும் சேர்ந்து நிலைநாட்டினர். இதிறே ஸம்ப்ரதாயார்த்த ஸாரம். இதனையறிந்தால் வேறொன்றுமறிய வேண்டாவன்றோ. இனி நான்காமவரானவர் தெரிவிக்கவேண்டிய அம்சம் என்னவுள்ளது என்கிற வினாவெழுகிறது. முதலாழ்வார்கள் மூவரும் அந்வயமுகத்தால் (நேர்மறையால்) தெரிவித்ததைத் திருமழிசையாழ்வார் வ்யதிரேகமுகத்தால் (எதிர்மறையால்) தெரிவிக்கிறார். அந்வயத்தில் தெரிவிப்பது ஞானத்தாலாகும். வ்யதிரேகததில் தெரிவிப்பது வைராக்யத்தாலாகும். ஞானத்தைவிட வைராக்யத்துக்குச் சிறப்புண்டன்றோ. யுதிஷ்டிரனுடைய ராஜஸூய யாகத்தில், அக்ரபூஜை (முதல் மரியாதை) செய்ய வேண்டுங் கட்டத்தில்,

அறிவிலும் ஆற்றலிலும் வயதிலும் மூத்த பீஷ்மர் கண்ணனின் பரத்வத்தைப் பரக்க விளம்பியருளினார். அதன்பிறகு, அறிவிலும் ஆற்றலிலும் வயதிலும் இளையவனான ஸஹதேவன் கண்ணனே பரம்பொருள், கண்ணனைத் தவிர மற்றையோர் யாரும் பரம்பொருளல்லர் எனக்கூறி மற்றையோர்க்குப் பரத்வம் சொல்லுமவர்களை இழிவுபடுத்தும் வகையில் தன் இடது காலை உயர்த்தினான். அப்பொழுது, பீஷ்மருக்குக் கிடைக்காத பூமாரி ஸஹதேவன் தலையில் விழுந்தது. பீஷ்மர் ஜ்ஞாநாநுகுணமாக அந்வயத்தால் வெளியிட்டதைத் தான், ஸஹதேவன் வைராக்யாநுகுணமாக வ்யதிரேகமுகத்தால் வெளிப்படுத்தினான். உதாரணமாக, "அர்ஜுநன் வில்லாளியே" என்பது அந்வயமுகத்தால் சொல்வதாம். வில்லாளியாயுள்ள தன்மை அர்ஜுனனிடம் சேராது என்பதை மறுத்து, அவனிடம் சேரும் என்பதை ஸ்தாபிக்குமதான இது அயோக வ்யவச்சேதமாம். இதே வாக்யத்தில் சில மாற்றங்கள் செய்து "அர்ஜுநனே வில்லாளி" என்றால் வில்லாளியாயிருக்கும் தன்மை அர்ஜுனனைத் தவிர வேறு யாரிடமும் சேராது என்பதை ஸ்தாபிக்குமதான இது அந்யயோக வ்யவச்சேதமாம். அவ்வண்ணமே, கண்ணன் பரம்பொருளே என்ற அளவில் நின்ற பீஷ்மரினும் கண்ணனே பரம்பொருள் என்ற ஸஹதேவனுக்கு ஏற்றமுண்டு. ஜ்ஞானத்தினும் வைராக்யத்துக்கு ஏற்றமுண்டிறே. அது போன்று, எம்பெருமானின் மேன்மையை அந்வய முகத்தால் வெளியிட்ட முதலாழ்வார்கள் மூவரைக் காட்டிலும் வ்யதிரேகத்தால் வெளியிட்ட திருமழிசைப்பிரானுக்குத் தனிச்சிறப்புள்ளது. இங்கு, "முதலாழ்வார்கள் அனுபாவ்யவஸ்துவை நிஷ்கர்ஷிக்க, அதுக்குக் களைபிடுங்குகிறார்" என்ற பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யாந ஸ்ரீஸூக்திகள் அநுஸந்தேயம். இனி, திருமழிசைப்பிரான் தம்முடைய நான்முகன் திருவந்தாதியின் ஆதிமத்ய அவஸாநங்களில் தேவதாந்தரங்களின் தாழ்ச்சியைக் கூறி எம்பெருமானின் மேன்மையை எவ்வண்ணமருளுகிறார் என்று நோக்குவோம். இந்தப் பரபந்தம் "நான்முகனை" என்று தொடங்குகிற படியாலும், அந்தாதித் தொடையிலமைந்தபடியாலும் செய்யுள் முதற்குறிப்பு என்கிற இலக்கணப்படி "நான்முகன் திருவந்தாதி" எனப்பெயர் பெற்றது.

முதற்பாசுரத்திலேயே, எம்பெருமானின் காரணத்வத்தையும் (படைக்கும் தன்மை), ப்ரஹ்மாதி தேவர்களனைவரும் கார்யவர்கங்களை (படைக்கப்பட்டவைகளை)ச் சேர்ந்தவர்கள் என்றும் கல்வெட்டாக வெளியிடுகிறார்.

> நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும்
> தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான் - யான்முகமாய்
> அந்தாதி மேலிட்டு அறிவித்தேனாழ் பொருளைச்
> சிந்தாமல் கொள்மினீர்தேர்ந்து.

என்பது முதற் பாசுரம். நாராயணனான எம்பெருமான் ஒருவனே ஸ்ருஷ்டிக்கு முன்பிருந்தவன். "ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேசாந:" என்றன்றோ வேதாந்தம் கூறுகிறது. "முன்னம் பிரமன் மட்டுமே இருந்தார்" என்றும், "ஸத்துமில்லை அஸத்துமில்லை சிவன் மட்டுமிருந்தார்" என்றிங்ஙனே வாக்யங்களிருந்தாலும், ஆராயும் போது "மற்றொன்றுமில்லாத காலத்தில் பிரமன் சிவன் ஆகியோரிருந்தனர். அவர்களுமில்லாத காலத்தில் நாராயணன் மட்டுமே இருந்தான் என்றன்றோ தேறுகிறது. நாராயணனிடமிருந்தே பிரமன் சிவன் முதலானோர் உருவாயினர். ஸ்ருஷ்டிக்கு முன் அனைத்துப் பொருள்களும் ஒரு பெயரையிட்டும் வடிவத்தையிட்டும் பிரிக்க இயலாதபடி மூலப்ரக்ருதியில் ஒடுங்கிக் கிடந்தன. இவை அனைத்தையும் தனக்குள்ளே கொண்டிருந்த நிலையன்றோ ப்ரளாயவஸ்தை. அனைத்தையும் தனக்குள்ளே கொண்டுள்ளவன் என்பதன்றோ நாராயணன் என்கிற சப்தத்தின் பொருள். நாராயணன், நான்கு முகங்களைக் கொண்ட ப்ரஹ்மாவை நான்கு திசைகளிலும் வ்யாபரித்து ஸ்ருஷ்டிக்கவும், ஸ்ருஷ்டிக்ரமத்துக்கு உதவிச் செய்யும் நான்கு வேதங்களையும் நான்கு முகங்களால் ஒரே சமயத்தில் ஓதுவதற்கும் படைத்தான். ப்ரஹ்மாவும் வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்குத் தான் ப்ரதாநனாக நின்று ருத்ரனைப் படைத்தான். இது எம்பெருமானின் ஆதிகாரணத்வத்தைத் தெரிவித்தபடியாகும். இதுவே வேதார்த்தமாம்.

ஆதனால் தான் இவ்வர்த்தத்தை "ஆழ்பொருள்" என்றருளுகிறார் திருமழிசைப்பிரான். வேதங்களிலும் வேதாந்தங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் ஆழ்ந்துகிடக்கும் பரமார்த்தம் இதிறே. "அந்தாதி முகத்தாலே அகாதமான வேதார்த்தத்தை அறிவித்தேன்" என்றன்றோ இப்பாசுர வ்யாக்யாநத்தில் நம்பிள்ளை அருளுகிறார். தான் தெரிவிக்கும் அர்த்தங்கள் அனைத்தும் வேதார்த்தங்களே என்று முதலிலேயே கூறியபடி. இதே க்ரமத்தில் தான் நம்மாழ்வாரும் தாம் அருளுமவை வேதார்த்தங்களே என்று முதல் திருவாய்மொழியில், "உடல்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகுசுருதியுள் இவையுண்ட சுரனே" என்றருளுகிறார். உபநிஷத், பரப்ரஹ்மபூதனான எம்பெருமான் "பஹுஸ்யாம்" (நான் பலவாறாகக் கடவேன்) என்று ஸங்கல்பித்தான் என்று கூறிற்று. அந்த ஸங்கல்பத்தால் மஹத் தத்வம் முதலாக அண்டங்களை மொத்தமாக (ஸமஷ்டி) ஸ்ருஷ்டித்த எம்பெருமான், அதற்குப் பின்பு பொருள்களைப் பிரித்து (வ்யஷ்டி) ஸ்ருஷ்டிக்கும் பொருட்டு ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான் என்பது வேதாந்தக் கருத்து.

"யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" (எந்த எம்பெருமான் முதலில் ப்ரஹ்மாவைத் தன் நாபீ கமலத்தில் தோற்றுவித்தானோ) என்கிற நாராயணவல்லி வாக்யம், "நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே" (நாராயணனிடமிருந்து பிரமன் பிறந்தான்) என்கிற நாராயணோபநிஷத் வாக்யம், "யந்நாபிபத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதி:" (எவனது நாபீகமலத்தில் மஹாத்மாவான ப்ரஹ்மா உளனாயினனோ) என்கிற மஹோபநிஷத் வாக்யம், இது போலுள்ள மற்றும் பற்பல வேதவாக்யங்கள் ஆகியவை "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்கிற ஸ்ரீஸூக்திக்கு ஆதாரம். "விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய" (ப்ரஹ்மாவின் ஜ்யேஷ்டபுத்ரனான விரூபாக்ஷனுக்கு) என்றும் "த்ர்யக்ஷ: சூலபாணி: புருஷோஅஜாயத" (முக்கண்ணனும் சூலபாணியுமான புருஷன் பிறந்தான்) என்றும் "ஸம்வத்ஸரே குமாரோ அஜாயத" (ஒரு ஸம்வத்ஸரத்தில் ப்ரஹ்மாவுக்குக் குமாரன் (மகன்) பிறந்தான்) என்றும் கூறப்படும் பல வேத வாக்யங்களின் அடிப்படையில் "நான்முகனும் தான்முகமாய் சங்கரனைத் தான் படைத்தான்" என்றருளினார். ஆக இவ்வண்ணம் நாராயணன் காரணபூதன் என்றும் ப்ரஹ்மாதிதேவர்கள் கார்யவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வேதநேர்கொண்டு முதற்பாசுரத்தில் நிரூபித்தருளினார். நம்மாழ்வார் முதல் திருவாய்மொழியால் பகவத்பரத்வத்தை நிரூபித்ததும், வேதப்ரக்ரியையாலேயிறே.

இரண்டாம் பாசுரத்தால், இதிஹாஸப்ரக்ரியையாலே பகவத்பரத்வ நிரூபணம் பண்ணுகிறார் என்று அப்பிள்ளை உரை வகுக்கிறார். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யுமவர்களாக ப்ரஹ்மா விஷ்ணு சிவன் என்கிற மூவர் இருக்கிறபொழுது, நாராயணனான விஷ்ணுவே பரனென்று எப்படிக் கொள்வது. மூவரையுமே பரமாத்மாவென்று சொல்லிவிடல் பொருத்தமுற்றதன்றோ என்கிற வினாவெழுகிறது. அதற்கு விடையாகவமைந்தது "தேருங்கால் தேவன் ஒருவனே" எனத் தொடங்கும் இரண்டாம்பாட்டு. எப்படிப்பட்ட தவமியற்றியவர்க்கும் அருளின் முடிவாகிற பலன் உண்டாவது சக்கரக்கையனிடமிருந்தே என்கிறார் இப்பாட்டில். ஆகவே ப்ரஹ்மருத்ரர்களுக்கும் பலனளிப்பவன் நாராயணனே என்று காட்டுகிறார் இரண்டாம்பாட்டில்.

"ஆறுசடைக்கரந்தான்" எனத் தொடங்கும் நான்காம் பாட்டில் தான் பகவானையறிந்தபடியை விளக்குகிறார். ஸர்வ சப்த வாச்யத்வம் (அனைத்துச் சொற்களின் பொருளாயுள்ளமை) நாராயணனிடம் மட்டுமேயுள்ளது என்று. "எப்பொருட்கும் சொல்லான்" என்கிற ஸ்ரீஸூக்தி இங்கு உயிரானது. இவ்விடத்தில் எழும் வினா, சிவன் ருத்ரன் ஈசன் ஈச்வரன் சம்பு மஹேச்வரன் முதலான சொற்களாலும் பரமாத்மா குறிக்கப்படும் போது, நாராயணனே பரமாத்மா என்பது எப்படிப் பொருந்தும் என்பதாம். அனைத்துச் சொற்களின் பொருளும் நாராயணனான எம்பெருமானளவில் சென்றே நிற்கும். இதுதான் "வசஸாம் வாச்யமுத்தம்" என்கிற ப்ரமாணத்தால் காட்டப்படுகிறது. அதாவது அனைத்துச் சொற்களுக்கும் முடிந்த பொருளாக இருப்பவன் நாராயணன். ஒரோ தெய்வத்தின் பெயரைக் குறிக்கும் சொற்கள் அவ்வோ தெய்வங்களை மட்டுமே குறிக்கும் என்று வாதிட்டாலும், அவ்வோ தெய்வங்களின் பெயரைக் கொண்டே நாராயணனையும் அழைக்கலாம். ஏனெனில் அந்தந்த தெய்வங்களுக்கு உள்ளுறையும் அந்தர்யாமி

நாராயணனிறே. உடலைச் சொல்லும் சொல் உடலிலுறையும் ஆத்மாவையும் அவ்வாத்மாவின் ஆத்மாவினளவும் செல்லுமன்றோ. மற்ற தேவதைகளைக் குறிக்கும் சொற்கள் அனைத்தையும் அக்குணங்களையிட்டு நாராயணனுக்கு நாமங்களாகக் கூறிவிடலாம். இதற்கு வடமொழி இலக்கணம் நன்கு இடங்கொடுக்கிறது. ஆனால் நாராயணன் என்ற பெயரை மற்றைத் தெய்வங்களுக்குக் குணங்களையிட்டும் கூறவியலாது. அப்படிக்கூற வடமொழி இலக்கணம் சிறிதுமிடந் தரவில்லை. ஆகவே நாராயணநாமம் அநந்யபரம். இப்பாட்டின் தொடக்கத்தில், பரமசிவனை கங்காதரன் என்று கூறும் சொல்லின் பொருளான ஆறுசடைக்கரந்தான் என்ற சப்தத்தால் வ்யவஹரித்துள்ளார். கங்கை எம்பெருமானின் ஸ்ரீபாத தீர்த்தமிறே.

"ஏக: ப்ராஸீஸரத்பாதம் ஏக: ப்ராசிக்ஷளந் முதா

ஆபரோப்யதரந்மூர்த்நா கோதிகஸ்தேஷுகண்யதாம்".

(ஒருவன் (நாராயணன்) திருவடியை உயர நீட்டினான். ஒருவன் (பிரமன்) அதனை உகப்புடன் நீர் கொண்டு விளக்கினான். மற்றொருவன் (பரமசிவன்) அந்நீரைத் தன் தலையில் தரித்தான். இம்மூவரில் யார் மேம்பட்டவர் என்று எண்ணிப்பாருங்கள்) என்றன்றோ ப்ரமாணங்கள் கூறுகின்றன. த்ரிவிக்ரமாவதார காலத்தில் ஸத்யலோகத்தளவும் நீட்டப்பட்ட எம்பெருமானின் திருவடியை ப்ரஹ்மா விளக்க அந்த ஸ்ரீபாததீர்த்தத்தைப் பரமசிவனார் கங்கையாகத் தலையிலேற்றார். திருவடியை நீட்டினவனன்றோ சேஷி. நீர் கொண்டு விளக்கினவனும், அந்நீரைத் தலையில் தரித்தவனும் சேஷபூதர்களன்றோ, "மங்கைபாகன் சடையில் வைத்த கங்கை யார் பதத்து நீர்?" என்றிறே பிள்ளைப் பெருமாள் ஐயங்காரும் வினவியது. இதனாலும் தேவதாந்தரங்களின் தாழ்ச்சியைக் கூறி எம்பெருமானின் பரத்வத்தைக் கூறுகிறார். இந்த சரித்ரத்தை "குறைகொண்டு நான்முகன்" என்ற ஒன்பதாம் பாசுரத்தில் மிக விளக்கமாக அருளுகிறார்.

இனி இப்பிரபந்தத்தின் நடுவிற் செல்வோம். ஐம்பத்து மூன்றாம் பாட்டு இப்பிரபந்தத்துக்கே உயிரான பாட்டாகும். எம்பெருமானின் பரத்வத்தைக் கோட்சொல்லித்தரும் அடையாளங்கள் பல. அவனுடைய கருடவாஹநத்வம் (கருடாழ்வான் தோள் மீது நற்றரிக்க வீற்றிருக்கும் தன்மை), சேஷசாயித்வம் (திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்டிருக்கும் தன்மை), சக்ரதாரித்வம் (திருவாழியாழ்வானைச் சலியாமல் பிடித்திருக்கும் தன்மை), புண்டரீகாக்ஷத்வம் (தாமரைக் கண்ணனாயிருக்கும் தன்மை) ஆகிய பலவாகும். அவற்றுள் முக்கியமானதும் முதன்மையானதும் ச்ரிய: பதித்வம் (ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு நாதனாயிருக்கும் தன்மை) ஆகும். இதனை நன்கு விளக்கும் பாசுரம்.

கல்லாதவரிலங்கை கட்டழித்த காகுத்தன்

அல்லால் ஒரு தெய்வம் யானிலேன்-பொல்லாத

தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத்

தேவரைத் தேறேல்மின் தேவு.

என்பதாகும். முன்னிரண்டடிகளால், தன்னைச் சரணடைந்தவர்களை ரக்ஷித்தல் என்கிற மஹாயாகத்தில் எப்பொழுதும் தீக்ஷித்திருக்கும் ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனைத் தவிர வேறோர் தெய்வத்தை அடியடையத் தக்கவர்களாக நினைக்கமாட்டேன் என்றருளுகிறார். இப்படித் தன்னுடைய நிலைப்பாட்டினைச் சொல்லிப் பரோபதேசம் பண்ணுகிறார். இவர் இங்குச் செய்யும் உபதேசமாவது, "ஜனங்களே நீங்களும் தாழ்ந்த தேவதைகளை ஆச்ரயிக்காதீர்கள்" என்பதாம்.

1. பொல்லாத தேவரைத் தேறேல்மின்தேவு 2. தேவரல்லாரைத் தேறேல்மின் தேவு. 3. திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு. என்றிறே இவருபதேசம்.

எம்பெருமானோ தன் வடிவழகாலும், வள்ளன்மையாலும் குணங்களாலும் செய்கைகளாலும் அனைவருடைய மனத்துக்குமுகந்தவனாகவுள்ளான். அதனால் நல்லதேவனாகிறான். ஆனால் மற்றைத் தேவர்களோ, "காணிலுமுருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்" என்று இவர் தாமே திருச்சந்த விருத்தத்தில் அருளியபடியே பொல்லாத தேவராயிருப்பர். தந்தையான ப்ரஹ்மாவின் தலையைக்

கிள்ளியதும், அப்பாபம் நீங்க பிக்ஷார்த்தியாய் மூவுலகிலும் இரந்ததும், பஸ்மாஸுரனைக் கண்டு அஞ்சியோடியதும், பாணாஸுரனை ரக்ஷிக்கத் துணைநின்று யுத்தத்தில் நேர் நிற்கமாட்டாமே புறமுதுகிட்டு ஓடியதுமாயுள்ள சரித்ரங்கள் அவற்றுக்குரிய தேவனைப் பொல்லாத தேவனாகவன்றோ நிரூபிக்கின்றன? அதனால் "பொல்லாத தேவரைத் தேறேல்மின்தேவு" என்று உபதேசிக்கிறார்.

இப்படிப்பட்டவர்களுக்குத் தேவர்களாயிருக்கும் தன்மை கிடையாது. தேவன் என்ற சொல்லின் அனைத்துப் பொருள்களும் எம்பெருமானிடம் பொருந்துகின்றன.

"திவு" என்கிற தாதுவிலிருந்து வந்ததே தேவன் என்ற சொல். இச்சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளன.

"திவு க்ரீடா விஜிகீஷா வ்யவஹார த்யுதி ஸ்துதி மோத மத ஸ்வப்ந காந்தி கதிஷு" என்கிறபடி திவு என்னும் தாதுவுக்கு 1. விளையாட்டையுடையவன், 2. வெற்றி பெறுவதில் விருப்பமுடையவன், 3. வேதம் முதலான வாக்குகளை வ்யவஹரிப்பவன். 4. ப்ரகாசிப்பவன், 5. துதிக்கப்படுமவன் 6. ஆநந்தத்தையுடையவன் 7. யாவரையும் கணிசிக்க வேண்டாத மதத்தையுடையவன், 8. கண்ணுக்கினிய ஒளியையுடையவன், 9. பயனை அடைவிப்பவனாகவிருப்பவன், 10. பயனாகவே இருப்பவன் என்பவை பொருளாகும். இப்பொருள்கள் அனைத்தும் முற்றிலும் பொருந்துவது எம்பெருமானிடமே என நம்பெரியோர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளது. விரிவுக்கஞ்சி அது இங்கு விளக்கப்படவில்லை. மற்றைத் தேவர்களுக்கு முழு அளவில் அப்பொருள்கள் பொருந்துவதில்லை. ஆகவே அவர்கள் தேவர் என்னத் தக்கவர்களல்லர். அதனால் "தேவரல்லாரைத் தேறேல்மின் தேவு" என்று உபதேசிக்கிறார்.

"ச்ரத்தயாதேவ: தேவத்வமச்நுதே" (ச்ரத்தா என்னப்படுபவளான ஸ்ரீமஹாலக்ஷ்மி நாச்சியாராலேயே தேவனான நாராயணன் தேவன் என்னப்படுகிறான்) என்று வேதம் புகழ்கிறது. ஆகவே பிராட்டி ஸம்பந்தமில்லாதவர்கள் தேவர்களல்லர் என்று தேறிற்று. மேலும் பகவானை மோக்ஷமளிப்பவன் என்று சொல்லும் ஸ்ரீபுருஷஸூக்தம் பகவானை நோக்கி "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" (பெருமானே, உனக்கு ஸ்ரீதேவி பூமிதேவி இருவரும் பத்நிகளாவர்) என்று கூறுவதன் மூலம் ஸ்ரீமானான நாராயணனே மோக்ஷமளிப்பவன் என்று கூறுகிறது. பரப்ரஹ்மத்தின் ஸ்வரூப நிரூபக தர்மம் சிரிய: பதித்வம். அதாவது 'இவன் தான் பரதத்வம்' என்பதைக் காட்டும் அடையாளம் பிராட்டி ஸம்பந்தம். "அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்யஸாஜநகாத்மஜா' (ஜனகன் மகளான ஸீதையுடனிருக்கும் இராமபிரானாகிற தேஜஸ் அளவிடவரியது) என்று ஸ்ரீவால்மீகி பகவான், மாரீசன் வாயிலாக பிராட்டி ஸம்பந்தத்தையிட்டு ஸ்ரீராமவைபவம் சொல்வது நோக்கத்தக்கது. அனைவரினும் மேலான தெய்வம் இன்னான் என்று நிரூபிக்க முற்பட்ட ஆளவந்தார் முந்துற முன்னம் "கச்ரீச்ரிய:" (பிராட்டிக்குப் பெருஞ்செல்வமாயிருப்பவன் யார்?) என்று வினவுகிறார். "திருவுக்கும் திருவாகிய செல்வன் எவனோ அவனே பரம்பொருள்" என்றபடி. ஸ்ரீபராசர பட்டர் "வேதாந்தாஸ்தத்வசிந்தாம் முரபிதுரஸி யத்பாத சிந்ஹைஸ் தரந்தி" (தத்துவத்தை விசாரிக்கும் வேதங்களும், எந்த தத்துவத்தின் திருமார்பில் பிராட்டி திருவடிகளின் செம்பஞ்சுக்குழம்பின் அடையாளம் உள்ளதோ அதுவே பரதத்வம் என்று அறுதியிட்டன) என்றருளுகிறார். ஆகவே ஸ்ரீதேவி நாச்சியாருக்கு நாதனே பரம்பொருள். அதனால் "திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் தேவு" என்று உபதேசிக்கிறார்.

'தேவராய் நிற்குமத்தேவும்' என்கிற ஐம்பத்து நான்காம் பாசுரத்தில், "நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றோராதார் கற்கின்ற தெல்லாம் கடை" என்று தன்னையொழிந்த அனைத்துப் பொருள்களிலும் ஒரு ஜீவன் மூலமாக உள் நுழைந்து அவற்றுக்குப் பொருளாயும், பெயருடனும் இருக்கும் பகுப்பினைத் தந்து அவற்றுக்குள் நிற்பவன் எம்பெருமானே என்றறியாதவர்கள் கற்பவை அனைத்தும் வீண் என்றருளுகிறார். இதிறே ஸர்வாந்தர்யாமித்வம். அதாவது ஸர்வசேஷித்வம். இப்பாசுர வ்யாக்யாநத்தின் அவதாரிகையில் நம்பிள்ளை சுருங்கக்கூறி விளங்கவைக்கும் அழகு காண்மின்.

"ஸர்வரும் பகவச்சேஷமென்றறியாதார் கல்வியெல்லாம் வ்யர்த்தம் என்கிறார்" என்பவை நம்பிள்ளை அருளும் நன்மொழிகள்.

பிரமன் சிவன் இந்திரனுள்ளிட்ட அனைத்து ஜீவர்களும் எம்பெருமானுக்குச் சேஷம் (அடிமைகள்) என்கிற ஞானம் இல்லாதவர்கள் இவ்வர்த்தத்தையொழிந்த மற்றெக்கல்வியைக் கற்றிருந்தாலும் அவையனைத்தும் வீணே. அவற்றால் ஒரு பயனும் விளையாது.

இனி இப்பிரபந்தத்தின் இறுதிப் பாசுரத்தை நோக்குவோம்.

இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமானுன்னை- இனியறிந்தேன்
காரணன்நீ கற்பவை நீ கற்றவை நீ நற்கிரிசை
நாராணன் நீ நன்கறிந்தேன் நான்.

என்பது நான்முகன் திருவந்தாதியின் ஈற்றுப் பாசுரம். எம்பெருமானே, ஈசன் நான்முகன் இவர்களுக்கு நீயே தெய்வம் என்று நான் இப்போதறிந்தேன். உன்னுடைய அனைத்துத் தன்மைகளையும் இப்போதறிந்தேன். அனைத்துக்கும் நீயே காரணம். இதற்கு முன் அறிந்தவைகளும், இனி அறியப் போகிறவைகளுமான அனைத்துப் பொருள்களும் நீயிட்ட வழக்காயிருப்பவை. ஒரு காரணமும் பற்றாமல் நிர்ஹேதுகமாக ரக்ஷிக்கும் ஸ்வபாவத்தை உடையவனும் (நற்செயல்) அப்படி ரக்ஷிப்பதற்குக் காரணமான சேஷித்வத்துடன் கூடியவனுமான நாராயணன் நியே என்பதை நான் நன்கறிந்தேன் என்றருளுகிறார். வேதாந்தக் கருத்தை விவரிக்க வந்த ஸ்ரீராமாயணமும், "வ்யக்தமேஷமஹா யோகீ........" இத்யாதியான மந்தோதரீ சதுச்லோகீ (ராவணவதத்துக்குப் பின் மந்தோதரீ வெளியிட்ட ராமவைபவ பரமான நான்கு ச்லோகங்கள்) வாயிலாக இவ்வர்த்தத்தையே தெளிவுறுத்துகிறது.

மஹோபநிஷத் கூறிய வழியாலே, ப்ரஹ்மா ருத்ரன் இவர்கள் தொடங்கி அனைத்து ப்ரபஞ்சத்துக்கும் காரணபூதனான நாராயணனே அனைவரினும் மேம்பட்டவன் என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, வேதம் தர்மசாஸ்த்ரம் இதிஹாஸ புராணங்களாகிறவற்றாலும், மற்றையோர்க்கு உளதாகக் கூறப்பட முடியாததான ச்ரிய:பதித்வம் முதலான அடையாளங்களாலும் பகவத்பரத்வத்தை முழுவதுமாகக் கூறிக் கொண்டு வந்து ஆரம்பத்தில் பண்ணிய ப்ரதிஜ்ஞைக்குச்சேர ஆழ்பொருளை அறிவித்து ப்ரபந்தத்தை நிறைவுறுத்துகிறார் திருமழிசையாழ்வார்.

திருவிருத்தம்

பாஞ்சஜன்யம் ஸ்ரீ உ.வே. அ. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

1. நுழைவாயில்

1. வடமொழி வேதம் ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு வேதங்களின் விழுப் பொருளை வேதம் தமிழ் செய்த மாறனாகிய நம்மாழ்வார் தமிழிலே நான்கு திவ்யப் பிரபந்தங்களாக அருளிச் செய்தார். அவருடைய முதல் திவ்யப்பிரபந்தமான "திருவிருத்தம்" ரிக் வேத ஸாரமென்றும், இரண்டாவது திவ்யப் பிரபந்தமான "திருவாசிரியம்" யஜுர்வேத ஸாரமென்றும், மூன்றாவது திவ்யப் பிரபந்தமான "பெரிய திருவந்தாதி" அதர்வண வேத ஸாரமென்றும். நான்காவது (சரம) ப்ரபந்தமான "திருவாய்மொழி" ஸாம வேத ஸாரமென்றும் ஆன்றோர்கள் கூறுவர்.

2. திருவிருத்தத்திற்கு அமைந்துள்ள உரைகள்:

2. திருவித்தம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் ஐந்தாவது பிரபந்தமாக அமைந்துள்ளது. இதற்கு ஸ்ரீபராசரபட்டர், நஞ்சீயர் ஆகியோர் வ்யாக்யானங்கள் அருளிச் செய்திருப்பதாக மற்றைய பூர்வாசார்யர்களின் உரைகளில் குறிப்பிடப்பட்டிருப்பினும் இன்று நமக்கு அந்த உரைகள் கிடைக்கவில்லை.

3. பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை திருவிருத்தத்திற்கு உரையருளிச் செய்துள்ளார். இந்த வ்யாக்யானத்திற்கு மூன்று அரும்பதங்கள் அமைந்துள்ளன.

4. முதல் 15 பாசுரங்களுக்கு அப்பிள்ளை அருளிச் செய்த விரிவுரை அமைந்துள்ளது.

5. நஞ்சீயரது சிஷ்யரான நம்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானமும், திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி உரை அருளிச் செய்த அழகிய மணவாள ஜீயரது ஸ்வாபதேச வ்யாக்யானமும் (உள்ளுறைப் பொருளை விவரித்திடும் விரிவுரையும்), பெரிய பரகாலஸ்வாமி அருளிச் செய்த வ்யாக்யானமும், முதற்பாசுரமான "பொய் நின்ற ஞானமும்...................." பாசுரத்திற்கு மட்டும் வேதாந்ததேசிகன் பணித்த வ்யாக்யானமும் தெலுங்கு லிபியில் கிரந்த முத்ராபக ஸபையாரால் 1902 ஆம் ஆண்டு (சோபகிருத் வருஷம்) வெளியிடப்பட்டுள்ளது.

6. 1996 ஆம் ஆண்டு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பதிப்பகத்தால் தெலுங்கு எழுத்தில் பதிப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட விரிவுரை நூல் தமிழ் எழுத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

7. சிறந்த அகப்பொருள் இலக்கியமான திருவிருத்தத்திற்கான உரை விளக்கங்கள், 20ஆம் நூற்றாண்டின் தலை சிறந்த ஸம்ப்ரதாய வல்லுனரும், தமிழாசிரியரும், பதிப்பாசிரியருமான ஸ்ரீ. சடகோப ராமானுஜாசார்யரது ஒரு சார் ஒப்பாய்வியல் நோக்கில் 1925ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

8. இது தவிர காஞ்சீபுரம் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமி எல்லோரும் திருவிருத்தத்தின் சீரிய செம்பொருளை அறிந்து கொள்ளும் வகையில் திருவிருத்தத்திற்கு திவ்யார்த்த தீபிகை ஒன்று எழுதியுள்ளார்.

3. 'திருவிருத்தத்திற்கே' அமைந்துள்ள சிறப்பியல்புகள்:

9. அந்தாதித் தொடையாக அமைந்துள்ள நூறு பாசுரங்களை உடையதான இந்த ப்ரபந்தம் முதற்பாசுரமும் கடைசி பாசுரமும் நீங்கலாக மற்றைய தொண்ணூற்றெட்டு பாசுரங்கள் அகப்பொருள் இலக்கணத்துறை வகைகளில் அமையப் பெற்றுள்ளது.

10. 'அந்யாபதேசம்', 'ஸ்வாபதேசம்' என்று முறையே பெயர் பெற்ற 'வெளிப்படைப் பொருள்', 'உள்ளுறை பொருள்' என்னும், இருவகைப் பொருள் கொண்டது இந்த நூல்; சொற்செறிவு, பொருட்பொலிவு, தொனிப்

பொருள், கற்பனையலங்காரம் முதலிய சிறப்புகளால் ஒப்புயர்வின்றி விளங்குவது; தன்னைக் கற்பார்க்குப் பிறவித் துயரறுத்து அந்தமில் பேரின்பத்தை நல்குவது திருவிருத்தமாகிய திவ்யப் பிரபந்தம்.

11. காமத்தை முன்னிறுத்தி, கிளவித் துறைகளைக் கொண்ட ஞான நூலாகிய இதிற் கூறுதற்குக் காரணம், மருந்தாகிய கடுக்காயினைத் தின்னாதானைக் கட்டிபூசி அதை உண்பிக்க வைப்பார் போல, சிற்றின்பங்கூறும் வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்பர். ஆழ்வார்க்குத் தலைமகளாகுந் தன்மை நேர்ந்தது எவ்வாறு என்று ஆராய்வோமாகில், புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலகமடங்கப் பெண் தன்மையாததாலும், ஜீவாத்மாவினது ஸ்வாதந்திரியமின்மையும், பாரதந்திரியமும் முதலியன. இதனை இந்நூலின் இரண்டாம் பாட்டுரையிற் காணலாம். தண்டகாரணிய வாசிகளான முனிவர் இராமபிரானது பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர் மங்கையராய்க் கண்ணனைக் கூடினர் என்று ஐதிஹ்யமும் கருத்திற் கொள்ளத் தக்கது; ''சேறுநல்வீடும் பொருளும் தருமமும் சீரியநற் காமமுமென்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம் அறம் பொருள் வீடிதற் கென்றுரைத்தான் வாமனன் சீலன் இராமானுசன் இந்தமண்மிசையே (இராமானுச நூற்றந்தாதி–40) என்பதன் பொருள் அறியற் பாலது.

12. தொல்காப்பியப் பொருளதிகாரம் இறையனாரகப் பொருள், திருக்கோவையார், திருக்குறள் காமத்துப்பால், தஞ்சைவாணன் கோவை என்பனவும், இவற்றின் உரைகளும், அம்பிகாபதி கோவையும், தணிகைப் புராணத்துக் களவுப் படலமும், நம்பியகப் பொருள் விளக்கம், வீரசோழியம், இலக்கண விளக்கம், வெங்கைக் கோவை முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்களுடன், திவ்யப் பிரபந்தங்களும், அவற்றின் வியாக்யானங்களும், அரும்பதவுரைகளும், இந்நூலின் துறைப் போக்கையும் மற்றும் சில பொருள்களையும் விளக்குதற்குத் துணை நின்றன.

4. திருவிருத்தத்தில் அமைந்துள்ள அகப்பொருள் செய்திகள்:

13. நம்மாழ்வார் அருளிய நான்கு பிரபந்தங்களில் 100 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் அந்தாதித் தொடையான் இயைந்து மண்டலித்து அமைந்துள்ள திருவிருத்தம் முதல் பிரபந்தமாகும். இதன்கண் சொல் தொடர்நிலை உளதே அன்றிப் பொருள் தொடர்நிலை இல்லை. இதன்கண் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கட்டுவிச்சி, பாங்கன் ஆகியோர் நினைப்புகளாகவும் கூற்றுகளாகவுமே பாசுரங்கள் அமைந்துள்ளன.

14. அகப்பொருள் கோட்பாட்டுச் செய்திகளைத் தலைவன் தலைவியைக் காண்பது முதல் களவொழுக்கம் நிகழ்த்திப்பின் தலைவியை நாடு அறிய மணந்து கொண்டு கற்புக்காலப் பிரிவுகளை நிகழ்த்தி நல்வாழ்வு வாழ்வது வரை உள்ள செய்திகளை நிரல்பட அமைத்துக் கோவையாகப்பாடும் வழக்கம் இறையனார் களவியல் என்ற நூலின் உரையிலிருந்தே தொடங்குகிறது. அடுத்து, மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையார் அகப்பொருள் செய்திகளை நிரல்படக்கோத்து அமைக்கிறது. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம் என்ற நூலையும் அதற்கு உதாரணமாகிய தஞ்சைவாணன் கோவையையும் பின்பற்றியே பிற்காலக் கோவை நூல்கள் யாவும் தோன்றியுள்ளன.

15. கோவை நூல்களில் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என்று தலைவர் இருவர் சுட்டப்பட்டுள்ளனர். பாட்டுடைத் தலைவனைப் பற்றிய செய்திகள் சார்ந்து வகையால் கூறப்படுமேயன்றி, பாட்டுடைத் தலைவனோடு அகப்பொருள் செய்திகள் இணைத்துக் கூறப்பட மாட்டா. கிளவித் தலைவனே அகப்பொருள் செய்திகளுக்கு உரியவன். அவனுடைய இயற்பெயர் கூறப்பட மாட்டாது. தலைவனுடைய இயற்பெயர் கூறப்பெறின் அப்பாடல் அகப்பாடல் ஆகாது அகப்புறப்பாடல் ஆகிவிடும். பாட்டுடைத் தலைவனுக்கே இடம் தாராமல் கிளவித் தலைவனைக் கொண்டே இயற்றப்பட்ட அம்பிகாபதிக் கோவை போன்ற கோவைகளும் உண்டு.

16. நாற்கவிராச நம்பி இயற்றிய நம்பி அகப்பொருள் விளக்கம் நூலில் பாட்டுடைத் தலைவன் மற்றும் கிளவித் தலைவன் ஆகிய இருவரைப் பற்றிய நூற்பாக்கள் காணப்படுகின்றன.

அகப்பாட்டினுள் பாடப்படுவோர் "பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப் பாட்டினுட் பாடப் படுவோர் இருவர்." (நூற்பா – 245)

அகப்பாட்டினுட் பாடப்படுவோர் இவரென்பது உணர்த்துதல் நுதலிற்று. அகப்பாட்டினுட் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைமகனும் கிளவித் தலைமகனும் என இருவர் என்றவாறு.

அகப்பாட்டின் கண் பாடப்படுவோருள் உயர்ந்தோன்; அவருள், உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனாகும். (நூற்பா – 246) மேற் சொல்லப்பட்டவருள் உயர்ந்தோனை உணர்த்துதல் நுதலிற்று. மேற் சொல்லப்பட்ட இருவருள்ளும் உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனாம் என்றவாறு.

அகப்பாட்டுத் தலைமக்களுக்குக் கூறப்படும் பெயர்கள். "நிலப்பெயர் வினைப் பெயர் பண்புகொள் பெயரொடு குலப்பெயர் இயற்பெயர் கூறப அவர்க்கே." (நூற்பா–247) தலை மக்கட்குக் கூறப்படும் பெயர்கள் இவை என்பது உணர்த்துதல் நுதலிற்று. நிலப்பெயர் முதலாகிய ஐந்து பெயரும் கூறுவர் மேற் சொல்லப்பட்ட தலை மக்கள் இருவர்க்கும் என்றவாறு.

17. திருவிருத்தத்தில் எம்பெருமானுடைய பெயர் கூறப்பட்டு அவனையே கிளவித்தலைவனாகவும் கொண்ட பாசுரங்கள் 74 உள்ளன. அவையாவும் அகப்பாடல்கள் அல்ல. அகப்புறப் பாடல்களே.

18. திருவிருத்தத்தில் தலைவி கூற்றாக அமைந்த பாடல்கள்–55, தோழி கூற்றாக அமைந்துள்ள பாடல்கள்: 22. தலைவன் கூற்றாக அமைந்துள்ள பாடல்கள் – 14. அவையாவன: நற்றாய் கூற்றுப் பாடல் 1. கட்டுவிச்சி கூற்றுப் பாடல் 1. பாங்கன் கூற்றுப் பாடல் 1. அவற்றுள் களவு காலத்துக்கு உரியன 17 பாடல்கள்: கற்பு காலத்திற்கு உரியன 8 பாடல்கள். இரு காலங்களுக்கும் பொது 1 பாடல்.

19. அகப்பொருள் செய்திகள் தொல்காப்பிய விதிப்படி ஆழ்வார் பாசுரங்களில் நிரல்பட அமையாமைக்கு ஆசார்ய ஹ்ருதயத்தில் அளிக்கப்படும் விளக்கம் பின்வருமாறு. "பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்குமா போலே நெக்கொசிந்து கரைந்தலைந்திடிந்து உடையப் பெருகு மிகுகாதல் கடலிடம் கொண்ட கடலை பஹுமுகமாக அவகாஹிக்கும்" (நூற்பா–131). "இப்படிப் பல நிலை வேறுபாடுகளை அடைந்தவரானாலும் தாமான தன்மையால் செல்லும் காதலும் இவர்க்குக் குறையாது என்னுமதனைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்".

"அச்சேத்ய மென்னுமது ஈரும் வேம் ஈரியாயுலர்த்த வென்னப்பட, சித்தம் சித்தாய் அல்லேனென்று நீங்க, கரணங்கள் முடியானேயிலவையாக, உடலம் ஆத்மதர்மம் கொள்ள, காற்றும் கழியும் கட்டி அழக் கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமை நூல் வரம்பில்லையே." (நூற்பா–132). "இவருடைய பக்திதான், நூல்களில் கூறியபடி முறையோடு கூடியதாய்ச் செய்யப்படுமதாய் ஒரே தன்மையாய் இராமல், இப்படி, கட்டுக்கு அடங்காததாய்ச் செய்பவியலாததாய்ப் பலமுகமாய் நடப்பான் என்? என்னும் அவாய் நிலையிலே (ஒரு பதம் தன்னோடு பொருந்திப் பொருள் முடிதற்குரிய மற்றொரு பதத்தை வேண்டி நிற்கும் நிலையிலே) அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தை".

"காற்றும் கழியும் கட்டி அழ – "கடலும் மலையும் விசும்பும் துழாய்" (திருவாய் 2–1–4) என்ற திருப்பாசுரத்திலும், "இருளின் திணிவண்ணம் மாநீர்க்கழியே" (திருவாய்.2–1–8) என்ற திருப்பாசுரத்திலும் சொல்லுகிறபடியே காற்றுக்கு எப்பொழுதும் அசைந்து கொண்டிருக்கிற தன்மையும், உப்பங்கழிக்கு ஏறுவது வடிவதாகையும் என்றும் உள்ள தன்மை என்று அறியாமல் அவற்றுக்கு அத் தன்மைகள் பகவானைப் பிரிந்த பிரிவின் கிலேசத்தால் உண்டானவையாகக் கருதி, அறிவில்லாத அவற்றைத் தன்மைப் போன்ற துக்கம் உடையனவாகக் கொண்டு, "எம் ஆற்றாமை சொல்லி அழுவோமை" (திருவாய். 2–1–7) என்கிறபடியே தாம் அவற்றைக் கட்டிக் கொண்டு கிடந்து கதறும்படியாக, கொண்ட பெரும் காதலுக்கு பத்திமை – "அலத் தூற்றிற்றது முதலாக் கொண்ட என் காதல்" (திருவாய். 7–3–8) என்றும், "மயல் பெருங்காதல்" (திருவாய். 4–4–10) என்றும் சொல்லுகிறபடியே பிறர்பழி சொன்னதுவே எருவாகப் பணைத்துச் செல்லுமதாய்ச் செய்வன தவிர்வன தெரியாதபடி அறிவு கேட்டை விளைவிப்பதுமான எல்லை இல்லாத பக்திக்கு, நூல்வரம்பு இல்லையே "மிகுந்த பக்தியுடையவனுக்குச் சாஸ்திரம் இல்லை; முறையும் இல்லை" (அத்யந்த

பக்தியுக்தாநாம் நாசாஸ்த்ரம் நைவச க்ரம:") என்கிறபடியே பரமபதத்திலே அநுபவத்திற்கு உறுப்பான பக்திபோலே சென்றபடி கண்டிருக்குமத்தனை அல்லது "பத்திமைக்கு அன்புடையேன் ஆவதே" (திருக்குறுந்தாண்டகம் –10) என்கிறபடியே நூல் பிடித்துச் செயல் புரியும்படி வரம்புகட்ட ஒண்ணாதே யன்றோ என்றபடி".

அக இலக்கிய மரபுகளின்படி களவுக் காலச் செய்திகள் முடிந்தே கற்புக் காலச் செய்திகள் கூறப்பட வேண்டும். ஆயினும் திருவிருத்தப் பாடல்கள் இந்த முறையைப் பின்பற்றி பாடப்படவில்லை. திருவிருத்தத்தின் முதல் பாட்டு ஆழ்வார் தாமான தன்மையில் அருளிச் செய்துள்ளார். இரண்டாம் பாட்டு 'தலைவியின் வேறுபாடு கண்ட தோழி வியந்துரைத்தல்' என்னும் துறையில் அமைந்துள்ளது. இது முறைப்படியான களவுக் காலச் செய்திகளின்பாற் படாது. இயற்கை புணர்ச்சியில் தலைமகனான ஸர்வேச்வரனுடன் கூடி, அதன்பிறகு பிரிந்து அப்பிரிவை ஆற்றாதவளான தலைவினுடைய வேறு பாட்டைக் கண்டு வியந்த தோழியின் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. இவ்வாறே திருவிருத்தம் முழுவதிலும் களவுக் கோவை நூல்களின் இலக்கணக் கூறுகளுக்கு உட்பட்டவைகளாய் அமையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

அக இலக்கியக் கோட்பாடுகளின் படி களவுக் காலச் செய்திகள் 56 நாள்கள் நிரல்படக் கூறப்பட வேண்டும். அதன் பிறகே, கற்புக்காலச் செய்திகள் இடம் பெறும். ஆனால் திருவிருத்தத்தில் இந்த முறைமை பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏன் அவ்வாறு இந்த முறைமை பின்பற்றப்படவில்லை என்பதற்கு ஆசார்யஹ்ருதய நூற்பா 132 பதிலளிக்கின்றது.

"ஸம்பந்த உபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்த்தைகளுக்குத் தோழி தாயார் மகளென்று பேர்" (நூற்பா–132) – "இந்த விதமான பக்தி நிலையில் இவர் பெண் பேச்சாகப் பேசுமிடத்தில் தோழி, தாய், மகள் என்று மூன்று விதமாகப் பேசுகிற இதற்குக் கருத்து என் என்னும் வினாவிற்கு விடை அருளிச் செய்கிறார் இச்சூத்திரத்தால்".

திருவிருத்தத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டிற்கும் விரிவாக அமைந்துள்ளதே திருவாய்மொழி பதிகங்களாகும்.

20. 'இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே; பண்ணார் பாடல் பண்புரையிசை கொள் வேதம் போலே" (ஆசார்ய ஹ்ருதயம் நூற்பா–50) என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், இயற்பாவில் அடங்கிய முதல் மூன்று ப்ரபந்தங்களும் ரிக் வேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம் போன்றவை என்றும், பண் நிறைந்த திருவாய்மொழி, பண்ணையும் இசையையும் உடையதான ஸாம வேதம் போன்றது என்றும் அருளியிருப்பதைக் காணலாம்.

"ருக்கு ஸாமத்தாலே ஸரஸமாய் ஸ்தோபத்தாலே பரம்புமாபோலே சொல்லார் தொடையல் இசை கூட்ட அமர்சுவையாயிரமாயிற்று" (ஆசார்யஹ்ருதயம் நூற்பா–51) என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஸாமவேத சுருக்கமாக ரிக்வேதம் அமைந்திருப்பது போலே திருவாய்மொழிக்குச் சுருக்கமாக திருவிருத்தம் அமைந்திருப்பதை அருளிச் செய்தார். திருவிருத்தத்தில் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹம் என்று நிர்வஹிக்கும் க்ரமமும் உண்டு.

"இவற்றுக்கு மந்த்ர வித்யநுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி" (ஆசார்யஹ்ருதயம் நூற்பா–208) என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் நம்மாழ்வாருடைய நான்கு பிரபந்தங்களும் மந்த்ர ரஹஸ்யமான திருமந்த்ரத்துக்கும், விதி ரஹஸ்யமான த்வயத்துக்கும் விவரணமாயிருப்பவை என்று அருளிச் செய்தார். அதில் எந்த ப்ரபந்தத்திற்கு எந்த ரஹஸ்யத்தோடே சேர்த்தி என்பதையும் மேலே இரண்டு நூற்பாக்களாலே அருளிச் செய்தார்.

"அளிப்பான் அடியேன் அடைக்கலம் சூடிய கொய் யாதானும் அழுந்தாரென்று ஸ்வரூபவிரோதி நிவ்ருத்திகளையும், தாமரையுந்திப் பெருமாமாயன் ஆளாகவே வாழியவென்று ப்ராப்ய பலங்களையும், நெறிகாட்டி மனத்துக் கொண்டு கண்ணனாலடித்துக் கண்டிலமால் யாதாகிலென்று உபாயத்தையும்

சொன்னவை மந்த்ர ச்லோகங்களோடே சேரும்" (ஆசார்ய ஹ்ருதயம் நூற்பா -209) என்னும் நூற்பா திருவிருத்தம் திருமந்த்ரத்தில் "ஓம் நம:" என்னும் பகுதியை விளக்குவதாகவும், திருவாசிரியம் திருமந்த்ரத்தில் மூன்றாவது பதத்தை விளக்குவதாகவும், பெரிய திருவந்தாதி சரமச்லோகத்தை விளக்குவதாகவும் நிரூபித்தார். "த்வயார்த்தம் தீர்க்கசரணாகதி என்றது ஸாரஸங்க்ரஹத்திலே" (ஆசாரியஹ்ருதயம் நூற்பா–210) என்னும் இரண்டாவது சூர்ணையில் தீர்க்க சரணாகதியாகிற திருவாய்மொழியில் த்வயத்தின் பொருள் விளக்கப்படுகிறது என்று ஸாரஸங்க்ரஹம் என்னும் ரஹஸ்யத்தில் நிரூபிக்கப்பட்டபடியைக் காட்டினார்.

5. நம்பிள்ளை திருவிருத்தத்திற்கு உரையருளிச் செய்தாரா?

21. உபதேசரத்தினமாலையில் மணவாள மாமுனிகள் "ஆழ்வார்களேற்றம் அருளிச் செயலேற்றம் தாழ்வாதுமின்றியவைதான் வளர்த்தோர்–ஏழ்வாரும் உள்ள அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம் வையமறியப் பகர்வோம் வாய்ந்து" (உ.ப.ரத்.34) என்று அருளி, திருவாய்மொழிக்கு நம்பிள்ளை ஈடு அவதரித்ததை 44ஆம் பாட்டில் அருளிச் செய்து, மற்ற மூவாயிரத்திற்கும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் அருளியதை 46ஆம் பாட்டில் அருளிச் செய்து, மூவாயிரத்தில் சில பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் செய்தவர்களை 47ஆம் பாட்டில் எடுக்கையில் நஞ்சீயர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர் ஆகிய மூவரை எடுத்திருக்கிறாரேயொழிய நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளைகளை எடுக்கவில்லையே எனச் சிலர் ஐயம் கொள்வது உண்டு. திருவாய்மொழியின் ஈட்டை எடுத்ததிலேயே திருவாய்மொழியின் சுருக்கமான திருவிருத்தத்தின் ஈட்டையும் எடுத்ததாகி விடுமாகையாலே இந்த ஐயப்பாட்டிற்கு இடமில்லை. இந்த நம்பிள்ளை ஈடு பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்யானத்தையே பெரிதும் ஒத்திருப்பதால் இது நம்பிள்ளை அருளியதே என்று உறுதியாகச் சொல்லலாம்.

6. அழகிய மணவாள ஜீயர் உரையில் அமைந்துள்ள சில குறிப்புகள்:

22. ச்ரிய: பதியாய், ஸ்வேதரஸமஸ்தவஸ்து விலக்ஷண ஸ்வரூப ரூபகுணவிபூதிகளையுடையனான ஸர்வேச்வரன், "பதிம் விச்வஸ்ய" என்று விச்வத்துக்கும் பதியாகையாலே தன்னுடைய நாராயணத்வ ப்ரயுக்தமான வ்யாப்ய வ்யாபகபாவம், சரீராத்மபாவம், சேஷசேஷி பாவம், நியந்த்ருநியாம்யபாவம், ஆதார ஆதேயபாவம் முதலான அவிநாபூத ஸம்பந்தம் (விட்டுப் பிரியாத உறவு) ஸகல ஆத்மாக்களோடும் ஒத்திருக்க, ஒரு விபூதியிலுள்ளார் நிரந்தர் அநுபவ ஜனித நிரதிசய ஆநந்த த்ருப்தராயப் போருகிறபடியையும், ஒரு விபூதியிலுள்ளார், "அநீசயா சோசதி முஹ்யமாந:" (ச்வேதாச்வதர உபநிஷத் 4–7) என்று அநாத்ய ஜ்ஞாந அந்தகாரத்தாலே அபிபூதராய், அநாத்மந்யாத்ம புத்தியும், அஸ்வேஸ்வபுத்தியுமாகிற அந்யதா ஜ்ஞாந விபரீத ஜ்ஞாநங்களாலே ஆத்ம அநநுரூபமான அர்வாசீந (தற்காலத்திய) புருஷார்த்தங்களிலே அதிப்ரவணராய், ஆத்ம அநுரூபமான அதிசயித புருஷார்த்தத்தில் அத்யந்தவிமுகராய், கர்ப்ப நரகாதி ஸகல க்லேசங்களாலும் வ்யாகுலராய்ப் போருகிறபடியையும் கண்டு, இவர்களுக்கு அவகாசம் பிறக்கைக்கு அடியான ஸ்வாபிமுக்யத்தைப் பண்ணுவிக்கைக்கு உபகரணமான கரண களேபரங்களையும் கொடுத்து, "மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" (ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம்–1) என்கிறபடியே அந்தகாரத்திலே திரிவார்க்கு அர்த்தப்ரகாசம் பிறக்கைக்குக் கைவிளக்குக் கொடுத்தாற் போலே நிர்[illegible]மான ப்ராண ப்ரகாசத்தையும் பண்ணுவிக்க, திமிரோபஹதத்ருஷ்டியானவனுக்கு (ஒரு வகை கண் நோய் ஏற்பட்டவனுக்கு) தீபமும் ப்ரகாசமல்லாத வோபாதி பகவத் பக்தியாகிற ஸித்தாஞ்ஜநத்தாலே ஆந்தர சக்ஷுஸ்ஸான நெஞ்சின் குருடு தீராமையாலே அதுவும் அகிஞ்சித்கரமாக (பயனற்றதாக ஆக), "இதிஹாஸ புராணாப்யாம் வேதம ஸமுபப்ரும்ஹயேத்" (பார்ஹஸ்பத்யஸ்ம்ருதி) என்று வேத உபப்ருஹ்மணமான ஸ்ம்ருதி இதிஹாஸ புராண ரூபங்களாய், ஸ்வயோக மஹிம ஸாக்ஷாத்க்ருத பராவரதத்த்வ விபாகரான பரமர்ஷிகளாலே ப்ரணீதங்களான ப்ரபந்தங்களை ப்ரவர்த்திப்பித்தும்;

அதுவும் கார்ய கரமல்லாமையாலே, ஓலைப் புறத்துச் செல்லாத ராஜ்யத்தை எடுத்து விட்டுக் கொள்ளும் ராஜாக்களைப் போலே தான் ராமக்ருஷ்ணாதி ரூபத்தாலே அவதரித்தும், "ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" (ஸ்ரீராம. அயோ. 3–26) என்ற ஸௌந்தர்யாதி குண ஆவிஷ்காரேண, "அக்ரூர மாலாகாராதிகாந் பரமபாகவதாந் க்ருத்வா" (கீதாபாஷ்யம் அவதாரிகை) என்று சொல்லுகிறபடியே சாஸ்த்ரசஸ்த்ரம் முனை மடிந்தால் எடுக்கும் ப்ரஹ்மாஸ்த்ரமாகிற வடிவழகை ப்ரகாசிப்பதும், உபதேச அநுஷ்டாநாதி முகத்தாலே தர்மஸம்ஸ்த்தாபநத்தைப் பண்ணியும் வசீகரிக்கப் பார்த்தவிடத்திலும் அநாதி பாபவாஸநாதோஷ தூஷிதாசேஷசேமுஷீகராகையாலே பாஹ்யகுத்ருஷ்டி மதாவகாஹநம் பண்ணி வைதிகமார்க்கபராங் முகராகக் கண்டபடியாலே இவர்களை வசீகரிக்கைக்கு உபாயம் ஏதோ என்றும் பார்த்து, தீபகம் காட்டி ம்ருகம் பிடிப்பாரைப் போலே ஸஜாதீய புத்தி பண்ணலாம்படியான ஆழ்வார்களைப் ப்ரவர்த்திப்பித்தான்.

இப்படி வைலக்ஷண்யத்தை உடையரான இவ்வாழ்வார் பக்கலிலே பிரபந்தங்கள் அவதீர்ணங்களாகிற விடத்து ஈச்வரன் ஸ்வஸங்கல்பத்தாலே வாஸுதேவாதி சதுர்வ்யூஹத்தைப் பண்ணினாற்போலேயும், வேதங்கள் ருகாதிபேதத்தாலே சதுர்தாவாக வ்யக்தமானாற்போலேயும், இவையும், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்று நான்கு வகையாக வெளிப்படுத்தப்பட்டன. அவற்றில் ப்ரதமபாவியான இப்பிரபந்தத்திலே, அஜ்ஞான கர்மதேஹாதி ரூபமான ஸம்ஸார ஸம்பந்த நிவ்ருத்தியை அபேக்ஷித்துக் கொண்டு அநுபவ உபகரணமான ப்ராவண்ய அதிசயத்தாலே அநுபவ அபிநிவேசம் நடந்தபடியையும் அநுபவ அலாபத்தில் ஆர்த்தி அதிசயித்த ப்ரகாரத்தையும் ஸ்மாரக பதார்த்தங்கள் ஆர்த்திக்கு அதிசய ஜனங்களான ப்ரகாரத்தையும், இவருடைய ப்ராவண்யாதி வைலக்ஷண்யத்தைக் கண்ட ஸுஹ்ருத்துக்களும் பரிவருமாயுள்ளார் தாங்கள் ஈடுபட்டும், இவரை ஆச்வஸிப்பித்தும் போந்த ப்ரகாரத்தையும், ஆர்த்யதிசயம், காலவிளம்பம் பொறுக்கமாட்டாத சைதில்யத்தை ஜநிப்பித்த ப்ரகாரத்தையும், "ப்ராப்ய ப்ராபகங்கள் பகவத்–சீல ஸௌலப்யங்களே" என்று அறுதியிட்ட ப்ரகாரத்தையும் வெளியிடுகையாலே ஈச்வரன் திருவுள்ளத்திலே படும்படி இவர் தம்முடைய வ்ருத்தகதனம் பண்ணினராயிற்று. ஆகையாலிறே இப்பிரபந்தத்துக்குத் திருவிருத்தமென்று பேராயிற்று, அல்லது தாழிசை துறை, விருத்தமென்று இனத்தில் வகையான கலித்துறையை விருத்தமென்னக் கூடாது.

இப்பிரபந்தத்திலே அத்யாத்மரூபமான இவ்வர்த்தங்களை ப்ரகாசிப்பிக்கிற இவர் நாயகநாயிகா ஸங்கமரூபமான காமராக ப்ர்காரமாயிருக்கிற களவித் துறையைப் பேசுவானென்னென்னில், காமமாவது இதர விஷயத்தில் ஆனபோது அநர்த்தாவஹமாய் த்யாஜ்யமாகக் கடவது; "காமாத் கோபய:" (ஸ்ரீபாகவதம் 7–1–33) என்கிற கணக்கிலே கண்ணனுக்கே காமமானபோது புருஷார்த்த அந்வயியாகக் கடவது. ஆகையால் இந்தவகை, தமிழ் மர்யாதையான ச்ருங்கார ப்ரகாசகமான பாசுரத்தாலே இவ்வத்யாத்மத்தை அருளிச் செய்தது – கட்டி பூசிக்கடு தீற்றுவாரைப் போலே விஷயஸக்தரான ஸம்ஸாரிகள் நெஞ்சிலே படுகைக்காக.

ஆனால், ஈச்வரனே தலைமகனாகப் பாட ப்ராப்தமாயிருக்க, அவனைப் பாட்டுடைத் தலைமகனாக்கி, ஸ்ரீவைஷ்ணவர்களைக் களவித் தலைமகனாக வைத்துப் பாடின இடத்துக்குக் கருத்து என்னென்னில், ஈச்வரன் போக்ய பூதனாமோபாதி, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" (திருவா. 2–3–10) என்றும், "பரிஜநைஸ் தவ ஸங்க3ஸீய" (ஸ்ரீவைகுண்ட ஸ்தவம்–77) என்றும் தத்ஸம்பந்த முகத்தாலே ததியர்க்கும் போக்யதை உண்டாகையாலே அவர்கள் பக்கல் ப்ராவண்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது.

23. ஆத்ம ஸ்வரூபத்துக்கு ஸ்த்ரீத்வாதி பேதமின்றிக்கேயிருக்க நாயிகா ரூபத்தாலே ஸ்த்ரீத்வம் சொல்லுகைக்கு அடி என்னென்னில், ஸ்வரூபம் ஸர்வதா பரதந்த்ரமாகையாலும், அநந்யார்ஹமாகையாலும், அநந்யரக்ஷகமாகையாலும், அநந்யபோக்யமாகையாலும், ஸ்த்ரீத்வஸாதர்ம்யம் உண்டாகையாலே சொல்லக் குறையில்லை. "ஸ ஏவ வாஸுதேவோஸௌ ஸாக்ஷாத்புருஷ உச்யதே, ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம் ஜகத் ப்ரஹ்மபுரஸ்ஸரம்" (விஷ்ணு தர்மம்) என்று சொல்லக் கடவதிற. "ஸ்வாமித்வாத்மத்வ சேஷித்வ சேஷத்வ

ஸ்த்ரீத்வ தாயிந:'' என்று ஸ்வாமி குணாநுஸந்தாநத்தில் ஸ்வத்துக்கு தத்ப்ரதிஸம்பந்திகஸ்வபாவங்கள் தோற்றுகையாலே ஈச்வரனுடைய புருஷோத்தமத்வ அநுஸந்தாநத்தில் ஸ்வஸ்வரூபத்துக்கு ஸ்த்ரீத்வாநுஸந்தானம் அவர்ஜநீயம் (விட வொண்ணாதது) என்றதாயிற்று.

இப்படி நாயகநாயிகா ஸம்பந்தம் ஸித்தமாயிருந்துள்ளவிடத்தில் தாய் வார்த்தையான இடம், ஜ்ஞான தசையாதல், பரிவர் வார்த்தையாதலாகக் கடவது. தலைமகள் – என்பது ப்ரேம தசையை; தோழி – என்பது ஸுஹ்ருத்துக்களை; கிளவித்தலைமகனென்பது அபிமதபாகவத விஷயத்தை; தூது என்பது – கடகமான ஆசார்ய விஷயத்தை; கண்ணழகு என்பது – ஜ்ஞாந வைலக்ஷண்யத்தை; முலையழகென்பது – பாரதந்த்ர்யலக்ஷணமாய் போகோபகரணமான பக்தி வைலக்ஷண்யத்தை; இடையழகென்பது – ஒன்றும் பொறாத வைராக்யத்தை; நடையழகென்பது – அநுஷ்டாநத்தை; வளை என்பது – அநந்யார்ஹதா சிஹ்னத்தை; இருள் என்பது – அஜ்ஞானத்தை; வாடை அன்றில் தென்றல் முதலான பாதகங்களென்பது – ஸ்மாரகத்வேந அஸஹ்யங்களான லௌகிகபதார்த்தங்களை; இரவு நெடுமை என்பது விளம்பாக்ஷமத்வத்தை; பொழுதொடு புலம்பல், மாலைக்கற்றாமை என்பது – போகபோக்ய காலஸந்திதியை; சந்த்ரோதயமென்பது – அலாபதசையில் விவேகமும் பாதகமானபடியை; இன்னமும் இப்பாசுரங்களிலே வ்யங்யங்களும் (அறியத்தக்கனவைகளையும்) கண்டு கொள்ளப்படும்.

7. நம்பிள்ளை விரிவுரையிலிருந்து சில விளக்கங்கள்:

24. ஆழ்வார் முக்தரென்பர் சிலர். அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தார் ஒருத்தர் முக்தப்ராயர் என்பர். அங்குள்ளாரிலே ஒருவரை, "நீர்போய்ப் பிறவும்'' என்னப் பிறந்தார் என்பார்கள் சிலர். வங்கிப்புரத்துநம்பி எம்பெருமான்தானே வந்தவதரித்தான் என்பர். இப்படி சொல்லுகைக்கு அடி ஆழ்வாருடைய ப்ரபாவமிருக்கும்படி. முக்தரிலே ஒருவரை இங்கே போரவிட்டதாகில், நாம் போந்த கார்யம் முடிந்தவாறே ஆறியிருக்கக்கூடும். அங்ஙனன்றியே, "இந்நின்ற நீர்மையினியாமுறாமை'' (திருவிருத்தம் 1) என்றும், "பாவியேனைப் பல நீ காட்டியப் படுப்பாயோ'' (திருவாய். 6–9–9) என்றும், மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து'' (திருவாய். 6–9–9) என்றும், "முன்பரவை கடைந்தமுதம் கொண்ட மூர்த்தியோ'' (திருவாய்.2–6–8) என்றும் கூப்பிடுகையாலே இவர் ஸம்ஸாரிகளிலே ஒருவராமித்தனை.

8. ஐதிஹ்யங்கள்:

25. திவ்வியப் பிரபந்தங்களுக்கு அமைந்துள்ள வியாக்கியானங்கள் அனைத்துமே வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன. இதற்கு முன்னர் பல்வேறு நூல்களுக்கு இயற்றப்பட்டிருந்த எந்த உரைகளிலும் கையாளப்படாத பல உத்திகள் வைணவ உரையாசிரியர்களால் கையாளப் பெற்றுள்ளன. நான்கு வரிகளில் அமைந்துள்ள பாசுரங்களுக்கு மிக மிக விரிவான முறையில் விளக்கமான உரைகள் வைணவ உரையாசிரியர்களால் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன என்பதனைக் கண்கூடாகக் காணலாம். பல்வேறு ஆசார்யர்களால் இயற்றப்பட்டவையாக அமைந்திருந்த போதிலும், அவ்வுரைகள் அனைத்தும் சில பொதுவான தன்மைகளைக் கொண்டவைகளாக அமைந்துள்ளன. பிள்ளான் தொடங்கி, ஸ்ரீமணவாளமாமுனிகள் வரை ஆசார்யர்கள் அனைவராலும் எழுதப்பட்ட உரைகள் அனைத்தும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்ரவாள நடையிலேயே அமைந்துள்ளன:

வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், ஆகமங்கள் முதலிய பல நூல்களிலிருந்தும் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன; ஆங்காங்கே விசிஷ்டாத்வைதக் கொள்கைகளைப் பற்றிய விளக்கங்கள் மிக நுணுக்கமாகவும் அதே சமயத்தில் மிகத் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன.

ஐதிஹ்யங்கள், நிர்வாஹங்கள்வழி பெறப்படும் செய்திகள்

26. மேற்கூறிய எல்லாற்றையும்விட மிகச் சிறந்த உத்தி ஒன்று வைணவ உரையாசிரியர்களால் கையாளப்பட்டுள்ளது. வைணவ உரையாசிரியர்கள், தங்கள் காலத்திலும், தங்கள் காலத்திற்குச் சற்று முற்பட்ட காலத்திலும் வாழ்ந்திருந்த ஆசார்யர்களுடைய திருப்பெயர்களைத் தங்கள் உரைகளில் இடம் பெறச்

செய்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதற்கு முன்னர் அமைந்த எந்த உரையிலும் இப்படிப்பட்ட உத்தியானது எவராலும் கைக்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். பொதுவாக ஒரு நூலுக்கு உரை எழுதுபவர்கள், தனிப்பட்ட நபர்களைப் பற்றி அவ்வுரையில் குறிப்பிடுவது கிடையாது என்றே கூறலாம். ஆனால் வைணவ உரையாசிரியர்கள், தங்கள் காலத்திலும், தங்கள் காலத்திற்குச் சற்று முற்பட்ட காலத்திலும் எழுந்தருளியிருந்த ஆசார்யர்களுடைய திருப்பெயர்களைத் தங்கள் வியாக்கியானங்களில் ஆறுவகைகளில் இடம் பெறச் செய்துள்ளனர்.

திருவிருத்தம் பாட்டிற்கான விளக்கவுரையில் பெரியவாச்சான்பிள்ளை குருபரம்பரை நூல்களில் காணப்படாத சில செய்திகளை ஐதிஹ்ய நிர்வாஹங்கள் மூலமாக தெரிவித்துள்ளார்.

27. "ஆழ்வான் திருவாய்மொழி நிர்வஹிக்கப்புக்கால் பிள்ளையுறங்காவில்லிதாஸர் கண்ணுங் கண்ணீருமாய் அத்தை இத்தை ப்ரஸங்கித்துச் சிதிலராய்க் கிடப்பர். அத்தைக் கூரத்தாழ்வான் கண்டு "மஹாபாஷ்யம் கற்று சதுரச்ரமாக (திறமையுடன்) ஒன்றை நிர்வஹிக்கிற எங்களைப் போலன்றிக்கே, பகவத்குண ப்ரஸங்கத்திலே சிதிலராம்படி பிறந்த உம்முடைய ஜன்மமும் ஒரு ஜன்மமே!" என்று கொண்டாடினான். ஆழ்வான் வீராணத்தில் ஒரு பெண் பிள்ளையைக் குடங்காலிட்டு 'கள்வன்கொல் யானறியேன்' என்று சந்தையிட்டு, மேலடி தோற்றாமல் மோஹித்தாராம். இப்படியிருக்கிறவரிறே தன்னை வன்னெஞ்சராகச் சொல்லுகிறார்.

28. 'பகலெல்லாம் பாஷ்யத்திலே அந்யபரராயிருப்பர். இரவு அமுது செய்து பள்ளிக் கட்டிலிலே ஏறி அருளினால் 'சந்தை சொல்ல வாராயோ' என்றழைப்பர். முந்துற சந்தை சொன்னால் புளகிதகாத்ரராவர். இரண்டாம் சந்தைக்கு சிதிலர் ஆவர். எங்கேனும் ஒரு கால் புக்காராகில் நாலிரண்டு ஒலியல் கொண்டு பரிமாற வேண்டும்படியாயிற்றுக் கண்ணநீர் வெள்ளமிடும்படி".

29. "பெருமாள் அமுது செய்யும் போது இன்னதனை கறியமுதும், நெய்யமுதும் என்று கணக்கிட்டு, "அவைதன்னை அமுது செய்வதற்கு முன்னேயும் எனக்குக் காட்டி, அமுது செய்தாலும் எனக்குக் காட்டுக் கொடு போங்கோள்" என்றாராய், அவர்களும் திருவுள்ளத்தில் ஓடுகிறது அறியாதே அப்படிச் செய்து கொடு போந்தார்களாய், இப்படி ஆறுமாஸம் சென்றபின் ஒரு நாள் பார்த்து, "இத்தை ஒரு நாள் குறியழித்திட்டு வைத்தலாகாதோ?" என்றருளிச் செய்தாராம்".

30. கிடாம்பியாச்சான் ஆழ்வானோடே திருவாய்மொழி கேட்கிற நாளிலே, ஒரு நாள் ஸ்ரீபாதத்திலே புகும் போதிலே தாழ்த்துப் புக, "ஏன் நீ வைகினாயீ" என்ன, "ஆழ்வான்பாடே திருவாய்மொழி கேளாநின்றேன்" என்றானாய், "இன்று என்ன திருவாய்மொழி நிர்வஹித்தான்?" என்று கேட்டருள, "பிறந்தவாறு" என்றானாய், "அதிற் சொன்ன வார்த்தைகளென்?" என்ன, "நிர்வஹிப்பதாக ஆரம்பித்து, இயல் சொல்லி, அநந்தரம், ஆழ்வாருடைய பாரவச்யதையை அநுஸந்தித்து நெடும்போது கண்ணுங் கண்ணீருமாயிருந்து 'இவ்வாழ்வாரும் ஒருவரே! இவர்க்கு ஓடுகிற பாவவ்ருத்திக்கு நாமிருந்து பாசுரமிடுகையாவதென்?' என்று, 'இற்றைக்கு விடலாகாதோ?' என்று விட்டான்" என்ன, "என்ன பரமசேதநனோ!" என்றருளிச் செய்தாராம்."

31. (அல்லாலில்லை)............ ஒரு விசை திருக்கோட்டியூர்நம்பி திருநாளுக்கு நடந்த விடத்து இவ்வர்த்தத்தை அருளிச் செய்வதாக ஒரு ஏகாந்தஸ்தலத்தே எம்பெருமானாரையும் கொண்டு புக்காராய், திருப்பணி செய்வான் ஒருத்தன் அங்கே உறங்கிக் குறட்டை விடாநிற்க, அவனைக் கண்டு 'அநர்த்தப்பட்டோம்' என்று அவ்விசைக்குத் தவிர்ந்து, பிற்றை விசையிலே இத்தை நம்பி அருளிச் செய்யக் கேட்டருளி, ஆழ்வான் அகத்திலே அமுது செய்திருக்கிறவளவிலே உச்சி வெயிலிலே வந்து புகுந்து "நம்பி இவ்வர்த்தத்தை ஒருவருக்கும் சொல்லாதேகொள் என்றருளிச் செய்தார். உனக்கு இது சொல்லாதிருக்க மாட்டேனிறே" என்று ஸஹகாரி நைரபேக்ஷ்யத்தை அருளிச் செய்தாரிறே". (வேறு உபாயங்கள் ஒன்றையும் எதிர்பாராமல் தானே உபாயமாக நின்று, மோக்ஷமளிப்பவன் எம்பெருமானே என்னும் கருத்தை வெளிப்படுத்துவது இந்த நிகழ்ச்சி.

திருவாசிரியம்

மன்னார்குடி ஸ்ரீ உ.வே. ராஜகோபாலாசார்யர் ஸ்வாமி

"நமோ வாசே யாசோதிதா யாசாநுதிதா தஸ்யே வாசே நம:" என்று அபௌருஷேய சப்தராசியாகிற வேதத்தை "யாச உதிதா" யாதொன்று ஏற்கெனவே உதித்ததாயுள்ளதோ, "யாச அநுதிதா" யாதொன்று இனித் தான் உதிக்கப் போவதாயுள்ளதோ என்று இரண்டுபடியாக நிர்தேசித்து வேதபுருஷன் நமஸ்கரித்துப் போந்தார். இதிலே உதிதா என்பது ஒவ்வொரு கல்பத்தின் ஆரம்பத்திலும் நான்முகன் என்கிற ப்ரஹ்மாவின் முகத்தாலே ரிக் யஜுர் ஸாம அதர்வணங்களாகிற நான்காய் வெளிப்படுத்தப்பட்ட, வடமொழியிலான நான்கு வேதங்களாகும். அநுதிதா என்பது ஸ்ருஷ்டியின் மத்தியில் உரிய அவகாசம் பிறந்தபோது ஸ்ரீபராங்குச பரகாலாதிகளான நான் முகர்களால் (தன்பேச்சு என்கிற ஸ்வாபதேசம், அந்யாபதேசத்தில் வந்தால் தாய், தோழி, தலைவி என்கிற மூன்றுமுகமாய் ஆக நான்கு ப்ரகாரமாய் பேச வல்லவர்கள்) வெளியிட்டருள்கிற திராவிட மொழியிலான வேதங்களாகும். இவ்விரண்டு வேதங்களும் அநாதியானவை என்பது மேற்சொன்ன மந்த்ரத்தில் வேத புருஷன் திருவுள்ளம் என்பது வேதவித் ஸம்ப்ரதாயம். அநாதியான திராவிட வேதம் ஸ்வாமி நம்மாழ்வார் திருமுகத்தாலே பண்டைய நான்மறைகளுக்குத் துல்யமான திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழி ஆகிற நான்மறைகளாய் அவதரித்தன என்பதும் தெள்ளியார் குறிப்பு. இப்ப்ரபந்தம் யஜுர்வேத ஸ்தானீயம் என்பது ஸம்ப்ரதாயம்.

ஸ்வாமி நம்பிள்ளை ஈடு முப்பத்தாறாயிரப்படியில் முதல் ச்ரிய:பதி அவதாரிகையில்– "திருவாசிரியத்தில் நிவ்ருத்த ஸம்ஸாரருக்கு போக்யமான தன்னுடைய வடிவழகை கலம்பகன் மாலையைப் பணியாக எடுத்துக் காட்டுமாபோலே காட்டிக் கொடுக்கக் கண்டு அநுபவித்தார் பூர்ணமாக" என்று அருளிச் செய்துள்ளார். இதன் பொருளாவது பரஸ்வரூப ஸ்வஸ்வ ரூப ஜ்ஞானமும் ஸம்பந்த ஜ்ஞானமுமுண்டாகி ஸித்தோபாய ஸ்வீகாரம் பண்ணி உபாய நிஷ்டராயிருந்த பின்னும் ஸர்வேச்வரன், இவ்வாழ்வார் திருவாக்காலே இந்த லோகத்தைத் திருத்தத் திருவுள்ளம் பற்றி இவரை இந்த லோகத்தில் வைக்க வேண்டியவனாய், இவ்வாழ்வார் தான் இந்த ஸம்ஸாரத்தில் பொருந்த மாட்டாதவராய் இருக்க, இவர் தாம் விரும்புகிற தன்னுடைய அஸாதாரண திவ்யரூப குண விபூதி சேஷ்டிதங்களையெல்லாம் பூர்ணமாய் அநுபவிக்கும்படி காட்டியருள, அவற்றை அநுபவித்துத் தம் இழவை மறந்து இனியராகிறார் என்பது ஸ்வாமி ஸ்ரீதேசிகனும் தம்முடைய ப்ரபந்த ஸாரத்தில் "முறையில் வரும் ஆசிரியம் ஏழுபாட்டும்" என்று அருளிச் செய்தார். 'முறையில்' என்பதற்கு க்ரமத்தில் என்று பொருள். ஸம்ஸாரத்தின் அத்யந்த ஹேயத்வமும் ஸர்வேச்வரனுடைய பரமப்ராப்யத்வமும் ஸ்திரமாய் உணரப் பெற்று ஸம்ஸாரத்தில் விரக்தி பிறந்தவர்க்கு வரக் கூடிய ஸர்வேச்வரனுடைய குண விக்ரஹாத்யநுபவம், அதனடியாக பிறக்கும் பரபக்த்யாதிகள், அவற்றின் ப்ரயோஜனமான அநந்ய ப்ரயோஜனமான மங்களாசாஸனம், அந்த மங்களாசாஸனமும் அதன் எல்லை நிலமாகிற பாகவத பர்யந்தமாதல் என்கிற இவற்றையெல்லாம் க்ரமத்திலே அறிவித்துக் கொண்டு வருகிற திருவாசிரியம் ஏழு பாட்டும் என்பதில் திருவுள்ளம்.

இத்தகைய சிறப்பையுடைய திருவாசிரிய ப்ரபந்தத்தின் ஏழு பாசுரங்களின் பொருள் இனிச் சுருக்கமாய் வரையப்படுகிறது. முதல் பாசுரத்தில் எம்பெருமானின் அப்ராக்ருத ஸ்வாதாரணமாகிற திருமேனியின் அழகை அநுபவிக்கத் திருவுள்ளம் பற்றுகிறார், இவரை ஸர்வேச்வரன் வடிவழகைக் காட்டி வசீகரித்தபடியாலே, அந்த வடிவழகும் தன் அபரிமித தேஜஸ்ஸாலே நேர்கொடு நேராக அநுபவிப்பதற்கு இயலாததாய் இருந்ததால் ஒரு உபமானத்தை அபேக்ஷிக்கிறார். பரிபூர்ண விஷயத்திலே முழுவதுமான ஸாத்ருச்யத்தையுடைய உபமானம் கிடைக்கப் பெறாததால் ஓரளவாகிலும் ஸாத்ருச்யமுடைய உபமானத்தைக் கல்பித்தாவது கொள்ள வேண்டிய ஒரு மரகதக் குன்றத்தைக் கல்பிக்கிறார். ஓக்கத்திற்கும், குளிர்ந்த நிரவதிக ப்ரகாசத்திற்கும், ஸ்திரத் தன்மைக்கும் அல்பஸாத்ருச்யமுடையதிறே மரகதக்குன்றம். மரகதக்குன்றமும் எம்பெருமானுடைய வடிவழகுக்கு நேராய் ஒப்பாக மாட்டாததாகையால் அதையும் ஒப்பனையால் அணி செய்து ஸர்வேச்வரனுடைய வடிவழகுக்கு உபமானமாக்குகிறார். சிவந்த பெரிய மேகத்தை இடையிலே அரைச் சிவந்த ஆடையாய் உடுத்து, சிவந்த கிரணங்களையுடைய ஸூர்யனைத் திருமுடியாகத் தரித்து, அழகிய குளிர்ந்த

சந்திரனை ஆபரணமாய் அணிந்து, வெண்மையான சுடர்மிகு தாரகைகளை வெண்பற்களாய்க் கொண்ட பவளம் போன்ற செவ்வாய் உடைய அதிசயிதமான தேஜோ ராசியான குளிர்ந்த மரகத மலை. இப்படிப்பட்ட பீதாம்பரம், திருமுடி, ஆபரணம் முதலாய் எண்ணற்ற பல்கலன்களை அணிந்து திருக்கண்களும், செவ்வாயும் சிவப்ப அதற்குப் பரபாகமாய் பச்சைமேனி தன் அழகைக் கொண்டு போட்டியிட வணங்கின தலைகளோடு கூடிய திருவனந்தாழ்வான் திருமேனியிலேறி அலைகளையுடைய கடல் நடுவில் யோகநித்ரையில் பையத்துயின்று, ப்ரம்மருத்ர இந்த்ராதி ஸகல தேவர்களும் கைதொழுது வணங்கும்படியாய் எல்லா உலகங்களுக்கும் உத்பத்தி ஸ்தானமாகிற நாபீகமலத்தையுடையனாய், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அத்விதீயனான ஸர்வாதிகனாய், மூவுலகங்களையும் அளந்த திருவடியை உடையவனே என்று ஸர்வேச்வரனைத் துதிக்கிறார். இப்பாசுரம் வடிவழகை ப்ரதானமாக ப்ரதிபாதிப்பதோடு கூட, இப்ப்ரபந்தத்தில் மேலுள்ள பாசுரங்களின் பொருள்களையும் ஸங்க்ரஹிப்பதாய் உள்ளது.

முதல் பாட்டில் ச்ருதிஸ்ம்ருதிகளிலே ப்ரஸித்தமானதும் முமுக்ஷுக்களிலே "நிதித்யாஸிதவ்ய:" என்று த்யானத்திற்குரியதுமாகிற திவ்யமங்கள விக்ரஹத்தினழகையும், "காரணம் து த்யேய:" என்று ஸகல லோகங்களுக்கும் தன் நாபீ கமலத்தாலே காரணமானபடியையும் அறிவித்தருளினார். இனி அந்த த்யேயமான வஸ்து விஷயமான அளவற்ற ப்ரீதி ரூபமான அநவரத த்யானத்தினால் உண்டாகும் ப்ராப்த்யுபாயமான பரபக்தி முதலானவற்றையும் அந்த பக்தியும் ஸ்வயம் ப்ரயோஜனமாய் ஐச்வர்ய கைவல்ய மோக்ஷாதிகளைப் பெற இசையாது, அவனை அடைவதற்கு அவனே உபாயமாய், சாஸ்த்ரங்களால் ஸாதனமாய் ஓதப்பட்ட பக்தி ஸ்வயம் ப்ரயோஜனமாய் அவன் அநுபவத்திற்கென்றே இசைவது, தெளிந்த ஜ்ஞானத்தையுடைய பெரியோர்களுடைய திருவுள்ளம் என்று இரண்டாம் பாட்டில் அருளிச் செய்கிறார்.

இரண்டாம் பாட்டில் அருளிச் செய்த ஸ்வயம் ப்ரயோஜனமான பகவதநுபவ ரூபமான பக்தி என்கிற இனிய அநுபவம் பண்ணுவாருக்கு அந்த பக்தியின் எல்லை நிலம் பாகவதசேஷத்வமும் பாரதந்த்ர்யமும் என்கிறார் மூன்றாம்பாட்டில். மூன்று உலகங்களும் நல்வழியில் முறைபட்டு நின்று தன்னைத் தொழுது தன்னையே அடைய வேண்டும் என்கிற இத்தையே தன் திருவுள்ளத்தில் எப்பொழுதும் கொண்டிருக்கிற பரம காருணிகனாய், அந்த ப்ரகாரம் நெறிபட்டுத் தொழுகைக்கு அபேக்ஷிதங்களான ப்ரமாண ப்ரஸித்தங்கலான கல்யாண குணங்களையுடையவனாய், தன்னுடைய ஆணையாகிற சாஸ்த்ரங்களைச் சரிவர நடத்தும் பொருட்டு தானே நாட்டிய தெய்வங்களாகிற ப்ரம்மருத்ர இந்த்ராதிகள் மூவருக்கும் மேலான முதல்வனாய் விளங்குமவன். 'சுடர் விளங்கு அகலத்து' என்று ஆபரணங்களின் அழகை உடைய திருமார்பை யுடையனாய் என்று இவ்விடத்தில் அருளிச் செய்தது, திருமார்பின் அழகை வெளிப்படையாயும், 'அலர்மேல் மங்கை யுறைமார்பன்' என்றும், 'நின் திருமார்வத்துமாலை நங்கை' என்றும் இவரே அருளிச் செய்தபடியே பிராட்டியின் திருக்கோயிலாய்த் திகழும் திருமார்பையுடையவன் என்பதனை உட்பொருளாய்க் குறிக்கிறது. மேல் சொன்ன ப்ரம்மருத்ர இந்த்ராதி தேவர்கள் மூவரிலும் தானே முதல்வன் என்பதற்கு நிரூபணமாய் "ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே" என்கிற மறைப்பொருளாலே தன் முதன்மையையும், திருவில்லாத் தேவர்களான அவர்களுடைய தாழ்ச்சியையும் காட்டுகிறபடி. இங்குத் திருமார்பில் பெரிய பிராட்டியினுடைய நித்ய ஸந்நிதியைச் சொல்கிறது என்பதற்கு மேல் வாக்யமும் பொருந்தும்படியாயுள்ளது. பெரிய கோஷத்தையுடைய குளிர்ந்த ஸமுத்ரத்தை ஸர்ப்பங்களுக்கு அரசனாகிற வாஸுகியினுடைய உடலைக் கொண்டு மிகப் பெரிய மந்தர மலையில் சுற்றிக் கடைந்த 'தனி மாத்தெய்வம்' என்கிறபடி, தன் திருமார்பில் பெரிய பிராட்டியாரை பெறத் தான் பட்ட பரிக்ரமத்தை அருளிச் செய்தபடி. இப்படிப்பட்ட திருமகள் கேள்வனான ஸர்வேச்வரனான எம்பெருமானுடைய சேஷத்வரஸிகரான அடியார்களுக்கு இன்னாள் தொட்டு எத்தனைக் கல்பங்கள் வரையும் விச்சேதமின்றி எக்காலத்தும் தாஸ பூதர்களாகத் திகழ்வதற்கு நம்முடைய நெஞ்சம் இசைந்து பொருந்த வேண்டும் என்றும் பயிலும் சுடரொளியிலும் நெடுமாற்கடிமையிலும் தமக்குத் திருவுள்ளமான பாகவத சேஷத்வத்தை ப்ரார்த்திக்கிறார். இந்த பாகவத சேஷத்வமும் ஸர்வேச்வரனுடைய ப்ரஸாதமின்றிக்கே ஸித்திகாதிறே. பாகவதர்களும் நம்மைப்போலே அந்நபாநாதிகளாலே ஜீவிக்கக் கண்டு இவர்கள் பக்கல் ஸஜாதீயத்வ புத்தி உண்டாக, அந்த ஸஜாதீயத்வ புத்தி அவர்களை ஆச்ரயிப்பதற்குரிய ருசிவிச்வாஸாதிகளை உண்டாகாமல் தடுக்கும். அந்த அநர்த்தத்தைப் போக்கி அடியார்க்கு நம்மை ஆட்படுத்தக் கூடிய விமலனும் அவனேயாகையால் நெஞ்சு பாகவத சேஷத்வத்தில் இசைந்து பொருந்த வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறபடி.

மூன்றாம் பாட்டில் பாகவத சேஷத்வத்தை மநோரதித்தார். அப்பாகவதர்களுடைய யாத்ரையில் கண் வைத்தவிடத்தில் அவர்கள் மங்களாசாஸனபரராய் இருப்பதை உணர்ந்தார். அநந்ய ப்ரயோஜனமான அவர்களுடைய மங்களாசாஸனமே தமக்கும் அமையுமென்று அதை ஆசைப்படுகிறார் நான்காம் பாசுரத்தில். ஸ்ருஷ்டிக்கு முன்னே யாவரும் யாதுமில்லாத ப்ரளய காலத்திலே எண்ணற்ற சேதனவர்கத்துக்கெல்லாம் அடைவதற்குரியவனான எம்பெருமான் தானே உபாதான நிமித்தங்களாகிற இருவகைக் காரணமுமாய் நின்று, நான்முகன் அரன் தன்னோடு மற்றுமுள்ள ஸர்வதேவர்களையும் படைத்துக் காக்கும் ஆச்சர்ய சக்தி யுக்தனான ஸர்வேச்வரன் திருவடிகளை ஊழிதோறு ஊழி இடைவிடாது வாழிவாழி என்று மங்களாசாஸனம் செய்து துதிக்க இசையும் கொல் என்று மங்களாசாஸனத்தில் மனோரதித்துப் பொருந்துகிறார்.

நான்காம் பாட்டில் பாகவதர்களுடைய யாத்திரையாகிற மங்களாசாஸனத்தை மநோரதித்த ஸ்வாமி நம்மாழ்வார், மங்களாசாஸனத்திற்கு உரியது இவ்வெம்பெருமான் திருவடிகளைத் தவிர மற்றொன்றில்லை என்கிறார் ஐந்தாம் பாட்டில். இப்படி உலகையெல்லாம் ஸ்ருஷ்டித்து அவைகளுடைய ரக்ஷணத்துக்கும் செய்ய வேண்டுவனவற்றையெல்லாம் ஸங்கல்பித்து வைத்து "இனி இவை பட்டது படுகின்றன" என்று அந்யபரனாய் இல்லாது இவைகளுக்கு ஆபத்து உற்ற போதெல்லாம் தன்னை அழிய மாற்றிக் கொண்டு வந்து யாசகனாய் மாவலியிடம் இவ்வுலக மூன்றையும் இந்திரனுக்காக இரந்து பெற்று, பின் திரிவிக்ரமனாய் வளர்ந்து இவ்வுலகம் முழுவதையும் ஒரு திருவடிக்குக் கீழே இட்டுக் கொண்டு மற்றொரு திருவடியை நிமிர்த்து மேலுள்ள உலகையெல்லாம் அளந்து, செந்தாமரைக் கண்களும், செவ்வாயும் உடையனாய்க் கணக்கற்ற ஸூர்யர்கள் ஒரே சமயத்தில் உதித்தாற்போலேயிருக்கிற திருமுடிகள் பலவற்றோடு கற்பகக்காடு போல் ஓங்கி வளர்ந்த ஆயிரம் திருத்தோள்களோடு தோன்றி தேவர்களனைவரும் முறையால் வணங்கும் படி பேரழகுடன் உலகளந்த எம்பெருமானையொழிய வேறொருவர்க்கு இவ்வுலகு அடிமைப்பட்டதாகாது என்கிறார்.

இப்படிக் காரணத்வமும் ரக்ஷகத்வம் போரப்பொலியத் தோன்றிய ஸர்வசேஷியானவனை மங்களாசாஸனம் பண்ணுவதொழிய இவ்வுலகினர் வேறொன்றில் ஈடுபடுவரோ என்றெண்ணி ஸம்ஸாரிகள் பக்கல் கண் வைத்த ஆழ்வார் ஸம்ஸாரிகளுடைய அனர்த்தம் கண்டு இரங்குகிறார் ஆறாம்பாட்டில். ஒ ஒ என்று ஸம்ஸாரிகளில் இருந்தார் இருந்த இடந்தோறும் செவிப்படக் கூப்பிடுகிறார். 'காக்கும் இயல்வினன் கண்ண பெருமான்' என்று இவனது ஸ்வபாவம் இருந்தபடி. இனித்தான் உலகினது இயல்பு என்னும்படி ஸம்ஸாரிகள் ஸ்வபாவம் இருந்தபடி. அதாகிறது – வருந்தி விடுவது இவன் ஒருவனையேயாய் விரும்பிக் கைக்கொள்வது இவனை ஒழிந்தவையாய், அஹங்கார மமகாரங்களையே நிரூபகமாய்க் கொண்டு எம்பெருமானைத் தவிர்த்தாரை ரக்ஷகராய் அபேக்ஷிக்கும் இவ்வுலகினர் இயல்பைக் கண்டு சோகிக்கிறார்.

ஸம்ஸாரிகளுடைய அனர்த்தம் கண்டு சோகித்த ஆழ்வார், தான் இவர்களைப் போல் இழப்பாளனாகாது முந்துற முன்னம் ஸர்வேச்வரனுக்கும் அவனடியார்களுக்கும் தான் சேஷபூதன் என்பதை உணர்ந்து தேவதாந்தர ஸம்பந்தம் அற்றவனாய் பகவதேகபரனாய் ஆகப் பெற்றோமே என்று வழிப்பறிக் கள்வர் மிகுந்த தேசத்திலே தன்னுடைமையைக் கொண்டு தப்பினாரைப் போலே இனிதாய்ப் பேசித் தலைக்கட்டுகிறார் ஏழாம் பாட்டில்.

குளிர்ந்த பிறைச் சந்திரனை சிரஸில் தரித்த ருத்ரனோடு நான்முகனோடு, தேவர்களுக்கெல்லாம் தலைவனான இந்திரனோடு வாசியற ஸமஸ்த சேதனர்களும், அவர்களுக்கு போகோபகரண போகஸ்தானங்களாகிற ஸமஸ்த அசேதனங்களும் இந்த ப்ரம்மாண்டங்களுக்குக் காரண பதார்த்தங்களாகிற ஐம்பெரும் பூதங்களும் இவனோடு பிரிவற்றவையாய், இவனை ஆத்மாவாகக் கொண்டு இவனுக்கு சரீரங்களாய் இருக்க, இவனைக் காட்டிலும் வேறுபட்ட ஒருவனை பரதேவதையாய் கொள்ள மாட்டாதவனாய் இருந்த தன்னைக் குறித்து த்ருப்தராய் அருளிச் செய்து தலைக் கட்டுகிறார்.

இவ்வாழ்வாருடைய நான்கு ப்ரபந்தங்களில் மற்ற மூன்றும் அந்தாதியாய் கட்டளைப்பட்டிருக்க, இப்ப்ரபந்தம் ஒன்றுமே மாறுபட்டிருப்பது. இதற்குக் காரணம் ஸர்வேச்வரன் தன்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதி சேஷ்டிதங்களை இவருக்குப் பூர்ணமாய் காட்டித்தர, இவரும் அநுபவித்து அவ்வனுபவமே முடிவாய்த் தலைக்கட்டினபடி.

ஸ்ரீசடாரிமுநீந்த்ரஸ்ய திருவாசிரியாக்யத: த்விதீயப்ரபந்தாத் ஸாரம் ஸமுத்த்ருத்ய ச ஸர்வத:
வேங்கடக்ருஷ்ணமாசார்ய ஷஷ்டிபூர்த்திமஹோத்ஸவே ராஜகோபாலநாம்நேத்தம் தஸ்ய ப்ருத்யேந வர்ணிதம்.

பெரிய திருவந்தாதி

ஸ்ரீ உ.வே. ஆத்தான் அப்பா சடகோபாச்சாரியார் ஸ்வாமி,
மேலத் திருமாளிகை, ஆழ்வார் திருநகரி

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவரும் பிரபந்நஜந கூடஸ்தருமான நம்மாழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்கள் நான்கு. அவை திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்பன. இந்த நான்கும் நான்கு வேதங்களின் ஸாரமாகும். நாலாயிர திவ்யபிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவில் இது ஏழாவதாகும். அதர்வணவேதசாரமுமாகும்.

பெயர்க் காரணம் – பெரிய திருவந்தாதி என்பதற்கு பெருமை பொருந்திய திருவந்தாதிப் பிரபந்தம் என்று பொருள். அந்தத்தை ஆதியாக (முடிவை முதலாக உடையது) அந்தாதி. முன் நின்ற செய்யுளின் ஈற்றில் உள்ள எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும், அடுத்து வரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதி. இது தமிழில் வழங்கும் 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்றாகும். பதிற்றந்தாதி, நூற்றந்தாதி வகைகளும் உண்டு. இது சொல் தொடர் நிலையைச் சார்ந்தது. வேதம் தமிழ் செய்த மாறனான நம்மாழ்வார் முதலில் அருளியது திருவிருத்தம். இது நூறு பாடல்களைக் கொண்டது. திருவாசிரியம் 7 பாடல்களைக் கொண்டது. பெரிய திருவந்தாதி 87 பாசுரங்கள் கொண்டது. சிறியதான இத் திருவந்தாதிக்கு பெரிய திருவந்தாதி என வழங்குவது எங்ஙனேயென்னில், உருவத்தால் பெருமை பெற்றதைப் பெரிது என வழங்குதல் போல குணங்களால் பெருமை பெற்றதையும் பெரிது என வழங்குவதுண்டு. பெரிய மனிதர் என்று உலகில் சிலரைச் சொல்வது குணப்பெருமை பற்றியதேயன்றி, உடற்பெருமையைக் கொண்டல்ல. கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் இளம்வயதிலே ஒரு நாள் கூரத்தாழ்வான் திருவாய்மொழி அனுஸந்திக்கும்போது ''சிறுமாமனிசராய் என்னையாண்டார் இங்கே திரியவே'' என்றதைக் கேட்டு அதில் சிறுமாமனிசர் என்றதைக் குறித்து தந்தையாரிடம் கேள்வி எழுப்பினார். ''ஒன்றுக் கொன்று எதிர்தட்டான சிறுமை பெருமை என்கிற குணங்கள் இரண்டும் ஒரு பொருளிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? ஆழ்வார் ''சிறு மாமனிசர்'' என்ற இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளியது பொருந்துவது எங்ஙனே'' என வினவினார். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து குழந்தாய் நன்கு வினவினாய். இதோ விடை கூறுகிறேன். சில பெரியோர்களைக் காட்டி 'திருமேனி சிறுத்து ஜ்ஞானம் பெருத்திருக்கிற சிறியாச்சான், அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போல்வாரை சிறு மாமனிசர் எனத்தட்டில்லை. முதலியாண்டான், எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடு ஒக்க அன்னபானாதிகள் கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதில் பரமபதத்து நித்யசூரிகளைப் போன்றவர்களாதலால் இப்படிப்பட்டவர்கள் ''சிறுமாமனிசர்'' எனத் தக்கவர் அன்றோ. இவ்வாறே வடிவு சிறுத்து மகிமை பொருந்தியவர்களும் மனிதர் என்று பார்க்குமிடத்து சிறுமை தோன்றினும், பகவத் பக்தி, ஜ்ஞானம், அனுட்டானம் முதலிய நற்குணங்கள் நோக்குமிடத்து நித்ய முக்தர்களினும் மேன்மை பெறுகின்றவர்களுமான மஹாபுருஷர்களையே ஆழ்வார் சிறுமாமனிசர் என்று குறித்தருளினார் என்று விடை கூற பட்டரும் தகும் தகும் என்றிசைவு கொண்டார்.

ஆகவே இப்பிரபந்தம் மற்ற திருவந்தாதிகளிற் காட்டிலும் உருவத்தால் சிறிதாயிருந்தாலும், சொல்லின்பம், பொருளின்பம் முதலிய குணங்களால் பெருமை பெற்று விளங்குகிறது என்று நம்பூர்வர்கள் இதன் பெருமை தோன்ற இதற்குப் பெரிய திருவந்தாதி என்று திருநாமம் இட்டனர்.

பெரிய திருவந்தாதி என வழங்குவதற்கு மற்றொரு காரணமும் கூறுவர். ''புவியும் இருவிசும்பும் நின்னகத்த நீயென் செவியின் வழிபுகுந்தென்னுள்ளாய் அவிவின்றி யான் பெரியன் நீ பெரியை யென்பதனை யாரறிவார் ஊன் பருகு நேமியாய் உள்ளு'' என்று இப்பிரபந்தத்தில் 75வது பாசுரம் அமைந்துள்ளது. ஆழ்வார் எம்பெருமானை நோக்கி, ''பெருமானே! உபயவிபூதிகளும் உன்னிடத்தே அடங்கியிருக்கின்றன என்பது உண்மை. அந்த உபயவிபூதிகளைத் தரிக்கின்ற நீ பெரியவனா அல்லது

உபயவிபூதியுக்தனான உன்னை செவியின் வழியே உள்ளே புகுவித்து தரித்துக் கொண்டிருக்கிற நான் பெரியவனா? உன்னைப் பெரிய வஸ்து என்று வேதங்கள் சொல்லுகின்றனவே. இது தகுமா? பெரியவனான உன்னையும் ஒரு மூலையிலே அடக்கிக் கொண்டிருக்கிற நானல்லவோ பெரியவன் என்று சமத்காரமாக அருளுகிறார் ஆழ்வார். தம்முடைய பெருமையைப் பேசிக்கொண்ட பிரபந்தம் இது ஆதலால் பெரியதிருவந்தாதி என்று பெயராயிற்று.

மூன்றாவதாக நம்மாழ்வாருக்கு "பெரியன்" என்ற திருப்பெயர் உண்டு. இதை ஆழ்வார் திருநகரியில் இராப்பத்து உற்சவத்தில் பிரணயகலக உற்சவத்தன்று (ஊடல் உற்சவம்) நேரில் காணலாம். இராப்பத்து 10ம் நாள் பொலிந்து நின்றபிரான் அதிகாலையில் நாச்சிமார்களைப்பிரிந்து தனியராக வெளியே சென்று விட்டு மாலை கோவில் திரும்புகிறார். பெருமாளுக்கும் பிராட்டிமார்களுக்கும் ஊடல் ஏற்படுகிறது. ஊடலைத் தடுக்க சமாதானத் தூதுவராக அரையர் ஸ்வாமி செயல்படுகிறார். ஊடல் தீர்ந்த பாடில்லை. தாயார் சமாதானமடையவில்லை. உடனே அரையர் ஸ்வாமி நம்மாழ்வாரை அழைத்து வருகிறார். மண்டபத்தில் ஒரு புறம் பொலிந்துநின்றபிரான். மறுபுறம் நாச்சிமார்கள். நடுவில் நம்மாழ்வார் எழுந்தருளுகிறார். அப்போது அரையர் ஸ்வாமி சமாதானம் ஏற்படுத்துவதற்காக "அந்தணர்க்கோ நல்ல அருந்தவர்க்கோ" என்ற பாசுரத்தையும் பாடி, "குருகைப்பிரான் வந்து சந்தித்ததே. தேவரீரும் நாச்சிமாரும் பிரணய கலகமாக எழுந்தருளியிருப்பது கண்ட சுவாமி நம்மாழ்வார் எழுந்தருளியிருக்கிறார்" என்று விண்ணப்பிப்பார். அப்போது அர்ச்சகர் ஸ்வாமி "அருளிப்பாடு, பொலிந்து நின்றபிரான் நம்மையும் நம்பெண்டுகளையும் உறவாக்க திருவுள்ளமாகிறார்" என்று கூறுவார். தாயார் பக்கமுள்ள அர்ச்சகர் "பொலிந்து நின்ற பிரான் செய்த பிழைகளையெல்லாம் நம்பெரியனுக்காகப் பொறுத்தோம்" என்று கூறியவுடன் 'அருளிப்பாடு பொலிந்து நின்றபிரான்' என்ற அருளிப்பாடு ஆகும். பெருமாளும் தாயார்களும் கூடுவர். இதைக் கண்டு ஆழ்வார் ஒரு நிமிடம் பார்த்துவிட்டுத் திரும்புவதை இன்றும் காணலாம்.

நம்மாழ்வாரின் திருவாபரணக் கருவூலத்தைக் காத்துவரும் ஒரு கூட்டத்தாருக்குப் பெரியன் கூட்டத்தார் என்ற பெயர் இன்றும் வழங்கிவருகிறது.

நம்மாழ்வாருக்கு வழங்கிவரும் பெயர்கள் அனைத்தும் காரணப்பெயர்களே. ஓர் அன்னையிடத்து மகவாய் உலகில் தோன்றியமை ஒன்று தவிர்த்து உலக மக்களுக்கும் இவருக்கும் ஒரு அம்சத்திலும் ஒப்பில்லை. தாய்ப்பாலும் அருந்தாத தவச்ரேஷ்டர். பிறந்த நாள் முதல் மதுரகவிகளுக்கு வாய் திறந்து பேசிய நாள் வரை பலவாண்டுகள் பேச்சே இல்லாதிருந்த முனிச்ரேஷ்டர். பகவத் தியானத்தில் மோஹித்துக்கிடந்த காலம் கடந்து மதுரகவிகளுக்குப் பிரபந்தங்களை அருளிச் செய்யத் துவங்கிய பிறகும் கூட மூவாறு மாதம் மீண்டும் மீண்டும் மோகித்துக் கிடக்கும் தன்மையினர். "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றிருந்த இவரை நேரில் காணாதபடியால்தான் "வாஸுதேவ: ஸர்வம் இதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்று கண்ணபிரானுக்கு சோகிக்க வேண்டி வந்தது. ஆழ்வாரும், ஒரு செவ்வாய்க்கிழமை முற்படப்பிறந்திலோமே கண்ணனை நேரில் கண்டனுபவிக்க என்ற துக்கப்பட்டதாகச் சொல்லுவதுண்டு. "பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்றும், "நினைதொறும் சொல்லுந்தோறும் நெஞ்சிடிந்துகும் வினைகொள் சீர் பாடிலும் வேமெனதாருயிர்" என்ற அளவில் பகவத்விஷயத்தில் ஏற்பட்ட ஆழ்ந்த அனுபவம் இவ்வாழ்வாருக்குத் தனிப்பெருமையாகும்.

புலன்படிந்துண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளா போக்காமலும் சூதனாகிக் கள்வனாகி தூர்த்தரோடு இசையாமலும் முந்துற முன்னம் மயர்வறமதிநலம் அருளப்பெற்று அறியாக்காலத்துள்ளே அடிமைக்கன்பு பூண்டு நின்ற அதிவிலக்ஷணர். "நும்மை அருகும் சுவடும் தெரிவுணரோம் நுமக்கு அன்பே பெருகும் மிகவிது என் பேசீர்" என்று இவரே ஆச்சரியப்பட்டு எம்பெருமானை வினவுமளவில் பகவத் ப்ரேமைக்கு ஆட்பட்டவர். இவரிடமிருந்து வெளிவந்த நான்கு பிரபந்தங்களுமே அனுபவ பரீவாஹங்கள்.

"பரமபுருஷனை உள்ளபடியே ஆழ்வார் தாம் தம்முடைய திருவுள்ளத்தாலே அனுபவித்து அவ்வனுபவத்தால் உண்டான நிரவதிக ப்ரீதியாலே அவனை அனுபவித்தபடியே பேசுகிறார்" என்ற

திருக்குருகைப்பிரான் பிள்ளானது ஆறாயிரப்படி அவதாரிகை திருவாய்மொழிக்குப் போல ஏனைய மூன்று பிரபந்தங்களுக்கும் பொருந்தும். ஆழ்வார் அருளிச்செயலின் பெருமையைக் கல்வியில் சிறந்த கம்ப நாட்டாழ்வார் சடகோபரந்தாதி முதற்பாசுரத்திலே காட்டிக் கொடுக்கிறார், “வேதத்தின் முன் செல்க... சொல்லை மூலப் பரஞ்சுடரே” என்ற பாடலில்.

பிரபந்தங்கள் ‘பொய்யில்’ ஆரம்பித்து ‘உயர்ந்தே’ என்று முடிவதை எண்ணில் பொய்யான நம் இக வாழ்வை மெய்யான உயர் வாழ்வாக மாற் வல்லமையுள்ளதை குறிப்பால் உணர்த்தவே அப்படிப்பட்ட பதப்ரயோகங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. நம்மாழ்வாரே ‘பொய்யில் பாடல்’ என்று சாதித்திருக்கிறார். பொய்யில் தோன்றி பொய்யே இல்லாத பாடல் இவ்வாழ்வார் பாடல் என்பது விளங்குகிறது. வேறொரு சிறப்பும் உண்டு ஆழ்வாருடைய திவ்யபிரபந்தங்களுக்கு. அவருடைய நான்கு பிரபந்தங்களும் அந்தாதிகளாக அமைந்திருக்கின்றன. திருவாசிரியம் ஒன்றில் மட்டும் கடைசிப் பாசுரம் முதற் பாசுரத்தோடு தொடர்பின்றி நிற்கிறது. இதுவும் கூட ஆழ்வாருடைய பகவத் ப்ரீதியின் பெருக்கு காரணமாகவே அமைந்தது என்று பெரியவாச்சான்பிள்ளை பணித்தருளுகிறார்.

ஆழ்வாருடைய அவா (பகவத் ப்ரேமம்) எப்படித் தோன்றி மெள்ள மெள்ள வளர்ந்து முடிவில் பரப்ரம்மத்தையே கபளீகரம் செய்கிறது என்பதை முதற்பிரபந்தமாகிய திருவிருத்தம் தொடங்கி சரமப்ரபந்தமாகிய திருவாய்மொழி பத்தாம் பத்து பத்தாம் திருவாய்மொழியளவும் காணலாம்.

முதற்பிரபந்தமான திருவிருத்தத்தின் தொடக்கத்தில் “முழுநீர் முகில் வண்ணன் கண்ணன் விண்ணாட்டவர் மூதுவராம் தொழுநீரிணையடிக்கே அன்பு சூட்டிய சூழ்குழற்கே” என்று ஆரம்பித்தவர் முடிவுப் பிரபந்தமாகிய திருவாய்மொழி இறுதியில் “என்னவாவறச் சூழ்ந்தாயே” என்று முடிக்கிறார். இவ்வாறு அன்பில் தொடங்கி அவாவில் முடிக்கின்றன ஆழ்வாருடைய திவ்யப்பிரபந்தங்கள்.

இனி பிரேமையின் வகைகளைக் காண்போம். எம்பெருமான் திருவடிக்கு அன்பு சூட்டும் முதற்பிரபந்தமான திருவிருத்தத்தில் “கையபொன்னாழி வெண் சங்கொடும் காண்பான் அவாவுவன் நான்” என்றும், “இணங்குநின்னோரையல்லா நின் கண் வேட்கை எழுவிப்பனே” என்றும் தம்மிடத்தும் பிறரிடத்தும் ஆசையைத் தோற்றுவது முதல் தசை. இப்படிச் சிறியதாய் ஆரம்பித்த அவா வளர்ந்து அடுத்த பிரபந்தமாகிய திருவாசிரியத்தில் “உலகு படைத்துண்ட எந்தை அவா ஆருயிருருகியுக்க” என்றபடி விம்மி விட்டது. மேல் பிரபந்தமாகிய பெரியதிருவந்தாதி, திருமாலிடத்தில் மாலுற்ற மனத்தோடு ஆரம்பிக்கப்படுகிறது. “எங்கள் மால் கண்டாயிவை” என்பது 2வது பாடல். 8வது பாசுரத்தில் “அன்பே பெருகும் மிக” என்று ஆழ்வாரே பேசும்படி சிறுதுளிகளாய்ச் சேர்ந்து பெருவெள்ளமாய் ஆறாய் பெருகும் எம்பெருமானிடத்தன்பு. “மாவாய் பிளந்தார் பின்னே திரிந்துழலும் சிந்தனையுடன்”, “காண்பான் நம் கண்ணவா மற்றொன்று காணுறா” என்கிறபடி இந்த பகவத் ப்ரேமம் தெளிந்து வெள்ளமிடுகிறது. இந்த தசையில் முடிவுப் பிரபந்தமான திருவாய்மொழி ஆரம்பிக்கின்றபடியால் அதில் அவாவினுடைய மேல் பரிமாணங்கள் பேசப்படுகின்றன.

பெரிய திருவந்தாதி முதற் பாசுரத்தில், தம் திருவுள்ளத்தை நோக்கிப் பேசுகிறார். முற்பட்டுப் போன நெஞ்சைக் கூவி என்னையும் கூட்டிக்கொள் என்கிறார். “பெற்ற தாய் நீயே” பாசுரத்தில், ‘மாமாயவலை மாய முலை வாய் வைத்த’ என்று பூதனையின் விருத்தாந்தத்தைக் காட்டுகிறார். “நெறிகாட்டி நீக்குதியோ” என்ற பாசுரத்தில் ‘அடியேனிடத்தில் என் செய்யத் திருவுள்ளம்?’ என வினவுகிறார். இப்படிப் பெரிய திருவந்தாதி முழுவதிலும் 30க்கும் மேற்பட்ட பாடல்களில் நெஞ்சு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முடிவுப் பாசுரத்தில், பொழுதைப்போக்குவது பற்றிக் குறிப்பிடுகையில் “கார்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான் பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் சீர்கலந்த சொல் நினைந்து போக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை என்நினைந்து போக்குவர் இப்போது” என்றும் “எப்போதும் கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான் மொய் கழலே ஏத்த முயல்” என்றும் முடிக்கிறார்.

திருவெழுகூற்றிருக்கை

வில்லூர் நடாதூர் ஸ்ரீ உ.வே. கருணாகராசார்யஸ்வாமி
ஆஸ்தானவித்வான், ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

1. முகப்பு சுலோகம்

सहोदरप्रायसुहृद्वरस्य श्रीवेङ्कटाग्र्यस्य नतोत्सवेऽद्य।
कृष्णस्य नीलोदितचित्ररम्यरथप्रबन्धस्य रसं ददानि॥

(குறிப்பு நதோத்ஸவம் என்ற தொடரில் உள்ள நத என்னும் சொல் வடமொழி இலக்கணத்தில் உள்ள கடபய முறையில் அறுபது என்ற எண்ணினைக் குறிக்கும்)

2. திருவெழுகூற்றிருக்கையின் சிறப்பு:

நாலாயிரத்தில் உள்ள இருபத்து நான்கு ப்ரபந்தங்களுள் திருவெழுகூற்றிருக்கை தனித் தன்மை வாய்ந்தது. இது ரதபந்த வகையில் அமைந்த ப்ரபந்தம். திருமங்கை ஆழ்வாருக்கு நாலுகவிப் பெருமாள் என்ற விருதம் அமைந்திருந்தது. நாலுவகைக் கவிதைகளிலும் ஆழ்வார் வல்லவராகத் திகழ்ந்தவர் என்பதாலே வந்த விருதம் அது. உடனுக்குடன் விரைவாகக் கவிதைகளைப் படைக்க வல்ல கவிஞரை ஆசுகவி என்பர். விரிவாகக் கவிதைகளைப் படைக்க வல்லவரை விஸ்தார கவி என்பர். இனிமை நிறைந்த கவிதைகளைத் தருபவரை மதுரகவி என்பர். இரதபந்தம் போன்ற அமைப்பில் பாடலைப் பாடும் புலவர்களை சித்திர கவி என்பர். இப்படி நான்கு வகைக் கவிதையிலும் வல்லவர் ஆகி நாலுகவிப் பெருமாள் என்று போற்றும் படி எழுந்தருளி இருந்த ஆழ்வாருடைய சித்ரகவித்வத்துக்குச் சான்றாகத் திகழும் ப்ரபந்தம் இது.

3. ஆழ்வாரின எளிமை:

சித்ர கவிதைகள் என்ற வகையில் சொல்லணி என்று தமிழர் வழங்கும் சப்தாலங்காரத்தின் பல வகைகளான இயமகம் – மடக்கு என்ற முறையில் அமைந்த பாடல்களும் இடம் பெறும். உதாஹரணத்திற்கு திருமங்கையாழ்வாரின் ஸமகாலத்தவராக நம் குருபரம்பரைகள் கூறும் திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் அத்தகைய சித்திர கவிதைகள் சில பல உண்டு.

ஏகபாதம் என ஒரு வகை. அதில் ஒரே அடியே நாலுமுறை வெவ்வேறு பொருளில் வரும். அவருடையதான தேவாரம் முதல் திருமுறையில் 127–ஆம் பதிகம் முழுவதும் ஏகபாதப் பாடல்களால் ஆனதே. மூன்றாம் திருமுறையில் வரும் 375–ஆம் பதிகத்திலும் அவர் மாலைமாற்று என்னும் வகையில் ஒரு சித்திரக் கவியைப் பயன்படுத்துகின்றார்.

ஆனால் ஏகபாதம் மாலைமாற்று போன்ற சித்ரகவிதைகளைக் கலியன் கையாளவில்லை. அவைகளில் பகவதனுபவத்தை விடச் சொல்லாட்சியே மேல் எழும் என்பதைக் கருதியே ஆழ்வார் அத்தகைய சித்திர கவிதைகளை அருளவில்லை என்று தோன்றுகின்றது.

அது மட்டும் அல்ல. அத்தகைய சித்திர கவிதைகளின் பொருள் மிகவும் பாண்டித்யம் பெற்ற தமிழ் அறிஞர்களுக்கே புரியும். நம் போலியர்க்கு அது பெருஞ்சுமை ஆகும் என்று கருதி ஆழ்வார் அருள்மாரி என்ற தமது விருதுக்கு ஏற்ற வகையில் தமக்குத் திறமை இருந்தும் ஏகபாதம் மாலைமாற்று போன்ற சித்திரங்களைத் தவிர்த்து ரதபந்தம் என்கிற எளிய சித்திர கவிதையுடன் நிறுத்தி விட்டார் என்றும் தோன்றுகின்றது. ஓர் அருள்மாரியால் தான் தன்னை இப்படி கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். ஸ்ரீவைஷ்ணவப் பரம்பரையில் ஆழ்வார்களுக்குப் பிற்காலத்தே அவதரித்த திவ்யகவி பிள்ளைப் பெருமாள்

ஐயங்காரால் இப்படிக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. எனவே அவருடைய அற்புதமான ப்ரபந்தங்கள் பல இயமகம் என்ற சொல் அணியிலேயே அமைந்து விட்டன. அது அவருடைய காலத்தில் இலக்கிய வட்டாரங்களில் கட்டாயமாகிவிட்டது போலும்.

திருமங்கையாழ்வாரின் திவ்ய ஸூக்திகளில் ஈடுபாடு மிகுந்தவர் என்பதால் 'கலியனுரை குடி கொண்ட கருத்துடையோன்' எனப் போற்றப்பட்டு அவர் போலவே க்ருஹஸ்தராகவே எழுந்தருளி இருந்த ஸ்வாமி தேசிகன் கூட ஸம்ஸ்க்ருத ப்ரபந்தங்களில் பலவித சித்ரபந்தக் கவிதைகளை ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்திலும் ஸ்ரீயாதவாப்யுதயத்திலும் கையாள வேண்டி வந்திருக்கிறது. ஆனாலும் தமிழில் ஆழ்வாருடைய அடியை ஒற்றியே ஸ்வாமி தேசிகன் ஸ்ரீவைஷ்ணவதினசரி என்கிற ப்ரபந்தத்தினை குறிலெழுத்துக்களாலேயே அமைந்த பாடல்களாலேயே அருளினார். அதில் முதல் பாடல்.

வரிஇரு ளழிவழி மனவரு முணர்வொடு
கரிகிரி மருவிய கரியவ னடியிணை
பரிவொடு பரவுந லடியவர் பழவுரை
அரிகிரி அரிஅரி அரிஅரி அரியே.

இப்படிப்பட்ட சித்திரங்களையே கையாண்டாரே தவிர ஏகபாதம் மாலைமாற்று முதலிய சித்திரங்களைக் கையாளவில்லை.

ஒரு சைவத் தமிழ் அறிஞரே அடியேனிடம் "தேவாரத்தை விட திவ்ய ப்ரபந்தத்தில் எளிமை அதிகம்" என்று கூறினார். அவர் ஆழ்வாருடைய இந்த எளிமையையும் கருத்தில் கொண்டு தான் இப்படிக் கூறி இருக்க வேண்டும் என்று எண்ணிவிடுகின்றேன்.

காதல் சோகம் பக்தி போன்ற உணர்ச்சிகளே கவிதையின் உயிர் என்பதில் ஸம்சயமே இல்லை. இயமகம் போன்ற சொல்லணிகள் கவிதைக்கு இயமனாகவே வந்தன என்று நீலகண்ட தீக்ஷிதர் போன்ற கவிஞர்கள் மிகத் தெளிவாகவே தெரிவித்துள்ளனர்.

எனவே சித்திர பந்தங்களின் இலக்கணச் சட்டங்களில் நோக்கம் செலுத்துகையில் பகவானிடம் உள்ள பக்தி உணர்வு தடைபட வாய்ப்பு வருமே என்ற கேள்விக்குத் தடை விடை முறையில் ஸ்ரீ மதுபயவே காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி திருவெழுகூற்றிருக்கை திவ்யப்ரபந்த வடமொழி டீகையில் விளக்கம் அருளியுள்ளார்.

"நநு-ஏதாத்ருசம் நிர்பந்தமுரரீக்ருத்ய கவனம் ஆயாஸஸாத்யம்ஹி பவேத்? பக்தி பூமபரீவாஹ ரூபேஷு ப்ரபந்தேஷு லைஷா கடனா ஸமுசிதா பவேத் கிமு? இதி சங்கா மா பூத்; வஸ்துதோ பகவானேவ ஹி ப்ராதாந்யேந ப்ரபந்த-ப்ரணேதா "சோக: ச்லோகத்வமப்யாகத:" இத்யேஷா வால்மீகேர்மஹர்ஷே: பத்ததிரப்யத்ர ஸ்மர்த்தவ்யேதி ஸம்க்ஷேப:"

திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகையில் இதனையே தமிழில் விளக்கிடுகையில் வேறு ஒரு கோணத்திலே,

"எம்பெருமானுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி முதலியவற்றை விசதமாக அநுபவித்து, அவ்வநுபவம் உள்ளடங்காமல் வழிந்து புறப்பட்ட ஸ்ரீஸூக்திகளாகிய திவ்யப்ரபந்தத்தில், இவ்வகையான இலக்கணங்கள் வழுவாமே அமைந்தது எது போல என்னில்; துக்கம் உள்ளடங்க மாட்டாமல் வால்மீகி முனிவர் வாயினின்றும வெளி வந்த "மா நிஷாத ப்ரதிஷ்டாம்" என்கிற சுலோகம் அவருடைய நினைவாலன்றியே நான்முகக் கடவுளின் ப்ரஸாதத்தால் லக்ஷணக் குறைவின்றியே அவதரித்தாற்போல் எம்பெருமானது திருவருளால் இவ்வகையான விசித்ர ப்ரபந்தம் திருவவதரித்தது என்று ஸாமான்யமான பாஹமனது அநுக்ரஹமே அவ்வளவு செய்தது என்றால், ஸாக்ஷாத் எம்பெருமானுடைய திருவருள் எவ்வளவு செய்யும் என்பதில் வாய் திறக்க உண்டோ வழி? எனவே ஸ்வப்ரயத்நபூர்வகமான ப்ரபந்தமன்றென்றதாயிற்று.

என்று அருள்வதையும் காண்க. ஆழ்வாரின் பக்திப் பெருக்கு இலக்கணக் கரைகளை உடைக்காது பெருகும்படி எம்பெருமான் அருளியிருக்கிறான் என்பது ஸாரம்.

4. எழு கூற்றிருக்கை என்பதின் இலக்கணமும் அது ரதபந்தம் ஆவதும்

அணி இலக்கண நூல்களில் எழுகூற்றிருக்கைக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மாறன் அலங்காரம் என்னும் அணி இலக்கண நூலில் (இந்நூல் கல்விக் கடல் கோபாலையர் உரையுடன் அழகியதோர் பதிப்பாக ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனால் 2005ல் வெளியிடப்பட்டிருக்கின்றது.)

".....ஒன்று முதலா ஓர் ஏழ் ஈறாச் சென்ற எண் ஈரேழ் நிலம் தொறும் திரிதர எண்ணுவது ஒன்றாம் எழுகூற்றிருக்கை" என வரும் 297–வது ஸூத்திரத்தில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது காண்க.

இதன்படி 121, 12321, 1234321, 123454321, 12345654321, 1234567654321, 1234567654321 என்ற அமைப்பில் ஒன்று இரண்டு மூன்று என்றிவ்வாறு ஏழுவரையில் உள்ள எண்களைக் கூறும் சொற்களை (அவைகள் வேறு பொருளிலும் வரலாம். இரு என்பது அகன்ற என்ற பொருளில் வந்தாலும் இரண்டு என்கிற எண்ணைக் குறிப்பதற்கும் பயன் படும்) அமைத்து வருகையில் தேரின் கீழ்ப்பகுதி போன்ற தோற்றம் கிட்டும். அதன் மேல் கவிஞன் கூற விரும்பிடுவதை பாடி நிறுத்தலாம்.

அதன் மேல் 1234567654321, 1234567654321, 12345654321, 123454321, 1234321, 12321, 121 என்று கீழ்ப்பகுதியை திருப்பிப் போட்டு விட்டால் தேரின் மேல் பகுதி போன்ற தோற்றம் கிட்டும்.

இந்த அமைப்பில் எண்களைக் காட்டும் தேர்ப்படிவத்தினைக் கீழே பாருங்கள். இடையில் திருவெழுக்கூற்றிருக்கையில் உள்ள எண்களைக் குறிக்காத துதிப் பகுதி மட்டும் தரப்பட்டு உள்ளது.

121
12321
1234321
123454321
12345654321
1234567654321
குன்றா மதுமலர்ச் சோலை வண்கொடிப் படப்பை
வருபுனல், பொன்னி மாமணியலைக்கும்
செந்நெலொண் கழனித் திகழ்வளமுடுத்த
கற்போர் புரிசை கனகமாளிகை
நிமிர்கொடி விசும்பில் இளம்பிறை துவக்கும்
செல்வம் மல்கு தென் திருக்குடந்தை
அந்தணர் மந்திரமொழியுடன் வணங்க
ஆடரவமளியில்அறிதுயிலமர்ந்த பரம!
நின்னடியிணைபணிவன் வருமிடரகலமாற்றோவினையே
1234567654321
12345654321
123454321
1234321
12321
121

இங்குக் காட்டிய தேர் வடிவினை நோக்கிடுகையில் மூவிரு கூற்றிருக்கை, நாலிரு கூற்றிருக்கை எனச் சின்ன தேர்களையும், எட்டிரு கூற்றிருக்கை ஒன்பதிரு கூற்றிருக்கை என இப்படிப் பெரிய தேர்களையும் கூட அமைக்கலாம் எனத் தோன்றுகின்றது. ஆனாலும் ஒற்றைப் படை எண்ணைக் கொண்டு கூற்றிருக்கை அமைப்பது ஒரு பொருத்தம் எனலாம்.

என்றாலும் மூன்று ஐந்து ஒன்பது என்று இவ்வாறு கூற்றிருக்கைகளை ஏன் அமைப்பதில்லை? எழு கூற்றிருக்கை மட்டுமே என்பது எதனால்? என்ற கேள்வி எழும். இதற்கு விரிவான விளக்கம் அடியேனுடைய வேதம் போற்றும் திவ்யதேசங்கள்– முதல் பாகம் என்னும் நூலில் 78ஆம் பக்கம் தொடங்கி 105–ஆம் பக்கம் வரை உள்ள பகுதியிலே உள்ளது அங்கே காண்க.

"ஆண்டாள் உள்ளிட்ட எழுவரால் பாடப் பெற்றதால் எழுவர் கூற்றில் இருக்கை உடையவன் ஆராவமுதாழ்வான். இப்படித் திருவெழு கூற்றிருக்கை உடையவனுக்கே உரிய ப்ரபந்தம் என்பதால் ஆழ்வார் இப்ப்ரபந்தத்தைத் திருவெழுகூற்றிருக்கை ஆக்கினார் போலும்!" என்று ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத்தாண்டவன் ரஸோக்தியாக அருளுவது உண்டு.

5. சார்ங்கபாணிக்கு சார்ங்கத்தாழ்வான் ஸமர்ப்பணை:

இந்த ரத பந்த ப்ரபந்தத்தினை ஆழ்வார் திருக்குடந்தை ஆராவமுதாழ்வானுக்கு மட்டுமே என்று அருளியுள்ளார். ஆழ்வார் நாராயணா என்னும் நாமத்தினைக் கண்டு கொண்டவுடன், மங்களாசாஸனம் செய்த முதல் திவ்ய தேசம் திருக்குடந்தை தான். அதனைத் தொடர்ந்து ஆடல் மா என்னும் தமது குதிரையிலே பயணித்துத் தமது துணைவியார் ஸ்ரீகுமுதவல்லி நாச்சியாரும் உடன் எழுந்தருளத் தமது ஸ்வார்ச்சை ஆகிய சிந்தனைக்கினியானையும் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு 85 திவ்யதேசங்களை இந்த ஆழ்வார், மங்களாசாஸனம் செய்து அருளியுள்ளார்.

அப்படி வேறு பல திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்கையில் கூட, இடை இடையே இளைப்பாறுவது எல்லாம் அமுதனைப் பாடித்தான்.

வ்யாக்யான சக்ரவர்த்தியான ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளப்படி திருமங்கையாழ்வாரின் ஆறு ப்ரபந்தங்களில் சரம ப்ரபந்தம் திருநெடுந்தாண்டகம். அதிலே கடைசியாக ஆழ்வார் மங்களாசாஸனம் செய்த திவ்ய தேசமும் திருக்குடந்தை தான்.

(ஸ்வாமி தேசிகனின் ப்ரபந்தஸாரத்தில் திருமங்கையாழ்வார் பற்றிய அறிவு தரும் பெரிய திருமொழி என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் அருளிய ப்ரபந்தங்களின் பட்டியலில் பெரிய திருமடல் இறுதியில் இடம் பெறுவதால் ஸ்வாமி தேசிகன் பெரிய திருமடலை ஆழ்வாருடைய சரமப்ரபந்தமாகக் கொண்டார் என்று சில ஆசார்யர்கள் திருவுள்ளம்.)

ஸ்ரீமதபிநவதேசிக உத்தமூர் ஸ்வாமி இந்த ப்ரபந்தத்தின் சீர்மையில் ஈடுபட்டு "இதுவே கடைசி ப்ரபந்தம் என்று விவாதம் செய்யலாம் படி அமைந்திருப்பது இத்திவ்ய ப்ரபந்தம்" என்று அருளிப் போந்தார்.

இதனால் தானோ என்னவோ திருக்குடந்தையில் நியதமாக மார்கழித் திங்கள் அன்று தொடங்கியே நடைபெறும் பகல் பத்து உத்ஸவத்தின் சாற்றுமுறை நாள் ஆன நோற்றுச் சுவர்க்கத்தன்று திருமங்கையாழ்வார் திருவடித் தொழல் என்று வேறு திவ்யதேசங்களில் காணமுடியாத சிறப்புடைய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்று வருகின்றது.

இப்படி இருந்தும் இவ்வாழ்வார் பெரிய திருமொழியில் அமுதனுக்கென்று தனியாக ஒரு பதிகம் கூடப் பாடவில்லை. திருநறையூருக்குப் பத்து, திருக்கண்ணபுரத்துக்குப் பத்து, திருவரங்கத்துக்கு ஐந்து, திருவேங்கடத்திற்கு நான்கு, திருவாலி, திருவிண்ணகரங்களுக்கு மூன்று, திருக்கடன்மல்லை, தில்லைத் திருச்சித்ரகூடம், திருப்புல்லாணி, திருக்குறுங்குடி, திருமாலிருஞ்சோலை என்று இவைகளுக்கு இரண்டு என இவ்வாறு பதிகங்களை அள்ளி வழங்கிய ஆழ்வார் அமுதனுக்கென்று தனியாக ஒரு பதிகம் பாடினார் அல்லர். அக்குறை நீங்க இந்த ப்ரபந்தத்தை ஆழ்வார் அமுதன் ஒருவனுக்கே உரியதாக்கினார் போலும்.

இதனால் ஆராவமுதாழ்வான் ஒருவனே அருள் மாரியின் ஆறு ப்ரபந்தங்களிலும் பாடல் பெற்ற ஆறமுதாழ்வானாகவும் திகழ்கின்றான்.

ஆராவமுதாழ்வானுடைய வைதிக விமானம் எனப் பெயர் பெற்ற கருவரையே ஆனையும் குதிரையும் பூட்டிய திருத்தேராக அமைந்துள்ளது. அப்படி ரதத்திலேயே கிடந்த நம்பி ஆகி ரதரஸிகனாகத் திகழும் ஆராவமுதாழ்வானுடைய உத்ஸவமூர்த்தி சித்திரைப் பெருந்திருவிழாவில் வீதியில் உலா வரப் பெரிய

மரத்திருத்தேரை ஆழ்வார் தான் ஆதியில் தமது திருப்பணியாகச் செய்தருளினார் என்று ஒரு ஐதிஹ்யம் உண்டு. கல் தேர் மற்றும் மரத்தேரில் திகழும் அமுதனுக்குத் திருவெழுகூற்றிருககை மூலம் சொல் தேரும் ஸமர்ப்பித்து அவனை முத்தேர் வித்தகனாக்கி விட்டார் முத்தமிழ் வித்தகராகிய திருமங்கையாழ்வார்.

அமுதன் சார்ங்க பாணி என்ற திருநாமத்துடன் சார்ங்க வில்லும் கையுமாகவே உத்ஸவ மூர்த்தியாக ஸேவை ஸாதிப்பவன்.

வ்ருச்சிகே க்ருத்திகாஜாதம் சதுஷ்கவிசிகாமணிம்
ஷட்ப்ரபந்தக்ருதம் சார்ங்கமூர்த்திம் கலிஹமாச்ரயே

என்கின்ற முன்னோர் மூதுரைப்படித் திருமங்கை ஆழ்வார் சார்ங்க வில்லின் அம்சமாக அவதரித்தவர். எனவே இந்த பக்ஷபாதம் மிகுந்த ஈடுபாடு போலும்!

6. திருவெழு கூற்றிருக்கையின் பொருளழகு

இந்த திவ்யப்ரபந்தத்திற்கு வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை அருளியதாக இரண்டு வ்யாக்யானங்கள் ப்ரசாரத்தில் உள்ளன. இரண்டாவது வ்யாக்யானம் சிறிது விரிவாக அமைந்துள்ளது. முதல் வ்யாக்யானத்தை உபந்யஸித்த பிறகு வந்து சேர்ந்து உடன் இருந்து மனக்கெட்டு திருவெழுகூற்றிருக்கைப் பெரியவாச்சான் பிள்ளை உபந்யஸித்ததாக அதன் தலைப்பிலிருந்து உணர முடிகின்றது. இதிலிருந்து சில பல ஸமயங்களில் ஆசார்யர்கள் பூர்வாவலோகனம் செய்து தங்கள் உபந்யாஸத்திற்குப் பாங்காக எழுதி வைத்துக் கொண்ட விரிவான குறிப்புக்களே பிற்காலத்திலே அருளிச் செயல் வ்யாக்யான நூல்களாக வடிவம் பெற்றனவோ என்று கருத இடம் இருக்கிறது.

இரண்டாவது வ்யாக்யானத்தில் இடம் பெற்றுள்ள திவ்யஸூக்திகளை வித்வான்கள் ஆராய்ந்து அருள வேண்டிய இடங்கள் சில உள்ளன. மூலத்தில் புலன்களை வென்று நெறி நின்று அவனை வழிபட வல்லவரால் மட்டுமே உணரப்படும் தன்மையன் எம்பெருமான் என்பதை ஆழ்வார் "...........................ஐம்புலன் அகத்தினுள் செறுத்து நான்கு உடன் அடக்கி முக்குணத்து இரண்டு அவை அகற்றி ஒன்றினில் ஒன்றி நின்று ஆங்கு இருபிறப்பு அறுப்போர் அறியும் தன்மையை" என்ற பகுதியில் அருளுகிறார். முதல் வ்யாக்யானத்தில் நான்கு உடன் அடக்கி என்ற தொடரை இரு வகைகளில் விளக்கி அருளினார் பெரியவாச்சான் பிள்ளை.

1. நெஞ்சக்கு நான்கு நிலைகள் உண்டு. ஒரு பொருளைப் பற்றியே மீண்டும் மீண்டும் நினைப்பது என்பது மனனம் செய்வது. அப்படிச் செயல்படுகையில் நெஞ்சு மனம் எனும் நிலையில் இருக்கிறது. இது இன்ன பொருள் என்று உணரும் நிலையில் உள்ள நெஞ்சே சித்தம் எனப்படும் நிலையில் இருக்கிறது. நான் என்று மார்தட்டும் நிலையில் நெஞ்சு அஹங்காரம் எனப்படும். இந்த நாலு நிலைகளில் இருப்பதால் நாலு ஆகிய நெஞ்சை அடக்கி விடுவதையே நான்கு உடன் அடக்கி என ஆழ்வார் அருளிகின்றார். அல்லது

2. உயிரினங்கள் அனைத்துக்குமே இயற்கையானதான உணவு, உறக்கம், உடலுறவு, அச்சம் ஆகிய நான்கு உணர்வுகளையும் கட்டுப் படுத்துவதை நான்கு உடன் அடக்கி என ஆழ்வார் அருள்கின்றார்.

இரண்டாவது வ்யாக்யானத்தில் நிர்விசேஷாத்வைதிகள் வேதாந்த விசாரம் செய்வதற்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டிய நித்யாநித்யவஸ்து விவேகம், சமதமாதி ஸாதனஸம்பத், இஹாமுத்ர ச பலபோக விராகம், முமுக்ஷுத்வம் ஆகிய ஸாதன சதுஷ்டயம் எனக் கூறும் நான்கையும் உடைய தன்மை நான்கு உடன் அடக்கி என்பதற்கு முதல் பொருளாகக் காட்டப் பட்டு அன்றிக்கே எனத் தொடங்கி உணவு முதலிய நான்கு என்று இரண்டாம் பொருளும் காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீபாஷ்யத்தில் பூர்வபக்ஷிகள் சொன்ன நான்கை இங்கே நுழைப்பதனை ஒருவாறு சரி செய்து கொள்ளலாம் என்றாலும் அது இயல்பாகவே பொருந்துகின்றதா? தேவைதானா? என்ற கேள்விகள் எழுகின்றன. எனவே இரண்டாம் வ்யாக்யானத்திலே இப்பகுதியில் ஆராய்ச்சி தேவைப்படுகின்றது.

ஸ்ரீமதுபயவே காஞ்சீ மஹாமஹிமோபாத்யாய அண்ணங்கராசாரிய ஸ்வாமி திருவெழுகூற்றிருக்கையை ஸம்ஸ்க்ருதத்திலே தண்டகம் என்ற யாப்பிலே பாட்டாகவே மொழி பெயர்த்து

அருளி இருக்கிறார். ஸம்ஸ்க்ருதத்திலேயும் விரிவான வ்யாக்யானமும் அருளியுள்ளார். அங்கெல்லாம் இரண்டாவது வ்யாக்யானத்தில் காட்டப்பட்ட இப்பொருளை அவர் பயன்படுத்தினார் அல்லர். ஸ்ரீமதபிநவதேசிக உத்தமூர் ஸ்வாமியும் தமது வ்யாக்யானத்தில் இப்பொருளைக் காட்டவில்லை.

ஸ்ரீமதுபயவே புத்தூர் ஸ்வாமி இரண்டு வ்யாக்யானங்களையும் பதிப்பித்துத் தமது விவரணத்துடனே வெளியிட்டுள்ளார். அவர் தமது விரணத்தில் இந்த இரண்டாம் வ்யாக்யானப் பொருளை ஏற்று அதனை ஒருவாறு பொருத்திக் காட்டியுள்ளார்.

''செந்தமிழ் நாவர் சீர்மை'' என்ற அருளிச் செயல் அனுபவத் தொகுப்பில் திருவெழு கூற்றிருக்கைப் பற்றிய தமது எளிய இனிய கட்டுரையில் நாலாயிரமும் வல்ல அத்யாபகரத்னம் ஸ்ரீமதுபயவே ஒப்பிலியப்பன் ஸந்நிதி நவநீதம் வேதாந்தக தேசிகாசார்ய ஸ்வாமி இரண்டாவது வ்யாக்யானம் காட்டும் ''ஸாதனசதுஷ்டயம் உடையோர்'' என்ற பொருளைக் காட்டி எழுதி இருக்கிறார்.

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் என்பதற்கேற்ப ஸ்ரீபாஷ்யம் பகவத் விஷயம் இரண்டிலும் வல்லவரும் நாலாயிரம் அத்யாபகர்களில் முன் அணியில் கணிக்கப்படும் திறன் பெற்றவரும் ஆகிய ஸ்ரீமதுபயவே திருவள்ளூர் ஈச்சம்பாடி ரங்கனாநாதாசார்ய ஸ்வாமி தமது திருவெழுகூற்றிருக்கை விளக்கத்தில் இப்பொருளையும் காட்டியுள்ளார்.

திருவெழுகூற்றிருக்கையை பெரியவாச்சான் பிள்ளையின் இரு வ்யாக்யானங்களுடனும் பல குறிப்புக்களுடனும் திருவரங்கம் தேவஸ்தானபத்ரிகை ஆசிரியர் ஸ்தானீகம் பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி 1950–ல் பதிப்பித்து வெளியிட்டார். அதில் ''திருவெழுகூற்றிருக்கை சுருக்கம்'' என்ற தலைப்பில் ஒரு அணுகு முறையைக் காட்டிப் பரமனுக்குப் பதினெட்டுப் பெருமைகளைப் பரகாலன் இங்கு பகர்வதாக ஒரு பட்டியல் இட்டுள்ளார்.

அந்த அணுகு முறையில் இங்கு கூறப்பட்ட ஏற்றங்களைக் கீழ்க் கண்ட முறையிலே சுருக்கலாம்

1. எம்பெருமான் படைப்புக் கடவுளான பிரமனையும் படைத்துப் பிறகு அவன் மூலமாக உலகுகளை எல்லாம் படைப்பவன்.

2. தீயவர்கள் நிறைந்ததால் தீமை மலிந்த இலங்கை போன்ற இடங்களைக் களை எடுப்பது போலக் குலைப்பவன்.

3. மூவுலகையும் தன் காலடிக்குள் அளந்த நெடியவன்

4. தன் பால் அன்பு வைப்பது ஓர் யானை போல விலங்காக இருப்பினும் அதற்கு அருளப் பரபரப்புடன் செயல் படுபவன்.

5. அறிவில் சிறந்தவர்களும் (அந்தணர்களும்) கூட அடி பணிய நிற்பவன்

6. மீண்டும் பிறவி வேண்டாதவர்கள் வணங்கிட இருப்பவன்

7. வல்லமை மிகுந்தவனும் அறிவில் சிறந்தவனும் ஆகிய சிவபெருமானுக்கும் அறிவரிய தேவன்

8. உண்மை நிலை இது. ஆனாலும் தாமஸ ராஜஸ புராணங்களையே ப்ரமாணமாக நம்பிச் சிலர் அவன் சிவபெருமானுடைய அடியைத் தேடிப் பன்றி வடிவம் கொண்டு நிலம் எல்லாம் கீண்டு சென்று அடியைக் காண இயலாது தோல்வியுடன் மீண்டதாகப் புரிந்து கொள்கின்றார்கள். சம்பந்தர் தமது தேவாரத்தில் ஒவ்வோர் பதிகத்திலும் ஒன்பதாவது பாசுரத்தில் இந்தச் செய்தியை விடாமல் பாடும் மரபை ஏற்படுத்திக் கொண்டு பாடியுள்ளார். உண்மையில் அவன் பன்றி வடிவம் கொண்டது ப்ரளயத்தில் மூழ்கிப் போன தனது உடைமையான பூமியை மீட்டுக் காப்பதற்காகவே.

9. அறுசுவை உண்டியை அனுபவிக்கும் சுகம் கூடத் திகட்டலாம்; ஆனால் அவனை அனுபவித்து அவன் அடியார்க்கு ஆராது; எனவே அவனே அறுசுவையின் ''திரட்டுப்பால்'' ஆன ஆராமுதாழ்வான்.

10. பொதுவாக மற்றைய திருத்தலங்களில் சக்ரம் சங்கம் கதை வாள் என நாலு படைகளுடன் திகழ்பவனாகக் காட்சி அளித்தாலும் திருக்குடந்தையில் சார்ங்கவில் ஆகிற ஐந்தாவது படையையும் ஏந்திக் கொண்டவனாக அடியவரைக் காக்கத் தயார் நிலையிலேயே இருப்பவன்.

11. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாலு உறுதிப் பொருளையும் அளிக்க வல்லவன் என்பதனை உணர்த்தும் அழகிய நான்கு திருத்தோள்களை உடையவன். நீர் போல் தாழ்ந்தவரைநாடிப் பாய்ந்து வருபவன்.

12. நமக்காகப் பரிந்துரை செய்யத் திருமடந்தை மண்மடந்தை ஆகிய இருவரும் தனது அடிவருடத் திருக்குடந்தையில் பள்ளிக் கிடப்பவன்.

13. அந்தணர் முதலிய நான்கு வகுப்பினரும் ஏன் அனைவரும் அவனை எக்குலத்தவராயினும் அணுகலாம்படி அவனே அவ்வகுப்புக்களை ஏற்படுத்தி அவைகளின் நெறியைக் குலைக்காமல் பாதுகாப்பதால் அவைகளே அவனோ என்று எண்ணலாம் படிக் காட்சி அளிப்பவன்

14. ஐம் பெரும் பூதங்களும் அவன் அன்றித் தனித்திருக்காதவை. அவனாலேயே தாங்கப் படுகின்றன. இயங்குகின்றன. எனவே அவைகள் அவனுடைய உடல்களே அதனாலே அவனே அவைகள் எனும் படி இருப்பவன்.

15. அவதாரங்களில் பிராட்டியைப் பெற (நப்பின்னைக்காக காளைவடிவத்து அசுரர்களை அழிப்பது போன்ற) லீலைகள் செய்து, காப்பவன் தானே என்பதனை மெய்ப்பிப்பவன்.

16. சார்வாகம், ஸாங்க்யம், தர்க்கம், பௌத்தம், சமணம், சைவம் என்று பட்டியலிடப்படும் ஆறுவகை தர்சனங்களாலும் அவனை உணர இயலாது.

17. அடியவர் அஞ்சாது அணுக அருள் செய்யும் பிராட்டியைத் தன் திருமார்பிலே அகலாதபடி வைத்துக் கொண்டு இருக்கும் ச்ரிய:பதி.

18. அனைத்து உறுதிப் பொருள்களும் தெய்வங்களும் எல்லாமே தானே எனும்படி அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிலே இருத்தி விரிந்த ஒப்பற்றவன்.

இத்தகைய பெருமான் காவிரியால் வளம் மிகுந்த திருக்குடந்தையிலே வேதம் வல்லவர் வேதம் கேட்டு மலர்ந்து படம் விரித்து நடனம் ஆடும் ஆதிசேஷனிலே பள்ளிக் கொண்டவன் என்று இவைகளை எல்லாம் கூறி "அத்தகைய உன்னை அடிபணிந்தேன். அடியேன் இடர் அனைத்தையும் அகற்றி அருள்!" என ஆழ்வார் ஆராவமுதாழ்வானை வேண்டுகின்றார்.

இங்கே ஒன்று முதலாக ஏழு வரை வரும் எண்களைக் காட்டிட ஆழ்வார் இட்டருளிய பல வகைச் சொற்களுக்கான விளக்கங்களை அடியேன் விரிவுக்கு அஞ்சி எழுதிடவில்லை. பெரியோர்களின் வ்யாக்யானப் பதிப்புக்களில் அவைகளைக் கண்டு கொள்க.

7. கவிச் சக்ரவர்த்தி கண்ட இடம் கொள் நெஞ்சம்:

திருமால் திருமேனிகளுடன் திகழும் திவ்யதேசங்கள் அதாவது இடங்கள் பல பல. அவற்றுள் ஆழ்வார்களின் பாசுரங்களால் ஏற்றம் பெற்றவை 108. அவைகளில் 86 இடங்கள் திருமங்கை ஆழ்வாரால் பாடப் பெற்றவை. அப்படி 86 இடங்களுக்கு இடம் கொடுத்த அகன்ற விசாலமான பெரிய நெஞ்சு திருமங்கையாழ்வாருடையது. ஆதனால் அதுவே ஏனைய ஆழ்வார்களுடைய நெஞ்சங்களுடன் ஒப்பிடுகையில் இடங்கொள் நெஞ்சம் ஆகிறது.

அந்த இடங்கொள் நெஞ்சத்திலே கூட, அவர் இந்த ப்ரபந்தம் அருளிய போது வேறு எந்த இடமும் அதாவது திவ்யதேசமும் இடம் பெறாதபடி இணங்கிக் கிடப்பவை ஆராவமுதாழ்வானுடைய திருவடிகளே என்பதனை உலகம் உணரக் காட்டும் ப்ரபந்தம் திருவெழுகூற்றிருக்கை. ஏனென்றால் இந்த ப்ரபந்தத்திலே வேறு எந்த திவ்ய தேசமும் இடம் பெறவில்லை!

இதனால் ஆராவமுதாழ்வானுடைய திருப்பாதங்களே அருள்மாரியின் இடங்கொள் நெஞ்சத்து இணங்கிக் கிடப்பன என்பது தெளிவாயிற்று.

அந்த ஆராவமுதாழ்வானின் முகவரி தான் யாது? வடபுறம் காவிரி; தென்புறம் அதன் கிளையான அரசலாறு; என்று இரு புறமும் ஓடும் காவிரி நதியின் வெள்ளத்தால் நிறைக்கப் பெற்ற பொற்றாமரைத் திருக்குளம் முதலிய பல திருக்குளங்கள் உள்ள திருக்குடந்தையே அவன் இருப்பிடம். அத்திருக்குளங்களில்

தாமரைப் பூக்கள் மலர்கின்றன. அவைகளாலே அத்திருக்குடந்தை குளிர்ந்த பூக்கள் நிறைந்த நகர் ஆக அதாவது தண் மலர்நகராகவே திகழ்கின்றது.

வெளுத்த பற்களையும் கருத்த புள்ளிகளையும் சிவந்த கண்களையும் பெற்ற தன் படத்தினை விரித்து, எம்பெருமான் திருக்கண் வளர்கின்ற போது தீமை செய்ய வருபவர்கள் மீது தீயைக் கக்கிடும் பாம்பு ஆதிசேஷன்.

அவனைப் படுக்கை ஆக்கிக் கொண்டு அந்தக் குளிர்ந்த பூக்களின் நகரமான திருக்குடந்தையிலே பள்ளிக் கொண்டவன் ஆராவமுதலாழ்வான்

இப்படி அந்த ஆராவமுதாழ்வானின் திருப்பாதங்களே ஆழ்வாருடைய இடங்கொள் நெஞ்சிலே இணங்கிக்கிடப்பதைப் படம் பிடித்துப் பாடினானாம் திருவெழுகூற்றிருக்கையை அனுபவித்த கவிச்சக்ரவர்த்தி கம்பன். கட்டளை கலித்துறை யாப்பிலே அமைந்த அவனுடைய அந்தப் பாடலின் முழுவடிவம்

இடம் கொண்ட நெஞ்சத்து இணங்கிக் கிடப்பன என்றும் பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த தண் பூங்குடந்தை
விடம் கொண்ட வெண்பல் கருந்துத்திச் செங்கண் தழல் உமிழ் வாய்''
படம் கொண்ட பாம்பனைப் பள்ளி கொண்டான் திருப்பாதங்களே!''

என்பது. ரதபந்தப் பாசுரத்துடன் மகுடப் பாயிரம் என்று ஒரு பாட்டு இனைக்கப் படுவது ஒரு மரபு. ஆனால் திருஞான சம்பந்தர் தம்முடைய ரதபந்தத்தில் அந்த மரபினைப் பின் பற்றவில்லை. ஆழ்வாரும் அம் மரபினைப் பின் பற்றினார் அல்லர். ஆனால் தேவாரத்திலேயே பதினோறாவது திருமுறையில் நக்கிரதேவநாயனாரின் எழுகூற்றிருக்கை ஒன்று உள்ளது. அதில் மகுடப் பாயிரம் இருக்கிறது.

ஆழ்வாருடைய திருவெழுகூற்றிருக்கைக்கு மகுடப்பாயிரம் இல்லாத குறை நீங்க கம்பநாட்டாழ்வாரின் மேற்படிப் பாடலை எல்லா திவ்யதேசங்களிலும் அத்யாபகர்கள் இணைத்து அனுஸந்தித்து வருகின்றனர்.

இப்பாடல் கம்பநாட்டாழ்வாருடையது என்பதை ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி முழுவதுமாக ஏற்கவில்லை என்று தோன்றுகின்றது. தமிழ் திவ்யப்ரபந்ததிவ்யார்த்த தீபிகையில் "இது கம்பர் பாடியது என்பர்" என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும் ஸம்ஸ்க்ருத டீகையில் "ஆழ்வாருடைய திருவடிவாரத்தில் அளவு கடந்து பக்தி உடைய தொண்டர் ஒருவர் ஆழ்வாருடைய தன்மையைத் தம்மீது ஏறிட்டுக் கொண்டு பாடிய பாடல் இது" என்று அவர் குறிப்பு அருளியுள்ளார். அதற்கேற்பப் பாயிரத்துக்குச் சிறிது மாறுபட்ட முறையில் அவருடைய வ்யாக்யானம் அமைகிறது.

எது எப்படியோ ஒரே பாசுரத்தாலே அமைந்த திருவெழுகூற்றிருக்கை என்கின்ற இந்த சித்திர ப்ரபந்தத்துக்கு மட்டும் ப்ரபந்தம் தொடங்கும் முன் ஒரு தனியனும் ப்ரபந்தம் சாத்துமுறையில் ஒரு தனியனும் ஸேவிப்பது என்ற மரபு இருக்கிறது. இதுவும் ஒரு சித்திரமான–சிறப்பான–அமைப்பு!

8. நிறைவுப் பாயிரம்

எழுகூற் றிருக்கை எழு பொருள் எல்லாம்
தழுவி உரையார் தருவார்?_விழுமிய
நண்பர்நல் வேங்கடக் ருஷ்ணர் மணிவிழாவில்
பண்புரைத்தேன் பார்த்தொரு பால்.

சிறிய திருமடல்

திருநாராயணபுரம் அரையர் ஸ்ரீ உ.வே. ஸ்ரீராமசர்மா ஸ்வாமி

जयति श्रीफरिष्वङ्ग शार्ङ्गव्यापफतिः अच्युतः ।

दाफवाफां युगाफ्ताग्निः सज्जफाफां सुदर्शफः ॥

ஜயதி ஸ்ரீபரிஷ்வங்க சார்ங்கவ்யாநதி: அச்யுத: *

தாநவாநாம் யுகாந்தாக்நி: ஸஜ்ஜநாநாம் ஸுதர்சந: **

(சாலிவாஹன சக வருஷம் 528 (கி.பி.450) கன்னட மாநிலத்தில் கதம்ப ராஜா காகுஸ்த்தவர்மன் கல்வெட்டு).

பிராட்டியை அடைவதற்காக தானே சார்ங்க வில்போலே வணங்கி நின்றவன். இவன் அச்சுதன். யாரையும் நழுவ விடாதவன். தானவர்களுக்குப் பிரளயத்தில் ஏறிவரும் நெருப்பு போலே இருப்பவன். நல்லவர்க்கெல்லாம் "அழகியான்தானே அரியுருவம்தானே" என்கிறபடி தன் திருநேமி போலே காட்சியைத்தந்து தர்சனத்தை ரக்ஷிக்கிறவன் - இதுதான் மேற்கூறிய ச்லோகத்தின் பொருள்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

ஜீயர் திருவடிகளே சரணம்

இம்மூன்று சரண வாக்யங்களும் திவ்ய ப்ரபந்தங்களின் முதல் நம்பிள்ளை அநுஸந்தானம்.

அகரம் நீண்டு இருந்தால் ஸ்ரீய:பதியான எம்பெருமானுடைய த்ரிவிக்ரம அவதாரத்தைக் காட்டும். "எம்" என்கிற குறில் எழுத்து ஸ்ரீவராக அவதாரத்தைக்காட்டும். "அரிமுகன் அச்சுதன்" என்று ஆண்டாள் அருளிச்செயலில் "அரி" என்றால் "ஹரி" என்றும் "ஹரி" என்றால் ஸ்ரீஹயக்ரீவனும் அழகியசிங்கனுமான எம்பெருமான்.

இப்படி திவ்யதேசங்களின் நான்கு திசைகளிலும் திவ்ய விமான தேவர்களான இவர்களை உட்கொண்டபடி ஆழ்வாரும் எம்பெருமானாரும் ஜீயரும் நமக்கு ஞானஸாரத்தின் ரக்ஷகர்கள்.

உபய வேதாந்தமே ஆழ்வார் எம்பெருமானார் தர்சனம். வடமொழி வேதங்களை "உதிதம்" என்றும், தென்மொழி வேதங்களை "அநுதிதம்" என்றும் ஆரணம் கூறுகிறது. சதுமுகனாய்ப் பிறந்த பிரமனுக்கு ஸ்ரீஹயக்ரீவனாய்த் தோன்றி வேதங்களைக்கொண்டு வந்து அன்னமாய் உபதேசித்த அவதாரம், வடமொழி வேதங்களுக்கு ஒரு ஆசார்ய அவதாரம். இப்படி "யானாய்த்தன்னைத்தான் பாடினவன்", "ஞானப்பிரானை அல்லால் இல்லை" என்றும் "கோலவராகமொன்றாய்" என்றும் சொல்லப்படும் ஸ்ரீவராஹன், ஸ்ரீ காயத்ரியின் இருபத்துநாலு எழுத்துக்களை ஆகம முறையில் உட்புகுந்து "ஸூக்ஷமம்", "பரம்" என்கிற பொருள்களை வெளியிட்டுக்காட்டி அநுதிதமான 24 திவ்ய ப்ரபந்தங்களை ஆழ்வாரையிட்டு ஸ்ரீநாதமுனிகளுக்கு அளித்தவன் ஆழ்வார்திருநகரியில் ஆழ்வாரைக் கடாக்ஷித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவராஹநாயனார்.

ஸ்ரீயாஜ்ஞ்வல்க்யர் தம் குமாரரான காத்யாயநருக்கு த்ரவிட ப்ரஹ்மோபநிஷத்தை உபதேசித்த முறையிலே இந்த பொருள்கள் எல்லாம் உண்டு.

ப்ரஹ்ம காயத்ரியில் "ப்ரணவம்" முதலாய் "வரேண்யம்" என்று மூன்று எழுத்தாய் "பர்க்கஸ்" என்கிற வரையில் 10 எழுத்துக்களுக்கு முதலாயிரம் பத்து திவ்ய ப்ரபந்தங்கள். "தேவஸ்ய" என்கிற மூன்று எழுத்துக்களுக்குத் திருமொழி ஆயிரம் மூன்று ப்ரபந்தங்கள். "யாத்" என்கிற ஒரு எழுத்துக்கானது திருவாய்மொழி ஆயிரம்.

விச்வாமித்ர காயத்ரியில் "தத்" தொடங்கி "வரேணியம்" என்று நான்கு எழுத்துக்களாய் பத்து எழுத்துக்களுக்கு முதலாயிரம் என்று கண்டு கொள்வது.

த்ராவிட வேதத்துக்கு மந்த்ர ரத்னமான த்வயமே மூலம். இது ப்ரணவத்துடன் இருபத்தாறு எழுத்தாய், அத்தைக் கழித்து இருபத்து ஐந்து எழுத்தாய் நின்றது. வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் தத்வதீபத்தில் இத்தை விளக்கிக் காட்டினார்.

"ஸ்ரீ" என்றும், "மத்" என்றும், "நார" என்றும், "அய்" என்றும், "அந" என்றும், "சரு-சரு" என்றும், "அந" என்றும், "ஔ-ஔ" என்றும் பிரித்து பத்து அம்சங்களிலே முதலாயிரம் பத்து ப்ரபந்தங்கள் நின்றன.

"சர்-அந்-அம்" என்கிற மூன்று அம்சங்களிலே திருமொழி ஆயிரம் மூன்று ப்ரபந்தங்களும் நின்றன. "ப்ர" என்றும், "பத்ய" என்றும், "ஏ" என்றும் முதலாழ்வார் மூவரின் ப்ரபந்தங்கள் நின்றன. "ஸ்ரீ" என்றும், "மத்" என்றும், "ஏ" என்றும், "நார" என்றும், "அய்" என்றும், "அந" என்றும், "ஆய" என்றும் அம்சங்களில் இயற்பாவின் மற்ற ஏழு ப்ரபந்தங்களும் நின்றன.

நம: என்கிறதில் திருவாய்மொழி ஆயிரம் நின்றது.

उत्पत्त्यसम्भवाधिकरणम् (உத்பத்ய ஸம்பவாதிகரணம்) என்கிற ஸ்ரீபாஞ்ச ராத்ராதிகரணத்தில் வேத வியாசருடைய திருவுள்ளத்தை எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் காட்டி, விசிஷ்டாத்வைதத்துக்கும் ஸ்ரீ வைஷ்ணவத்துக்கும் பகவத் சாஸ்த்ரம் வேதத்துக்கு மேலே உயர்ந்த ப்ரமாணம் என்று நிச்சயித்தார்.

அத்வைத வித்யாசார்யராய் இருந்த அப்பய்ய தீக்ஷிதரும் தம்முடைய நயமயூக மாலிகையில் "ஸ்ரீபாஞ்சராத்ரம் ப்ரமாண மூர்த்தந்யம்" என்றே அறுதியிட்டார்.

ஆகமங்களில் ஒவ்வொரு எழுத்துக்கும் மூன்று மூன்று பொருள்களைக் காட்டினார்கள் திவ்ய ஸாக்ஷாத்காரம் அடைந்த ருஷிகள். ஸ்தூலம், ஸூக்ஷமம், பரம் என்று தான் மூன்றுவகையான பொருள்கள்.

இப்பொழுது திருமங்கையாழ்வாருடைய திருவெழுகூற்றிருக்கையும் திருமடல் ப்ரபந்தங்கள் இரண்டும் ஸ்ரீகாயத்ரியிலுள்ள ப்ர-சோ-த என்கிற மூன்று எழுத்துக்களின் பரார்த்தங்களைக் காட்டுகின்றன. இப்படியே த்வயத்தின் "அயநாய" என்கிற பதத்தின் பொருளைக் காட்டுகின்றன.

"அய்" என்று திருத்தேர் நடையும், "அந" என்று உபாயவஸ்து ஸ்வீகாரத்தையும், "ஆய" என்று ஸித்தமான ப்ராப்யவஸ்து ஸ்வீகாரத்தையும் காட்டுகின்றன இம்மூன்று பரபந்தங்களும்.

உலகத்தில் ப்ரம்மோற்சவங்களில் திருத்தேர் நடந்த பின்பு தேரடி உற்சவம் என்று சைவர்களும் வைஷ்ணவர்களும் நடத்துவர்கள். இதில் பெண்களுக்கெல்லாம் ஒரு ஸ்வாதந்த்ரியமும் அதுக்குச்சேர்ந்துபடி கணவனைத் திட்டித் தன் வசத்தில் கொள்வதும் அந்தரங்கமான முறை. இது ஒரு வைதிக முறை. இதுதான் திருமடல்.

வேதம் தமிழ் செய்த மாறன் நம்மாழ்வார் இரண்டு பாசுரங்களில் மடல் எடுத்தபடியை, ஆறங்கம் கூற அவதரித்த திருமங்கை மன்னன் இரண்டு மடல் ப்ரபந்தங்களில் விரித்துக் காட்டுகிறார்.

இருக் வேதத்தில் "பதிம், ந!, பத்நீ:, உசதீ:, உசந்தம், ஸ்பஸந்தி, த்வா, சவசாவன்!, மநீஷா:" என்று முதல் மண்டலத்தில் 62வது அத்யாயத்தில் 11ம் ஸூக்தம். "ஸநாயுவ:" என்று தொடங்கும் இம்மந்த்ரத்தில் உள்ள பொருள் எல்லாம் மடல் ப்ரபந்தங்களில் உள்ளது. தமிழ் இயலுக்கு இது ஒரு விசேஷணமான இலக்கணம். ஸம்ஸ்க்ருத கவிகளில் இவ்வகையான கவிகள் இப்பொழுது காண்கிறதில்லை.

ஓ எம்பெருமானே! நீ ஒருவன் தான் எல்லார்களாலும் துதிக்கப்படும் தன்மை உடையவன். "சஸ்த்ரம்" என்கிறபடி சொல்ல வேண்டிய மந்த்ரங்களாலே நிதிபோன்ற உன்னை அடைய வேண்டும் என்று விவேகத்தையுடைய மேதாவிகளும் கூட ஒரு தாழ்ந்த முறையிலே உன்னைக்கிட்டுவர்கள். கணவனை ஆசைப்பட்டு பெற வேண்டும் என்று இருக்கும் பெண்கள் அன்புமிக்கு பொங்கிவரும்போது அமங்களமான சில வார்த்தைகளையும் சொல்லி அவனை அநுபவிக்கும்படி இது. "உசதீ" அல்லது "ருசதீ" என்றால் நல்ல வார்த்தை அன்று. "ருசதீவாக் அகல்யாணி" என்று அமரகோசகாரனும் சொன்னான். இம்மந்த்ரத்தின் வைதிகமான ரகஸ்ய முறையை தமிழர்கள்தான் இன்று வரையிலும் காப்பாற்றி வந்துள்ளார்கள். இவ்வர்த்தத்தை திருமங்கையாழ்வார் இருமடல்களில் விரித்துக் காட்டினார்.

உபேயத்தைக் கொள்ளுகிறது பெரியதிருமடலுக்கு விஷயம். உபாயத்தைக் கொள்ளுகிறது சிறியதிருமடலுக்கு விஷயம். காயத்ரியிலுள்ள "சோ-த" என்கிற பதப் பொருள் மடலில்

விவரிக்கப்படுகிறது. "சுத-ப்ரேரணே" என்று தாது. தூண்டுகிறது என்று பொருள். எம்பெருமானை ஆழ்வார் விசேஷமான முறையிலே தூண்டுகிறார். இப்படியே த்வயத்தில் உத்தர வாக்யத்திலுள்ள "அத-ஆய" என்கிறவைகளின் பொருளை ஆழ்வார் இரண்டு மடல்களிலும் காட்டுகிறார். இதற்கு முன்பு திருவெழுகூற்றிருக்கை ப்ரபந்தத்தில் "அய" என்கிறதின் பொருளைக் காட்டினார். அதாவது "அய-கதௌ" என்கிற தாதுவாலே வந்த 'நடை' என்கிற பொருள். திருத்தேர் நடை இப்பிரபந்தத்தில் உள்ளது. நாலுகவிப்பெருமாளான திருமங்கை மன்னன் இதில் தம்முடைய சித்ரகவியைத் தேர் நடையாகக் காட்டின பின்பு. 'காரார் வரைக்கொங்கை' என்று தொடங்கி "ஊரார் இகழிலும் ஊராதொழியேன் நான்" என்று ப்ரதிஜ்ஞை பண்ணி "வாரார் பூம்பெண்ணை மடல்" என்று முடிக்கிறார்.

இம்மடலில் ஒரு இதிகாசமான வார்த்தையை அருளிச்செய்கிறார் ஆழ்வார். அதாவது "வாரார் வனமுலை வாசவதத்தையென்று" என்று.

உதயனன் என்கிற வத்ஸ ராஜாவின் ராணியானவள் வாசவதத்தை. பெருங்கதையிலும் உதயன சரிதையிலும் ஸம்ஸ்க்ருத நாடகங்களிலும் இவர்களுடைய சரித்ரங்கள் உண்டு. வாசவதத்தையின் தகப்பனார் மஹாசேனன் உஜ்ஜயினுக்கு ராஜா. உதயனனை ஏமாற்றிப் பிடித்துக்கொண்டு வந்து வாசவதத்தைக்கு வீணை கற்றுக்கொடுக்க நிர்பந்தித்தான். வாசவதத்தையை வீணை வழியாக தன் வசத்தில் கொண்டு அவளே சொன்னபடி அவளைப் பறித்துக்கொண்டு வந்தான் உதயனன். அவளை விட்டு அவன் இல்லை. அவனை விட்டு அவள் இல்லை. இப்படி கலந்து பரிமாறினார்கள் அவர்கள். "வாசவதத்தைக்கு நடத்தினபடி நீ என்னை நடத்திக் கொள்ளவில்லை. ஆகவே அடியேன் மடலூருகிறேன்" என்று ஆழ்வார் தம் நிலையைக் காட்டினார்.

உபேயமான நீயே உபாயமாக நிற்க வேணும் என்று எம்பெருமானை. மடலிட்டு தூற்றுகிறதுதான் சிறியதிருமடலின் கருத்து.

வேதத்துக்கு உபப்ரும்ஹணமான ஸ்ரீராமாயணத்தில் சுக்ரீவன் வானரர்களுக்கு தென் நாட்டு நிலங்களையெல்லாம் சொல்லும்போது தாம்ரபரணியை "ஒரு ரகஸ்யத்தை உள்ளே வைத்து இருப்பவள்" என்று .சொல்லி தீவிலுள்ள பவிஷ்யதவதாரமான நம்மாழ்வாரை குறிக்கிறான் என்கிறார்கள் ஆசார்யர்கள். இப்படியே பலி சக்ரவர்த்தியின் ஐந்து பிள்ளைகளில் ஒருவனான பாண்டியனுக்கு சேர்ந்த தேசத்தில் காமம் கொண்ட பெண்கள் காமிக்கப்படும் ஆண்களை மேல் விழுந்து அநுபவிக்கும்படி முத்துக்கதவு திறந்து நின்ற தாம்ரபரணியானவள் கடலாகிற ஆண் மேல் விழுந்து அநுபவிக்கிறாள் என்று சுக்ரீவன் சொன்ன வார்த்தையின் (கி.கா.41.17-19) உட்பொருளானது இம்மடல்.

அன்போடு அம்பை எய்தினாலும் இன்பம் வளரும்படி இது. அர்ஜுனன் தன் தாத்தாவான பீஷ்மாசார்யரின் திருவடிகளிலே இரண்டு அம்புகளை எய்தான். அவர் இவனை 'வெற்றி பெறுவாயாக' என்று ஆசீர்வதித்தார். இந்த பீஷ்மாசார்யர் தாம் அர்ஜுனனுக்கு சாரதியாயிருந்த கண்ணனுக்கே அம்புகளைப்போட்டு வைத்தார். கண்ணன் சிரித்துக்கொண்டே தன் சக்கரத்தை ஏந்தி எதிரே அழகைக்காட்ட வந்தான். பீஷ்மாசார்யர் மடல்போலே அம்பை எய்ததும் கண்ணன் அத்தைச் சிரித்துக்கொண்டே ஏந்திக்கொண்டதும் இன்றும்கூட திருவல்லிக்கேணி பார்த்தசாரதியின் திவ்யமங்கள விக்ரஹத்தில் சேவிக்கலாமே.

இப்படித் திருமங்கையாழ்வார் பர-காலராகையாலே மடலாகிற சஸ்த்ரம் என்கிற வைதிக முறையில் பேசினாலும் எம்பெருமான் அத்தை ஏந்திக்கொண்டான். "கணயம்" - "க்ஷுரப்ரம்" என்கிற சிறுசிறு அம்புகள்போலே கண்ணியாய் தனி முறையில் அநுஸந்திக்கிற இம்மடல்களில் சிறியதிருமடல் எழுபத்து ஏழரை கண்ணியாய், பெரியதிருமடல் நூற்று நாற்பத்து எட்டரை கண்ணியாய். ஒவ்வொரு கண்ணியும் ஒவ்வொரு கணயம் என்கிற அம்பு போலே தோன்றுகின்றன.

சார்ங்க வில் சேவகனுக்கு ஒரு சார்ங்கவதாரமான ஆழ்வார் தூற்றுகளைச்சொல்லிக் கொண்டு வணங்கியிருந்தே அவனை வணங்க வைத்ததாக நினைக்கலாம்.

திருவேங்கடக்கண்ணன் தான் அறுபதில் தூண்டிவிட
திருநாராயணபுரம் அரையர் எழுதினது.

பெரிய திருமடல்

முனைவர் காட்டுமன்னார்கோயில் ஸ்ரீ உ.வே. வேங்கடாசார்யர் ஸ்வாமி

திருமகள் கேள்வனைப் பரம் பொருளாகப் போற்றும் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தில், நம்மாழ்வார் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார்; அவருடைய நான்கு பிரபந்தங்களும் (திருவிருத்தம், திருவாசிரியம் பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி) நான்கு வேதங்களாகப் போற்றப் பெறுகின்றன. நான்கு வேதங்களுக்கும் ஆறங்கங்கள் (சீக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருத்தம், கல்பம், ஜ்யோதிஷம்) அமைந்துள்ளன. நம்மாழ்வார் அருளிய பிரபந்தங்களுக்கு ஆறங்கங்களாகத் திருமங்கையாழ்வார் ஆறு பிரபந்தங்களை (பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம்) அருளியுள்ளார்.

மன்னுபுகழ்சேர் மணவாள மாமுனிகள், "மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர் கோன் ஆறங்கம் கூற அவதரித்த ...." என்று திருமங்கையாழ்வார் அவதாரத்தினைத் தம் உபதேசரத்தினமாலையில் ஒன்பதாம் பாடலில் அருளிச் செய்துள்ளார்.

நம்மாழ்வார், தம் திருவாய்மொழியில், (5–3) எம்பெருமானது பிரிவாற்றாமையால் தலைமகளாகிப் பழிக்கு அஞ்சாமல் மடலூரத் துணிந்து பாசுரங்கள் அருளிச் செய்துள்ளார். அவை வருமாறு:–

நாணும் நிறையும் கவர்ந்து என்னை நல்நெஞ்சம் கூவிக் கொண்டு
சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான் தன்னை
ஆணையென்? தோழீ! உலகு தோறலர் தூற்றி ஆம்
கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே. (5_3_9)

யாம் மடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடை
தூமடல் தண்ணந்துழாய் மலர் கொண்டு சூடுவோம்
யாம் மடமின்றித் தெருவுதோறு அயல்தையலார்
நாமடங்காப் பழ தூற்றி நாடு மிரைக்கவே. (5_3_10)

நம்மாழ்வாரைப் பின்பற்றித் திருமங்கையாழ்வார் 'சிறிய திருமடல்', 'பெரிய திருமடல்' என இரு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். பெரிய திருமடல் இயற்பாவின் இறுதிப் பிரபந்தமாகும் (ஸ்ரீமந் நாதமுனிகள் தொகுப்பின்படி). பெரிய திருமடல் குறித்த செய்திகள் இனி விண்ணப்பிக்கப் பெற உள்ளன.

நூலின் யாப்பு

பெரிய திருமடல் 'கலிவெண்பா'வாக அமைந்துள்ளது; இதனை ஒரு பாட்டாகவே இலக்கண நூலார் கொள்வர். தொல் காப்பியம் செய்யுளில்

"ஒரு பொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி வருவது கலிவெண்பாட்டே"

என்னும் நூற்பா கவி வெண்பாவின் இலக்கணத்தைத் தெரிவிப்பதாகும். பெரிய திருமடல் 297 அடிகள் கொண்டு விளங்குகிறது. 'எம்பெருமான் மேல் மடலூருவேன்' என்னும் செய்தி பேசப் பெறுகிறது; வெண்பாவுக்குரிய சீர்களையும் தளைகளையும் மட்டும் கொண்டு விளங்குகிறது. இறுதிச் சீர் மட்டும் மூன்று சீர்கள் கொண்டு, "மன்னிய பூம்/பெண்ணை/மடல் என்று முடிகிறது; பிற அடிகள் அனைத்தும் நான்கு சீர்கள் கொண்டு விளங்குகின்றன. 297 அடிகளிலும் எதுகை பிழையாமல் உள்ளது.

மடலூர்தல்

மடலூர்தல் என்னும் நிகழ்வு பெருந்திணைக்கு உரியது; தொல்காப்பியம் அகத்திணை இயலில்,

ஏறிய மடல்திறம் .... பெருந்திணைக்குறிப்பே

என்னும் நூற்பாவில் இச்செய்தி உள்ளது. (நூற்பா எண் 51) அவ்வியலில் (அகத்திணை இயலில்)

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான" (அகத்திணையியல் நூற்பா எண்.35)

என்று கூறப்பெற்றுள்ளது. தமிழர் மரபுப்படி பெண்கள் மடலேறார்; திருக்குறளிலும்,

"கடலன்ன காமத்தராயினும் மாத்ர
மடலூரார் மற்றையார் மேல்"

என்னும் நூற்பா கருதத்தக்கது. ஆழ்வார் இக்கருத்தை ஏற்கவில்லை. ஆழ்வார், பெண்களும் மடலூர்தல் தகும் என்னும் வடமொழி நூற் கருத்தை ஏற்று இந்நூலை அருளிச் செய்துள்ளதாக இத்திருமடலில் தாமே அருளியுள்ளார் பெரியவாச்சான் பிள்ளை தம் வியாக்கியானத்தில்.

"மடலூருகைதான் உண்ணாதே குளியாதே உகந்த விஷயத்தை (தலைவன்/தலைவி) ஒரு படத்திலே லிகித்து (எழுதி) அத்தைக் கொண்டு திரிகையும், அறவிளைந்தால் அதின் காற்கடையிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக் கிடக்கையும் அங்ஙனே முடிகையும்' என்றருளிச் செய்துள்ளார். புறப்பொருள் வெண்பாமாலையில்

'ஒன்றன்றியே பலவற்றையும் சொல்லி
மன்றின் நடுவே மடன்மாவைச் செலுத்துதல்"

என்று மடலூர்தல் பற்றிய செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

மடலூர்தல் குறித்த பெரியோர் கருத்து

அன்பின் மிகுதியாலே, தன் ஸ்வரூபத்தையும் பரஸ்வரூபத்தையும் அறியாமல், கண் சுழன்று கிறுகிறுக்க வைத்த பிரபந்தமாக இஃது உள்ளது.

"நெல்லை அடைய முடியாத ஒருவன் நெற்கதிர்ப் போரை வழியல்லா வழியில் கொளுத்தி அதில் வெந்த நெற்பொறிகளைக் கொறிப்பதற்கு ஒப்பாகும்" என்று பெரியவாச்சான் பிள்ளை தம் அவதாரிகையில் அருளியுள்ளார்.

எம்பெருமான் தனக்குத் திருவுள்ளமான பொழுது அருள்வான்; பதற வொண்ணாது என்று இருந்து அவன்பால் பேரன்புடன் குணாநுபவம் பண்ணுவதே சொரூபம். அவ்வாறிராமல் பதறுதல், பலவந்தப்படுத்துதல் அவனை அடைய நோன்பு நோற்கை (ஆண்டாள்), மடலூருகை (நம்மாழ்வார், திருமங்கையாழ்வார்) முதலியவை சொரூபவிருத்தம்; ஆயினும் அத்தகைய செயல்களைப் பெரியோர் தவறாகக் கொள்ளவில்லை. அவனை அடையவேணும் என்னும் விரைவின் மிகுதியால் தன் நிலை மறந்து ஈடுபடும் செயல்களைக் காணும் பெருமாள், 'இந்த ஜீவன் நம்மை அடைய இவ்வளவு விரைந்து மிகுந்த துன்பம் மேற்கொள்கிறதே என்று மனம் மகிழ்ந்து அருளுவதற்குக் காரணமாக அமையும் என்பதால் "மடலூர்தல்" குற்றமன்று என்பது பெரியோர் கொள்கையாகும். மடலூர்வேன் என்றார்களேயொழிய மடலூரவில்லை என்பதும் நூலில் இடம் பெறும் செய்திகள்.

நூலின் தொடக்கம்

பெரிய திருமடல் 'மன்னிய" என்று தொடங்குகிறது. இது "வாழ்ந்திடுக" என்று பொருள் தரும் சொல்லாக உள்ளது. (மன்னு+இய=மன்னிய; இய வியங்கோன் வினை முற்று விகுதி) வடமொழியில் "பத்ரம்" என்னும் சொல்லுக்கு இணையனது.

ஸ்ரீமந் நாதமுனிகள் தொகுத்த முதலாயிரத்தில் முதற்பிரபந்தம், "பல்லாண்டு" என்று மங்களாசாஸனத்தைச் செய்வதாக உள்ளது. இயற்பாவின் இறுதிப் பிரபந்தம் "வாழ்ந்திடுக" என்னும் பொருள் தரும் சொல்லான "மன்னிய" என்று தொடங்குகிறது என்பது நயமான செய்தியாகும். இரண்டையும் சேர்க்கப் 'பல்லாண்டு வாழ்க' என்று எம்பெருமானுக்கு மங்களாசாஸனமாக அமையும்.

நான்முகன் தோற்றம் வேதங்கள் தோற்றம்

பல புள்ளிகளையும் ஆயிரம் வாய்களையும் ஒளியையும் உடைய ஆதிசேஷனுடைய மடியில் ஆகாயமான மேற் கட்டின் கீழே, திருவாழியையும் திருச்சங்கினையும் திரு விளக்குகளாகப் பெற்றும், கடலரசன் அலைகளாகிற சாரங்கள் வீசவும் எம்பெருமான் திருப்பள்ளி கொண்டுள்ளான்; எம்பெருமான் தேவிகள் திருவடி வருட அழகிய கருமலை சாய்ந்தாற்போல விளங்குகிறான். ஜகத் ரக்ஷண சிந்தையுடன் யோக நித்திரை கொண்ட பின்பு, திருமாலின் நாபிக்கமலத்தில் அவன் படைக்கப் பிரம்மன் தோன்றினான். அந்தப் பிரம்மன் நான்கு வேதங்களை வெளிப்படுத்தினான். அந்த வேதங்கள் நான்கு புருஷார்த்தங்களைக் கூறுகின்றன; அவை 'தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம்' எனவும் அறம் பொருள் இன்பம் வீடு எனவும் அழைக்கப்பெறுவனவாகும்.

புருஷார்த்தங்களுள் பகவத் காமத்தின் சிறப்பு

வீடு பேறு என்பது இவ்வுடலிருந்து ஆன்மா நீங்கிய பின் அடையக் கூடியது; மிகவும் எளிதில் பெறத்தக்க தன்று; உடலை வருத்தித் தவம் செய்து பெறத் தக்கது. அவ்வாறு தவம் செய்து திரும்பி வருதலில்லாத மோக்ஷம் பெறுபவர் என்று சொல்லப்படுகிறதேயன்றி இன்னார் இன்று பெற்றார் என்று உறுதியாக சொல்ல இயலாது; அவ்வாறு சென்றவர்களைக் காண இயலாது; ஆகவே மோக்ஷம் பற்றிப் பேசுவோர் விவேகிகளல்லர் என ஆழ்வார் அருளியுள்ளார். (ஆழ்வார் பகவத் காமத்தின் சிறப்பை உயர்த்திக் காட்டவே இங்ஙனே கூறுகிறார்; இது 'நஹிநிந்தா நியாயம்' எனப்பெறும்).

அறத்தின் வழி நின்றோர் இந்திரலோகம் சென்று தேவப் பெண்களுடன் தேவலோகத்தில் இனிது வாழ்ந்து இன்பம் துய்ப்பர் (காமத்தினைப் பயனாக அடைவர்).

பொருள் பெற்றோர் அறம் செய்து கர்மமாகிய பேற்றினைப் பெறுவர். ஆக, தர்மம் அர்த்தம் ஆகிய இரண்டு புருஷார்த்தங்களுக்கும் கர்மமே' பயனாகத் தேறுகிறது; அக்காம புருஷார்த்தமே மிகவும் சிறந்ததாகும் அது பகவத் காமமாக இருக்க வேண்டும்.

பகவத் காமத்தை விரும்பாதவர் இழிநிலை

பெண்ணாய்ப் பிறந்தும் பகவத் காமம் கொண்டு மடலேறாதவர் ரசிகத் தன்மையற்றவர் என்று கூறுகிறார் அவர்கள் தன்மை வருமாறு:–

1. சந்தனத்தின் தன்மை அறியாதவர். 2. வேய்ங்குழலோசைக்கு வசப்படாதவர். 3. காளையின் கழுத்து மணி ஒலிக்குச் சுருண்டு போகாதவர். 4. அன்றிற் பறவை ஒலி கேட்டு உருகாதவர். 5. நாயகனின்றித் தனியே நிலவொளியில் படுக்க வல்லவர். 6. காமனின் அம்புகளுக்கு இலக்காகி மடலேறாதவர்.

நாயகனைப் பிரிந்து தரித்திராத உயர்குலப் பெண்டிர்:

கீழ்க்காணும் உயர்குலப் பெண்டிர் நாயகனைப் பிரிந்து தரித்திருக்க இயலாமல் நாயகனைப் பின் தொடர்ந்தவர் ஆவர்:–

1. தயரதன் மருமகள் இராமனின் மனைவி சீதைப்பிராட்டி இராமனுடன் காட்டிற்குச் சென்றாள்.
2. வேகவதி தன் உடன்பிறந்தான் தடுத்தும் போர்க்களம் சென்று போரிடும் நாயகனை அடைந்தாள்.
3. உலூபிகை என்னும் நாக கன்னிகை அர்ச்சுனன் பின் சென்று அவனை அடைந்தாள்.
4. பரணாஸுரன் மகள் உஷை என்பாள் கண்ணபிரான்-பேரனான அநிருத்தனுடன் சேர்ந்தாள்.
5. பார்வதி தவம் செய்து பரம சிவனை அடைந்தாள்.

பரகால நாயகியின் காதல் நோய்

பரகால நாயகி, திருநறையூர் எம்பெருமானை ஸேவித்தாள்; அவன் திருமார்பு, திருவதரம், திருவடி, திருக்கைகள், திருக்கண்கள் முதலியனவற்றால் ஈர்க்கப் பெற்றாள்; அவை நிலமலைமேல் தாமரைக் காடுகள் போல் பொலிந்தன.

"கருமாணிக்க மலைமேல் மணித்தடம் தாமரைக் காடுகள் போல் திருமார்வு வாய்கண்கை உந்தி காலுடையாடைகள் செய்யபிரான்" (திருவாய்மொழி 8–9–1) என்னும் நம்மாழ்வார் கருத்தைத் திருமங்கை ஆழ்வார் பின்பற்றியருளியுள்ளார் எனலாம். எம்பெருமானின் திருவரைநாண், திருத்தோள் வளைகள், திருமகர குண்டலங்கள், திரு ஆரம், திருஅபிஷேகம் (கிரீடம்) ஆகியவை ஒளிர்ந்தன.

எம்பிரான் அருகில் மிகவும் அழகிய தோற்றத்துடன் பெரிய பிராட்டியார் ஸேவை ஸாதித்தார். 'அன்ன திருவுருவம் நின்றதறியாதே' என்று பிராட்டியை ஸேவித்து வியந்தார். ஆழ்வார் மங்களாசாஸன பலனாகவே அத்திருத்தலம் "நாச்சியார் கோயில்" என்ற திருநாமத்தையும் பெற்று விளங்குகிறது.

இவ்வாறு மங்களாசாஸனம் பண்ணிய ஆழ்வாரின் நாயகி நிலையில், அவர் நெஞ்சும் கைவளையும், மேகலையும் அவரை விட்டு நீங்கின. கடல் ஒலி, மதியின் அழகு முதலியன அவருக்குத் தீங்கு செய்தன. பெரிய காட்டில் புது மலர் யார்க்கும் பயனின்றி வீணாவது போல அறிவற்ற பெண் தன்மை முதலியன திருக்கண்ணபுரத் தெம்பெருமானுடன் சேராவிடில் பயனற்றுப் போகும் என்று புலம்பினார். என்னை இத்துன்பத்தினின்று காப்பாரில்லையே என்று துயர் உற்றார்.

பரகால நாயகியின் துன்பத்துக்குக் காரணமானவன்

பரகால நாயகியின் துன்பத்துக்குக் காரணமானவனைத் தலைவியே (பரகால நாயகி) அறிவாள். அவன் தன்மைகள்/பெருமைகள் வருமாறு:–

1. நறுந்துழாய் வாழ்மார்பன் 2. மாமதிகோள் விடுத்தவன் 3. முகில்வண்ணன்; காயாம் பூ நிறத்தன் 4. கடலில் அணை இலங்கை சென்று இராவணனைப் போரில் வென்றவன். 5. நரசிங்காவதாரம் செய்து இரணியனை மார்பில் கிடத்திக் கொன்றவன் 6. வராக அவதாரம் எடுத்து உலகை இடந்தவன். 7. அமுதம் கடைந்தவன். 8. தேவர்க்கும் அமுதம் தந்தவன். 9. வாமனனாய்த் தோன்றி உலகளந்தவன்.

திவ்ய தேசங்கள் (மங்களாசாஸநம்)

"இத்தகைய எம்பெருமானை அவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களில் சென்று ஸேவித்து என் நிலையை விண்ணப்பம் செய்வேன். அது கேட்டு அவன் என்னை அணைத்து கொள்ளா விட்டால் மாதர்கள் கூடும் இடங்களிலும் வைதிகர்கள் கூடும் இடங்களிலும் பக்தர்கள் கூடும் இடங்களிலும் அரசர்கள் கூடும் இடங்களிலும் அவனது இழிவான தன்மையைப் பலரறியச் செய்வேன்" என்று சூளுரைக்கிறார். பரகாலநாயகி கூறும் திவ்யதேசங்கள்.

1. திருவிண்ணகர், 2. திருக்குடந்தை, 3. திருக்குறுங்குடி, 4. திருச்சேறை, 5. திருவாலி, 6.திருஎவ்வுள், 7. திருக்கண்ணபுரம், 8. திருவெள்ளறை, 9. திருப்புட்குழி, 10. திருஅரங்கம், 11. திருவல்லவாழ், 12. திருப்பேர், 13. திருஇடவெந்தை 14. திருக்கடல்மல்லை 15. திருத்தண்கால் 16. திருக்கோவலூர் 17. திருத்தேரழுந்தூர் 18. திருச்சித்திரகூடம் 19. திருவேங்கடம் 20. திருமாலிருஞ்சோலை 21. திருக்கோட்டியூர் 22. திருமெய்யம். 23. திருஇந்தளூர் 24. திருவேளுக்கை 25. திருப்பாடகம் 26. திருவெஃகா 27. திருஊரகம் 28. திருஅட்டபுயகரம் 29. திரு மூழிக்களம் 30. திரு ஆதனூர் 31. திருநீர்மலை 32. திருப்புல்லாணி 33. திருநாங்கூர் (மணிமாடக்கோயில்) 34. திருத்தலைச் சங்க நாண் மதியம் 35. திருநறையூர்

திவ்ய தேசப் பெருமாள்களின் சிறப்பைப் புலப்படுத்தும் அடைமொழிகள் மூலத்தில் காணத் தக்கவை; விரிவஞ்சி விடப் பெற்றுள்ளன.

மடல் கூற்றுகள்

பரகால நாயகி எம்பெருமான் தன் வேண்டுகோளை ஏற்காத நிலையில் அவனைப் பற்றி இழித்துக் கூற விரும்பும் செய்திகளைப் பலரறியக் கூறி மடலெடுப்பேன் என்றாள். அவை வருமாறு:–

1. இடைச்சேரியில் வெண்ணெய்க் களவில் பிடிபட்டு உரலோடு கட்டுண்டு ஏங்கி அழுது நின்ற நிலை. 2. கோவர்த்தன மலைக்குப் படைக்கப் பெற்ற பெருஞ்சோற்று மலையைத் தானொருவனாகவே உண்டமை. 3.சேவகன் என்று பலரும் ஏசும்படியாகத் தூது சென்றமை (பாண்டவர்களுக்காக). 4. கூத்தாடியாகக் குடக்

கூத்தாடினமை. 5. தன்னை யாசைப்பட்டு வந்த பெண்ணை (சூர்ப்பணகையை) ஆதரியாது மூக்கரிந்தமை. 6. ஒரு இருடி (விசுவாமித்ரன்) பேச்சைக் கேட்டுத் தாடகை என்று பெயருடைய பெண்ணைக் கொன்றமை. இத்தகைய செய்திகளை நாடும் நகரமும் நன்கறியக் கூறி மடலெடுப்பேன் என்று கூறிப் பிரபந்தத்தைத் தலைக் கட்டியருளினார்.

தனியனும் பிற்சேர்க்கைப்பாடலும்

பெரிய திருமடலுக்குப் பிள்ளைத் திருநறையூர் அரையர் தனியன் அருளிச் செய்துள்ளார். அப்பாடல் "பொன்னுலகில்" என்று தொடங்குகிறது. அப்பாடல் ஆழ்வார் பேச்சாகவே அமைந்துள்ளது. பொதுவாகத் தனியனில் ஆழ்வார் பெருமை அல்லது அவரருளிச் செயல் பெருமை ஊரின் பெருமை பெயர் பெருமை முதலியன கூறப்பெறும். இத்தனியன் ஆழ்வார் கூற்று போன்றே உள்ளமை நோக்கத் தக்கது. இறுதியில் இடம் பெறும் 'என்னிலைமை" என்று தொடங்கும் பாடல் கம்பர் அருளியதாகக் கொள்வர். அப்பாடலும் பரகால நாயகியின் கூற்றாகவே அமைந்துள்ளமை காணத்தக்கது.

சிறிய திருமடலும் பெரிய திருமடலும் ஒப்புமையும் வேறுபாடும்:

திருமங்கையாழ்வாரின் இரு திருமடல்களின் ஒப்புமை வேறுபாடுகளும் அட்டவணையில் இடம் பெற்றுள்ளன.

எண்	செய்தி	சிறிய திருமடல்	பெரிய திருமடல்
1.	யாப்பு	கலிவெண்பா (155அடி) (ஒரே பாடல்)	கலி வெண்பா 297அடி (ஒரே பாடல்)
2	மடல் எடுக்கக் காரணம் (வியாமோகம் (நிகழ்ச்சி)	கண்ணன் குடகூத்தைப் பரகாலநாயகி கண்டமை (விபவச் செய்தி)	திருநறையூர் எம்பெருமானைப் பிராட்டியுடன் ஸேவித்தமை (அர்ச்சாவதாரச் செய்தி)
3.	பரகாலநாயகி எம்பெருமான் மேல் மோகங் கொண்ட நிலைக்குக் காரணம் கூறுபவர்	கட்டுவிச்சி கூற்று. 1. உலகை அளந்தவன் 2. இலங்கை அழித்தவன் 3. கல்மாரி காத்தவன் 4. கடல் கடைந்தவன் 5. வெண்ணெய் களவு செய்தவன் 6. காளியனை அடக்கியவன் 7. சூர்பணகை மூக்கெறிந்தவன் 8. இராவணனைக் கொன்றவன் 9. இரணியனைக் கொன்றவன் 10. வாமனவடிவம் எடுத்தவன் 11. அமுதம் கடைந்தவன் 12. கஜேந்திரனைக் காத்தவன்.	பரகாலநாயகியே கூறுகிறாள். 1. நறுந்துழாய் வாழ்மார்பன் 2. மாமதிகோள் விடுத்தவன் 3. முகில்வண்ணன் 4. ராவணனை வென்றவன் 5. இரணியனைக் கொன்றவன் 6. வராகாவதாரம் எடுத்தவன் 7. அமுதம் கடைந்தவன் 8. தேவர்க்கு அமுதம் தந்தவன் 9. உலகளந்தவன்
4.	எதுகை	ரா என்னும் எழுத்து	ள என்னும் எழுத்து
5.	பேசப் பெறும் பெண்	வாசவதத்தை	சீதை– ராமன், வேகவதி– காதலன் உலூபிகை–அர்ச்சுனன் உஷை – அநிருத்தன்
6.	பெண்கள் மடலேறுதல்	விளக்கம் இல்லை	விளக்கம் உள்ளது

பேசப் பெறும் திவ்ய தேசங்கள்

சிறிய திருமடலில் -25 திவ்ய தேசங்கள்; பெரிய திருமடல் -35 திவ்ய தேசங்கள்

சிறிய திருமடலில் மட்டும் உள்ளவை	இரண்டிலும் உள்ளவை	பெரிய திருமடலில் மட்டும் உள்ளவை
1. திருக்கண்ணமங்கை	1. திருவிண்ணகர்	1. திருக்குறுங்குடி
2. திருப்புலியூர்	2. திருக்குடந்தை	2. திருவெவ்வுள்
3. திருமோகூர்	3. திருச்சேறை	3. திருப்புட்குழி
4. பதரி	4. திருவாலி	4. திருவல்லவாழ்
5. வடமதுரை	5. திருக்கண்ணபுரம்	5. திருச்சித்திரகூடம்
8. திருக்கடிகை	6. திருவெள்ளறை	6. திருக்கோட்டியூர்
	7. திருவரங்கம்	7. திருமெய்யம்
	8. திருப்பேர்	8. திருவிந்தளூர்
	9. திருவிடவெந்தை	9. திருவேளுக்கை
	10. திருக்கடல்மல்லை	10. திருப்பாடகம்
	11. திருத்தண்கால்	11. திருவட்டபுயகரம்
	12. திருக்கோவலூர்	12. திருஊழிக்களம்
	13. திருவேங்கடம்	13. திரு ஆதனூர்
	14. திருமாலிருஞ்சோலை	14. திருப்புல்லாணி
	15. தேரழுந்தூர்	15. மணிமாடக்கோயில்
	16. திருவெஃகா	16. தலைச்சங்கநாண்மதியம்
	17. திருவூரகம்	
	18. திருநீர்மலை	
	19. திருநறையூர்	

நிறைவுரை

திருமடல்கள் இரண்டினையும் சுவைபட அருளிய திருமங்கையாழ்வாருக்கு இணை எவருமிலர். தமிழ் மரபுப்படி பெண்கள் மடலூரார் என்னும் கொள்கையை மறுத்து, வடநெறிப்படி மடலூருவேன் எனப் பாக்களை இயற்றினார். பகவத் காமமாகில் பெண்கள் மடலூரலாம் என்பது அவர் கொள்கையாகும். ஆழ்வார்கள் எவரும் மடலூரவில்லை. மடலூர்வேன் என்று அச்சுறுத்தினரேயன்றி மடலூரவில்லை என்பதே உண்மை. விரிவஞ்சி இக்கட்டுரை நிறைவு செய்யப் பெறுகிறது.

திருவாய்மொழி

ஸ்ரீ உ.வே இளையவில்லி ஸ்ரீநிவாஸ பூவராஹாசாரியர் ஸ்வாமி,
ஆழ்வார் திருநகரி

உண்டோ வைகாசி விசாகத்துக்கொப்பொரு நாள்
உண்டோ சடகோபற்கொப் பொருவர்
உண்டோ திருவாய்மொழிக்கொப்பு
தென்குருகைக்கு உண்டோ ஒரு பார்தனில் ஒக்குமூர்" (உபதேசரத்தின மாலை -15)

என்று விசதவாக்சிகாமணிகளாய் ஈட்டுப் பெருக்கராய் எழுந்தருளியிருந்த அழகிய மணவாள மாமுனிகள் அருளிச் செய்கிறார். வைகாசி திருவிசாகத்திற்கும் நம்மாழ்வாருக்கும், அவர் திருவாய் மலர்ந்தருளிய திவ்யப்ரபந்தமான திருவாய்மொழிக்கும், அவர் அவதரித்த ஆழ்வார் திருநகரிக்கும் ஒப்புச் சொல்வதற்கு ஒன்றுமே இல்லை என்று முடிவு கட்டியுள்ளார். இது பொய்யிலாத மணவாள மாமுனியின், பூர்வர்களின் க்ரந்தங்களின் அலசி ஆராய்ந்து சொன்ன தீர்ப்பு ஆகையாலே ஸ்ரீவைஷ்ணவ உலகம் தலைதாழ்த்தி வணங்கி ஏற்று கொண்டதாக இன்றும் திகழ்கிறது.

இக்கட்டுரையில் மூன்று விஷயங்களை முக்கியமாக, பூர்வாசாரியர்களின் வ்யாக்யானத்தை அனுஸரித்துத் தெரிவிக்கிறேன். 1. நம்மாழ்வாரின் பெருமை. 2. திருவாய்மொழியின் பெருமை. 3. திருவாய்மொழியில் சொல்லப்பட்ட விஷயங்களின் பெருமை.

நம்மாழ்வாரின் பெருமை

காரி என்கிற சிற்றரசருக்கும் அவர் மனைவி உடைய நங்கையாருக்கும் திருக்குறுங்குடி வடிவழகிய நம்பியின் இன்னருளால் பிறந்தவர் இவ்வாழ்வார். இத்தம்பதிகள் பிள்ளைப் பேறு தாமதித்தவாறே திருக்குறுக்குடிக்குச் சென்று "உன்னைப் போல் ஒரு பிள்ளை எங்களுக்குத் தந்தருளவேணும்" என்று தொழுது இறைஞ்சினர். நம்பி நினைத்தான், 'என்னைப்போல் ஒருவன் உலகத்தில் எங்கும் கிடையாது. இதே போல் வசுதேவ தேவகிகள் கேட்ட போது நாமே போய் அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தோம். ஆனால் என்ன பயன்? மண்மிசையோனிகள் தோறும் பிறந்து நாம் உலகோர்களெல்லாம் காண நிற்கிலும், ஏறெடுத்தும் பாராமல் போனார்கள். ஆகவே இனி நாம் இவர்களுக்கு பிள்ளையாகப் பிறந்து பயனில்லை. இவ்வுலகில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து கொண்டிருக்கும் ஒரு ஜீவாத்மாவை நாம் நம்மைப்போல் ஜ்ஞானமுடையவனாகவும் நம்மிடத்தில் பக்தியுடையவனாகவும் ஆகும்படி நன்கு கடாக்ஷிப்போம். இவர்கள் ப்ரார்த்தனையும் நிறைவேறும். நம்மால் திருத்த முடியாத உலகோரையும் இவன் திருத்தி நமக்கு ஆக்குவன்' என்று. அதற்குச் சேர ஒரு ஜீவாத்மாவை நிர்ஹேதுகமாக கடாக்ஷித்தான். அவர் தான் நம்மாழ்வார். இதைத் தான் சிலர் திருக்குறுங்குடி நம்பியே திருக்குருகூர் நம்பி என்று கூறிவருவதின் கருத்து.

ஆழ்வாரும் திருவாய்மொழியின் முதல் பாசுரத்தின் இரண்டாவது வரியிலேயே "மயர்வற மதிநலம் அருளினன்" என்று பக்தியே வடிவான ஜ்ஞானத்தை எம்பெருமான் கொடுக்க நான் பெற்றேன் என்று அருளிச் செய்கிறார். "இதற்கு நான் செய்தது என்ன?" என்று தம் உள்ளத்தில் ஆராய்ந்து பார்த்த ஆழ்வார் மாறி மாறி பல பிறப்பும் பிறந்தேன். அதுவே காரணமாக அவன் என்னைக் கடாக்ஷித்தான். நான் அவனைப் பற்றிக் கனாக்கண்டதுமில்லை. இதுதான் அவனுடைய நிர்ஹேதுக க்ருபை. ப்ருந்தாவனத்தை (நெருஞ்சிமுள் காட்டை) பசுக்கள் மேய்வதற்குப் புல்லும் தண்ணீரும் நிறைந்த பூமியாக ஆகும்படி தன் சுபமான திருவுள்ளத்தால் நினைத்தாற் போல என்னையும் திருத்தினான். அவனையொழிய வேறொன்றும் அறியாதவனாக ஆனேன். நெருஞ்சிமுள் காடு அவன் க்ருபையைப் பெற என்ன உபாயம் அனுஷ்டித்தது. அதே போல நானும் பெற்றேன். 'எந்நன்றி செய்தேனோ என் நெஞ்சில் திகழ்வதுவே', 'வரவாறு

ஒன்றில்லையால் வாழ்வினிதால்' 'வெறிதே அருள் செய்வர்' என்று பகவந்நிர்ஹேதுக க்ருபையை தாமே பல பாசுரங்களிலே அருளிச் செய்கிறார். ஆகவே இவர் எம்பெருமானுடையவோ, அல்லது நித்ய சூரிகளுடையவோ, முக்தாத்மாக்களுடையவோ அவதார விசேஷம் ஆனவர் அன்று. இதை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தம்முடைய ஆசார்ய ஹ்ருதயம் என்ற மிகச்சிறந்த ரஹஸ்ய க்ரந்தத்தில், "அத்ரி ஜமதக்நி............" (92) என்று தொடங்கும் சூத்திரத்தில் ஆழ்வாரைப் பற்றி "இவர் யார்?" என்று பலபடியாக சங்கித்துக் கடைசியில் 94வது சூத்ரத்தில் இவர் எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபைக்கு பாத்ரமானவர் என்று நிரூபிக்கிறார். இந்த 94வது சூத்ரத்தின் கடைசி வாக்யம் "பக்கம் நோக்கறப் பண்ணின விசேஷகடாக்ஷம்" என்று முடிகிறது. அங்கு மாமுனிகளின் வ்யாக்யானம் கண்ணுடையார் காணத்தக்கது. அதன் முடிவில்...... "இத்தாலே சங்காவாக்யத்தில் (சூ92) சொன்ன சங்கைகளெல்லாம் கிடக்க "அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவர் இவரென்று நிர்ணீதமாய் விட்டது." அனந்தன் மேல் புண்ணியங்கள் பலித்தவர் என்றால் ஆதிசேஷன் மேல் சயனித்திருக்கிற எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்திற்கு இலக்கானவர் என்று பொருள்.

இனி "நம்மாழ்வார்" என்று இவருக்கு சிறப்புத் திருநாமம் ஏற்படக் காரணம் என்ன? ஆழ்வார்கள் பதின்மர்களும் நம் (நம்முடைய) ஆழ்வார்கள் தானே? இவ்வினாவிற்கு மணவாள மாமுனிகள் தம் உபதேசரத்தினமாலையில் விடை அளிக்கிறார்.

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர் தம் ஏற்றத்தால் - அன்புடையோர்
சாற்று திருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே
ஏத்தனைச் சொல்லி நீ யின்று" (50)

அன்புடையவரான நம்பெருமாள் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் இவரை மிகவும் அபிமானித்து "நம்மாழ்வார்" என்று அழைத்தது முதல் காரணம். மார்கழி மாதம் திருவத்யயன உத்ஸவத்திற்கு ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை எழுந்தருளிப் பண்ணிக் கொண்டு வருவதற்கு திருவாணையிடும் போது "நம்மாழ்வாரை அழைத்து வாருங்கள்" என்றே அருளிச் செய்தது இரண்டாவது காரணம். எதிரிகளின் படை எடுப்பினால் திருவரங்கத்திலிருந்து நம்பெருமாள் திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளின காலத்தில் நம்மாழ்வாரும் ஆழ்வார் திருநகரியிலிருந்து புறப்பட்டு திருநாராயணபுரத்திற்கு எழுந்தருள இவரைக் கண்டு நம்பெருமாள் மிக்க ஆதரத்துடன் இவரை அழைத்து தம் கோப்புடைய சீரிய சிங்காசனத்தில் அமர்த்தி "நம்மாழ்வாரே வாரும்" என்று அருளிப்பாடு இட்டு தம்மையே ஒக்க அருள் செய்து தம்முடைய முத்துச் சட்டை, வட்டமணை முதலிய பரிசுகளையும் இவருக்கு விளங்கியது மூன்றாவது காரணம். கம்ப நாட்டாழ்வார் திருவரங்கத்தில் தம் இராமாயணத்தை அரங்கேற்றம் செய்யப் புக நம்பெருமாள், "நம் சடகோபனைப் பாடினையோ" என்று விஞ்சிய ஆதரத்தால் கேட்டது நான்காவது காரணம். இவ்வாழ்வாரின் பெருமையை பேசி முடிக்கத்தான் முடியுமோ? ஆளவந்தாரும் "மாதா பிதா" என்று தொடங்கும் தனியனை அருளிச் செய்தது நம்மாழ்வாருக்கு தனிப்பட்ட பெருமையாகும்.

திருவாய்மொழியின் பெருமை

திருவாய்மொழியின் பெருமையை இன்று நாம் புதிதாகப் பேச என்ன இருக்கிறது? நம்பிள்ளை ஈட்டில் ஓர் இடம் எடுத்துக் காட்டுவோம். திருவாய்மொழி (10–7–5) "நண்ணா அசுரர்" என்று தொடங்கும் பாசுரத்தில் ஓர் ஐதிஹ்யம் (நடந்த நிகழ்ச்சியை) அருளிச் செய்கிறார். "அவ்யபதேச்யனுக்கு அநந்தரத்தில் அவன் தமப்பன் செய்ததைக் கேட்டு, 'இவன் என்செய்தான் ஆனான்!" என்று கர்ஜித்தான். "ஒரு மதிளை வாங்குங் காட்டில் அத்தர்சனம் குலைந்ததோ, ஸ்ரீராமாயணம் என்றும் திருவாய்மொழி என்றும் வலியன இரண்டு மஹா ப்ரபந்தங்கள் உண்டாயிருக்க!" என்றானாய்த்து. முதலாம் குலோத்துங்க சோழன் என்ற அரசனை நம் பூர்வாசார்யர்கள் அவ்யபதேச்யன் (பெயர் சொல்லத்தகாதவன்) என்றே கூறுவர். அவன் தீவிர சைவனாய் இருந்து கூரத்தாழ்வானின் கண்கள் போவதற்கும் பெரிய நம்பி பரமபதிக்கவும் காரணமாய்

இருந்தவன். அவன் வைணவத்தை அழிப்பதற்காகப் பெருமாள் கோயில்கள் திருமதில்களை இடித்தான். அவனுக்குப் பின் அரசனான அவன் மகன் விக்ரம சோழன், தன் தந்தையின் அக்ரமச் செயலைக் கேட்டுச் சொன்ன வார்த்தை இதுவேயாகும். "பெருமாள் கோயில்கள் மதிலையிடித்தால் வைணவம் அழிந்து விடுமோ? ஸ்ரீராமாயணம், திருவாய்மொழி என்கிற இரண்டு சிறந்த நூல்கள் இருக்க யாராலே வைணவத்தை அழிக்க முடியும்." என்று.

இதனால் எப்படி சக்ரவர்த்தி திருமகன் சத்ருகோஷ்டி ப்ரஸித்தரோ, அது போலவே அவனைப் புகழும் இரு நூல்களும் சத்ருகோஷ்டியில் ப்ரஸித்திப் பெற்றவைகள். அதிலும் ஸ்ரீராமாயணத்தைக் காட்டிலும் திருவாய்மொழி பல வகைகளில் மேன்மை பெற்றதாகும். "ராமாயணம் நாராயண கதையென்று தொடங்கி ...." என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையில் (63) ஸ்ரீ வால்மீகி பகவான் ஸ்ரீராமனின் சரிதத்தைக் கூறுவதாகத் தொடங்கி கங்கையின் பிறப்பு, முருகனின் பிறப்பு, புஷ்பக வர்ணனம் முதலிய வேண்டாத விஷயங்களையெல்லாம் பேசி நாவிற்கு அசுத்தியை உண்டாக்கிக் கொண்டார். இதே போன்று ஸ்ரீவேத வ்யாஸ பகவானும் நாராயண கதையென்று தொடங்கி யுத்தத்தைப் பற்றி விரிவாகப் பேசி மஹாபாரதத்திற்கு பூசல் பட்டோலை என்ற பட்டத்தையே பெற்றுக் கொடுத்தார். அப்படி அல்லாமல் ஸ்வாமி நம்மாழ்வார், 'திருமாலவன் கவி' என்ற திருநாமத்திற்குச் சேர எம்பெருமானைத் தவிர வேறு எந்த விஷயமும் ஊடு கலசாமல் தகுந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து திருவாய்மொழி பாடியருளினார்.

தென் மதுரையில் சங்கப் பலகையில் தமிழ் புலவர்கள் எல்லாரும் அமர்ந்திருக்க "கண்ணன் கழலிணை" என்கிற திருவாய்மொழியில் ஒரு பதத்தை மட்டிலும் ஓலையில் ஸ்ரீமதுரகவியாழ்வார் எழுதி சங்கப் பலகையில் வைக்க, அப்பலகையும் மற்றப் புலவர்களையெல்லாம் பொற்றாமரைக் குளத்தில் தள்ளி விட்டு அவ்வோலையை மட்டிலும் சுமந்து கொண்டு மிதந்தது. சங்கப்புலவர்கள் எல்லோரும் கூடி, "ஈயாடுவதோ கருடர்க்கெதிரே" என்று தொடங்கி, முடிவாக "பெருமான் அடிசேர் வகுளாபரணன், ஓராயிரமாம் மறையின் கவியில் ஒரு சொல் பொறுமோ உலகிற்கவியே" என்று திருவாய்மொழியை போற்றிப் புகழ்ந்தார்கள்.

ஸ்ரீ பாஷ்யகாரரும் ப்ரஹ்மசூத்ரத்திற்கு வ்யாக்யானம் இட்டருளின காலத்தில் திருவாய்மொழியின் துணை கொண்டே வெகு சிறப்பாக அர்த்தங்களை அருளிச் செய்தார். இதையே ஆசார்ய ஹ்ருதயத்தில் நாயனாரும் "பாஷ்யகாரர் இது கொண்டு சூத்ர வாக்யங்கள் ஒருங்கவிடுவர்" (சூ.65) என்று அருளிச் செய்தார். இத்திருவாய்மொழியை ஏதோ ஒரு சாதாரணத் தமிழ் நூல் என்று ஒதுக்கி அதன் துணையைக் கொள்ளாமையாலே மற்ற பாஷ்யகாரர்கள் வேதாந்த சூத்ரங்களுக்கு உண்மைப் பொருள் அறியாதவர்களாய் தங்கள் கருத்தில் கொண்ட ஒரு மதப்பொருளை சூத்ரங்களின் மேல் ஏற்றி வ்யாக்யானம் எழுதினார்கள்.

ஸ்வாமி நம்பிள்ளை தம்முடைய ஈடு வ்யாக்யானத்தில் திருவாய்மொழியின் கடைசிப் பாசுரத்தில் (1102) திருவாய்மொழியின் ஒப்பற்ற பெருமையை மிகச் சிறப்பாகக் காட்டி அருளுகிறார். அங்குள்ள பங்திகள் வருமாறு: "(அவாவிலந்தாதிகளால் இவை ஆயிரமும்) ஆழ்வாருக்கு பின்பு நூறாயிரம் கவிகள்போரும் உண்டாயிற்று. அவர்கள் கவிகளோடு கடலோசையோடு வாசியற்று அவற்றை விட்டு, இவற்றைப் பற்றித் துவளுகைக்கு அடி இவருடைய பக்த்யபிநிவேசம் வழிந்து புறப்பட்டு சொல்கையிறே."

ஒருவன் அந்தணன் என்று எப்போது கருதப்படுவான் என்றால் குறைந்த பக்ஷம் புருஷஸூக்தமாவது கற்றுத் தேறியிருக்க வேணும். அதே போல ஒருவன் ஸ்ரீவைஷ்ணவன் ஆக வேண்டுமேயானால் நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் குறைந்த பக்ஷம் திருவாய்மொழியாவது கற்றுத் தேர்ந்து இருக்க வேணும். "சந்தங்கள் ஆயிரமும் அறியக்கற்று வல்லரானார் வைட்டணவத்வ ஸித்தி" என்பது ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தி. வேதத்தில் புருஷஸூக்தமும், தர்ம சாஸ்த்ரத்தில் மனு தர்ம சாஸ்த்ரமும், பாரதத்தில் பகவத் கீதையும், புராணங்களில் ஸ்ரீவிஷ்ணு புராணமும் எப்படி ஸாரம் என்ற கருதப்படுகிறதோ அதே போன்று 24 திவ்யப்ரபந்தங்களில் திருவாய்மொழியே ஸாரமானது.

"வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள் போலே அருளிச் செயலில் ஸாரம்" (ஆ.ஹ்ரு.சூ.63) என்பது நாயனார் திருவாக்கு.

திருவாய்மொழியின் பெருமையை ஆதிசேஷனாலும், ஆதிப்பிரானாலும், ஏன் அதை அருளிச் செய்த நம்மாழ்வாராலும் பேசித் தலைக்கட்ட முடியாது. அதனால்தான் "பிள்ளான் நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை மணவாள யோகி" என்று திருவாய்மொழியைக் காத்த குணவாளர்களின் ஐந்து வ்யாக்யானங்கள் அவதரித்தன.

விஷய வைலக்ஷண்யம்

திருவாய்மொழியில் கூறப்பட்ட விஷயங்கள் பரம விலக்ஷணமானவைகள். வேதவேதாந்த இதிஹாஸ புராணங்களில் கூறப்பட்டவைகளில் ஸார தமமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களையெல்லாம் சுருக்கிச் செந்தமிழில் அருளிச் செய்துள்ளார் ஆழ்வார். "அறியவேண்டிய அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு. அதாவது அஞ்சு அர்த்தம்" என்று முமுக்ஷுப்படியில் பிள்ளைலோகாசாரியர் பெரிய திருமந்த்ரத்தில் தெரிந்து கொள்ள வேண்டியதைப் பற்றி அருளிச் செய்தார். திருவாய்மொழியும் திருமந்த்ரத்தினுடையவும் அதன் விவரணமான த்வயத்தினுடையவும் மேலும் அதன் விவரணமான சரம ச்லோகத்தினுடையவும் சீரிய நற்பொருளின் விவரணமாகையால் அதே அஞ்சு அர்த்தங்களை விவரிக்க எழுந்தது என்று தம் திருவுள்ளத்தில் கொண்ட ஆசிரியப் பெருந்தகையான ஸ்ரீபராசரப்பட்டர் பரம விலக்ஷமான ஓர் தனியன் அருளிச் செய்தார்.

மிக்க விறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர் கோன்
யாழினிசை வேதத்தியல்.

திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபர் அருளிச் செய்த திருவாய்மொழி யாழின் இசை போன்றது. அதில் கூறப்பட்ட பொருள்கள் ஐந்தே. 1. அறப்பெரிய எம்பெருமானுடைய (=இறை) ஸ்வரூபத்தையும் (இயல்வான தன்மை). 2. என்றும் அழியாத ஆத்மாவின் ஸ்வரூபம் அல்லது எம்பெருமானுக்கு மெய் (சரீரம்) ஆத்மாவின் ஸ்வரூபம். 3. அவனை அடைவதற்கு ஆத்மாவின் ஸ்வரூபத்திற்குச் சேர்ந்த வழி. 4. அவனை அடைவதற்கு தடை செய்கிற முன்னை வினையாகிற விரோதி ஸ்வரூபம். 5. வாழ்வாகிற மோக்ஷத்தின் தன்மை.

இனி இந்த ஐந்தையும் ஆழ்வார் தம் திருவாய்மொழியில் எந்த எந்த பாசுரங்களால் விவரித்துக் காட்டுகிறார் என்பதை சுருக்கமாகக் காண்போம்.

(1) மிக்க விறை நிலை

எம்பெருமான் சித்து அசித்து ஆகிய இரண்டைக் காட்டிலும் மிக மிக மேம்பட்டவன். அவனைப் பற்றி அறிவது மிகமிகக் கடினம் "இறைநிலை உணர்வரிது உயிர்காள்" (திரு1–3–6). அவன் பிரமன் முதலிய எல்லா தேவதைகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்தவன்.

"தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம் தம்தேவதாநாம் பரமஞ்ச தைவதம்" (எல்லா தேவதைகளுக்கும் தொழப்படும் தேவதையாய் அவனுக்கு மேம்பட்ட ஒரு தேவதையில்லாதவன்), "நாராயண பரோஜ்யோதி:" (நாராயணன் மிகவும் விளங்கும் தேஜோ மயமானவன்), "தத்வம் நாராயண: பர:" (நாராயணனே மேலான – தத்வம்) என்பன போன்ற ஆயிரக்கணக்கான எம்பெருமானுடைய பரத்வத்தை வேதம் தமிழ் செய்த மாறன் தம் திருவாய்மொழியில் கீழ்க் கண்ட பாசுரங்களால் அருளிச் செய்கிறார். 1. "மனிசர்க்கு தேவர் போல் தேவர்க்கும் தேவாவோ" (திரு 8–1–5); 2. "தேவ தேவனை" (3–6–2); 3. "பரஞ்சோதி நீ பரமாய்" (3–1–3); 4. மிகுஞ்சோதி (2–2–5); 5. முழுதுண்ட பரபரன் (1–1–8); 6. வானோரிறை (1–5–1); 7. கழிபெரும் தெய்வம் (திருவிருத்தம் – 20); 8. பெருந்தெய்வம் (4–6–2) இத்யாதிகளில் காணலாம். எம்பெருமான் உலகைப் படைத்து, ப்ரளய காலத்தில் பிரமன் முதலிய எல்லா தேவதைகள் உடனும் விழுங்கி வயிற்றில் வைத்துக் காத்து, மீண்டும் படைத்து மஹாபலி போல்வார் இவ்வுலகை அபஹரித்த போது தன் திருவடிகளாலே அழந்து, வராஹ அவதாரம் செய்து பூமியை நீரிலிருந்து எடுத்து... இப்படி பலபடியாக ரக்ஷிக்கும் அவனல்லவா பரத்வத்தோடு

கூடினவன். மற்ற தேவதைகளெல்லாம் எம்பெருமான் உண்டு உமிழ்ந்த எச்சில் தேவர் என்று ஆழ்வார் பல பாசுரங்களால் நிரூபித்துக் காட்டுகிறார். வேத வ்யாஸர் தம்முடைய ப்ரஹ்மசூத்ரத்தில் எம்பெருமானை நாராயணன் என்ற சப்தத்தால் ஓர் இடத்திலும் குறிப்பிடவில்லை. "ப்ரஹ்ம" என்ற சப்தத்தாலேயே குறிப்பிடுகிறார். அதேபோல அவனுக்கு லக்ஷ்மீ ஸம்பந்தமும் சொல்லவில்லை. அவனுடைய அவதாரத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை. அந்த குறைகளெல்லாம் தீர அந்த வேத வ்யாஸரே நம்மாழ்வாராக வந்தவதரித்து அந்த மூன்று குறைகளையும் நீக்கினார் போலும் என்று நம் பூர்வர்கள் உல்லேகித்துப் போருவர்கள். "வண்புகழ் நாரணன்," "திருமகளார் தனிக்கேள்வன்", "பல பிறப்பாய் ஒளி வரும் முழுநலம்" என்ற இடங்கள் காண்க. மேலும் இறைநிலையை உள்ளபடி அறிவதாவது, அவன் மிகுந்த ஸௌலப்யத்தோடு கூடினவன். அந்த ஸௌலப்யத்துக்கு எல்லை நிலம் அர்ச்சாவதாரம். இந்த இறை நிலையை" உயர்வற உயர்நலம்", "திண்ணன் வீடு", அணைவது அரவணைமேல்", "ஒன்றும் தேவும்" என்கிற நான்கு திருவாய்மொழிகளால் பரத்வே பரத்வமும், இதிஹாஸ புராணங்களில் கூறப்படும் நிகழ்ச்சிகளினால் உண்டான பரத்வமும், மோக்ஷத்தை அளிக்கும் தன்மையினால் வந்த பரத்வமும், அர்ச்சாவதாரத்தில் பரத்வமும் ஆழ்வார் முறையே அருளிச் செய்கிறார்.

2. மெய்யாம் உயிர் நிலை

ஆத்மாவின் ஸ்வரூபத்தை நாலு திருவாய்மொழிகளால் வெளியிடுகிறார். "பயிலும் சுடரொளி" (3–7) என்கிற திருவாய்மொழியில் ஆத்மா எம்பெருமானுக்கு அடிமைப் பட்டிருந்தலைக் காட்டிலும் அவனுடைய அடியார்களுக்கு அடிமைப்பட்டிருப்பதே பகவத் சேஷத்வத்தின் முடிந்த நிலம் என்று காட்டி அருளினார். "ஏறாளும் இறையோனும்" (4–8) என்கிற திருவாய்மொழியில் எம்பெருமானுக்கு அடிமைப்படாத ஆத்மாவும் அந்த ஆத்மாவுக்கு ஸம்பந்தப்பட்ட வஸ்துக்களும் கொள்ளத்தக்கனவல்ல என்று கூறும் முகத்தால், சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம் என்று அறுதியிட்டார். "கண்கள் சிவந்து" (8–8) என்கிற திருவாய் மொழியில் ஜீவாத்மா எம்பெருமானுக்கு சரீரமாய் (யஸ்ய ஆத்மா சரீரம்) அதனால் எப்பொழுதும் எம்பெருமானைவிட்டு பிரிக்க முடியாதபடி சேஷமாய், அசித்தைக் காட்டிலும் வேறுபட்டதாய், ஜ்ஞானம், ஆநந்தம் இவைகளையே உடையவனாய் இருக்கும் அவன் என்பதை மூதலிக்கிறார். "கருமாணிக்க மலை" (8–9) என்கிற திருவாய்மொழியில் அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு (எம்பெருமானுக்கே அடிமைப் பட்டிருத்தலுக்கு) விரோதமான அந்யசேஷத்வத்தை பேசுவதும் கூட பொறுக்க முடியாதிருப்பது ஆத்மாவின் "மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று அருளிச் செய்தார்.

3. தக்க நெறி

எம்பெருமானை அடைவதற்கு அவனே தக்க உபாயம் (வழி). இதை ஆழ்வார் "நோற்ற நோன்பிலேன்" (5–7) என்கிற திருவாய்மொழியில் வானமாமலை எம்பெருமான் முன்னிலையில், "என்னால் கர்ம ஜ்ஞான பக்தி முதலான எந்த உபாயங்களும் அநுஷ்டிக்கப்படவில்லை. "ஆறெனெக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று விண்ணப்பித்துத் தம்முடைய ஆகிஞ்சந்யத்தை வெளியிட்டருளினார். சரணாகதனுக்கு மற்ற உபாயங்களில் எந்த ஸம்பந்தமும் கூடாது என்பதை நமக்கு உபதேசிக்கிறார். "ஆராவமுதில்" (5–8) திருக்குடந்தை ஆராவமுதாழ்வாரிடம் "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்று "உன்னை அடையாமல் நான்படும் துன்பத்தை நீ போக்குவாயோ மாட்டாயோ. அது பற்றி எனக்கு கவலையில்லை. ஆனால் வேறு ஒரு ரக்ஷகனைத் தேடிப் போகேன்" என்று அநந்யகதித்வ பூர்வகமாக சரணம் புக்கார். "மானேய் நோக்கு நல்லீர்" (8–9) என்கிற திருவாய்மொழியில் "வைகலும் வினையேன் மெலிய" என்று பக்தி பாரவச்யம் முன்னாக திருவல்லவாழ் எம்பெருமானைச் சரணம் புக்கார். "பிறந்தவாறும்" (5–10) என்கிற திருவாய்மொழியில் எம்பெருமானுடைய குண சேஷ்டிதங்களை தரித்திருந்து அனுபவிக்கச் செய்ய வேண்டும் என்று "நாகணைமிசை நம்பிரான் சரணேசரண்" என்று கண்ணபிரானிடம் சரணம் புக்கார். ஆக இந்நான்கு திருவாய்மொழிகளால் உபாய (சரணாகதி) ஸ்வரூபம் அருளிச் செய்தார்.

4. தடையாகித் தொக்கியலும் ஊழ்வினை

எம்பெருமானை அடைவதற்கு தடை செய்யக் கூடியவைகளின் ஸ்வரூபத்தை நான்கு திருவாய்மொழிகளால் அருளிச் செய்கிறார். "விடுமின் முற்றவும்" (1–2) என்கிற திருவாய்மொழியில் எம்பெருமானைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றுகைக்கு உடலான அஹங்கார மமகாரங்கள் த்யாஜ்யம் என்று அருளிச் செய்தார். "சொன்னால் விரோதம்" (3–9) என்கிற திருவாய்மொழியில் அஸேவ்ய ஸேவை தள்ளத்தக்கது என்றார். "ஒருநாயகம்" (4–1) என்கிற திருவாய்மொழியில் ஐச்வர்ய கைவல்யங்கள் விரோதிகள்; ஆகவே த்யாஜ்யம் என்றார். "கொண்ட பெண்டிர்" (9–1) என்கிற திருவாய்மொழியில் சரீர சம்பந்தம் அடியாக இவ்வாத்மாவுக்கு வரும் பந்துக்கள் முதலியவர்கள் எல்லோரும் மோக்ஷ விரோதிகள்; ஆகவே த்யாஜ்யம் என்றார்.

5. வாழ்வு

எம்பெருமானுக்குப் பண்ணும் கைங்கர்யமே இவ்வாத்மாவுக்கு வாழ்வு. அதன் ஸ்வரூபத்தை நாலு திருவாய்மொழியில் வெளியிட்டருள்கிறார். 'எம்மாவீடு' என்கிற திருவாய்மொழியில் 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' என்று அவனுடைய ஆனந்தத்துக்காகவே நாம் கைங்கர்யம் செய்ய வேணும். நாம் செய்யும் கைங்கர்யத்தால் அவனுக்கு ஆனந்தம் ஏற்பட அதைக் கண்டு நாம் ஆனந்தப்படவேண்டும். 'ஒழிவில் காலம்' என்கிற திருவாய்மொழியில் அந்தக் கைங்கர்யம் எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைகளிலும் செய்யப்பட வேண்டும் என்று காட்டியருளினார். 'நெடுமாற்கடிமை' என்கிற திருவாய்மொழியில் அந்த பகவத் கைங்கர்யம் அவனடியார்கள் அளவிலும் செய்ய வேண்டும் என்றருளினார். 'வேய்மரு தோளிணை' என்கிற திருவாய்மொழியில் 'உன்றன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும்' என்று பரஸம்ருத்தியே பேறாயிருக்கும்படியை அருளிச் செய்தார்.

ஆக, மிக்க இறைநிலை என்று தொடங்கும் பராசரபட்டர் அருளிச்செய்த தனியனின் பொருளைச் சுருக்கித் திருவாய்மொழி ஸாரமாக இங்கே காட்டினோம். 'உண்டோ திருவாய்மொழிக்கு ஒப்பு' என்று மாமுனிகள் அருளிச்செய்திருக்கிறபடியால் அத்திருவாய்மொழியின் ஸாரத்தைச் சுருக்கி வரைவது மிகவும் கடினமானது. ஓரளவே இவ்விடத்தில் காட்டினேன். பூர்வர்களின் வ்யாக்யானங்களைக் கொண்டு திருவாய்மொழியின் பொருளைக் காலக்ஷேபமுறையில் கேட்டு ஆனந்திக்கவேணும். அந்த ஆசையை இக் கட்டுரை தூண்டிவிடும் என்று நம்புகிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

இராமாநுச நூற்றந்தாதி

பெருமாள்கோயில் யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம் பிள்ளைலோகம் ஸ்ரீ உ.வே. திருவேங்கடாசாரியார் ஸ்வாமி (பி.எஸ். திருமலை)

ஆசார்யர்களில் தலையானவர், எல்லோரிடமும் கருணை கொண்டு அவர்களை உயர்த்திய வள்ளல் நம் இராமாநுசனே ஆவர். அவரது புகழ் பலபடியாக பரவியிருப்பினும், அவரைப் பற்றிக் கூறும் அந்தாதி 'இராமாநுச நூற்றந்தாதி' ஆகும்.

'கண்ணிநுண் சிறுத்தாம்பு' நம்மாழ்வார் விஷயமாக அமைந்தது போல், எம்பெருமானார் விஷயமாக அமைந்தது 'இராமாநுச நூற்றந்தாதி' ஆகும். இந்த பிரபந்தத்தை அளித்தவர் 'பெரியகோயில் நம்பி' எனப்பட்ட 'திருவரங்கத்தமுதனார்' ஆவார். 'அமுதன்' என்றும் அழைக்கப்பட்டவர். கோயில் பணிகளான புரோஹிதம், புராணபடநம் ஆகியவற்றை ஆழ்வான், இவரை தானமாகக் கேட்க, அவரும் உகந்து சமர்ப்பித்து, ஆழ்வானும் எம்பெருமானாரிடம் சமர்ப்பித்தார். எம்பெருமானார் நியமனப்படியே ஆழ்வானும் அவற்றை நிர்வகித்துவர, அமுதனாரும் கோயிற் கைங்கர்யங்களில் ஒட்டற்றிருந்தார். இதைக் கண்ட எம்பெருமானார், பிள்ளை திருவரங்கப் பெருமானாரிடம், 'இன்று முதல் இயற்பா ஆயிரமும் நீங்கள் இசைக்க வேண்டாம்' என்று அரையரை நியமித்து, அமுதனாரை 'இயற்பாவை' ஸந்நிதியில் அரையருக்குப் பதிலாக விண்ணபிக்கும்படி செய்தார். அவ்வாறே நடந்தும் வருகிறது.

அமுதனார் எம்பெருமானாருடைய நியமனம் பெற்று 'இராமாநுச நூற்றந்தாதி'யை இரண்டு முறை இயற்றிய போது, அது எம்பெருமானாரால் நிராகரிக்கப்பட்டது. காரணம் ஆழ்வார்களின் பெருமையை சேர்த்தே அருள வேண்டும் என்பது எம்பெருமானாரின் திருவுள்ளமாகும். அடையவளைந்தான் திருமதிலுக்கு அருகில் ஒரு தென்னஞ் சோலைத் திருமண்டபத்தில் பட்டோலை கொண்ட போது, ஆழ்வான், ஆண்டான், எம்பார் ஆகியோருடன் அங்கு எழுந்தருள, அவ்வமயம், 105வது பாசுரமான 'செழுந்திரைப் பாற்கடல்' என்ற நூற்றைந்தாம் பாசுரம் தலைக்கட்டி, 'இருப்பிடம் வைகுந்தம்' என்ற பாசுரம் எழுத வேண்டிய தருணமாயிருந்தது. அதுமுதல் மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் முன்பாக விண்ணப்பிக்கப்பட்டது. பிறகு அரங்கேற்றம் ஆனது. இந்த நிகழ்ச்சியின் நினைவாக இப்பிரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப் பாசுரங்கள் மூன்றாக இருக்க வேணும் என்று ஆழ்வான் நியமிக்க, அவ்வாறே அமைந்துள்ளது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும்.

எம்பெருமானார் திருவடிகளில் அன்புடையோர்க்கு இந்த பிரபந்தம் ஸாவித்ரி போன்று நித்யானுஸந்தானமாக வேணும் என்று பாட்டு தோறும் 'இராமாநுச' திருநாமம் தவறாது சொல்லப்பட்டிருக்கிறது. 'பிரபந்ந காயத்ரி' என்றும் உரைப்பர்.

அமுதனாரது நிர்வாஹங்களாக திருவிருத்தம், திருவாய்மொழி, பெரிய திருமொழி உரைகளில் பெரியவாச்சான் பிள்ளையால் அருளப்பட்டுள்ளன. நம்பிள்ளை சிஷ்யரான பின்பழகராம் பெருமாள் சீயரது, 'வார்த்தாமாலை', பெரியவாச்சான் பிள்ளையின் அபிமான புத்ரரான நாயனாராச்சான் பிள்ளையின், 'சரமோபாயநிர்ணயம்' 'ப்ரமேயரத்னம்' ஆகியவை இவரது பெருமையை பரக்க உரைகிறது. இவர் வாழ்ந்தது 108 வருடங்கள். இவர் இயற்றிய இராமாநுச நூற்றந்தாதி 108 பாசுரங்கள்.

இந்த ப்ரபந்தத்திற்கு மணவாள மாமுனிகளும், அவரால் நியமிக்கப்பட்ட, அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான, பரவஸ்து பட்டர்பிரான் ஜீயரின் வம்சத்தில் அவதரித்த பிள்ளைலோகார்ய ஜீயரும் வ்யாக்யானம் அருளியுள்ளனர். அவற்றில் ஒரு சில பகுதிகளை, சில விஷயங்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

தனியனில் 'மூங்கிற்குடி' என்பது வேயர்குலம். ஆஸூரி குலம், கூரகுலம் போன்ற குலம், 'பெரிய கோயில் நம்பி' அமுதமாயிருக்கும் இராமாநுச நூற்றந்தாதி கேட்டு எம்பெருமானாரால் உகந்து அளிக்கப்பட்ட திருநாமம் 'அமுதன்' ஆகும்.

நயந்தரு— 'நயம்' என்றால் விஷயாந்தரங்கள் ஆகும். பொய்கையாழ்வாரும் ''நாணாமை நள்ளேன் நயம்'' என்கிறார். பேரின்பம் என்பது சிற்றின்பம் ஆகும். விபரீதலக்ஷணையாய் 'பேரின்பம்' எனப்படுகிறது. 'நல்லபாம்பு' என்னுமா போலே. 'நண்ணினர்பால்' என்றும் 'நண்ணிநன்பால்' என்றும் பாடமுண்டு. 'நண்ணினர்பால்' – ஆச்ரயித்தவர் பக்கல்; 'நண்ணி' – நாராயணனை நண்ணினவரான எம்பெருமானார், 'நன்பால்' நல்ல ஸ்வபாவத்தாலே, என்றும் பொருள் கொள்ளலாம்.

சொல்லின் தொகை: ஸங்க்யையை மனதிற் கொண்டு 'நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன்' என்று இரவும் பகலும் பொருந்தியிருக்கும்படியான நாலெழுத்து நாமமானதும், 'நல்லார் பரவும்' நாமமுமானது, 'நாராயண' நாமத்திலும் பெருமை பெற்ற உம்முடைய திருநாமங்களை என் நாவில் அமரும்படி அநுக்ரஹிக்க வேணும்.

மேனாட்டில் அநுஸந்திக்கும் தனியன்: 'இனியென்குறை'... 'புண்ணியனே'–'வாயமுதம் பரக்கும்', 'ராமாநுசன் என்று சொல்லுமினே' 'அமுதன் வாயிலே அமுதமுண்டாவது' 'இராமாநுசன் மிக்க புண்ணியன்' என்னும் மிகப் புண்ணியனாக வந்த புண்ணியன், திருவரங்கத்தமுதாகிய புண்ணியன். எம்பெருமானார் திருநாமத்தால் கலித்துறை அந்தாதி பாடித்தந்தான், 'இனியென்குறை நமக்கு' என்று கொள்ளவும்.

'பூ' மன்னுமாது: எல்லா நூல்களும் மங்கல மொழி வகுத்துக் கூறுதல் மரபு. 'பூ' என்று தொடங்கினார். திருச்சந்தவிருத்தத்திலும் சொல்லப்படுகிறது. ஆனால் அங்கு 'சப்த' மாத்திரம் மங்கல மொழியாயிற்று. ஆனால் இங்கோ அர்த்தத்தில் கூறுகிறது. 'அரவிந்தவாஸிநே' என்றும் சொல்லிற்று.

இராமாநுசன்: 'அபயம் ஸர்வபூதேப்யோ ததாம் யேதத் வ்ரதம் மம' என்று ஸர்வர்க்கும் அபயப்ரதாநம் பண்ணினாற் போல, இவரும் மோக்ஷோபாயமான மந்திரத்தை பூரிதாநம் பண்ணினார். அப்படிப்பட்ட எம்பெருமானாரின் அரவிந்தம் என்கிற மன்மத பாணத்துக்கு தம்மை மோஹித்தப்படியால் அரவிந்தத்தை போலியாக உவமிக்கிறார்.

கண்ணனும் கலியனும்: (கள்ளார் பொழில்) – எம்பெருமான். 'குறையொன்றுமில்லாத கோவிந்தன்' என்னும்படியாக, கோவர்த்தனமலையை எடுத்து காப்பாற்றிய உபகாரகன், பூதனையை அழித்து, சகடம் பாய்ந்து, யமளார்ஜுநர்களையும், அரிஷ்டாசுரனையும் அழித்து, ப்ரலம்பன், தேனுகளை நிரஸித்து, காளியனை அடக்கி, கேசீ வதம் செய்து, குவலயாபீட யானையைக் கொன்று, சாணூர, முஷ்டிக, கௌஸல, கம்சனைக் காய்ந்து, பாண்டவர்களை ரக்ஷித்து, தத்வோபதேசம் பண்ணினான். இதில் அர்த்த விசேஷம் தோன்ற சரமச்லோகம் ப்ரதாநமாக பண்ணினான். இருப்பினும், திருக்குறையலூரில் அவதரித்து, திவ்ய ப்ரபந்த நிர்மாணம் பண்ணி, திருவத்யயநத்துக்கு ஏகாதசி திருநாள் நடப்பித்து, பெருமாளுக்கு அரணாக திருமதில் நிர்மாணித்து, குத்ருஷ்டிகளுடன் தர்க்கித்து வென்று, அவர்களால் பழிக்கப்பட்ட திவ்யதேசங்களை நிர்வஹித்து வந்தவர் திருமங்கை மன்னன். அந்த திருமங்கை மன்னனின் திருவடிகளில் நீங்குதல் இல்லாத பக்தியுடையவன் நினைத்தும், தம்மை நீசர்களில் ஒருவராக நினைக்கும் அமுதனார் கலந்து பரிமாறி மஹாகுணம் கொண்டவர் எம்பெருமானார் என்கிறார்.

நல்வினை, தீவினைக்கு நம்நெஞ்சே காரணம்: (பேரியல் நெஞ்சே) 'மந ஏவ மநுஷ்யாணாம், காரணம் பந்தமோக்ஷயோ' என்றபடி நம் நல்வினை, தீவினைகட்கு முதல் காரணம் நம் நெஞ்சமே. எம்பெருமானாரின் சீல குணத்தில் இழிந்து, நம்முடைய நீச சம்பத்தை ஸவாசனையாகப் போக்கி, தீதான பிறவியை நீக்கி, இவ்விபூதியிலிருந்து கொண்டே ஸகல சேதநர்கட்கும் ஆசார்யனாய் இருந்து, கரண த்ரயத்தையும் ஆசார்யலக்ஷணமுடைய எம்பெருமானாரின் அடியார்களான ஆழ்வான் திருவடிகளில் பூஷணமாம்படி பண்ணி வைத்ததற்கே, தனக்கு உபதேசமாய் இருக்க, எனக்குப் புருஷகாரமாய் ததீய ஸ்ரீபாதத்திலே என்ன உபகாரம் செய்வது நெஞ்சே' என்று ஆராய்ந்து உன் திருவடிகளில் ஆச்ரயித்தேன் என்கிறார்.

உபதேசத்தால் திருத்தினார்: 'என்னைப்புவியில்' 'மருள் சுரந்த' என்பதற்கு வித்யா கர்ம வாஸநாருசி ப்ரக்ருதி ஸம்பந்த ஆத்மகமாயிருந்துள்ள புண்யபாப ரூபமான கர்மங்கள் வேரோடியிருந்து, அதனை உபதேசங்காளலேயே அழித்து, பகவத் ப்ரவணராம்படி செய்தருளியவர் என்கிறார்.

பழிப்பே குணம்: 'எனக்குற்ற செல்வம்' எம்பெருமானாரின் குண கீர்த்தநம் பண்ண எண்ணினார். இதில் ஏதேனும் ஒரு குற்றத்தை ஆரோஹித்து தூஷித்தார்களேயாகில், அதுவே எனக்கு ஆபரணம் என்று சொல்லி, இதன் பெருமையை (ரஸம்) அறிந்தவர்கள் குணமாக விரும்புவர் என்கிறார்.

ராஜகுலமாஹாத்மயம்: மொழியைக் கடக்கும்: எம்பெருமானாரைத் துதிக்க எண்ணி, தாம் யோக்யதையற்றவர் என்று பிற்காலிக்க நினைத்தார் அமுதனார். கல்விச்செருக்கு, செல்வச் செருக்கு, குலச்செருக்கு என்ற இம்மூன்று கொடிய அஹங்காரங்களைக் கடந்த கூரத்தாழ்வான் திருவடிகளை நினைத்து, அதனால் எனக்கு ஸாத்யம் இல்லாதது ஒன்றும் இல்லை என்று துணிவுடன் கூறுகிறார். "வாசாயதீந்த்ர மனஸா... பபேவம்" படி.

எம்பெருமானாராகிற இறைவன்: வருத்தும் புறவிருள்: ஆழ்வார்களைப் பற்றிய பாசுரங்களில், பொய்கையாழ்வாரை பற்றிக் கூறும் போது, வேதார்த்தங்களையும் 'நடைவிளங்கு தமிழானதுமான' த்ரவிட ரூபமான திவ்யப்ரபந்தந் தன்னையும் தன்னில் சேரும்படி செய்து, திருக்கோவலூர் இடைகழியில் ஆயனாகி வந்து, மூவரையும் நெருக்கும் போது, பதினாலு உலகங்களையும் தகளியாகவும், கடல்களை நெய்யாகவும், எறிகதிரோனை விளக்காகவும் சேர்த்து, உலகில் உள்ள வஸ்துக்கள் பிரிவுபடாதபடி எல்லாவற்றையும் பிரகாசிப்பித்த திவ்யப்ரபந்த ரூபத்தையிட்டு, அந்த தீபத்தை ஸ்நேஹருபமாய் தன் திருவுள்ளத்தில் நிறுத்தியவரே எம்பெருமானாராகிய நாதர் என்கிறார்.

ஸ்ரீமத்வேதமார்க்க பிரதிஷ்டாபனாசாரியர்: இறைவனைக் காணும் அஜ்ஞான அந்தகாரத்தைப் போக்குவதற்காக பரஜ்ஞானமாகிற பரிபூர்ண தீபத்தை ஏற்றியருளின பூதத்தாழ்வாருடைய திருவடிகளை மநஸ்ஸில் வைத்துக் கொண்டு அநுபவிக்கிற எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை அநுஸந்தித்து, ஸகல உலகங்களையும் குத்ருஷ்டிகளால் அழிக்க முடியாதபடி ரக்ஷிக்க வைக்கவல்லவர்கள் என்கிறார்.

நித்யஸ்ரீமாந்கள்: 'மன்னியபேரிருள்': ஸர்வேச்வரனான ஆயனை. 'பாலேய் தமிழர்' 'இன்கவிபாடும்' என்று நம்மாழ்வாரால் கொண்டாடப்படும் முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வாரின் ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை மங்களாசாசநம் பண்ணும் எம்பெருமானார் விஷயமாக ப்ரீதியை தங்களுக்கு ஆபரணம் போல் பூண்டவர் திருவடிகளை தங்கள் தலையில் தரிப்பவர்கள். "ஸதுநாகவரஸ்ஸ்ரீமாந்" 'லக்ஷ்மணோ லக்ஷ்மீ ஸம்பந்ந:', 'அந்தரிக்ஷகத ஸ்ரீமாந்' என்ற பெருமை வாய்ந்த ஸம்பந்தத்தை உடையவர்கள்–சீர்மை–ஸ்ரீமாந்.

சீரிய நான்மறை: 'இசைகாரர்' என்று நம்மாழ்வாரால் கொண்டாடப் பட்டவரும், இனிதாகப் பாடும் இசையை நிரூபகமாய் உடையவருமான மஹாவைபவம் கொண்ட திருப்பாணாழ்வார் 'அமலன்', 'உவந்த', 'மந்திபாய்' என்ற முதலடிகளால் ஸாரதமார்த்த விசேஷத்தை ப்ரதிபாதித்திருக்கையாலே ஸகலவேதஸாரமாய், 'பவத்பதாப்ஜே ஹ்ருஷ்டாஸ்து நித்யமநுபூய மாமஸ்யபுத்தி:' என்ற போக்யதமமான பாதபத்மத்தை தன் சிரஸ்ஸிலே அலங்கரித்தாப் போலே உத்தமாங்கத்தையுடைய இராமாநுசனை ஆச்ரயமாக அடைந்த கூரத்தாழ்வான், அனந்தாழ்வான் போல்வாரின் காரிய வண்மையை தன்னால் சொல்லப்போமோ? என்று அமுதனார் கூறுவதாக பிள்ளைலோகார்ய ஜீயர் உரைக்கிறார்.

இடங்கொண்டகீர்த்தி: 'நிற்பதுமோர் வெற்பகத்து' என்றபடியே ஸர்வதிக்குகளிலும் வ்யாப்தியான கீர்த்தியைப் பெற்றவர் திருமழிசையாழ்வார். அவருடைய திருவடிகளாகிற பத்மங்கள் அணுவான மநஸ்ஸிலே மஹத்தான அத்திருவடிகள் அடங்கும்படி ஹ்ருதய ப்ரதேசத்தை உடையரான எம்பெருமானார் திடம் கொண்ட ஞானியர்கள் வடுகநம்பி கூரத்தாழ்வான் போல்வாரிடம் அடியேன் ஸ்நேஹித்து இருப்பது என்கிறார்.

பேராத சீரரங்கத்தையன்: 'மாதாபிதா ப்ராதா நிவாஸச் கரணம் ஸுஹ்ருர்கதி:' என்றபடியே 'மற்றுமோர் தெய்வமுண்டே' என்று பெரிய பெருமாள் திருவடிகளிலேயே அதிப்ரவணராய், ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளை பொழிய வேறொன்றில் ஆதரமற்றிருக்கிற எம்பெருமானார் திருவடிகளே எனக்கு ப்ராப்யம் என்கிறார்.

கொல்லிகாவலன் சொல்... பாதங்களே: முத்துக்களை கோற்பவர்கள் முத்துக்களையும் ரத்தினங்களையும் முகமறிந்து கோர்ப்பது போல், 'இருளிரிய'ச் சுடர்மணிகள்'...... 'நலந்திகழ்நாரணடைக்கீழ்

நண்ணுவாரே' என்று திவ்யப்ரபந்தரூபேண குலசேகராழ்வார் அருளிச் செய்த போக்யமான கவிகளை பாடும் பெரியவர்களான நாதமுனிகள், ஆளவந்தார், பெரிய நம்பி, திருமலை நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருவரங்கப் பெருமாளரையர், திருமாலையாண்டான் முதலானாரின் திருவடிகளையே துதிக்கும் பரமன் இராமாநுசன் என்னைப் பிரிகிலன் என்கிறார். சோர்வு–பிரிவு.

அவனை பல்லாண்டென்று காப்பிடும்: 'தாள்'– 'ஆயுராசாஸ்தே' என்கிறபடியே 'தீர்க்காயுஷ்மாந் பவ' என்று மங்களாசாஸனம் பண்ணுவாரைப் போல அந்த ச்ரிய:பதியைக் குறித்து "பல்லாண்டு........ திருக்காப்பு". 'நின் வல மார்பினில், ... பல்லாண்டு:' இப்படியே காலதத்வமுள்ளவரை செவ்விமாறாது, நிஷ்டையுடைய பெரியாழ்வார் திருவடிகளையே பரவும் எம்பெருமானார் திருவடிகளைத் தவிரச் சேரேன் என்கிறார்.

சூடிக்கொடுத்தவள் அருள் பெற்றவர்: கோயிலில் கண்வளர்ந்தருளும் பெரியபெருமாள் தானே ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானென்றும் கண் வளர்ந்தருளும் அரங்கருக்கு, 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே' என்று அலங்கரித்த புஷ்பமாலையை அளித்தவளின் அருளால் வாழ்கின்ற வள்ளல், (வள்ளல் பரமோதாரன்) எம்பெருமானார் என்கிறார். முற்காலத்தில் உள்ள பொருளை நிகழ் காலத்தினால் குறிப்பிட வேண்டும் என்ற மரபின்படியும் 'வாழ்கின்ற' என்று குறிப்பிடுகிறார்.

மிகப் பெரியவர்: 'எய்தற்கரிய' 'வேதம் தமிழ் செய்த மாறனான சடகோபனையே' வாழ்த்தும் மதுரகவிகளின் பக்தரான எம்பெருமானாரே நமக்கு உற்றதுணை. 'புவியும் இருவிசும்பும்' என்ற பாசுரத்தை உள்ளடக்கியவரே மதுரகவிகள்.

உறுபெருஞ் செல்வமும் உயர்குருவும்: 'புத்ரான் பந்தூந் ஸகீந் குரூந்.....' என்ற குருவாக அல்லாமல், 'அஞ்ரபத்ராஸாபி' என்னும்படி உபயவிபூதியிலும் சேதநனுக்கு உபாதேயதமனாய், ஆளவந்தார் நம்மாழ்வார் திருவடிகளையே கொண்டாடினார். நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியே நமக்கு ஸர்வஸ்வம் என்ற எம்பெருமானாரே பரம போக்யர் என்கிறார்.

அகடிதகடநாஸாமர்த்யம் உடையவன் எதிகட்கு இறைவன்: யமுனை நதிதீரத்தில் எழுந்தருளியிருக்கிற நாதமுநிகளுக்கு உத்யேசராய் காட்டு மன்னார்கோவிலில் எழுந்தருளியிருந்த திருநாமத்தை வஹித்த ஆளவந்தாரின் பாவந போக்யத்வங்களால் எப்போதம் தர்சிக்கத்தக்க திருவடிகளாகி உபாயத்தை லபித்து, ப்ராப்யமும், ப்ராபகமும் பெற்று, உலகத்தார்க்கெல்லாம் ஸ்வாமியாய் இருக்கும் எம்பெருமானார் ஞானதிகர்களை ரக்ஷித்தது ஆச்சர்யமில்லை. ப்ரதிகூலனாயிருக்கும் என்னை ரக்ஷித்தார். இதுவே அகடிதகடநாஸாமர்த்யம் என்கிறார்.

காண்டகு தோளண்ணல்: 'நகரேஷு காஞ்சீ' என்ற காஞ்சீபுரத்தில், 'ஸ்ரீ ஹஸ்திசைல சிகரோஜ்வல பாரிஜாதம்' என்ற தாமே எழுந்தருளியிருக்கிற பேரருளாளப் பெருமாள். அவனது திருத்தோள்கள் 'ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச........ ஸர்வபூஷணபூஷார்ஹா:' என்றபடியாயுள்ளது. விந்த்யாடவியினின்று காஞ்சீபுரத்துக்கு துணையாளாக வந்து 'அஹமேவபரம்தத்வம்' என்று திருக்கச்சிநம்பி மூலமாக உபதேசித்தவன். அந்த அருளாளனது திருவடிகளின் கீழே சிரோபூஷணமான பக்தியை உடைய எம்பெருமானாரை, 'ராமாநுஜபதச்சாயா' என்னும்படி பொருந்திவிட்டோம் மனமே என்கிறார்.

சேமநல்வீடும் – வாமனன் சீலன்: எம்பெருமானுடைய சீலத்தால் 'தாள் பரப்பி மண் தாவிய ஈசனை' என்றபடியே 'எல்லோருடைய தலைகளிலும் ஒருவரும் அபேக்ஷியாமலிருக்க, தன்பேறாக ஸ்ரீபாதத்தை உபகரித்தாப் போலே, எம்பெருமானாரும் எல்லார்க்கும் ஸ்வரூபாநுரூபமான அர்த்தங்களை உபகரித்தார், வாமனனைப் போல எம்பெருமானாரும் துல்யர் என்கிறார்.

எம்பெருமானாரின் அவதாரப் பெருமை: எம்பெருமான் பல்வேறு அவதாரங்கள் எடுத்து, கண்ணெதிரில் வந்தும், தன் உபதேசங்களாலே தன் ஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுத்தும், 'எதிர்சூழல்புக்கு' படியும், 'மந்மநாப மவத்பக்தோ ... ப்ரதிஜாநே ப்ரியோஸிமே' 'அஹம் ஸ்மராமி மத்பக்தம்' 'அவஜாநந்தி மாம்மூடா:' என்று அவன் வருத்தப்படும்படி நேர்ந்தது. ஆனால் எம்பெருமானாரின் அவதாரத்தால்,'

மாதாபிதாயுவதய:, நிவாஸச்சரணம் ஸுக்ருத் 'சேலேய் கண்ணியரும் .... ஆசார்ய ஞானம் பெற்று உஜ்ஜீவித்தனர்.

சுரக்கும் திருவுருவும்: எம்பெருமானாரின் திருநாமம் நாவை இனிக்கவைக்கும். எம்பெருமானாருடைய ஸம்பந்தம் பெற்ற தேசத்தில், தர்மத்திற்கு மாறான கலிபுருஷன் நிற்கமாட்டான். எம்பெருமானாரின் திருநாம அநுஸந்தானத்தால் ஞானபக்தி தலையெடுக்க பாவங்கள் தொலையும்.

சொல்லார் தமிழ்: "சீர்த்தொடையாயிரம்" என்கிற திருவாய்மொழி, மூன்றும் அதுக்கு மூன்று ப்ரகாரமான கணிசிக்க, மற்ற மூவாயிரம் ப்ரபந்தமும், ஒரு மூன்று திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, அன்றிக்கே, இயல், இசை, நாடகம் எனப்பட்ட தமிழ், நால்வகை வேதங்களும், தர்மமார்க்கங்களும், எம்பெருமானின் கீர்த்தியை பரிச்சேதிக்கிலும், எம்பெருமானாரின் கீர்த்தியை பரிச்சேதிக்க வொண்ணாதபடியாலும், ஆழ்வான், பிள்ளான், எம்பார் தொடக்கமானோர், 'வாழி எதிராசன்' போன்ற படிகளாலும் ஏத்தும்படியான 'இராமாநுசன்' என்கிற 'சதுராக்ஷரீ'யை அப்யஸித்தனர்.

கூறும் சமயங்கள்: சாக்கியர், உலூக்யர், பௌத்தர், சார்வாகர், பாசுபதர், காணாதர் என்று சொல்லப்படுகிற ஆறு மதங்களை நடுங்கச் செய்தார். இந்த பூமண்டலமெங்கும், தமது திருப்புகழை பரவச் செய்தார். ஆத்ம குணம் ஒன்றுமில்லாத என் இதயத்தில் புகுந்து, அழகியமணவாளன் திருவடிகளில் என்னை ஆச்ரயிக்கச் செய்தார்.

அற்புதன்: சிறந்த ஞானியர் கொண்டாடத்தக்க திருக்குணங்களையும், அதிமாநுஷ சேஷ்டிதங்களையும் உடைய எம்பெருமானார் அவதரித்து, ஸகல ப்ராணிகளுக்கும் அந்த ப்ராணிகளுக்கு இருப்பிடமாயுள்ள எல்லா உலகங்களும் எம்பெருமானுக்கே உரிமைப்பட்டவன்' என்ற பரமார்த்தத்தை நிலை நாட்டியவர்.

எங்கள் கோக்குலம்: 'கோ' என்றால் மேன்மை. கோக்குலம் – மேன்மையான குலம். விரோதிகளை நிரஸநம் பண்ணி, 'மன்னடங்க மழுவிலங்கை...... இராமநம்பீ' 'வென்றிமா மழுவேந்தி...... தேவ' என்றபடியே எம்பெருமானாரை கூறுகிறார்.

பேதையர்வேத: 'நற்றவர் போற்றும்' – ஆழ்வான், ஆண்டான், பிள்ளான், எம்பார், கிடாம்பியாச்சான் முதலியோர் என்கிறார் பிள்ளைலோகாசார்ய ஜீயர். ப்ரபத்தியாகிற நல்ல தவத்தை கைப்பற்றினவர்களாலேயே போற்றப்படுகிறவர்.

அஸ்மத்குலகூடஸ்தர்: ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் வர்த்திக்கும் பேரருளாளன் மூலம் வந்துசேர்ந்த பெருமாள் கோயிலும், பெரிய பெருமாள் நியமனமடியாக நம்பெருமாள் கோயிலிலும், காளஹஸ்தியினின்றும் சைவரால் உபத்ரவம் செய்தபோது திருப்பதியிலும், வேதபாஹ்யரை நிரஸக்க திருநாராயணபுரத்திலும், மற்ற எல்லா திவ்யதேசங்கள் தோறும் பலபடியாக மங்களாசாசனம் பண்ணும், 'உணர்ந்த மெய்ஞ் ஞானியர்களுக்கு வர்ஷகலாபகம்போல் ஸர்வஜந்துக்களுக்கும் உபகரிக்கும் இராமாநுசன் 'அஸ்மத்குலகூடஸ்தர்'.

ஞானம் கனித்த நலம் கொண்டு: என்ற பாசுரத்தில், எம்பெருமான் நமக்கு மோக்ஷத்தை மிகவும் சிரமப்படுத்தியே தருகிறான். ஆனால் எம்பெருமானாரோ தன் க்ருபையாலே அளிக்கிறார் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யரானபடியால்,

ஆரெனக்கு: என்கிற பாசுரத்தில், 'ஐவர் தெய்வத்தேர்' என்றது தேவதேவனான கிருஷ்ணனுடைய ஸ்ரீபாதஸ்பர்சத்தாலே வந்த தேர் என்கிறார்.

நின்றவண் கீர்த்தி: 'பரன் சென்றுசேர் திருவேங்கடம்' 'வைகுண்டேது பரேலோகே' என்ற நலமந்தம் இல்லதோர் நாடு என்றும் பரமபதமும் திருப்பாற்கடலும், மற்றுமுள்ள திவ்ய தேசங்களும் அந்த திவ்ய தேசங்களில் உள்ள ச்ரிய:பதியின் திவ்யமங்கள விக்ரஹத்தின் ஏற்றத்தால் வந்த ஆனந்தத்தை அறிந்தவர் இவர் ஒருவரே. உண்மையில் அடியேன் உகந்தருளின இடம் எம்பெருமானார் திருவடிகளே என்கிறார்.

சீர்கொண்டு: இதில் 'ப்ரபத்தி பரமோ தர்ம', என்பதே பேரறம் ஆகும். எம்பெருமாள் சரமச்லோகத்தில் கூறியபடி, சரணாகதியை அனுஷ்டித்தால் நமக்கு மோக்ஷம் என்ற மஹான்களில் நான் ஒருவனல்ல. தேவரீர் திருவடிகளாகிற மோக்ஷத்தை அடையத் தடையில்லை என்ற உறுதி தனக்குள்ளது என்கிறார்.

கலி மிக்க செந்நெல்: 'மண்ணியில் நீர் தேங்கும் குறையலூர்' என்ற சிறந்த செல்வங்களுடைய திருக்குறையலூருக்கு நிர்வாஹகரான 'இருந்தமிழ் நூற்புலவன்' 'கலியனதொலிமாலை' என்ற சிறந்த தொனி உடைய ப்ரபந்தங்களை போஷகமாக அநுபவித்து. மிடுக்கு ஏற்பட்டு, எம்பெருமானாராகிற சிங்கம் துர்வாதம் பண்ணுவாரை, நசிப்பதற்கு, இந்த பூமியிலே இருந்து கொண்டு 'விண்ணின் தலை நின்று' அவதரித்த ப்ரகாரத்தை புகழக் கடவேன் என்கிறார்.

செழுந்திரைப் பாற்கடல்: செழுமைமிக்க பால் போல் பொங்கும் கடல் 'ஏஷநாராயணஸ்ரீமாந்' 'வெள்ளத்தரவணையில் துயிலமர்ந்த வித்தினை' என்பவனின் கல்யாண குணங்களில் ஈடுபட்டு, அவன் திருவடிகளில் 'நிழலும் அடிதாறும் போலே' நெஞ்சில் வைக்கப்பட்ட ஞானவைலக்ஷண்யமுடையராய், பரமவைதிகர்கள் மேலிட்டு, அதனால் உடம்பு ஒரு இடத்தில் இல்லாது, கடல் இரைத்தாற் போல, ஸஸம்ப்ரம வ்யாபாரம் பண்ணும் இடம் அடியேனுக்கு வஸ்தவ்யதேசம் என்கிறார்.

இருப்பிடம்: ஸ்ரீ வைகுண்டம், வடதிருமலை, தென்திருமலை தொடக்கமான திவ்யதேசங்களோடே கூட எம்பெருமானாரின் திருவுள்ளத்தில் வர்த்திக்குமாபோலே, இப்போது அந்த திவ்ய தேசங்களுடன், அதற்கு நிர்வாஹகனான எம்பெருமானோடு கூட வந்து, எம்பெருமானாரும் வந்து, நிரதிசய ஸுகமாக எழுந்தருளியிருக்கும் இடம் தனது திருவுள்ளம் என்கிறார்.

அங்கயல்வயல் பொங்கிய கீர்த்தி: – 'ஏய்ந்த பெருங்கீர்த்தி' பரமபதம் வரை. கீழில் 'பூமன்னுமாது' என்றார். இங்கு' 'பங்கயமாமலர்' என்கிறார். அங்கு 'இராமாநுசன் சரணாரவிந்தம்' என்றார்; இங்கு 'இராமாநுசனடிப்பூ மன்ன' என்கிறார். அங்கு 'நெஞ்சே' என்று தன் திருவுள்ளத்துடன் உபக்ரமிக்கிறார். இங்க 'நெஞ்சே' என்று தலைக்கட்டுகிறார்.

இந்த பாசுரத்தால், ஸகல ஆத்மாக்களுக்கும் தமது அதிகார குணமாக அபேக்ஷித்த ஸம்பத்விசேஷங்களை, ஸர்வகடாக்ஷங்களாலே உண்டாக்குபவள் பெரியபிராட்டியார் என்றும், ப்ராப்யந்தான் 'ஆசார்ய சரணாரவிந்தம்' என்றும், 'அத்ரபத்ரசாபி நித்யம்' என்கிற படியே விச்லேஷமற்றும் இருப்பர் என்றும் கூறிற்று. முதலும் முடிவும் ஒரே வகையில் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பிள்ளைலோகார்ய ஜீயர் திருவடிகளே சரணம்.

உபதேசரத்தின மாலை

திருமலை அநந்தாண்பிள்ளை (கபிஸ்தலம்)

ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

உகந்தருளின நிலங்களிலே ஈடும், எடுப்பும் இலாத திருவரங்கத்தில் உறையும் நம்பெருமாள் திருமேனிக்கு சாற்றும் மாலை மேன்மை பொருந்தியது. நம்பெருமாளுக்கு ஆசார்யரான மாமுனிகள், சிஷ்யனுடைய பெருமை தோற்றும்படியாக சாத்திய மாலையான உபதேசரத்தினமாலையும் பெருமை பெற்றதே.

நம்பெருமாள் மாலை கொண்டைமாலை என்றும், தொங்கல் என்றும் சிறப்பு பெற்றது. வெள்ளை, பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறங்களால் ஆன மலர்களாலும், அளவில் பெரிய சிறிய கண்ணிகளாலும் இருபக்கமும் சம அளவில் இருக்கும்படியும் தொடுக்கப்பட்டிருப்பது நம்பெருமாள் சாத்தியிருக்கும் மாலை. அது போலவே உபதேசரத்தின மாலையையும் மாமுனிகள் தொடுத்திருப்பதை இவண் காண்போம்.

குருபரம்பரா ஹாரத்திற்கு நடுநாயகமான ரத்னம் என்னும்படி ஔஜ்வல்யத்தை உண்டாக்கும்படியான எம்பெருமானார் திருவடிகளில் அதிசயித ப்ராவண்யத்தை உடையராய், ஆழ்வார்களுடையவும், ஆசார்யர்களுடையவும் க்ருபையே தமக்கு விளைநீராம்படியாக வர்த்தித்துப் போருமவராய், திருவரங்கம் திருப்பதியே இருப்பாக எழுந்தருளியிருப்பாராய், "கோயில் மணவாளமாமுனி" என்று பேர் பெற்றவர் இவர். பெரிய ஜீயர் என்று கொண்டாடப்படுகிற மாமுனிகள் தன் பெரிய க்ருபையாலே ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய அவதாரங்கள் காலத்திற்கு முற்பட்டவை ஆகையாலும், அவர்களுடைய அவதார வைபவமும், உக்தி அநுஷ்டானங்களும், ஒருவருமறிந்திராதபடி குறைந்து வரும் நிலையைக் கண்டு தம் க்ருபையாலே அவ்வைபவங்களை எல்லாம் அக்காலத்தில் வாழ்ந்தவர்களோடு பிற்காலத்தில் இருப்பவர்களும் உஜ்ஜீவிக்க வேணும் என்று உபதேசரத்தினமாலை என்னும் பிரபந்தம் மூலம் விசதீகரித்தருளினார்.

உபதேசரத்தினமாலை சகல ப்ரபந்த விலக்ஷணமாயிருக்கும். அநந்யார்ஹ சேஷத்வ, அநந்ய சரணத்வ, அநந்ய போக்யத்வ ஆகாரங்களையுடையவருடைய பெருமை பேசுகின்றது. நம்மாழ்வாரின் "பயிலும் சுடரொளி", "நெடுமாற்கடிமை"யும், திருமங்கை மன்னனின் "நண்ணாத வாளவுணர்", "கண்சோர வெங்குருதி" பாசுரப்படி ததீய பர்யந்தமாய் இருக்கும். அத்தை அடியொற்றி கண்ணிநுண்சிறுத்தாம்பும், இராமாநுசநூற்றந்தாதியும்கூட அமைந்துள்ளது. அவையிரண்டின்படியுமாய் இருப்பது உபதேசரத்தினமாலை. ஆழ்வார்கள் வைபவமும், ஆசார்யர்கள் வைபவமும் விவரிக்கப்படுகையால் இது சரமத்தில் சரமமாய் இருக்கும்.

ப்ரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வார் பிரசாதமடியாக வந்து திருவாய்மொழிப்பிள்ளையிடம் சேர்ந்த உபதேசங்களைத் தாம் பெற்று, பிறர் உஜ்ஜீவிப்பதற்காக மாமுனிகள் உபதேசரத்தின மாலையாக அருளினார்.

முதல் பாசுரத்திலே திருவாய்மொழிப் பிள்ளையினுடைய திருவடி சம்மந்தமும், ஞான பூர்த்தியும் க்ருபா பூர்த்தியும் தமக்குத் தஞ்சமாயிருப்பதை முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு, பின்னோர்ந்து பின்னவரும் கற்க உபதேசமாய்ப் பேசுகிறார். ப்ரபத்தி நிஷ்டர் வைபவம் தொடங்கி, ஆசார்ய அபிமான நிஷ்டர் வைபவம் இறுதியாக உண்டான அர்த்த விசேஷங்களை உபதேசமாய்ப் பேசுகிறார்.

ஆழ்வாருக்கு எம்பெருமான் மயர்வற மதிநலமருள, ஆழ்வாரும் ஊரும் நாடும், உலகமும் தம்மைப் போலாகும்படி வாழ்வித்தருளினாற் போலே, மாமுனிகளும், திருவாய்மொழி பிள்ளையினுடைய க்ருபையால் வந்த அர்த்தங்களை உபதேசிக்கிறார்.

ஆழ்வார்களின் திரு அவதாரக்ரமம், பொய்கையார், பூதத்தார், பேயார், புகழ்மழிசை ஐயன், அருள்மாறன், சேரலர்கோன், துய்யபட்டநாதன், அன்பர் தாள்தூளி, நற்பாணன், நற்கலியன் ஈதிவர் தோற்றத்தடைவு என்று அருளிச் செய்து, அவதார நட்சத்திரங்களைக் கூறுமிடத்து, முதலாழ்வார்கள்

அவதரித்த மாதமான ஐப்பசி தொடங்கி மாத க்ரமத்திலே அநுபவித்தார். ஆசார்யர்கள், அனுபவிக்க வேண்டும் என்று ஆசையுடைய அதிகாரிகள், கற்றவர்களிடத்தே கேட்க வேண்டும் என்ற 3 அதிகாரிகளுக்குமாக உபதேசித்தருளினார் மாமுனிகள்.

ஆழ்வார்களின் ஏற்றத்தையும், அவர்கள் அருளிச் செய்த ப்ரபந்தங்களின் ஏற்றத்தையும், அவற்றை வளர்த்துப் போந்த ஆசார்யர்களின் வைபவத்தையும் வ்யாக்யாநங்களின் விசேஷங்களையும் இப்பிரபந்தத்திலே ப்ரஸ்தாபித்தார்.

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களுக்கு, எம்பெருமான் திறத்தில் மங்களாசாஸன பரர்களான ஆழ்வார்களுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிறார். மங்களாசாஸனபரர்க்கு, மங்களாசாஸனம் பண்ணுகை மாமுனிகளுக்குப் பணி. வாழி சடகோபன், வாழி பரகாலன் என்னும்படியிறே இவர்படி. த்ராவிட வேத சதுஷ்டய அங்க உபாங்கங்களோடு கூடின திவ்யப்ரபந்தங்களை 'வாழி சடகோபனிட்ட தமிழ்ப்பா இசை, வாழி பரகாலன் எண்ணில் தமிழ்ப்பா இசை' என்றும் மங்களாசாஸனம் செய்கிறார். 'வாழி எதிராசன், வாழி உலகாரியன்' என்று ஆசாரியர்களையும் மங்களாசாஸனம் பண்ணுகிறார்.

உலகுய்ய, உம்பர்களும் கேட்டுய்ய ஸர்வ லோகங்களும் உஜ்ஜீவிக்கும்படி, ஸகல வேதாந்த ஸாரார்த்தங்களையும் அருளிச்செயல்களின் அர்த்தமானது அடியொற்றி இருக்கும்படி வ்யாக்யானம் செய்தருளிய திருவாய்மொழியைக் காத்த குணவாளர்களான பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாள யோகி ஆகிய ஆசார்யர்களையும் அவர்கள் வாய்மொழிந்த வியாக்யானங்களையும் கொண்டாடுகிறார்.

'அல்பச்ருதர் கலக்கின ச்ருதி, நன்ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை அறிவித்தது' என்னும்படி அதிநிர்மலமான அருளிச்செயல்களில் அர்த்த தர்சனம் பண்ணின, ஆசார்யர்களும் வேதங்களும் வாழவேணும் என்று மங்களங்களை ஆசாஸிக்கிறார்.

ஓடித்திரியும் யோகிகள் என்றும், வருத்தும் புறவிருள் மாற்றும் பொய்கைப்பிரான், ஞானச் சுடர்விளக்கேற்றிய பூதத்தார், கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் பேயாழ்வார், இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் என்னும்படியான மழிசைப்பிரான், பாடினான் அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே என்னும்படியான நம்மாழ்வார், த்ரியக்ஸ்தாவர ஜன்மங்களை ஆசைப்பட்ட குலேசேகராழ்வார், எக்காலத்திலும் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்கையாலும், கோப ஜன்மத்தை ஆசைப்பட்டவரும், வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விரித்தவரும், பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர் பெற்றவருமான விஷ்ணு சித்தர், அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன் என்று கொண்டாடும்படியான திருவரங்கனின் திருவடி முதல் திருமுடி வரை பாதாதிகேசம் பாடின திருப்பாணாழ்வார், நின் திருஎட்டெழுத்தும் கற்று உற்றதும் உன்னடியார்க்கடிமை என்னும்படியான அருள் மாரி அரட்டமுக்கி அடையார்சீயம் கொற்றவேல் பரகாலன் என்னும்படியான மங்கை மன்னன் ஆகியோரைத் தம் பாசுரங்களால் கொண்டாடி மகிழ்கிறார்.

'வந்தே பராங்குசாதித்யம்', 'கலயாமி கலித்வம்ஸம் கவிம்லோக திவாகரம்' என்னும் சூரியர்கள் இந்த உலகில் இருள் நீங்க வந்துதித்த ஆழ்வார்களின் அவதார நட்சத்திரங்களையும், மாதங்களையும் தம் இன் சொற்களால் மாலையாகத் தொடுக்கின்றார்.

மந்த்ரராஜமான திருமந்த்ரத்தில், ப்ரணவம் போலே அ, உ, ம ஆய (லுப்த சதுர்த்தி) போன்று முதலாழ்வார்கள் மூவரையும், திருமழிசைப்பிரானையும், செஞ்சொற் கவிகாள், செந்தமிழ் பாடுவார், இன் கவி பாடும் பரமகவி, ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்களான முதலாழ்வார்களை மங்களாசாஸனம் செய்தருளினார்.

வாய்த்த திருமந்த்ர லாபமிறே இவருடைய யசஸ்சுக்கு அடி என்று கொண்டாடும்படியான நெஞ்சுக்கிருள்கடி தீபம், தெய்வநன்மாலை என்று அருளிச்செய்த திருமங்கை மன்னனையும் 'விஷ்ண்வாலயேது கார்த்திக்யாம் தீபதூபம் கரோதி ய:' என்றும் சொல்லக் கடவ கார்த்திகை மாதம்

கார்த்திகை நட்சத்திரமாயிற்று இவர் அவதரித்தது. திருக்கலிகன்றி தாசர் என்று திருநாமத்தை உடையராய் அருளிச் செயல் நாலாயிரம் பாசுரங்களுக்கும் அர்த்தோபதேசம் பண்ணுமவராய்ப் போருகிற லோகாசார்யர் என்று கொண்டாடப்படுகிற நம்பிள்ளையின் அவதாரமும் அதுவே.

பிராட்டி, திருவடி, திருவநந்தாழ்வான் அவதாரக்ரமமாக அனுபவிக்கிறார் ஆண்டாள், மதுரகவி, எம்பெருமானார் திருநட்சத்திரங்களையும் அவர்கள் பிறந்த மாதங்களையும். அறிவுக்கு அடைவில்லாத அஞ்சு பிராயத்திலே ஆயிற்று திருப்பாவை இவளுக்கு முகம் செய்தது. அஞ்சு பிராயத்திலே பெண்பிள்ளை ஜல்பித்துக் கொரு பொருளுண்டோ என்று அநந்தாழ்வான்.

ஆழ்வார்களோடு விகல்பிக்கலாம்படியான அதிசயத்தை உடையராய் அவர்களுக்கு சேஷபூதருமாய் மற்றுமுண்டானவர்களுக்கும் நாதரான எம்பெருமானார் அவதரித்த சித்திரையில் செய்ய திருவாதிரை என்றும், மங்கையர் ஆளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள் என்னும்படி பகவத் பாகவத ஸம்ருத்திகளே பேறாயிருக்கும்படியான ஆழ்வார்கள் வாழ்வுக்கும் அடியாய் இருக்கையாலே, அவற்றைக் காட்டிலும் நம்முடைய வாழ்வாகிற ஸ்வரூபஸத்தாதிகளை உண்டாக்குவதான நாளாயிருக்கும் சித்திரையில் செய்ய திருவாதிரை நாள். நம்மை ரட்சிப்பதற்காக, மாயும் நம் ஆவியை வந்தெடுப்பதற்காக, கூபத்தில் வீழும் குழவியுடன் குதித்த நாளாம் திருவாதிரை.

தாழ்வாதுமின்றி அவைதான் வளர்த்தோர்: இப்படி விலக்ஷணரான ஆழ்வார்களுடையவும், விலக்ஷண ப்ரமாணங்களான அருளிச் செயல்களினுடைய வைபவங்களையும் அவத்யலேசம் இன்றிக்கே இருப்பதொரு விலக்ஷணமான வ்யாக்யானங்களைச் செய்தருளிய ஆசார்யர்களைக் கொண்டாடுகின்றார்.

ப்ரமாணச்ரேஷ்டமான திருவாய்மொழியை அல்பமதிகளால் அவிசால்யமாம்படி ஸ்வஸ்வ வ்யாக்யானங்களாலே ஸுரக்ஷிதமாக வ்யாக்யானித்த குணவாளர்களான, பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை, தெள்ளார் வடக்குத் திருவீதிப்பிள்ளை, மணவாளயோகி என்று குலாவி மகிழ்கிறார்.

'ஸாங்காகில த்ரவிட ஸம்ஸ்க்ருத ரூப, வேத ஸாரார்த்த ஸங்க்ரஹ வாக்யஜாதம்' என்றும் அருளிச் செயலின் அர்த்த ப்ரதிபாத்யமாய் வ்யாக்யாநார்த்தங்களை ப்ரதிபாதிக்குமதாய், த்வயார்த்த ப்ரதிபாதமுமாய் சரமபர்வ நிஷ்டை முடிவாக உடையதான ஸ்ரீவசனபூஷணம் என்றும், செம்பொருள் என்றும், வசனபூஷணத்தின் ஆழ்பொருள், வசனபூஷணத்தின் வான் பொருள் என்றும் நாளும் உன் தனக்கு இன்பம் என்றும் வசன பூஷணத்தின் பெருமையைப் பேசுகிறார். ஆசார்ய அபிமானமே உத்தாரகம் என்னும் ஸ்ரீவசனபூஷணத்தின் அர்த்தத்தை அனுஷ்டான பர்யந்தமாக காட்டியருளின பின்பழகராம் பெருமாள் ஜீயர் அனுபவத்தை காட்டியருளினார்.

பூர்வர்களுடைய ஜ்ஞானம், அநுஷ்டானம் முதலியவைகளைச் சொல்லும் சொற்களை அங்கீகரித்து நீங்கள் தெரிந்து கொண்டு ஜ்ஞானப்ரதானாய் மகோபகாரனான ஆசார்யனை அடைந்து, சுகானுபவம் பெற்று வாழுங்கள் என ஆசீர்வதிக்கிறார் மாமுனிகள்.

ஸகல ப்ரபந்த வ்யாவ்ருத்தமான உபதேசரத்தினமாலையாகிற பிரபந்தந்தன்னை மனத்திலே ஸர்வகாலமும் மனனம் பண்ணுபவர்கள் தமக்கு சேஷியான எம்பெருமானாருடைய நிர்ஹேதுக க்ருபைக்கு ஸர்வ காலத்திலும் விஷயமாய் பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்களாகிற சுகானுபவங்களைப் பெற்று சுகிக்கப் பெறுவர் என்று தலைக்கட்டி அருளினார்.

இப்பிரபந்தத்தினுடைய ஆரம்பத்திலே 'எந்தை திருவாய்மொழிப்பிள்ளை இன்னருளால்' என்று ஆரம்பித்து பட்டர் நல்லருள், நஞ்சீயர் இன்னருள், நம்பிள்ளை தொல்லருள் என்று நடுவிலும், முடிவில் 'எந்தை எதிராசர் இன்னருளுக்கென்று மிலக்காகி சதிராக வாழ்ந்திடுவர் தாம்' என்று உபக்ரம, உபஸம்ஹார ந்யாயத்தின்படி தலைக்கட்டி அருளினார்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

ஸ்ரீரங்கம் கோமடம் ஸ்ரீ உ.வே. ஸம்பத் குமாராசாரியார் ஸ்வாமி

சிரிய: பதியான ஸர்வேச்வரனாலே மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். அவர்களில் தலைவர் நம்மாழ்வார். அவர் அருளிச் செய்த ப்ரபந்தங்கள் நான்காகும். அவையாவன திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகியவை. இந்நான்கினிலும் திருவாய்மொழி சிறந்ததென்பது யாவரும் அறிந்ததே! இதனை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் "வேதாதிகளில் பௌருஷ மாநவ கீதா வைஷ்ணவங்கள் போலே அருளிச் செயலில் ஸாரம்" என்கிறார். வேதங்களுக்குள்ளே புருஷஸூக்தம் சிறந்தது. தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ளே மநு தர்மசாஸ்த்ரம் சிறந்தது. மஹாபாரதத்துக்குள்ளே பகவத்கீதை சிறந்தது. புராணங்களுக்குள்ளே ஸ்ரீவிஷ்ணுபுராணம் சிறந்தது. அதுபோல ஆழ்வார்கள் அருளிச் செயல்களுக்குள்ளே திருவாய்மொழி சிறந்தது. தீர்க்க சரணாகதி எனப்படுவதும் இதுவே.

அத்திருவாய்மொழியைப் பெற்றவர் நம்மாழ்வார். அதை வ்யாக்யாநங்கள் மூலமாக வளர்த்தவர் எம்பெருமானார். அத்திருவாய்மொழிக்குள்ள வ்யாக்யாநங்களில் மிகச் சிறந்ததாக கொண்டாடப்படுவது நம்பிள்ளை என்னும் ஆசிரியரால் உபந்யாஸமாக அருளிச் செய்யப்பட்ட "ஈடு".

அந்த ஈடு வ்யாக்யாநத்திலே கரைகண்டவராய் இருந்தவர் "ஏராரும் எதிராசரென வந்து உதித்த"வரான மணவாளமாமுனிகள். இவருக்கு "ஈட்டுப்பெருக்கர்" என்கிற ப்ரஸித்தி உள்ளது. மாறன் பணித்த தமிழ்மறையான திருவாய்மொழியின் ஸாரார்த்தங்களை "திருவாய்மொழி நூற்றந்தாதி" என்ற நூலில் மாமுனிகள் அருளிச்செய்கிறார். இந்நூற்றந்தாதிக்கு இரண்டு தனியன்கள் தோன்றி உள்ளன. சொல்லும் பொருளும் தொகுத்திருப்பதாகவும், உட்பொருள் நிறைந்திருப்பதாகவும், திருவாய்மொழி நூற்றந்தாதியே தேனாக இருப்பதாகவும் அத்தனியன்களிலிருந்து நாம் அறிகிறோம்.

திருவாய்மொழி நூற்றந்தாதியின் சிறப்பை ஒருவாறு நாம் காணலாம். நம்மாழ்வார் எம்பெருமான் விஷயமாக நூறு திருவாய்மொழிகள் அல்லது பதிகங்கள் அருளிச் செய்தார். ஓரோ திருவாய்மொழியின் ஸாரத்தை, ஈட்டில் பரமாசார்யரான நம்பிள்ளை ஓரோ திருவாய்மொழிக்கும் ப்ரவேசத்தில் அருளிச் செய்துள்ள ஸங்கதியை (தொடர்பை) உட்கொண்டு, நூற்றந்தாதியில் ஓரோ திருவாய்மொழிக்கும் ஒரு பாட்டு வீதம் நூறு பாட்டுகள் கொண்டதாம் திருவாய்மொழி நூற்றந்தாதியை அருளிச்செய்தார்.

உலகில் பல அந்தாதிகள் நூல்கள் தோன்றியுள்ளன. ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் இயற்பாவில் உள்ள எட்டு ப்ரபந்தங்கள் அந்தாதியே. திருவாய்மொழியும் அந்தாதியே. திருவாய்மொழி கிடைத்ததற்குக் காரணமாய் இருந்த கண்ணிநுண் சிறுத்தாம்பும் அந்தாதியே. பெரியாழ்வாரும் திருமங்கைஆழ்வாரும் தம் தம் திருமொழிகளிலே ஒவ்வொரு பதிகமே அந்தாதியாகப் பாடியுள்ளார்கள்.

அந்தாதி ப்ரபந்தத்தை இயற்றுபவர் தங்கள் விருப்பப்படி தொடங்கலாம், முடிக்கலாம், தங்கள் விருப்பப்படியே முதல் பாட்டில் உள்ள சீரையோ, சொல்லையோ, எழுத்தையோ அடுத்த பாட்டில் சொல்வர் என்பது யாவருமே அறிந்ததாகும்.

திருவாய்மொழி நூற்றந்தாதியின் பெருமை

1. முதல் திருவாய்மொழி "உயர்வற" என்று தொடங்கியதால் மாமுனிகளும் நூற்றந்தாதியில் "உயர்வே" என ஆரம்பிக்க வேண்டியிருந்தது. முதல் திருவாய்மொழி சாற்றுப் பாசுரத்தில் கடைசி அடியில் "இவை பத்தும் வீடே" என்று முடிந்திருக்கிறது. இதற்குச் சேர மாமுனிகளும் "வேராகவே விளையும் வீடு" என்று முடிக்க வேண்டியிருந்தாயிற்று. இவ்வாறு மேல் பாட்டுக்களிலும் தம் விருப்பம் போல் தொடங்காமலும் அந்தாதி குலையாமலும் நூற்றந்தாதியை இயற்றி உள்ளார்.

2. இந்நூல் வெண்பாவில் அமைந்திருக்கிறது.

3. ஒவ்வொரு பாசுரத்திலும் முன் இரண்டடிகளில் அத்திருவாய்மொழியின் ஸாரத்தை தொகுத்து அருளிச் செய்கிறார்.

4. ஒவ்வொரு பாசுரத்திலும் ஆழ்வாருடைய திருநாமம் பொறிக்கப் பெற்றிருக்கிறது.

5. ஆழ்வாரே ப்ராப்யம் (பேறு) ப்ராபகம் (ஆறு) என்றும் கொண்டுள்ளார் மாமுனிகள். இது போன்று ஒரு அந்தாதி நூல் இதுவரை தோன்றியதில்லை என்பர் நம் முன்னோர்.

எம்பெருமானுடைய பரத்வத்தை (மேன்மையை) நம்மாழ்வார் நான்கு பதிகங்களில் அருளிச் செய்கிறார். உயர்வற (1–1), திண்ணன்வீடு (2–2), அணைவதரவணை (2–8), ஒன்றுந்தேவும் (4–10). இவற்றில் முதல் இரண்டு திருவாய்மொழிகளில் சொல்லப்பட்டது பரத்வம் தான். ஆனால் இவற்றுக்கு வாசியுண்டு. அதாவது 1. முதல் திருவாய்மொழியில் பரத்வே பரத்வம் (மேன்மையில் மேன்மை). திண்ணன் வீட்டில் அவதாரத்தில் பரத்வம். 2. அதில் ச்ருதிச்சாயைக் கொண்டு அருளிச் செய்யப்பட்டது, இதில் இதிஹாஸபுராணங்களைக் கொண்டு அருளிச் செய்யப்பட்டது. 3. அதில் அந்வயமுகத்தாலே (உடன்பாட்டுமுறை) அருளிச் செய்யப்பட்டது. இது அந்வய வ்யதிரேகம் (உடன்பாட்டு முறை, எதிர்மறைமுறை) இரண்டிலும் அருளிச் செய்யப்பட்டது. 4. அது ஸ்வாநுபவம், இது பரோபதேசம் – என்றார் நம்பிள்ளை.

"உயர்வற" திருவாய்மொழியில் எம்பெருமான் எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமானவன். நித்யஸூரிகளுக்கு தலைவன்,. திவ்யமங்கள விக்ரஹம் அவனுக்குண்டு என்று முதல் பாட்டில் அருளிச் செய்து, இரண்டாம் பாட்டில் "சித்" எனப்படும் ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டவன். "அசித்" எனப்படும் அறிவற்ற பொருளைக் காட்டிலும் வேறுபட்டவன் எம்பெருமான் என்று அருளிச் செய்தார். மூன்றாம் பாட்டில் லீலாவிபூதிச் செல்வத்தை உடையவன் என்றும், மேல் மூன்று பாட்டுக்களில் லீலாவிபூதி செல்வத்தை விரிவாகப் பேசி, ஏழாம் பாட்டில் "சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" – வேதத்தாலே உறுதியாகச் சொல்லப்பட்டவன் எம்பெருமான் என்கிறார் ஆழ்வார். ப்ரமேயமான எம்பெருமானை முதற்பாட்டில் "சுடரடி" என்று சொல்லி, இப்படிப்பட்டவனை அறிவிக்கின்ற ப்ரமாணமும் திடமானது என்பதனை "சுடர்மிகுசுருதி" என்று கூறுகிறார் ஆழ்வார். எட்டாம் பாட்டில் சிவனுக்கு அந்தர்யாமியாக இருந்து அழித்தும், ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாக இருந்து படைத்தும், ரக்ஷணத்தொழிலைத் தானே நடத்தியும் போருகிறான் என்பதை தெரிவிக்கிறார். ஒன்பதாம் பாட்டில் பௌத்த மதத்தில் ஒரு பிரிவான சூந்ய வாதியை நிரஸிக்கிறார். பத்தாம் பாட்டில் எம்பெருமான் எங்கும் பரந்திருக்கிறான் என்பதனைத் தெரிவிக்கிறார்.

இவ்வளவு அர்த்தங்களையும் மாமுனிகள் நூற்றந்தாதியில் ஒரே வரியில் "உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு உயர்வேத நேர்கொண்டு உரைத்து" என்றருளிச் செய்கிறார்.

திண்ணன் வீட்டில் (2–2) மேல் எம்பெருமானுடைய பரத்வத்தை, "நம் கண்ணன் கண்" என்று அந்வயத்தாலே அருளிச் செய்தார். "அல்லது இல்லையோர் கண்ணே" என்று வ்யதிரேகத்திலே அருளிச் செய்கிறார். நம் கண்ணன் தான் ரக்ஷகன்". மற்றையோருக்கு ரக்ஷகத்வம் இல்லை என்பதனை அத்திருப்பதிகத்திலே ஆழ்வார் அருளிச் செய்கிறார். இதனை மாமுநிகள், "திண்ணிதாமாறன் திருமால் பரத்துவத்தை நண்ணி அவதாரத்தே நன்குரைத்த" என்றருளிச் செய்கிறார்.

ஆழ்வார் (2–8)ல் "எம்மாவீடு" என்கிற திருவாய்மொழியில் ப்ராப்யத்தை (கைங்கர்யத்தை) உறுதி செய்கிறார். கீழே "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ?" என்று ஆசைப்பட்டிருக்கிறபடியாலும், "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்" என்று நம்மைப் பார்த்துச் சொல்லியிருக்கிறபடியாலும், எம்பெருமான் ஆழ்வாருக்கு மோக்ஷத்தைத் தர எண்ணினான். "ஆழ்வீர்! மோக்ஷத்தைத் தருகிறேன் ஏற்றுக் கொள்ளும்" என்றான். ஆழ்வார் எம்பெருமானைப் பார்த்து "நான் ஆசைப்பட்டேன் என்பதற்காகத் தருகிறாயா! அல்லது நீயே உன் திருவுள்ளத்தில் விரும்பித் தருகிறாயா!" என்று கேட்கிறார்.

"வீடு" என்றால் ஐச்வர்யம், "மாவீடு" என்றால் "கைவல்யம்", எம்மாவீடு" என்றால் மிகச் சிறந்த பலமான மோக்ஷம். "எனக்கு இவ்வுலக ஐச்வர்யத்தைத் தந்தாலும் சரி; ஸ்வர்கலோகத்தில் அநுபவத்தைத் தந்தாலும் சரி. ஆத்மாநுபவத்தைத் தந்தாலும் சரி, மோக்ஷத்தைத் தந்தாலும் உன் இஷ்டத்திற்காகத் தந்தால் பெற்றுக் கொள்கிறேன். எனக்காகத் தந்தால் வேண்டாம்" என்கிறார் ஆழ்வார். இப்பதிகத்தில் உயிரான பாட்டு "எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று என் மனக்கே வந்து இடை வீடின்றி மன்னி–தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே" என்பதுதான். இவ்வாறு நம் முன்னோர்கள் அருளிச் செய்கிறார்கள்.

திருவாய்மொழியே ஸாரம். அதில் "எம்மாவீடு" திருவாய்மொழி ஸாரதரம். அதிலும் இப்பாசுரம் ஸாரதமம் என்று.

"ஆட்செய்" என்பதால் ஸ்வாதந்த்ரியத்தை தவிர்க்கிறது. "எனக்காட்செய்" என்பதால் மற்றவருக்குக் கைங்கர்யம் பண்ணாதே எனக்கு கைங்கர்யம் பண்ணு என்கிறது. "எனக்கே ஆட்செய்" என்பதால் என்(ஜீவன்) ஆநந்தத்துக்கல்ல உன் (எம்பெருமான்) ஆநந்தத்திற்காக. சந்தனத்தைப் பூசிக் கொண்டவருக்கு இன்பத்தைத் தரும். புஷ்பம் சூடிக்கொள்பவருக்கு ஸந்தோஷத்தைத் தரும். அதுபோல் நாம் எம்பெருமானுக்குச் செய்கிற கைங்கர்யம் அவன் ஆநந்தத்திற்கே ஆக வேண்டும் என்பதை தெரிவிக்கிறது. இதனை மாமுநிகள், "எம்மாவீடும் வேண்டா என்றனக்கு உன் தாளிணையே அம்மா அமைபுமென ஆய்ந்துரைத்த" என்றருளிச் செய்கிறார்.

"ஆய்ந்துரைத்த" என்பதின் பொருள் யாதெனில் – சேஷியான உன்னுடைய ஸ்வரூபத்துக்கும் அடியவனான என்னுடைய ஸ்வரூபத்துக்கும் தகுதியாக, மேற்புறம் சிவந்தும் அடிப்புறம் கறுப்பாயும் உள்ள உனது திருவடித்தாமரைகளை அடியேனுடைய தலையில் கொக்கு வாயும் படுகண்ணியும் போலே சேர்த்தருள வேண்டும் என்று இருவருடைய ஸ்வரூபத்துக்கும் தகுதியாக அறுதியிட்டார்.

"பொய்ந்நின்ற ஞானம்" தொடங்கி, "கண்ணன் கழலிணை" (10–5) வரை நம்மாழ்வார் எம்பெருமானைப் பின் தொடர்ந்தார். இத்திருவாய்மொழியிலிருந்து நம்மாழ்வாரை எம்பெருமான் பின் தொடர்கிறான். ஆழ்வாரை இந்நிலவுலகில் வைத்ததற்குக் காரணம் "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள்" ஆழ்வாரைக் கொண்டு பாடுவித்துக் கொள்வதற்குத் தான். அக்காரியம் நிறைவேறிவிட்டபடியால் ஆழ்வாரை பரமபதத்திற்கு அழைத்துப் போக வந்துவிட்டான் எம்பெருமான். ஆழ்வார் நியமநத்தின் படி நடப்பதற்கு ஸித்தமாய் இருக்கவும் ஆழ்வாருக்கு பரதந்த்ரனாய் இருக்கவும் விரும்பினான். அது மட்டுமல்ல, ஆழ்வாரை இத்திருமேனியோடு பரமபதத்துக்கு அழைத்துப் போக எண்ணினான். ஆழ்வாருடைய சரம சரீரமிது. ஞாநம் பக்தி வைராக்யம் எல்லாம் நிரம்பப் பெற்ற சரீரமிது. இத்திருமேனியோடு கூட பரமபதத்து கொண்டு போக வேணும். ஆழ்வார் நியமித்தபடியே செய்ய வேணும் என்று ஆசைப்பட்டான். கைகூப்பிக் கொண்டு "ஆழ்வாரே! நியமித்தருள வேணும்" என்கிறான் எம்பெருமான். ஆழ்வாருக்கு நியமிக்க வாய் வரவில்லை. அவனோ பராத்பரனாய் இருக்கிறான். நம் பக்கல் இப்படித் தாழ நிற்கிறான் என்று அவனுடைய ஸௌலப்ய குணத்தை எண்ணி அநுபவிக்கிறார் "அருள்பெறுவார் அடியார்" என்கிற திருவாய்மொழியில்.

எம்பெருமானே எல்லாரையும் நியமிப்பவன். ஸ்வதந்த்ரனாய் இருப்பவன் என்று இதுவரை எண்ணியிருந்தார் ஆழ்வார். இவ்வாறு அடியார்கட்கு பரதந்த்ரனாய் இருப்பது அவனுக்கு ஸ்வரூபம் என்ற உண்மையை அறிந்தார். இப்பதிகத்தில் "ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் அது நமது விதிவகையே" (10–6–1), "இன்று விண்ணுலகம், தருவானாய் விரைகின்றான் விதிவகையே" (10–6–3) முதலான அடிகள் உயிரானவை.

இதனை மாமுநிகள் "அருளால் அடியிலெடுத்த மாலன்பால் இருளார்ந்த தம்முடம்பை இச்சித்து இருவிசும்பில் இத்துடன் கொண்டேக இசைவு பார்த்தேயிருந்த சுத்தி சொல்லும் மாறன் செஞ்சொல்" என்கிறார். இங்கு "சுத்தி" என்னும் சொல்லுக்குப் பொருள் பரதந்த்ரனாய் நின்ற குண சுத்தி என்பதாகும்.

தாழ்ந்தவரான ஆழ்வார் திருமேனியை எம்பெருமான் அன்பால் ஆசைப்பட்டான்; பரமபதத்திற்கு ஆழ்வாரை இத்தேஹத்தோடே கொண்டுபோக இவர் அநுமதியை எதிர்ப்பார்த்திருந்த எம்பெருமானது சுத்தியை (பரதந்த்ரனாய் நிற்கும் தன்மையை) ஆழ்வாருடைய ஸூக்தியானது தெரிவிக்கிறது.

இதற்கு அடுத்த திருவாய்மொழி "செஞ்சொற்கவிகாள்". இப்பதிகத்தின் கருத்து யாதெனில் எம்பெருமான் ஆழ்வார் திருமேனியில் மிகவும் விருப்பம் கொண்டான். காமுகனாக இருப்பான் ஒருவன் காமினியின் அழுக்குடம்பை விரும்புமாபோலேயும், வெட்டிவேரைச் சூடுமவர்கள் மண்ணை உதறினால் வாஸனை போய்விடும் என்றெண்ணி மண்பற்றோடு வேரைச் சூடுவது போல ஞானியான ஆழ்வார் திருமேனியில் விருப்பம் கொண்டான் எம்பெருமான். இப்படி இவன் வெறும் உடம்பனாய் இருக்கிறானே, என் அவயவங்களில் ஆசை கொண்டிருக்கிறான் என்று எண்ணி இவற்றில் ஆசையை விட்டொழி என்று

சொன்னால் கேட்பானோ! என்று நினைத்தார் ஆழ்வார். சரியான வழி ஒன்று புலப்பட்டது. அவன் நமக்கு பரதந்த்ரனாய் இருக்கிறான் என்பதை எண்ணிப் பார்த்து எம்பெருமானை நோக்கி, "நீ எனக்கு பரதந்த்ரன் தானே. நான் சொல்வதை நீ கேட்பவன் தானே?" என்று கேட்கிறார். "ஆம்" என்றான் அவன். இந்த உடம்பின் மேல் உள்ள ஆசையை விட்டு விடு. "மங்கவொட்டுன் மாமாயை" என்றார் ஆழ்வார். எம்பெருமானும் சரி என்று இவருடைய உடம்பின் மேலுள்ள ஆசையைவிட்டான். இந்தப் பதிகத்தின் கருத்தை உட்கொண்டு மாமுநிகள் நூற்றந்தாதியில், "செஞ்சொல் பரன்தனது சீராரும் மேனி தனில் வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின் விஞ்சுதலைக் கண்டு அவனைக் கால்கட்டிக் கைவிடுவித்துக் கொண்ட திண்திறல் மாறன் நம் திரு" (திரு.நூ 97) என்றருளிச்செய்துள்ளார்.

"திறல்" என்பதன் பொருள் ஆழ்வாருடைய திடமான ஸாமர்த்யம் அல்லது சக்தி. அவன் ஸர்வசக்தன், ஆழ்வாரை சரீரத்தோடே கொண்டு போக அவர் கையைப் பிடித்தான். இவர் அவன் காலைப் பிடித்துக் கையை விடுவித்துக் கொண்ட திடமான சக்தியை உடையவர் என்பதனைத் "திண் திறல் மாறன்" என்ற சொல்லாலே தெரிவிக்கிறார் மாமுனிகள்.

எம்பெருமான் ஆழ்வார் திருமேனியில் ஆசை கொண்டபடியைப் பார்த்து இதன் தோஷத்தை அவனுக்கு உணர்த்துவோம். அப்போது இதனை விட்டு விடுவான் என்று எண்ணி அவனுக்கு அறிவிக்கிறார். "பிறவிப் பெருங்கடலை" அக்கரைப் படுத்துமவன் எம்பெருமான். ஆசையாலே கண் மூடிப் போனவனுக்கு மாயா தோஷத்தைக் (உடம்பின் தோஷத்தை) காட்டுகிறார் ஆழ்வார். அவனோ ஸர்வசக்தன்; அவனுடைய பிடிவாதத்தை ஆழ்வார் மாற்றினார். ஆதலால் "திண்திறல் மாறன்" என்று மாமுனிகளாலே விருது பெற்றார் ஆழ்வார்.

ஆறாம் பத்தில் நான்காம் பதிகம் "குரவை ஆய்ச்சியர்" என்கிற திருவாய்மொழி ஆகும். வால்மீகி பகவான் ராமாவதாரத்தைத் தவிர வேறு ஒன்றும் பேசமாட்டாதாப் போலேயும், திருவடி (அநுமன்) "ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:, பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி" என்று ராமாவதாரமல்லது அறியாதாப் போலேயும் இவ்வாழ்வாரும், "குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும்", "கேயத்தீங்குழல் ஊதிற்றும்", "நிகரில் மல்லரைச் செற்றதும்", "வேண்டித்தேவர் இரக்க வந்து பிறந்ததும்" முதலான க்ருஷ்ண சரித்ரங்களையே மண்டி அநுபவிக்கிறார். இதனை மாமுநிகள் "குரவை முதலாம் கண்ணன் கோலச் செயல்கள் இரவு பகல் என்னாமல் பரவு மனம் பெற்றேன் என்றே களித்துப் பேசும் பராங்குசன் தன் சொல் தேனில் நெஞ்சே துவள்" என்றருளிச்செய்கிறார்.

இங்கு ஒன்று நாம் உணர வேண்டும். ஆழ்வாருக்கு உணவு எது என்றால் "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்" என்கிறபடியே கண்ணனே. மாமுனிகளுக்கு உணவு "மாறன் கலை" தான் என்பதனை ஆர்த்திப்ரபந்தத்திலே "மாறன்கலை உணவாகப் பெற்றோம்" என்று தானே அருளிச் செய்திருக்கிறார்.

மேலும் மாமுனிகள் காலத்தில் ஒரு பாடல் வழக்கில் இருந்ததாம். "மீனாடு தெற்குயர மற்று எட்டும் வடக்கு உயர மகர கும்பம் சமமாக சோமன் இராவிட்டால் அன்னம் அரிதாய்விடும்!". அதாவது பங்குனி சித்திரை மாதங்களில் சந்திரனுடைய கலை தெற்கு பக்கம் உயர்ந்திருக்க வேண்டும். வைகாசி முதல் மார்கழி வரை வடக்குப்பக்கம் உயர்ந்திருக்க வேண்டும். தை மாசி மாதங்களில் சமமாக இருக்க வேண்டும். இல்லை என்றால் அன்னம் கிடைக்காமல் போய்விடும் என்பது இப்பாடலின் பொருள். மாமுனிகள் திருச்செவியில் இப்பாட்டு விழுந்ததும் அவர் அருளிச் செய்த பாடல் இதோ! "உடைகோவணம் உண்டு, உறங்கப் புறம் திண்ணை உண்டு, அடை காய் கனி உண்டு அருந்த தண்ணீர் உண்டு, சடகோபன் ஈந்த தமிழ் ஆயிரம் உண்டு, வடகோடு உயர்ந்தால் என்ன தென்கோடு சாய்ந்தால் என்ன?" மாமுனிகளுக்கு சடகோபன் பாசுரம் தான் உணவு. இதனை "சடகோபன் சொல் தேனில் நெஞ்சே துவள் (தி.நூ. 54) என்கிறார்.

ஆழ்வாருக்கு எம்பெருமான் 'கண்ணன்' உணவு. மாமுநிகளுக்கு பராங்குசன் சொல் தேன் உணவு. மாமுனிகளடியார்கட்கு உணவு திருவாய்மொழி நூற்றந்தாதி தான் "தேன்".

திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை எல்லாரும் பருகி ஆநந்திக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு இக்கட்டுரையை நிறைவு செய்து கொள்கிறேன்.


மதுரகவி
நம்மாழ்வார்
நாதமுனி

ஸ்வாமி எம்பெருமானார் திருமேனியில் நம் பூர்வாசார்யர்கள்



நம்மாழ்வார் திருமேனியில் நம் ஆழ்வார்கள்

(ஸ்ரீ ஶடகோப திவ்ய அவயவ ப்ரபாவம்)



பூ$_4$தம் ஶிரோ ஹ்ரத$_3$மஹாஹ்வயம் அக்ஷியுக்$_3$மம் ப$_4$ட்டார்யமாஸ்யம் அத$_2$ ப$_4$ார்க$_3$வமஸ்ய கண்ட$_2$ம் |
ப$_3$ாஹூ வத$_3$ந்தி குலஶேக$_2$ர யோகி$_3$வாஹௌ தோ$_3$ர்மத்$_4$ய நாபி$_4$சரணாந் இதராந் ஶட$_2$ாரே: ||